திருவரசு புத்தக நிலையம்

THANGA KAADU
INR 70.00
TAM 39420

23633094 - 23631794

இந்திரா சௌந்தர்ராஜன்

தங்கக் காடு

இந்திரா சௌந்தர்ராஜன்

திருவரசு

# தங்கக் காடு



திருவரசு புத்தக நிலையம்

## உள்ளே...

நானே வருவேன் 1
தங்கக்காடு 93

# நானே வருவேன்!

*மி*கச் சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்பு...

பழத்தூரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது அந்த இரட்டை மாட்டு வண்டி. அப்பொழுதெல்லாம் ஏது தார்ச்சாலை...? மண் பாதைதான்... அதில், இரை விழுங்கிய மலைப் பாம்பின் உடல்போல ஏராளமான மேடு பள்ளங்கள்.

ஐப்பசி மாசம் வேறு என்பதால் அடைமழை பெய்து அந்த மேடு பள்ளமெல்லாம் ஒரே நீர்த்தாரை! அந்த நீர்த்தாரையும்கூட செந்நீராகத் தெளிவின்றிதான் இருந்தது. மாட்டு வண்டியின் சக்கரங்கள் அதனுள் இறங்கி உருளும் போதெல்லாம் சேற்றுக்கட்டிகள் சக்கர ஆரத்தில் கட்டிக் கட்டியாக ஒட்டிக் கொண்டன.

மாடு இரண்டும் நல்ல ஊட்டம். தொடைப்பரப்பில் புஷ்டி தெரிந்தது. இருந்தும் சாட்டை வீறிட்டால்தான் அவற்றிடம் வேகம் பிறந்தது. மாட்டு வண்டிக்குமேல் இரண்டு ஜமுக்காளங்களைக் கட்டி கூரை உருவாக்கப் பட்டிருந்தது. கூரைக்குள் ஆதிகேசவக் கவுண்டரின் மகனும் மருமகளும் அமர்ந்திருந்தனர். இருவரது கழுத்து களிலும் மாலை... அதுவே அவர்கள் புதுமணத் தம்பதிகள் என்று சொல்லாமல் சொல்லிற்று.

பெண்ணுக்குப் பெயர் தமயந்தி. பார்க்க சற்று கறுப்பாக இருந்தாலும் களையாக வெகு அழகாக இருந்தாள். கல்யாணப் பெண்ணுக்கே உரிய வெட்கத்தில் முகத்தில் பூரிப்பு கலந்த சிவப்பு தெரிந்தது.

கவுண்டரின் மகன் கணேசன் பார்க்க வாட்ட சாட்டமாய் இருந்தான். மெழுகின சிமெண்ட் திண்ணை போல் தோள்பட்டை. நல்ல ஆற்றோர நாணல் புதர் போல சுருண்ட தலைமுடி. மார்பிரண்டும் அவன் தினசரி தண்டாலும் பஸ்கியும் எடுக்கும் ஒரு தேகப்பயிற்சிகாரன் என்பதை எதிரொலித்தபடி இருந்தன. கல்யாணக் களை அவன் கண்களில் வழிந்தபடி இருந்தது. இடுப்பில் சேலத்துப் பட்டு வேட்டியும், மார்பில் கல்யாணச் சட்டையும் அணிந்திருந்தான்.

நெற்றியில் காப்புக் கயிறு கட்டப்பட்டிருந்தது. வண்டி மேடு பள்ளங்களில் குலுங்கிடும்போது தமயந்தியும் அவனும் ஒட்டி உரசிக் கொள்ளும் ஒரு நிலை தோன்றிய படியே இருந்தது. அது அவனுக்குப் பிடித்திருந்தது.

அந்த மாட்டு வண்டியைத் தமயந்தியின் தாய்மாமா வான சாமிக்கவுண்டர்தான் ஓட்டிக் கொண்டிருந்தார். புதுமணத் தம்பதிகளின் வெட்கம் கலந்த ஊடலை ஜாடைமாடையாக ரசித்தபடியே 'ஹை ஹை' என்று வண்டி மாடுகளை விரட்டிக் கொண்டிருந்தார்.

முடுக்கூர் வளைவில் சாலை திரும்பியது. இடப் பக்கம் போனால், அந்தச் சாலை சேலம் நோக்கிப் போகும். வலப் பக்கம் திரும்பினாலே வாழப்பாடி. நேராகப் போனால்தான் பழத்தூர்.

மாம்பழத்தூர்தான் சுருங்கிப், பழத்தூர் ஆகிவிட்டது. திரும்பின பக்கமெல்லாம் மாமரங்கள். எல்லா மரங் களுமே திகிடுதம்பாக படு ஊட்டத்தோடு வளர்ந்திருந்தன.



கன்னாபின்னாவென்று கிளைகள். ஒரே ஒரு மரத்தில் மட்டும் சிவப்பு கலந்த பச்சையில் பந்துகளைக் கட்டித் தொங்கவிட்டதுபோல பழங்கள்.

இத்தனைக்கும் ஐப்பசி; சீசன் இல்லாத காலம்.

அடைமழைக்குப் பூக்கள் உருவாக வேண்டிய தருணம். ஆனாலும் அந்த மரத்தில் பழங்கள் பறிக்கப் படாமல் தொங்கிக் கொண்டிருந்தன.

சாமிக் கவுண்டர் அதை எல்லாம் ரசித்துக் கொண்டே 'ஹை ஹை' என்று வண்டியை விட்டுக் கொண்டிருந்தார். தமயந்தியும் பழுத்த மாமரத்தைப் பார்த்தாள். அதன் பழங்கள் அவளுக்கு ஆசையை மூட்டின. கண்ணில் அதைக் காட்டினாள்.

"என்ன தமயந்தி.. மாம்பழத்தைப் பாக்க ஆசையா இருக்குதா?" — அவன்தான் கேட்டான்.

'ஆம்' என்று அவள் தலையை ஆட்டினாள். நெற்றி வகிட்டுச் சுட்டியும், மூக்குப் புல்லாக்கும் ஆடி அசைந்து ஆமோதித்தன.

"மாமோவ்! கொஞ்சம் வண்டிய நிறுத்துங்க.." என்று உடனே இரைந்தான். சாமிக்கவுண்டரும் 'ஹோ... ஹோ' என்று வண்டியை இழுத்து நிறுத்தினார்; திரும்பினார்.

"ஏம் மாப்ள..?"

"தமயாவுக்கு மாம்பழம் வேணுமாம்..."

"ஏ புள்ள... இது என்ன, இப்ப போய் மாம்பழத்த கேட்டுகிட்டு? முழுவாம கிடக்கும்போது கேட்டா ஒரு அர்த்தம் இருக்கும்.."

"அடப் போ மாமா..." — தமயந்தி வெட்கத்தில் சிவந்தாள். தேங்கி நின்ற வண்டியில் இருந்து கணேசனும்

சாலையில் குதித்தான். 'பச்சக்' என்று மழை நீர்த் துளிகள் நாலாபுறமும் சிதறிப் பறந்தன.

சாலை ஓரமாக சப்பாத்திக் கள்ளிச் செடிகள். அதையே வேலி போல நெடுந்தூரத்திற்கு வளர்த்திருந்த னர். கணேசன் மாலைக் கழுத்தோடு அதைத் தாண்டும் முன் மாலையை அவிழ்த்து வண்டியில் அமர்ந்திருந்த தமயந்தியிடம் கொடுத்தான். பிறகு வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டான். சப்பாத்திக்கள்ளி வேலியை ஒரே வேகத்தில் தாண்டிக் குதித்தான். அப்படியே சருகுகளை மிதித்துக் கொண்டு, ஓங்கி வளர்ந்து பழங்களோடு தொங்கியபடி இருந்த மாமரத்திடம் சென்றான். எப்படி ஏறுவது என்று கீழிருந்தபடியே ஒரு பார்வை பார்த்தான்.

சொரசொரவென்று செதில்கள். மூன்று பேர் சேர்ந்து பிடித்தாலும் வசப்படாதபடி அடித்தண்டுப் பகுதி. கிட்டத் தட்ட பத்தடி உயரத்துக்கு மேல்தான் கிளைப் பகுதிகள் மிருதுவாகியிருந்தன. அதை எட்டிப் பிடித்து மேலே ஏறுவது சிரமம் என்பது பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது.

ஒரு கயிறு இருந்தால் மரக்கிளைமேல் வீசி எறிந்து அதை வளைத்துக் கட்டிப் பிடித்து மேலே ஏறுவதுதான் உசிதம் போலத் தோன்றியது.

மாட்டு வண்டிக்குள் முழங்காலை மடக்கி அமர்ந்து கொண்டு—கணேசன் எப்படி பழம் பறிக்கப் போகிறான் என்று பார்த்தபடியே இருந்தாள் தமயந்தி.

அப்போது மாங்காட்டுக்குள் இருந்து ஒரு பத்து வயது சிறுவன் பாலமுருகன் போல இடுப்பில் துண்டுடன் திபுதிபுவென ஓடிவந்தபடி இருந்தான். படுவேகமாக வந்த அவன் கணேசனை மிரண்ட விழிகளுடன் பார்த்தான்.

"ஏய்... யாருடா நீ? எதுக்கு இப்படி எரைக்க எரைக்க ஓடி வர்றே?"



"அது வந்து.. அது வந்து.. ஆமா நீ யாரு... இந்த மரத்தை எதுக்கு பாக்கறே?"

"நான் உன்னிய கேட்டா நீ என்னிய கேக்கறியா.. நீ யாருடா? முதல்ல சொல்லு.."

"என் பேர் கொடுக்காபுளி. நான் இந்த தோப்புக் காரரோட மகன்.."

"சரி.. இப்ப விசயத்த சொல்லு.. எதுக்கு ஓடி வந்தே?"

"அது வந்து... இது சாமி மரம். இதுல யாரும் ஏறக்கூடாது.."

"சாமி மரமா?"

"ஆமாம்... முனீஸ்வரன் மரம். இதுல காய்க்கற காய், பழம் எல்லாம் முனிக்குதான்..."

"என்னடா இது புதுசா இருக்குது.. ஒரு மரத்துல காய்க்கறதுல ஒரு நாலஞ்சு பழத்தை சாமிக்குன்னு எடுத்து வைப்பாங்க. ஒரு மரத்தையேவா கொடுப்பாங்க?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. இதுமேல யாரும் ஏறமாட்டாங்க. நீ ஏறிட்டா என்ன பண்றதுன்னுதான் சொல்றதுக்கு ஓடி வந்தேன்."

"சரி.. மரத்துல ஏற வேணாம். மாம்பழத்தைக் கல்லால அடிக்கலாம்ல..?"

"இது சாமி மரம். இதுல கீழ உழுவற பழத்தைக்கூட நாங்க சாப்பிடமாட்டோம். அப்புறம் உங்க இஷ்டம்..."

—அந்தப் பொடியன் சொல்லிவிட்டுத் திரும்பி ஓடினான். கணேசன் முகத்தில் சற்று குழப்பம். வண்டியில் இருந்தபடியே தமயந்தி பார்த்துக்கொண்டே இருந்தாள். அவளுக்கு அவர்கள் பேசிக்கொண்டது காதில் விழவில்லை. அவனும் அங்கிருந்தபடியே அவளைப் பார்த்தான்.

ஆசை மனைவி முதல் முறையாக ஒரு மாம்பழம் கேட்டிருக்கிறாள். இதைக்கூட பறித்துத் தராவிட்டால் தன்னை என்னவென்று நினைப்பாள்?

அந்தப் பொடிப்பயல் சொல்லிச் சென்றது அவனுக்குள் ஒரு வேடிக்கையான விஷயமாகத் தான் தோன்றியது.

முனிக்கு எதற்கு மாம்பழம்? அப்படியே தேவை என்றாலும் ஒரு மரத்துப் பழத்தையா அது சாப்பிடப் போகிறது..? இத்தனைக்கும் எந்த முனீஸ்வரன் மரம் என்று அந்தப் பொடியன் சொன்னானோ அந்த முனீஸ்வரனைக் கும்பிடத்தான் அவர்கள் இருவருமே கூடப் போய்க் கொண்டிருக்கின்றனர்.

முனீஸ்வரன்தான் அவர்கள் குலசாமி.

அதுவா தன்னைத் தண்டிக்கும்? இதுதான் அவனுக்குள்ளான கேள்வி.

இறுதியில் ஆசை மனைவியின் ஆசைதான் வென்றது. தரையில் குனிந்து ஒரு கல்லை எடுத்தவன் மரக்கிளைகளுக்கு நடுவே எறிந்தான். அதில் ஒரு கல்பட்டு இரண்டு பழங்கள் ஜோடியாகக் காம்பறுந்து விழுந்தன.

ஓடிப்போய் கையில் எடுத்தான். நல்ல மஞ்சளும் சிவப்பும் கலந்த பழம். திம்மென்று கையில் கனத்தது.

பழத்துடன் தமயந்தியை நோக்கித் திரும்பினான். வண்டியிலும் தாவி ஏறினான். சாமிக் கவுண்டர் மீண்டும் மாட்டு வாலை முறுக்க; மாடுகள் இரண்டும் வேகமெடுத்தன.

பழத்தைத் தமயந்தியிடம் தந்தான். அவளும் அவனை ஒரு வீரனைப் பார்ப்பதுபோல பார்த்தபடியே வாங்கிக் கொண்டாள்.

"சாப்டு.. நல்லா வாசமா இருக்கு பார்.."



—அவன் சொன்னது சாமிக் கவுண்டர் காதில் விழ, அவர் சிரித்தார்.

"மாப்ள... இந்தக் கெழவனுக்கும் ஒரு பழம் தரணும்னு தெரியலியாக்கும்?" என்றார். கணேசனும் சளைக்கவில்லை.

"இது பழம் இல்லை மாமா... காய்... உங்களுக்குத்தான் பல்லு இல்லையே.." என்றான். தமயந்தி பழத்தை வாயில் வைத்திருந்தாள். வைத்த வேகத்தில் பழத்தை உதறினாள்.

"என்ன புள்ள.."

"ஒரே புளிப்பு.."

"பாக்க பழுத்தப் பழமா தெரியுதே..."

"ஐயோ... அநியாயப் புளிப்பு.." என்றபடி பழத்தையும் தூக்கி எறிந்தாள். சாமிக்கவுண்டர் பார்த்துவிட்டு "தூக்கி எறியத்தான் அதைக் கேட்டியாக்கும்?" என்று கேட்டார். அதைக்கேட்டு அவள் முகம் வருத்தப்படத் தொடங்கியது.

"ஏ புள்ள... என்ன?"

"ஒண்ணுமில்ல.."

"சும்மா சொல்லு.."

"இல்ல... நீங்க முதல் முதலா தந்ததை நான் தூக்கி எறிஞ்சிட்டேன்."

"புளிச்சிச்சு.. எறிஞ்சே.. இதுல என்ன இருக்கு?"

"உடனேயே இனிப்பா எதாவது வாங்கித் தாங்க மாமா."

"தந்துட்டாப் போச்சு... நம்ம பழத்தூர் முனீஸ்வரன் கோயிலைச் சுத்திதான் சந்தை. சந்தைல அல்வாவும், மிச்சரும் நல்லாருக்கும். ஒரு தூக்கு அல்வா கால் பணம் தான்.."

"ஐயோடி அம்புட்டு காசா?"

"அல்வாங்கறது நெய்யுல பண்றது புள்ள.."

"எங்கம்மா கடலெண்ணைல பண்ணுவாங்க."

"இந்த அல்வாவைத் தின்னுபார், தெரியும்."

— கணேசன் அவள் முன்னால் தன் கம்பளிப்பூச்சி மீசையை ஒரு நீவு நீவிக்கொண்டான்.

"மாப்ள.. ஊர் வந்துடுச்சி.. தா கோயில் சாமி தெரியுது பாருங்க..." என்றார் சாமிக்கவுண்டர். அவர் சாட்டைக் கையோடு காட்டிய திக்கில் பழத்தூர் முனீஸ்வரனின் முப்பதடி உயர உருவச்சிலை கம்பீரமாகத் தெரிந்தது.

அதைப்பார்த்த மாத்திரத்தில் தமயந்தி படபட வென்று கன்னத்தில் போட்டுக்கொண்டாள். கணேசனும் பக்திப் பரவசத்துக்கு மாற ஆரம்பித்தான். சாமிக்கவுண்டர் வாலை முடுக்கி மாடுகளிடம் வேகம் காட்டினார்.

பழத்தூர் சாலைக்குள் வண்டியும் வேகம் எடுத்தது. ஒரு வழியாக 'முனீஸ்வரன் பொட்டல்' என்னுமிடத்தில் உள்ள கம்பீரமான அவனது சன்னதி முன் போய் நின்றது.

மூன்று பேருமே கீழிறங்கினர்.

கணேசனும் தமயந்தியும் மணக் கோலத்தில் வருவதைக் கோயில் பூசாரி கோலப்பனும் பார்த்தார். அப்பொழுதுதான் ஒரு புதுமணத் தம்பதி சாமிக்கு எலு மிச்சம்பழ மாலையைப் போட்டுவிட்டுச் சென்றிருந்தனர்.

"வாங்க.. வாங்க.." என்று இருவரையும் வரவேற்றார். சாமிக்கவுண்டர் முந்திக் கொண்டார்.

"பூசாரிய்யா..! காலைலதான் கண்ணாலம் முடிஞ்சிச்சு. எங்க குடும்பத்துல முதல் ஆசிர்வாதம் முனி



தான். பொறவுதான் அப்பன் ஆயி கூட.. அதான் பக்கத்து பருத்தியூர்ல இருந்து கண்ணாலம் முடியவும் வண்டி கட்டிக்கிட்டு வர்றோம்..." என்றார்.

"சந்தோஷம்.. மாலையும் கழுத்துமா வந்து நிக்கும் போதே நினைச்சேன். எப்ப முனிய நம்பி வந்துட்டீங் களோ அது உங்களை எப்பவும் கைவிடவே விடாது..." — என்ற பூசாரி முனீஸ்வரன் காலடியில் சொம்பில் வேப்பிலை போட்டு வைத்திருந்த தண்ணீரை எடுத்து வந்து தமயந்தி முகத்திலும் கணேசன் முகத்திலும் மாறி மாறி அடித்தார். இருவரும் பலிக்கோழிபோல உதறி விட்டுக் கொண்டனர்.

பின் திருநீறை எடுத்து தலைக்குமேல் கையை உயர்த்தி முனீஸ்வரனுக்குக் காட்டிவிட்டு அதைக் கணேசன் நெற்றி யிலும் தமயந்தி நெற்றியிலும் பூசிவிட்டார். சாமிக் கவுண்டர் தானும் முன்வந்து கொக்குபோல முகத்தை முன்னால் நீட்ட, அவருக்கும் விபூதி போட்டுவிட்டார். அதன்பின் சாமிக்கவுண்டர் பூசாரியின் தட்டில் மஞ்சள் துணியில் முடிந்த நான்கு காலணாக்களைக் காணிக்கை யாகப் போட்டுவிட்டு 'ஒரு தூக்கு நெல் கொண்டு வந்து ருக்கேன். எங்க இறக்கட்டும்?' என்று கேட்டார்.

பூசாரியும் நெல் குதிரைக் காட்டி, நேர்த்தி நெல்லை அதில் கொட்ட வேண்டும் என்பது போல சைகை காட்ட, சாமிக்கவுண்டர் வண்டி நோக்கித் திரும்பினார்.

கணேசனும் தமயந்தியும் முனீஸ்வரனைச் சுற்றி வந்து வணங்க ஆரம்பித்திருந்தனர். அப்போதுகூட தமயந்தியை ஒட்டி ஒட்டி உரசிக் கொண்டுதான் நடந்தான் கணேசன். பூசாரி கவனித்த போதிலும் கல்யாணப் புதிது என்பதால் கண்டு கொள்ளவில்லை.

திடும்மென்று அந்த இடைவெளியில் வானில் மேகங் களின் திரளல். மழைமேகக் கூட்டம் திமுதிமுவென்று வந்து நீரை உதிர்க்க ஆரம்பித்தது.

"அடைமழைங்கறது சரியா இருக்கு..." — என்றபடியே பூசாரி அவர் குடிசை நோக்கி ஓடினார். கணேசனும் தமயந்தியும் அந்த மழைக்கு அஞ்சியது மாதிரியே தெரிய வில்லை. சுற்றி வந்தபடியே இருந்தனர்.

"ஏ கல்யாணப் பொண்ணு... மழைல நனையாத ஆத்தா... காச்ச குளிர் வந்தா மொத ராத்திரி தப்பிப் போகும். எப்பவும் மொத ராத்திரி மட்டும் முகூர்த்தத்துல இருந்து ஒம்பது நாழிகை நேரத்துல நடந்து முடிஞ்சிட ணும். அப்பதான் கல்யாணத்துல பெரியவங்க பண்ணின ஆசிர்வாதம் அப்பிடியே உடம்புல இருந்து கருப்பிடிக்கிற குழந்தைக்கும் அது போய்ச் சேரும்..." என்று பூசாரி போகிற போக்கில் சொன்ன தகவல் கணேசனைச் சிந்திக்க வைத்தது... அவளை அப்படியே கூட்டிக்கொண்டு முனீஸ்வரனுக்கு ஐம்பது அறுபதடி தூரத்தில் வளர்ந்தி ருந்த சொரகவுத்தி மரத்துக்கு அடியில் போய் நின்று கொண்டான்.

மழை வலுக்கத் தொடங்கியது.

காற்றும் நீரும் பேட்டை ரவுடிகள்போல மோதிக் கொண்டு சிதறின.

சாமிக்கவுண்டர் தான் ஓட்டி வந்த வண்டியின் ஜமுக்காளக் கூரைக்குக்கீழ் போய் உட்கார்ந்துகொண்டார். மழையும் பிரண்டு பிரண்டு சீறி, கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் நீடித்தது. வண்டி நின்றிருந்த இடத்தில் மட்டுமே தண்ணீர் மாடுகளின் அடி வயிறு வரை வந்து விட்டது.

செந்நீர் வெள்ளம் அப்படியும் இப்படியும் பள்ளி விட்டு வீடு செல்லும் குழந்தையின் குதூகலத்தோடு ஓடியது... சாமிக்கவுண்டர் அதைப் பார்த்துவிட்டு "அடடா... இந்தத் தண்ணில வண்டிய எடுக்க முடியாதே..." என்று முணுமுணுத்தார். கணேசனும் பட்டு வேட்டி



அழுக்காகிவிடக்கூடாதே என்று அவிழ்த்துத் தோளில் போட்டிருந்தான். இடுப்புக்குக்கீழ் கோமணம் மட்டும் தான்.

"மாப்ள... என்னது இது... வேட்டிய இடுப்புல கட்டுங்க. அழுக்கானா ஆவட்டும்." என்றார் சாமிக் கவுண்டர்.

"அது இல்ல மாமா... என் கல்யாண வேட்டி இது. இதை நான் அழுக்காக்கமாட்டேன். சரி... இப்ப எப்படி மாமா ஊர் திரும்பறது?" என்று கேட்டான்.

"அதான் புரியல. வண்டிய கிளப்ப முடியாது மாப்ள... சக்கரம் புதைஞ்சு போயிடும்" என்றார் சாமிக்கவுண்டர்.

"அப்ப பழத்தூர்லயே எங்கிட்டாச்சும் ஒதுங்க வேண்டியதுதானா?" என்று கேட்டான்.

"அதுதான் ஒரே வழி..."

போய்ப் பார்த்துட்டு வரேன்" என்று கிளம்பினான் கணேசன். மரத்தடியில் நடுங்கியபடியே நின்றுகொண் டிருந்த தமயந்தி அவன் போவதைச் சற்று சோர்வோடு பார்த்தாள்.

"இன்னிக்கு நாம இங்கேயே தங்கிட வேண்டியது தான்..." என்று அவள் காதுகளில் விழும்படி கத்திக் கொண்டே சென்றான்.

"மாப்ள சீக்கிரமா வாங்க.. புதுப்பொண்ணு மனசு தாங்காது..." — என்று சாமிக்கவுண்டரும் ஒத்து ஊதினார்.

"சரி மாமா..." என்றபடி நடந்தவன் தலை மறைந்த நொடி, அங்கே ஓர் அதிர்ச்சிக்குரிய விஷயம் அரங்கேறத் தொடங்கியது.

சேர்வராயன் மலைக்கள்ளன் சேந்தன் குழந்தை என்பவன் தன் சகாக்களுடன் குதிரை மீதமர்ந்து அங்கு

வந்ததுதான் ஆச்சரியம். அவனைப் பார்க்கவும், பூசாரியே ஆடிப்போனார். சேந்தன் குழந்தை முற்றாக நனைந்திருந்தான். குதிரைகளிடமும் களைப்பு தெரிந்தது.

"கொழந்த..." என்றார் பூசாரி.

"உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்... வழில மழை பிடிச்சிருச்சி..." என்ற சேந்தன் பொத்தென்று குதித்தான்.

"கொழந்த... 'என்கிட்டதான் அந்த நகைநட்டு எதுவும் இல்லே'ன்னு சொன்னேனே... கேட்காட்டி எப்படி கொழந்த..." என்று அவர் கீழ்ஸ்தாயியில் சொன்னார்.

"உன்கிட்டதான் இருக்கு. செட்டியார் காசிக்குப் போகும்போது உன்கிட்டதான் கொடுத்துப் பத்ரமா வெச்சுக்கச் சொல்லிட்டுப் போயிருக்கார். நீ இல்லேன்னு சொன்னா நான் நம்பிடுவேனா பூசாரி..." என்று பூசாரியின் மார்பு நடுவே கத்தியின் கூர்முனையைப் பதித்த சேந்தன் குழந்தை, அப்போதுதான் மழைப்புறா போல தெரிந்த தமயந்தியைப் பார்த்தான். அவன் கவனம் அப்படியே திசை திரும்பியது.... அவளை நோக்கித்தான் நடந்தான். "எஹே... யார் இந்த குட்டி—

அதுவும் மாலையும் கழுத்துமா?"

— அவன் எதற்காகப் போகிறான் என்பது பூசாரிக்கு விளங்கிவிட்டது.

"சேந்தா... வேண்டாம். அது கல்யாணப் பொண்ணு..." என்று தமயந்திக்காக வக்காலத்து வாங்கிக் கத்தினார். பார்த்தபடி இருந்த மாமா சாமிக்கவுண்டருக்கு இந்த நேரம் பார்த்து கணேசன் பழத்தூருக்குள் போய்விட்டது பெரிய தப்பாகவே பட்டது. அதற்காக வேடிக்கை பார்க்கும் அளவுக்கு அவர் ஈனமும் இல்லை. ஆவேசத்தை எல்லாம் திரட்டிக்கொண்டு ஓடி வந்தார். சாமிக்கவுண்டருக்கு கள்ளன் சேந்தன் குழந்தை எப்படிப்



பட்டவன் என்பது தெரியும். கன்னமிடுவது அவன் தொழில். கொலைகள் செய்வது அவனது பொழுது போக்கு. கற்பழிப்பது அவனுக்கு விளையாட்டு. எனவே ஆவேசமாக ஓடி வந்தவர் அப்படியே மழை நீருக்குள் வெளித் தெரியாதபடி மூழ்கியிருக்கும் சேந்தனின் கால்களில் விழுந்து அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். அப்படியே கதற ஆரம்பித்தார்.

"ஐயா... வேண்டாம்யா, இது புதுப் பொண்ணுங்க. சாமிகிட்ட ஆசிர்வாதம் வாங்க வந்துருக்குதுங்க. இவ புருஷன் மழைக்கு ஒதுங்க இடமில்லாம ஊருக்குள்ள ஏதாச்சும் ஊடு கிடைக்குமான்னு பார்க்கப் போயிருக்கான். பாவம்யா இது... விட்ருங்கய்யா..."

சேந்தன் சாமிக்கவுண்டரைப் பதிலுக்கு எட்டி உதைத்தான்.

"புதுப் பொண்ணுங்கறே... விட்ருன்னு வேற சொல்ற... யாருய்யா இது... எனக்குப் புதுசுன்னாதான் ரொம்ப பிடிக்குங்கிறது உனக்குத் தெரியாதாக்கும்..." என்றபடியே தமயந்தியை நோக்கி அடிமேல் அடி வைத்தான். அவள் அந்த மழை நனையலிலும் வியர்த்து நடுங்கினாள். ஓர் ஓரப் பார்வையால் முனீஸ்வரனைப் பார்த்தாள்.

பூசாரிக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

"கொழந்த... வேண்டாம் கொழந்த. சாமி பாத்துகிட்டே இருக்கு..." என்று இடையில் புகுந்து கத்தினார். அவனும் சாமியைப் பார்த்தான்.

ஓர் இடக்கு சிரிப்பு சிரித்தான்.

"பூசாரி... சாமியை போன தபா நான் கும்பிட வந்தப்ப என்ன வேணும்னு கேட்டேன் தெரியுமா?"

"....................."

"முழிக்காதே... நானே சொல்லிப்பிட்றேன். 'சாமி... எனக்குன்னு புதுசா —இளசா— ஒரு நல்ல பொண்ணு வேணும்'னுதான் கேட்டேன். கட்டிக்க இல்லை... வெச்சுக்க! என்ன ஆச்சரியம் பார்... இன்னிக்கு நான் வந்திருக்குறேன்... பொண்ணு தயாரா இருக்குது..."

— சேந்தன் தான் ஒரு மிருக இனம் என்பதைச் சொல்லாமல் சொன்னான்.

"சாமி... நீ கண்கண்ட தெய்வம்யா... கண்கண்ட தெய்வம்..." என்று தமயந்தியை நோக்கி கையை நீட்டினான். அவள் பயந்து ஓடப் பார்த்தாள். ஆனால், இன்னொரு கள்ளன் குதிரையோடு அவள் முன்னால் போய் மறித்தான். மறித்தவனே அப்படியே அவளைத் தூக்கி குதிரை முதுகில் தன் முன்னால் போட்டுக் கொண்டான். அப்படியே வலக் கணுக்காலால் குதிரையின் பின் தொடையில் ஓர் உதை.

அது சீறிக் கொண்டு ஓட ஆரம்பித்தது. அவனைப் பின்தொடர்ந்து மற்ற கள்ளர்களின் குதிரைகள்.

"ஐயா... ஐயா..." — என்று கத்திக் கொண்டே பின்னால் ஓடினார் சாமிக்கவுண்டர். அவரால் ஓர் அளவுக்கு மேல் ஓட முடியவில்லை. அப்படியே சேற்றில் வழுக்கி விழுந்தார். அப்பொழுது பழத்தூருக்குள் போயிருந்த கணேசனும் திரும்பி வந்து கொண்டிருந்தான். திபுதிபு வென்று குதிரை மேல் சிலர் போவதைப் பார்த்து முதலில் அதை, ஊர் இளைஞர்களின் விளையாட்டுப் போட்டி என்றுதான் எண்ணினான். சாமிக்கவுண்டர் விழுந்து கிடப்பதைப் பார்த்துத்தான் 'ஏதோ விபரீதம்' என்று அவனுக்குப் புரிந்தது.

ஓடி வந்து அவரைத் தொட்டுத் தூக்கினான்.

"மாமா... என்ன மாமா ஆச்சு?" என்று பதறவும் செய்தான்.



"மாப்ள... தப்பு நடந்து போச்சு மாப்ள... கள்ளன் சேந்தன் கொழுந்த நீ போன பிறகு கோயிலுக்கு வந்தான். அந்தக் கேடு கெட்டவன், நம்ம தமயந்தியைத் தொட்டு தூக்கிப் போறான்..." என்று கதறினார்.

கணேசனுக்கு திம்மென்று நெஞ்சில் குத்து விழுந்ததுபோல் இருந்தது.

பூசாரியும் அவனைப் பார்த்துவிட்டு ஓடி வந்தார்.

"தம்பி.. தம்பி... சாமி முன்னாலயே அந்தக் களவாணி உன் பொண்டாட்டியைத் தொட்டுத் தூக்கிட்டுப் போறான். நடக்கக் கூடாதது நடந்துடிச்சு.. ஊருக்குள்ளார போய் தலையாரிகிட்ட விசயத்தைச் சொல்லி அடிவாரக் காட்டுக்குக் கூட்டமா போங்க. ஓடுங்க" என்றார். ஆனால் கணேசன் அவரைப் பார்த்து வெறித்துவிட்டுப் பார்வையை முனீஸ்வரனை நோக்கித்தான் செலுத்தினான்.

"என்ன தம்பி... இப்ப போய் சாமிய பாக்கறீங்க...?"

"இப்ப பாக்கம வேற எப்ப பாக்க?"

"அட போங்க தம்பி.. வந்து சாமிகிட்ட பேசிக்கலாம்."

"வந்து பேச என்ன இருக்க முடியும்..? ஆனா அவன் தூக்கிட்டுப் போகும்போது இந்தச் சாமி வேடிக்கைதானே பார்த்துக்கிட்டு இருந்துச்சு...?"

"இது என்ன கேள்வி தம்பி... எல்லாம் படுவேகமா நடந்துடிச்சி..."

"அதைவிட வேகமா இந்த சாமி வந்து தடுத்து நிறுத்தியிருக்கணும். ஏன் நிறுத்தலை?"

"மாப்ள... பொறவு பேசலாம்... வாங்க போகலாம். போய் தலையாரியைப் பார்ப்போம்.." — சாமிக்கவுண்டர் ஒருபுறம் அவன் கைகளைப் பிடித்து இழுத்தார். இருந்தும் திமிறிக் கொண்டு சாமியை நோக்கி ஓடியவன், போய்க்

கால்மாட்டில் நின்றான். திரும்பவும் நிமிர்ந்து முனீஸ்வரனைப் பார்த்தான். அவன் கண்களில் கனல்!

நெஞ்சுக்குள்ளே ‘உன் கண் எதிரிலேயே ஒரு அநியாயம்... நீ எப்படி வேடிக்கை பார்க்கலாம்?" என்கிற கேள்வி.

“தம்பி... உங்க மனக்கொதிப்பு புரியுது. ‘உன் கண் எதிர்க்க அநியாயம் நடந்துருக்கு. நீ வேடிக்கை பாத்துகிட்டு உட்காந்திருக்கியே'ன்னு கேக்காம கேக்கறீங்க. முனி இந்த மாதிரி அநியாயங்களை நிச்சயம் வேடிக்கை பார்க்க மாட்டான். அவங்களுக்குத் தண்டனை உண்டு. அதுக்காக நீங்க புத்தியிருந்தும் கையைக் கட்டிகிட்டு உக்காந்திருந்தா அதுல அர்த்தமே இல்லை தம்பி..." என்று பூசாரி திரும்பவும் வந்து படபடப்பு குறையாமல் சங்கு ஊதினார். ஆவேசம் குறையாமல் அவரைத் திரும்பிப் பார்த்த கணேசன் கொஞ்சம் கூட அவரைப்போல படபடப்புக்கு உள்ளாகவில்லை.

“பூசாரி..." என்றான் கர்ஜனைக் குரலில்.

“தம்பி..."

“சாமிகிட்டயே இருக்கறவர்தானே நீங்க...?"

“ஆமாம் தம்பி... பரம்பர பரம்பரையா இந்த சாமிக்குப் பூசை செய்யறதுதான் எங்க குலத் தொழிலே..."

“அப்படிப்பட்டவங்களுக்கு இந்த சாமி இருந்துமா சந்தேகம்?"

“என்ன சொல்றீங்க தம்பி...?"

“நானும் என் தமயந்தியும் இதை முதல்ல கும்புட்டுதான் வாழ்க்கையைத் தொடங்கணும்னு வந்தவங்க. வழியில இதோட மாமரத்துப் புளிப்பு மாம்பழத்த பறிக்கக் கூடாதுன்னு ஒருத்தன் சொல்லச் சொல்ல, கேக்காம



ருசி பார்த்தேன். அதான் இப்ப இங்க இப்படி எல்லாம் சிக்கல் வந்துடுச்சி. ஆசைக்கு அறிவில்லங்கறது சரிதான். காரணமில்லாம அந்த மரத்துப் பழத்தை யாரும் சாப்பிடக்கூடாதுன்னு சொல்ல அதுக்கும் கெட்ட நேரத்துக்கும் ஏதோ சம்பந்தமிருக்கு. அதான் அப்படி சொல்லி வெச்சிருக்காங்க. எங்க புத்திக்கு அதெல்லாம் எட்டாம போயிடுச்சி... இப்ப எனக்கு எல்லாம் புரியுது... எது எப்படியோ... நடக்கக் கூடாதது நடந்துடிச்சி. சாமிதான் இனி என் பொண்டாட்டிய காப்பாத்தணும்."

“தம்பி... அதுகிட்ட சொல்லிட்டீங்கல்ல... உடனே கிளம்புங்க. நிச்சயமா அது துணைக்கு வரும்."

“கிளம்பறேன் பூசாரி... அதோ அந்த வாளை எடுத்துக் கொடுங்க..."

“வாள் எதுக்கு தம்பி?"

“கொடுங்க பூசாரி... என் பொண்டாட்டி மேல ஆசை வெச்ச அந்த கள்ளன் தலையை வெட்டி எடுத்துகிட்டு வந்து இந்த சாமி காலடில வைக்கறேன்."

“தம்பி..."

“கொடுங்க சாமின்னா..." — கணேசன் சிங்கமாய் சீறினான். பூசாரியும் எலுமிச்சம்பழ நுனியுடன் கூடிய அந்த அரிவாளைக் கைகள் நடுங்க எடுத்து கணேசன் கையில் கொடுத்தார். பார்த்துக் கொண்டே இருந்த சாமிக் கவுண்டர் உடம்பில் நடுக்கமான நடுக்கம். கணேசன் அரிவாளுடன் ஆவேசமாக அங்கிருந்து புறப்பட்டான். பின்தொடர்ந்து வரப்பார்த்த சாமிக்கவுண்டரைத் தடுத்து விட்டான்.

“மாமா... இங்கயே இருங்க. கள்ளனுங்க தலையோட வர்றேன். அதுவரை சாமியையே பார்த்துகிட்டு இருங்க..." — என்று ஆவேசமாகக் கட்டளையிட்டவன் அடலேறு போல அரிவாளுடன் ஓடத் தொடங்கினான்.

தலையாரி தன் எதிரில் வந்து நின்ற கணேசனைப் பார்த்து ஆடிப்போய்விட்டார். அடுத்து—சேந்தன் குழந்தை அவன் மனைவியைத் தூக்கிச் சென்றுவிட்டான் என்கிற அந்த சேதி... அவன் பேரைக் கேட்டால் எட்டுத் திக்குமே நடுங்கியது. அவனது குரூரம் அப்படி பரவிக்கிடந்தது.

"தலையாரி... என்னய்யா வேடிக்கை பாக்கறே? என் பொண்டாட்டியைத் தூக்கிட்டுப் போய்ட்டாங்கறேன். முழிக்கிறே... கிளம்புய்யா..."

"அதுவந்து... அதுவந்து..."

"என்னய்யா வந்து போயின்னுகிட்டு..."

"இல்ல... அந்தக் கள்ளன் விஷயத்துல இறங்கறது ரொம்ப ஆபத்து. அவன் ஈவு இரக்கமில்லாதவன்..."

"அதனாலதான் அவனைக் கொல்ல சாமி அரிவாளோட கிளம்பி வந்துருக்கேன். நீயும் ஊர்க்காவல் படையும் இப்ப என்கூட வர்றீங்க..."

"இல்ல... சேந்தன் குழந்தைய நம்ம படையாலல்லாம் புடிக்க முடியாது..."

"முடிவா என்னய்யா சொல்றே?"

"வேண்டாம் விட்ரு... உன் பொண்டாட்டி செத்துட்டதா நினைச்சுக்க..."

"என்ன சொன்னே..." — அரிவாளுடன் முன்னே வேகமாகப் பாய்ந்தான்.

"ஆவேசப்படாதே... எங்க ஊர்லயே பல பெண்கள் அவனால கெடுக்கப்பட்டு செத்தே போயிருக்காங்க. நாளைக்கே பார். உன் பொண்டாட்டி ஒரு மரத்துல பொணமா தொங்கிட்டிருக்கறதா தகவல் வரும்."

"இப்படி சொல்லவா நீ தலையாரியா இருக்கே? உனக்கு வெக்கமா இல்லை?"



"இதோ பார்... நீ விவரம் புரியாம பேசறே... அந்த கள்ளன் நெஞ்சுல கொஞ்சம்கூட ஈரமில்லாதவன். சாமிக்கே அஞ்சாதவன்."

"இதைச் சொல்லத்தான் நீ தலையாரியா இருக்கியா?"

"சரி... இனி உன்கூட எனக்கென்ன பேச்சு. என்னால இனி உனக்கு எதுவும் செய்ய முடியாது..."

தலையாரி அவனுக்குள் பலத்த ஏமாற்றமளித்துவிட்டு உள்ளே போய்விட்டார். இருந்தும் சகித்துக்கொண்டு வெளியே வந்தவன் எதிரே ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. தமயந்தி அவன் எதிரில் கண்ணீரும் கம்பலையுமாக நின்றுகொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னால் விரைப்பாக இரண்டு பேர் பழத்தூர் கிராமமே வாசலில் நின்றுகொண்டிருந்தது. அந்த இரண்டு பேரில் ஒருவன் "ஏ தலையாரி..." என்று பலமாகக் குரல் கொடுக்க, தலையாரியும் அந்தப் புதிய குரலுக்குச் செவி கொடுத்து வாசலுக்கு வந்தான்.

தமயந்தியைப் பார்த்தவன் கண்களை அகட்டி விரித்தான்.

"என்னவே பாக்கே...? இது ஊரா இல்ல சுடுகாடா?" — அவன்தான் கத்திக் குரல் எழுப்பினான்.

"என்னங்க... என்ன நடந்துச்சு...?"

"இந்தப் பொட்டச் சிறுக்கி ஊர் எல்லைல புளிய மரத்தடில நின்னுகிட்டு விபச்சாரத்துக்குக் கூட்டிகிட்டு இருக்கா... உன் ஊர் இப்படியா கெட்டுப் போகணும்?"

— அவர்கள் கேட்ட கேள்வி கணேசனை இடியாகத் தாக்கியது. இதயத்தை நகக் கண்களால் கிள்ளியதுபோல இருந்தது.

"தமயந்தி.. என்ன புள்ள இது...?" — என்று அவள் அருகே சென்று அவள் தோளைப் பிடித்து உலுக்கினான்.

அவளிடம் கண்ணீர் மட்டும் வெளிப்பட்டபடி இருந்தது. மற்றபடி வாயே திறக்கவில்லை அவள்.

"ஏம்ப்பா... இவதான் உன் பொஞ்சாதியா?"

"ஆமாங்க..."

"அந்தக் கள்ளன் சேந்தன் தூக்கிட்டுப் போய்ட்டான்னு சொன்னே... ஆனா இவ விபச்சாரத்துக்குக் கூப்ட்டதா சொல்றாங்க..."

"நான் சொன்னதுதாங்க சத்தியம். இடைல வேற ஏதோ நடந்திருக்கு... ஐயா உண்மைய சொல்லுங்க. இவ நான் தாலிகட்டுன பொண்டாட்டி. இன்னிக்கு நாங்க முனீஸ்வரனைக் கும்புட உங்க ஊருக்கு வந்தோம். அப்படிப்பட்ட இவளா கெட்டவ?"

"அதெல்லாம் தெரியாது... மேலாக்கு துணி இல்லாம பிறந்த மார்போடு ஒருத்தி நாலுபேர் பாக்க வெக்கமில்லாம நின்னா அவளை என்னன்னு சொல்ல?"

"ஐயோ... அந்த முகத்தைப் பாருங்க. இவளா தப்பு பண்றவ...?"

"அப்ப வாயைத் திறந்து பேசச் சொல்... நீயும் நானும் தொண்டைத் தண்ணி போக கத்தறதுனால என்ன ஆயிடப் போகுது. ஏன் வாயே திறக்கமாட்டேங்கறா...?"

— தலையாரி கேட்டதற்குப் பிறகும் தமயந்தி வாயைத் திறக்கவில்லை. கண்களில் கண்ணீர்கூட வற்றி விட்டிருந்தது.

"ஏ புள்ள... வாயத் திறந்து பதில் சொல்லு... என்ன நடந்துச்சு? உன் உடம்பெல்லாம் ஏன் காயம்?"

— கணேசன் அவள் தோளைப் பற்றிக் கொண்டு உலுக்கி எடுத்தான்.

"நல்லா நடிக்கிறய்யா நீ... நாங்க நினைக்கறோம் — நீ இவ புருஷன் இல்ல... புருஷங்ன வேஷத்துல வந்திருக்கற கங்காணி..."



அந்தச் சொல் கணேசனைக் குத்திக் கிழித்தது. உடனேயே அப்படிச் சொன்ன மனிதனைப் பாய்ந்து பிடித்து மாடுபோல அவன் மார்பில் முட்டினான்.

"தலையாரி... யாருய்யா இது? அவனைப் பிடிச்சுக் கட்டுங்கய்யா... எங்க இருந்தோ வந்திருக்கற இரண்டு பேர் கூத்து கட்றாங்க. வேடிக்கையா பாக்கறே நீ...?" என்று கூடியிருந்தவர்களில் ஒருவர் கத்தவும், சிலர் வந்து கணேசனைப் பிடித்து இழுத்தனர். கணேசன் அதற்காக அசரவில்லை. தன் முழு பலத்தையும் காட்டி அவர்களை உதறினான். அவன் செய்கை அவன் ஒரு சண்டைக்குத் தயாராகிவிட்டதை அப்பட்டமாகக் காட்டியது.

"ஏண்டா... எங்க இருந்தோ வந்த நீ எங்களையே அடிக்கப் பாக்கறியா?" என்று அவர்கள் பதிலுக்கு அவனைத் தாக்கத் தயார் ஆயினர்.

"வேண்டாம். என்ன நடந்துச்சுன்னு தெரியாம தப்பா நடந்துக்காதீங்க. நாங்க சாமி கும்பிட வந்தவங்க. அந்த சாமி மேல சத்தியமா சொல்றேன். நானும் சரி... என் பொஞ்சாதியும் சரி ஒரு தப்பும் செய்யல..."

"என்னா ஒரு தப்பும் செய்யல...? உன் பொண்டாட்டியைக் கள்ளன் சேந்தன் தூக்கிட்டுப் போய்ட்டான்னே... இப்ப இவளோ இங்க இருக்கா. அவன் தூக்கிட்டுப் போனா அவ்வளவு சுலபத்துல விடமாட்டான். அந்த விசயமே பொய்... இவளோ வாயே திறக்கமாட்டேங்கறா..."

"ஐயா... என் பொண்டாட்டி அதிர்ச்சியில இருக்காய்யா. நம்புங்கய்யா..."

"நீ சொல்றத எதை வெச்சு நம்பறது...?"

"கோயில் பூசாரிய கூப்பிடுங்க. பூசாரி நடந்தத சொல்லுவார்..."

— கணேசன் தனக்குத் துணையாக பூசாரியை அழைக்க, அவரை அழைத்து வர சிலர் சென்றனர். பூசாரியும் அடித்துப் பிடித்து ஓடி வந்தார். ஆனால், வந்தவர் கணேசனைப் புது மனிதனைப் பார்ப்பதுபோல பார்த்ததுதான் ஆச்சரியம்.

"பூசாரி... இவன் ஏதேதோ சொல்றான். கள்ளன் சேந்தன் குழந்தை கோயிலுக்கு வந்து இவன் பொண்டாட்டிய தூக்கிட்டுப் போனானாம்... அப்படியா சேதி?"

"இல்லையே..." பூசாரி தன் பதிலால் அவன் தலையில் இடியை இறக்கினார்.

"அப்ப இந்தப் பொண்ணு...?"

"ஐய... இது ஒரு மாதிரியாச்சே..."

"மாதிரின்னா...?"

"என்னத்த சொல்ல... மொத்தத்துல நல்ல பொண்ணு இல்ல..."

— பூசாரி அலட்சியமாகச் சொல்லிவிட்டு கணேசனைப் பார்ப்பதையே தவிர்த்தார்.

"இப்ப உன் சாயம் வெளுத்துடுச்சா..." — தலையாரி பதிலுக்குக் கையை ஆட்டிக் கேட்டுவிட்டு "இவங்க ரெண்டு பேரையும் நம்ம முனீஸ்வரன் கோயில் திடல்ல உள்ள கல்தூண்ல பிடிச்சுக் கட்டிப் போடுங்க." என்றார்.

கணேசன் அப்படியே நொறுங்கிப் போய் விட்டான். இருவரையும் தரதரவென்று இழுத்துக் கொண்டு போய் கல்தூணில் கட்டினார்கள். "பஞ்சாயத்துத் தலைவர் வெளியூர் போயிருக்கார். நாளைக்குத் தான் வர்றார். அவர் வரவும் கூடிப்பேசி இவங்களுக்கு என்ன தண்டனைன்னு முடிவு பண்ணுவோம்" என்றது ஒரு குரல்.

"அது சரி... அவர் நாளைக்கும் வரலாம்; நாலு நாள் கழிச்சும் வரலாம். அதுவரை இவங்கள யார் காவல் காத்துக்கிட்டு கிடக்கிறது?"



"எதுக்கு காவல்... உடம்பு துணியை உருவிடுவோம். அம்மணக் கட்டையா இவங்களால எங்க ஓட முடியும்?"

"அதுவும் சரிதான்... ஊர் விட்டு ஊர் வந்து புருஷன் பொண்டாட்டின்னு சொல்லிகிட்டு விபச்சாரம் பண்ற இந்த மாதிரி ஜோடிகளை இப்படி தண்டிச்சாதான் புத்தி வரும். உருவுங்கடா துணியை..." என்றது ஒரு ரௌத்ரமான குரல். கணேசன் கண்கள் அகல—தொண்டை கிழிய அதற்கொரு மறுப்பைக் காட்ட முயன்றான்.

"இது அநியாயம்... இது அக்ரமம்... பழி ஒரு இடம்; பாவம் ஒரு இடத்துலயா...? முனீஸ்வரா! உன் மரத்துப் பழத்தை சாப்டதுக்கு இப்படி ஒரு தண்டனையா... இது ஆனாலும் அநியாயம்... அக்ரமம்..." என்று அவன் கத்தக் கத்த அவன் வேட்டி சட்டை உருவப்பட்டது. அடுத்து தமயந்தி— அவள் சட்டென்று உணர்ச்சிவயப்பட்டதுபோல "வேண்டாம்... வேண்டாம்... கிட்ட வராதே..." என்று கத்தினாள். பிறகுதான் நடந்ததைக் கூற ஆரம்பித்தாள்.

"அந்தக் கள்ளன் என்ன தூக்கிகிட்டுப் போகும்போது நான் அவன் கட்டாரியை உருவி அவனைக் குத்திட்டேன். உயிருக்குத் துடிச்ச அவனை அவனோட ஆளுங்க மருத்துவர்கிட்ட தூக்கிட்டுப் போனாங்க. நான் இடைல புகுந்து ஓடிவந்தேன். வந்த வேகத்துல ஒரு பள்ளத்துல விழுந்ததுதான் தெரியும். அப்புறம் என்ன நடந்ததுன்னே தெரியாது..." என்ற அவளது குரலை ஒருவரும் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

சிலர் அவர்களது நிர்வாணத்தைக் குரூரமாக நின்று ரசித்தனர். அவ்வளவு நேரமும் முனீஸ்வரன் கோயிலில் கணேசன் சொன்னது போலவே காத்துக் கொண்டிருந்த சாமிக்கவுண்டர் விஷயமறிந்து ஓடி வந்தார். கல்தூண்களில் நிர்வாணமாகக் கட்டப்பட்டிருந்த இருவரையும் பார்த்த நொடி அப்படியே அவருக்கு நெஞ்சையடைத்தது.

“டேய்... என்னடா ஊர் இது... என்ன மக்க நீங்க?” — என்று கேட்டவர் அப்படியே சுருண்டு விழுந்தார். உயிர் போயே விட்டது.

“மாமா...” — என்று அலறிய தமயந்தியையும் மயக்கம் ஆட்கொண்டு விட்டது. கணேசன் அப்படியே கழுத்தை வளைத்து முனீஸ்வரனைப் பார்த்தான்.

“நீ சாமி இல்ல... வெறும் கல்லு! உன் கண் எதுத்தாப் புலதான் எவ்வளவு அநியாயம்...! எவ்வளவு அக்ரமம்...!” என்றவன் “நீதி நியாயத்தை வேடிக்கை பார்த்த உன் சிலையை அடிச்சு நொறுக்காமவிட மாட்டேன்...” என்று தொண்டை கிழிய கத்தும்போதே அங்கே சுற்றுச் சூழலில் மாற்றங்கள். பலமாகக் காற்று வீச ஆரம்பித்தது. திரும்பவும் மழை மேகம் திரளும்போல தெரிந்தது. ஊடே கவளம் கவளமாக யாரோ ஊதித் தள்ளியது போல சுருட்டுப் புகை!

ஜல்ஜல் என்று காலில் சலங்கை கட்டிக் கொண்டு நடந்து வருவதுபோல கூட இருந்தது.

கணேசன் அப்படியே மௌனமாகி நடப்பதில் கூர்மையாகிப் பார்வையைச் சுழலவிட்டபோதுதான் அந்த அதிசயக் காட்சி அவன் கண்ணில் பட்டது.

அவன் பார்க்க அவன் கண் எதிரே வானில் இரண்டு மஞ்சள் துணிகள் மிதந்து வந்தபடி இருந்தன. அப்படி பறந்தும் மிதந்தும் வந்த அந்தத் துணிகள் நிர்வாணமாகக் கட்டப்பட்டிருக்கும் கணேசன் மேலும், தமயந்தி மேலும் விழுந்து முதல் காரியமாக அவர்களது நிர்வாணத்தை மறைத்தன.

சில நொடிகளில் “சாமி... தப்பு பண்ணிட்டேன் சாமி தப்பு பண்ணிட்டேன்” என்று பூசாரி கத்தும் சப்தம் காதில் விழுந்தது. தொடர்ந்து, கள்ளன் சேந்தன் செத்துட்டானாம். ‘அவனைக் குத்திட்டுத் தப்பிச்ச தமயந்திய விடக்கூடாது. அவளுக்காக ஊரே கூடியிருக்கு. ஊர் முன்னால பொய் சாட்சி சொல்லு. அவளை ஊர்ப் பஞ்சாயத்து கல்தூணில கட்டிப் போடு. நடு ராத்திரியில வந்து நாங்க எங்கக் கணக்கை தீர்த்துக்கறோம்’னு கள்ளனோட ஆட்கள் என்னை மிரட்டினாங்க. நானும் அவங்களுக்குப் பயந்து பொய் சொல்லிட்டேன்...” — என்று பூசாரி சொல்வதும் காதில் விழுந்தது. அதைத் தொடர்ந்து ஒரு விஷ்க் சப்தம். பந்துபோல எங்கிருந்தோ வந்து விழுந்தது பூசாரியின் தலை மட்டும்!

“விடியறதுக்குள்ள அங்க பத்து தலைங்க... அவ்வளவும் சேந்தன் குழந்தையோட திருட்டுக் கூட்டம்!

பத்துத் தலையும் உருட்டிவிட்ட தேங்கா மாதிரி முனீஸ்வரன் கோயில் முன்னால் கிடந்துச்சு... பொழுது விடியவும் வந்து பார்த்த ஊர்க்காரங்களும் அதைப் பார்த்து விக்கிச்சுப்போய் அப்படி அப்படியே நின்னாங்க... முதல் காரியமா கணேசனையும், தமயந்தியையும் கல் தூண்ல இருந்து அவுத்து விட்டாங்க. அப்படியே பொத்து பொத்துன்னு கால்ல விழுந்தாங்க. சாமிக்கவுண்டரையும் முறையா தூக்கிட்டுப் போய் அடக்கம் பண்ணாங்க.

பண்ண தப்புக்குப் பரிகாரமா கணேசனைப் பழத்தூர் நாட்டாமையா நியமிச்சு, அவனுக்கு முனி, மானங்காக்க தந்த அந்த மஞ்சள் துணியை அந்த சாமியாவே பார்க்க ஆரம்பிச்சாங்க. அந்த மஞ்சள் துணி பழத்தூருக்கு வந்த பின்னால பழத்தூர்ங்கற பேரும் மஞ்சளூர்னு மாறிடிச்சு.”

— உயரமான முனீஸ்வரன் சிலை முன்னால் நின்று கொண்டு கதை சொல்லிக் கொண்டிருந்தார் பள்ளிக்கூட வாத்தியார் பரந்தாம நாயுடு!

அவர் முன்னாலே பணிவாக அவர் கூறும் கதையைக் கேட்டபடி முனீஸ்வரனைத் தரிசிக்க வந்த பக்தர் கூட்டம்! அந்தக் கதையைக் கேட்டவர்கள் அதன் பிறகு முனீஸ்வரனைப் பார்த்த பார்வையில் பலத்த மாற்றம்.

முட்டை விழியும் ஆளுயர வாளுமாய் அமர்ந்திருந்த முனீஸ்வரனை சற்று பயபக்தியுடன் பார்த்தனர்.

எங்க ஊர் முனி, நூறு வருசம் முன்ன ஆரம்பிச்ச தர்மபரிபாலனம் இன்னிக்கு வரை தொடர்ந்துகிட்டு இருக்கு... இங்க எங்க வரைல மஞ்சத்துணிதான் முனி! வருசம் ஒரு தடவை திருவிழா அன்னிக்கு அந்த மஞ்சள் துணியைக் கொண்டு வந்து சாமிமேல போத்துவோம். பிறகு எடுத்து பத்திரமா ஒரு மரப்பெட்டில வச்சுடுவோம்..." — என்று தொடர்ந்து விளக்கமளித்தார்.

"அது சரிங்க... இப்ப அந்த மஞ்சள் துணி...?"

"கணேசக் கவுண்டர் பரம்பரைல வந்தவர்தான் இப்ப இருக்கற முருகேசக் கவுண்டர். அவர்தான் ஊருக்கும் பிரசிடெண்ட். அவர் வீட்லதான் அந்த மரப்பொட்டி இருக்கு..."

"அதை நாங்க பார்க்க முடியுமா?"

"சும்மால்லாம் பார்க்க முடியாது. பஞ்சாயத்துல பிராது கொடுத்தா பார்க்கலாம்..."

"பிராதா...?"

"ஆமா... இங்க யார் மேலேயாவது வழக்குன்னா அவங்க 'மஞ்சத்துணி பஞ்சாய'த்தைக் கூட்டி மஞ்சள் துணி மேல சத்தியம் பண்ணாக்க சத்தியம் பண்ணவர் சொன்னதை ஊர் கேட்டுக்கும். ஆனா மஞ்சள் துணி மேல பொய் சத்தியம்லாம் ஒருத்தன் பண்ணுனா அவனை முனி சும்மா உடாது!" பரந்தாம நாயுடு இப்படி மஞ்சளூர்



முனியன் பிரதாபத்தைப் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருந்தபோது அந்தப் பக்கமாக தன் புல்லட் பைக்கில் தடதடவென்று அவரைக் கடந்து போனான் உடையப்பன்.

தேக்குமரம் போல உடம்பு, வளைத்து முறுக்கிவிட்ட மீசை, பட்டுவேட்டி பட்டுச்சட்டை என்கிற மைனர் தோற்றம். அவனைப் பார்க்கவும், வாத்தியாரிடமும் சற்று சுருதி குறைந்தது. அவனும் பைக்கினை வளைத்து அவர் அருகே வந்தான்.

பைக் புகையை உமிழ்ந்தபடி சிக்சிக் என்று ராகம் பிடித்தது.

வாத்தியார் அவனைப் பார்த்ததில் பயப்படுவது போலவும் தோன்றியது.

"என்ன வாத்தியாரே... முனியப்பன் புராணத்தைச் சொல்லிகிட்டு இருக்கிங்களா?" என்று நக்கலாக ஆரம்பித்தான்.

"ஆ... ஆமாம் உடையப்பா... நீ எங்க இந்தப் பக்கம்?"

"இது என் ஊர்... நான் இந்த ஊர் பெரிய மனுஷன். போவேன், வருவேன்; வருவேன், போவேன்..."

"இல்ல... என்கிட்ட வந்து பேசவும் என்ன விஷயமோன்னுதான் கேட்டேன்..."

"இல்ல... யாராச்சும் நாலுபேர் சிக்கிட்டா முனியப்பன் கதையையும் மஞ்சத்துணி கதையையும் சொல்ல ஆரம்பிச்சிட்றீங்க—என்னமோ பக்கத்துல நின்னு பார்த்த மாதிரி..."

"ஏன் உடையப்பா... நான், எனக்குப் பெரியவங்க சொன்ன கதையை என்கிட்ட கேக்கறவங்களுக்குச் சொல்றேன். இதுல உனக்கு எங்க இடிக்குது...?"

"இடிக்கல... சிரிப்பா வருது... எங்கயோ பஜார்ல வித்த வேட்டிங்க ரெண்டை வாங்கிட்டு வந்து அந்த

முருகேசன்தான் ஏதோ கதை உட்டுகிட்டு திரியறான்னா அதை நம்ப உங்கள மாதிரி இரண்டு பேர்... ஹூம் எல்லாம் தலை எழுத்து..."

— உடையப்பன் தலையில் அடித்துக் கொண்டவனாக திரும்பவும் பைக்கைக் கிளப்பிக் கொண்டு நகர்ந்தான்.

பரந்தாம நாயுடுவும் 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டார். அதைப் பார்த்த அவரது சகாக்களும் ஆச்சரியத்தோடு அவரைப் பார்த்து முகம் சுளித்தனர்.

"என்னங்க... யார் இந்த ஆள்...? நீங்க முனியப்பன் கதை சொன்னா இவருக்கென்ன?"

"விஷயம் கதைல இல்ல... இவன் இந்த ஊர் மைனர். இவனுக்கு அந்த முருகேசக் கவுண்டர் குடும்பத்தைப் பிடிக்காது. அவங்கள ஊரே மதிக்கறத பார்த்துப் பொறாமை... அதான் அப்படி பேசிட்டுப் போறான்." — என்ற வாத்தியார் அங்கிருந்தபடியே தூரத்தில் தெரிந்த முனீஸ்வரனை ஒரு பார்வை பார்த்தார்.

கம்பீரமான சாமி!

சுற்றிலும் ஏராளமாக மரங்கள் வளர்ந்துவிட்ட போதிலும் உயரம் காரணமாக சாமியைப் பார்க்க முடிந்தது. அவர் சாமியைப் பார்க்கும்போது அவரிடம் கதை கேட்டவர்களும் பார்த்தனர். கணேசன் — தமயந்தி இருவரின் நிர்வாணத்தையும் மறைக்க அந்த மஞ்சள் துணி எப்படி மிதந்து வந்திருக்கும் என்கிற ஒரு சிறு கற்பனை அவர்களில் ஒருவருக்கு அப்போது தோன்றியது.

எங்கோ — யாரோ காயப்போட்டிருந்த துணிகூட காற்றில் பறந்து வந்திருக்கலாமோ என்றும் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

'சாமி விஷயம்...



அதைப்போய் எதற்கு சந்தேகப்பட்டுக் கொண்டு...' என்று அதற்குமேல் புத்தியை நோண்ட அவர் தயாரில்லை. ஆனால் ஒரு கேள்வி மட்டும் கேட்டார்.

"ஏங்க விசேஷமான அந்த மஞ்சள்துணி மேல யாராவது சத்தியம் செய்திருக்காங்களா?"

"எனக்குத் தெரிஞ்சு முப்பது வருஷமா ஒருத்தர் கூட பண்ணல. பண்ணுற தைரியம் ஒருத்தருக்குக் கூட இல்ல..."

"இந்தக் காலத்துலயுமா?"

"எந்தக் காலமா இருந்தா என்ன? சாமி சாமிதானே?"

— பரந்தாம நாயுடு போட்டார் ஒரு போடு... ஆனால்?

**இனி...**

# 1

'நான் நாடறிஞ்ச சாமி; குடிசை வீடறிஞ்ச சாமி...
மனசார நினைப்பதே — எனக்கான மந்திரம்!

— **முனிப்பாட்டு**

அந்த வயல் தழைத்து வளர்ந்திருந்தது.

பொசுபொசுவென்று அப்படி ஒரு பச்சை.

சுப்பிரமணியின் நம்பிக்கை கொஞ்சம்கூட வீண் போகவில்லை. இப்படியும் அப்படியுமாக நாலரை ஏக்கர் நிலம். நடுவில் ஊற்றுக் கண் வற்றாத அந்த வயலின் சேற்றுக் கிணறு.

மஞ்சளூர் வரலாற்றில் எவ்வளவோ பஞ்சங்களைப் பார்த்துவிட்டது. ஆனால் அப்போதுகூட அந்தச் சோற்றுக் கிணற்றில் தண்ணீர் வற்றியதில்லை. பஞ்ச காலங்களில் ஊருக்கே தண்ணீர் கொடுத்துப் பசியாற்றியதால்தான் அதற்குச் சோற்றுக் கிணறு என்று பேர் வந்ததாகவும் சொல்வார்கள்.

சுப்பிரமணியும் தன் ஒரே சொத்தான அதை வேலி போட்டுக் கட்டிக் காத்து வந்தான். கன்னி மூலையில் பம்பு செட்டு மோட்டார் அறைக்கட்டி தண்ணீர்ப் பாய்ச்ச எல்லா நவீன வழிமுறைகளையும் பயன்படுத்தி யிருந்தான். சுப்பிரமணிக்கு விவசாயத்தில் தீவிரமான ஈடுபாடு. அதனால்தான் எம்.காம். படித்திருந்தும் அப்பன் ஆசைப்படி ஆடிட்டராகவெல்லாம் விரும்பவில்லை.

"மண்ணை நம்புனா அது கைவிடாதுப்பா... உங்களுக் கெல்லாம் சிக்கனமான நவீன முறையைப் பயன்படுத்தி விவசாயம் செய்யத் தெரியில. நான் செஞ்சுக் காட்டறேன் பாருங்க..." என்று அவன் சவால் விட்டுக் காட்டி அதை நிறைவேற்றவும் செய்துவிட்டான். இத்தனைக்கும் மண் ணுக்கு கெமிக்கல் உரங்களைப் போட்டு அதைப் புண்ணாக்கவில்லை. அந்தக்கால இயற்கை உரம்தான். இதற்காகவே ஊரின் கண்மாய்க் கரையில் காடாய் வளர்ந்திருந்த இலை தழைகளை வெட்டி எடுத்து வந்து தன் மண்ணில் போட்டு மிதித்து தழைச்சத்தை உருவாக்கி அதைக் கொண்டு சாதித்ததுதான் இவ்வளவும்.

சுப்பிரமணிக்கே தன் நிலத்தைப் பார்க்கப் பார்க்க பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும்போல தோன்றியது.

பக்கத்தில் இருந்தது உடையப்பனின் நிலம்.

அதில் பசுமை என்பதைத் தேடவேண்டி இருந்தது. பயிர்களும் ஏதோ பெயருக்குத்தான் தழைத்திருந்தன.



உடையப்பனும் தன் நிலத்தின் வெள்ளாமையைப் பார்த்து நொந்துதான் போயிருந்தான்.

ஐ.ஆர்.20 நெல் நாற்றுகளில் சதைப்பிடிப்பே இல்லை. இத்தனைக்கும் உடையப்பனின் நிலம் சுப்பிரமணியைப் போல நான்கு மடங்கு கூடுதலானது. ஆனால் சுப்பிர மணிக்கு அமைந்த மாதிரி சோற்றுக் கிணறு அவன் வயலில் அமையவில்லை. நூறு அடிக்குத் தோண்டியும் கிணற்றில் நீரோட்டம் அமையவில்லை. அதுகூட பரவா யில்லை. போகிற போக்கில் ஒருவன் "அதுக்கெல்லாம் கொடுப்பினை வேணும் உடையப்பா... மனசு எப்படியோ அப்படியேதான் கிணறும்..." என்று சொல்லிச் சென்றது தான் உடையப்பனைக் கிண்டிக் கிழங்கெடுத்துவிட்டது. இத்தனைக்கும் உடையப்பனிடம் வட்டிக்குக் கடன் வாங்கித்தான் சுப்பிரமணி அவன் வயலில் பயிர் செய்தி ருக்கிறான். அவ்வளவும் இயற்கை சார்ந்த நவீன முறைகள். மாட்டுச் சாணம், நெய், சிறுநீர், பால், தயிர் என்கிற மாட்டின் ஐந்து அம்சங்களையும் கலந்து செய்த பஞ்ச கவ்யம்தான் அவன் வயலின் பூச்சி மருந்து... பச்சை இலை தழைச்சத்துதான் உரம். வேளை தவறாத தண்ணீர்ப் பாய்ச்சல்தான் ஊட்ட உணவு. கண் கொத்திப் பாம்பு போல இருந்து களை எடுத்துவிட்டதால் எல்லா சத்தும் நெற்பயிருக்கே போய்ச் சேர்ந்துவிட்டது.

இப்படிப்பட்ட உழைப்பு உடையப்பனிடம் இல்லை. ஆனால் அவன் புத்தி வேறுவிதமாய்க் கணக்குப் போட்ட படி இருந்தது.

உடையப்பனுக்கு ஒரு தம்பி இருக்கிறான். அவன் பெயர் கொத்தாளம்! உடையப்பனை விட ஐந்து வயது இளையவன்... சரியான மைனர் பேர்வழி.

கொத்தாளத்தின் படுக்கைக்குக் கீழ் எப்போதும் நிரம்பிய மதுபாட்டில்கள் இருந்து கொண்டிருக்கும்.

படுக்கப் போகும்போதும், எழும்போதும் மது உள்ளே போனால்தான் கொத்தாளத்துக்கு இயங்கவே தோன்றும். இல்லாவிட்டால் தான் ஒரு கற்சிலை என்பது போலத் தான் உணருவான்.

இன்று கொத்தாளம் ஸ்பெஷல் மிலிட்டரி சரக்கை ஏகத்துக்கும் ஏற்றிக் கொண்டிருந்தான். அதைப் போதை யோடு வயல்காட்டுக்குள் இருக்கும் ஒரு மாமரத்தடியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். மாமரத்தடிதான் அவனது சீட்டாட்ட பூமி. அவனுக்காக மஞ்சளூர் பிரஜைகளில் வேலை வெட்டி இல்லாத சில ஜென்மங்கள் காத்துக் கொண்டிருந்தன.

எல்லாவற்றையும் வயல்காட்டின் ஒரு மூலையில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த உடையப்பனிடம் ஒரு குரூரமான முடிவு!

## 2

'நான் காவக்கார சாமி
ரொம்ப கோவக்கார சாமி
கும்புட்டு நின்னாக்கா
கூடவே துணையிருப்பேன்
எம்புட்டு பெரியவனும்
எதிர்த்தாக்கா தலை எடுப்பேன்!'

– முனிப்பாட்டு

**சு**ப்பிரமணி வயலில் அறுவடை ஆரம்பித்துவிட்டது.

முன்பெல்லாம் பக்கத்துக் கிராமங்களில் இருந்து தூக்கு வாளியில் கம்பங்கூழுடன் ஒரு பெண்டிர் கூட்டம் கதிர் அறுக்க வேலைக்கு வரும். கதிர் அறுக்கும் போது குலவைப் போடுவதும், பாட்டுப் பாடுவதும் பார்க்கவே பரவசமாக இருக்கும். இப்போது காலம் மாறிவிட்டது. ஒட்டு மொத்த வயலில் உள்ள கதிர்களையும் டிராக்டர் போல ஒரு இயந்திரம்தானே அறுத்து தானே பிரித்து எல்லா வேலைகளையும் பார்த்து முடித்துவிடுகிறது. ஓர் ஏக்கருக்கு அதிகபட்சம் மூணு மணி நேரம்தான். டிராக்ட ரில் ரேடியோவும், டேப்ரிக்கார்டரும் வேறு...



பாட்டு கேட்டுக் கொண்டே வயலுக்குள் டிராக்டரைச் செலுத்திக் கொண்டிருந்தான் டிரைவர். நெல்லை அங்கங்கே குவித்ததில் வயல்வெளி முழுக்க நெல் மலைகள். சுப்பிரமணியின் மனைவி காவேரியும் வயல் காட்டுக்கு வந்திருந்த நெல் மலைகளை அளந்து மூட்டை கட்டுவதில் முனைப்பாக இருந்தாள். அவளோடு ஓடியாடி உதவிக்கொண்டு சிலர். கணவனும், மனைவியும் வயல் காட்டில் காலில் சக்கரம் கட்டிக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தனர். உடையப்பன் தன் வயல் வெளியில் நின்று கொண்டு பார்த்துக் கொண்டே இருந்தான். அவனைக் கடந்து போகப் பார்த்த டிராக்டர் டிரைவரை அழைத்து அறுவடை குறித்து ஆழம் பார்க்கவும் செய்தான்.

"எலே செங்கோடா... வாடா இங்க..."

"என்னண்ணே?"

"என்னடா... நான் நிக்கறதே கண்ணுக்குத் தெரியலியா?"

"ஐயோ கவனிக்கலேண்ணே..."

"எப்படி கவனிப்பே... அதான் நெல்லை மூட்டை மூட்டையா அள்ளிக் குவிக்கறேல்ல...?"

"ஆமாண்ணே... சுப்பிரமணி யோகக்காரன். போன தடவையைவிட இந்தத் தடவை நூறு மூட்டை கூடுதலாவே விளைஞ்சிருக்கு..."

"எப்படிடா இப்படி விளையுது... இங்க நான் என்னடா பண்ணல?"

"எல்லாம் சோத்துக் கிணத்துத் தண்ணியோட மாயம்ணே. அப்புறம் சுப்பிரமணி உங்கள மாதிரி வயலை நோட்டம் போட்ற பார்ட்டி இல்லையே... இறங்கி வேலை பாக்கற பார்ட்டியாச்சே..."

"என்னடா குத்திக்காட்றியா?"

"ஐயோ உள்ளதைச் சொன்னேண்ணே... ஆமா நம்ம வயல்ல எப்ப அறுப்பு?"

"அங்க முதல்ல முடி. பிறகு சொல்றேன்..."

"சரிண்ணே..." — டிரைவர் பேச்சை முடித்துக் கொண்டு அகலப் பார்த்தான். அவனைத் திரும்பவும் தடுத்து நிறுத்தியது உடையப்பன் குரல்.

"எலேய்..."

"என்னண்ணே?"

"எங்க பறக்கறே... நில்லு கொஞ்சம்."

"நேரமில்லண்ணே... பக்கத்துல சேலத்துல இருந்தும் கோயமுத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகத்துல இருந்தும் ஒரு குருப் வந்து சுப்பிரமணியோட வயல்ல எவ்வளவு விளைச்சல்னு பார்க்கப் போறாங்க. அவங்களைக் கூட்டிவரத்தான் போறேன்."

"அவங்க பாத்து என்ன பண்ணப் போறாங்க...?"

"அதிக விளைச்சல் காமிச்சா அம்பதாயிரம் ரூவா பரிசா தருவாங்களாமுல்ல... அப்புறம் பட்டமெல்லாம் வேற கொடுப்பாங்களாமே...?"

"அப்படியா?"

"ஆமாண்ணே... சுப்பிரமணிக்கு விளைச்சல்லயும் நல்ல காசு. பரிசாவும் பணம் கிடைக்கப் போகுது."



டிரைவர் பெருமிதப்பட்டபடியே விலகினான்.

உடையப்பனிடம் பெருமூச்சு சுட்டெரித்தது.

டிராக்டர் டிரைவர் சொன்னது போல எல்லாம் அந்தச் சோத்துக் கிணற்றின் மாயம். அதற்குள் அப்படி ஓர் ஊற்று!

எரிச்சல் பீறிட்டது.

தொடர்ந்து அங்கே நின்று சுப்பிரமணியின் நெல் வேட்டையைப் பார்க்க முடியாதபடி நெஞ்சில் ஒரு குறுகுறுப்பு.

பாக்கெட்டில் கிடந்த ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். ஊதியபடியே நடக்க ஆரம்பித்தான். அவன் பார்க்க, எதிரே முனீஸ்வரன் கோயில் பூசாரி ஒரு பெரிய கூடையுடன் வந்தபடி இருந்தார்.

அவனுக்குப் புரிந்துவிட்டது. விளைந்த நெல்லில் ஒரு பங்கை முனீஸ்வரனுக்கு முதல் காணிக்கை ஆக்குவதற்காக அவரைக் கூப்பிட்டிருக்கிறான் சுப்பிரமணி.

பூசாரியும் உடையப்பனைப் பார்த்தும் பார்க்காத மாதிரி போனார். ஊரில் உள்ள அத்தனை பேரும் முனீஸ்வரனைக் கும்பிட அவ்வப்போதாவது வந்து போவார்கள். அவர் வரையில் எட்டிக்கூடப் பார்க்காத ஒரே ஆள் உடையப்பன்தான்.

எனவே 'இவனிடம் என்ன பேச்சு?' என்று நினைத்து விட்டாரோ என்னவோ?

பூசாரியின் அலட்சியமும் உடையப்பனை உறுத்தும் விஷயத்தில் சேர்ந்து கொண்டது.

'போடி போ... உனக்கெல்லாம் வைக்கறேன் ஆப்பு...' என்று முனங்கிக் கொண்டான். அப்போது 'அண்ணே...'

என்று ஒரு அழைப்பு. தம்பி கொத்தாளம்தான் மாமரத் தடியில் இருந்து கூப்பிட்டது.

"என்னடா?"

"ஒரு அம்பது ரூவா வேணும்னே..."

"சீட்டாட்டத்துக்கா?"

"ஆமாண்ணே... முந்நூறு ரூவா வரை போச்சு. விட்டதைப் பிடிக்கணும்னே..."

"உனக்கு முந்நூறு ரூவா பெரிசா தெரியுது. எனக்கோ இந்த முந்நூறு மூடை பெருசா தெரியுதுடா!"

"என்னண்ணே சொல்றே... பணம் கொடுண்ணே."

"வெக்கமா இல்ல உனக்கு... உனக்கு செல்லம் கொடுத்து கெடுத்ததுல எனக்கும் பங்கு இருக்குடா... வா வெச்சுக்கறேன்."

உடையப்பன் கோபத்தைக் கொத்தாளம் மேல் காட்டிவிட்டு விறுவிறுவென்று நடந்தான்.

"எலே கொத்தாளம்... உங்கண்ணனே உன்னை மதிச்சு காசு தரலை. இப்ப யாருகிட்ட போய் கேப்பே..." — சீட்டாட்டக்காரன் ஒருவன் ரேக்கிவிட்டான். கொத்தாளத் துக்கு அவன் கேட்ட விதம் செருப்பாலடித்தது போல இருந்தது.

"இருடா வாரேன்..." — என்றபடியே லுங்கியை மடித்துக் கொண்டு கிளம்பினான். அவர்களது வயலில் ஓர் ஏக்கரில் கத்தரிக்காய்ச் செடி நடப்பட்டிருந்தது. அந்தச் செடிகளுக்கு இடையில் களைகள் முளைத்திருக்க, அவற்றைப் பிடுங்கிக் கொண்டிருந்தாள் செவ்வந்தி!

பெயருக்கேற்ப பூ போலத்தான் இருந்தாள். நல்ல தளதளப்பு, அவளைப் பார்க்கவும், கொத்தாளம் வரப்பு மேலேயே தேங்கி நின்றான். செவ்வந்தியும் அவன் நிற்ப தைப் பார்த்தாள். அவன் அவளை அருகில் அழைத்தான்.



அவளும் தயங்கித் தயங்கி சென்றாள்.

"செவ்வந்தி"

"என்னங்க எஜமான்?"

"மண்ணாங்கட்டி... என்னை அப்படி கூப்புடாதேன்னு சொல்லியிருக்கேன்ல...?"

"அது எப்படிங்க... நீங்க காசுக்காரங்க... நான் கூலிக்காரி... குடிசைல இருக்கறவ."

"போதும்... இப்ப உன்னால எனக்கு ஒரு காரியம் ஆகணும்."

"என்னங்க... எண்ணெய் தேச்சு குளிக்க வெந்நீர் போடணுங்களா?"

"அது அப்புறம்... இப்ப ஒரு அம்பது ரூவா வேணும் செவ்வந்தி."

"அம்பது ரூவாயா?"

"ஏன் செவ்வந்தி — இல்லையா?"

"இல்லீங்க... லட்சாதிபதி நீங்க. என்கிட்ட போய் ஒரு அம்பது ருபாய்க்கு நிக்கிறீங்களே..."

"இருக்கா, இல்லையா? அதச் சொல்லு முதல்ல..."

"தரேங்க..."

"அவள் இடுப்பு மடிப்பில் இருந்து எடுத்து தந்தாள்."

"ரொம்ப தேங்ஸ் புள்ள... இந்த அம்பதுக்கு ஐநூறா தரேன் பார் உனக்கு..." — கொத்தாளம் அவள் தந்த பணத்துடன் சீட்டாடுவதற்காக திரும்ப ஓடினான்.

அவளுக்கு அதைப் பார்க்க வெறுப்பாகவும் இருந்தது. வியப்பாகவும் இருந்தது!

# 3

'நடுச்சாமம் என் நேரம்!
வெள்ளக் குதிர — என் வாகனம்
ஒரு பாட்டில் சாராயம்
ஒருகட்டு பெரும் கருட்டு
இதெல்லாம் எனக்கு சாதாரணம்!'
— முனிப்பாட்டு

ஒரு மணி நேரத்திலேயே பாட்டுப் பாடியபடியே திரும்பி வந்தான் கொத்தாளம். செவ்வந்தி கத்தரிக்காயில் சொத்தை சொள்ளையைப் பிரித்துக் கொண்டிருந்தாள். அவன் வரவும் எழுந்து நின்றாள்.

"ஏ புள்ள... உன் கை நல்ல ராசியான கை புள்ள... நீ கொடுத்த அம்பது ரூவாயை வெச்சு ஐநூறு ரூவாய சம்பாரிச்சிட்டேன். இந்தா உன் காசு."

— அவள் எதிரே ஒரு நூறு ருபாயை நீட்டினான் கொத்தாளம். அவளும் தயக்கத்துடனும் வெட்கத்துடனும் ஒருவித குழைவுடன் வாங்கிக் கொண்டாள். அவன் பணத்தைத் தந்தபோது அவன் விரல்கள் அவள் கைமேல் பட்டது. அவளை அது என்னவோ செய்தது. அவனுக்கும் அந்த ஸ்பரிசம் பிடித்துப் போனது, சட்டென்று விலகப் பார்த்த அவளை அந்த ஸ்பரிசத்துக்காகவே சட்டென்று பிடித்து இழுத்தான்.

"ஐயோ என்னங்க எஜமான்... யாராவது பார்க்கப் போறாங்க. விடுங்க."

"பாத்தா இப்ப என்ன... நீ வயசுப் பொண்ணு,நான் வயசுப் பையன். பஞ்சும் நெருப்பும் பத்திக்கும்னு தெரியாதா?"



"இல்லீங்க விடுங்க... அப்படி பத்திக்கிட்டா பஞ்சு தாங்க சாம்பலா போகும். நெருப்பு நல்லா திகுதிகுன்னு எரியுங்க. விட்றுங்க..."

"பைத்தியக்காரி... நான் ஒரு பேச்சுக்கு சொன்னா அதையே பிடிச்சுக்கறியே. இதோ பார் புள்ள — உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. என்னை உனக்குப் பிடிச்சிருக்கா இல்லையா... மனசுல இருக்கறத போட்டு உடை பாப்போம்."

"எஜமான்..."

"அத்தான்னு சொல்லு."

"ஐயோ என்னங்க நீங்க..."

"நான் உன் அத்தான்... நீ என் ஆசைக்காரி..."

"கேக்க நல்லா இருக்கு... ஆனா காசுல மட்டும் இல்ல—சாதியிலயும் நீங்க எங்கயோ இருக்கறவங்க. நான் குந்தக் குடிசைகூட இல்லாதவ..."

"ஏன் அப்படி இருக்கறே... நான் இந்த... சாதி, புடலங்கா இதை எல்லாம் எந்த நாள்ள பெருசா நினைச்சிருக்கேன்..."

"அப்படின்னா...?"

"என்ன அப்படின்னா... அட வா புள்ள..."—அவளை அப்படியே இழுத்துக் கட்டிக் கொண்டு பக்கத்து சோள வயலுக்குள் நுழைந்தான்.

சோளக் கதிர்கள் நசுங்கி உதிரத் தொடங்கின!

உடையப்பனின் வீடு மஞ்சளூரிலேயே பெரிய வீடு. அந்த நாளைய வீடு. நடுவில் திறப்பு முற்றம். நாற்புறமும் நடைவெளி. அக்னி மூலையில் அடுப்படி. கன்னி மூலையில் படுக்கை அறை. ஈசான்யத்தில் சாமியறை. வாயு மூலையில் சாமான் செட்டுகள்.

முற்றத்தில் பிரம்பு நாற்காலி! நாற்காலியை ஒட்டி ஒரு மோட்டா. அதன்மேல் பீடிக்கட்டு. மனப் பிடுங்கலோடு வந்தமர்ந்த உடையப்பனுக்கு சோர்வான சமயங்களில் பீடிதான் அருமருந்து. சிறியதாக ஒரு அங்குலம் தான் இருந்தாலும் அதன் புகை காட்டம் சிகரெட்டிடம் கூட இல்லை. புகையிலும் அடர்த்தி அதிகம்.

அப்போதும் அப்படித்தான். எடுத்து பற்ற வைத்து நெஞ்சுக் கூட்டுக்குள்ளும் அந்தப் புகையை ஒரு சுற்று அனுமதித்துவிட்டு பின் மூக்கின் வழியாக காளவாசல் குழாய் போல புகையை பீறிட விட்டபோது வாசல்புறம் யாரோ வரும் அரவம்.

திரும்பிப் பார்த்தான்.

சுப்பிரமணிதான் தெரிந்தான்.

சுப்பிரமணி கையில் ஒரு மஞ்சள் பை!

"வா சுப்பிரமணி... வா... வா!" செயற்கையான உற்சாகத்துக்கு மாறி வரவேற்றான் உடையப்பன். சுப்பிரமணியும் உள்ளே வந்தான்.

"என்ன கைல மஞ்சள் பை...?"

"உன்கிட்ட வாங்குன கடன் பணம்தான்..."

"அட.... அதுக்குள்ள வாங்குன கடனைக் கட்ட வந்துட்டியா?"

"ஆமா... நல்ல விளைச்சல். கூடவே லட்ச ரூவா வரை பரிசாவே கிடைச்சிச்சு..."

"நானும் கேள்விப்பட்டேன்... உன் வயக்காட்டைதான் தினம் என் காட்டுல நின்னு பாக்கறேனே..."

"சரிங்க. வட்டியும் முதலுமா கொண்டாந்துருக்கேன். நான் அடகு வெச்ச என் நிலப்பத்திரத்தை..."



—சுப்பிரமணி அந்த நிலப்பத்திரம் பற்றி கேட்ட நொடி உடையப்பனுக்குள் 'விடாதே பிடி...' என்று ஒரு குரல்.

"பத்திரம் பேங்க்குல இருக்கு சுப்பிரமணி. நாளைக்கு எடுத்து தந்துட்டுப் போறேன். இப்ப என்ன?"

"அதுவும் சரிதான். எதுக்கும் இப்ப நான் கொடுக்கற பணத்தை வரவு வெச்சுகிட்டு எனக்கு ஒரு பேப்பர்ல எழுதிக் கொடுத்திடு உடையப்பா..."

"அட என்னப்பா நீ... அவ்வளவு கூடவா நம்பிக்கை இல்ல உனக்கு...?"

"இல்ல உடையப்பா- காசுபண விஷயத்துல கரெக்டா இருந்துக்கறதுதானே நல்லது." — சுப்பிரமணி கேட்டபடியே மஞ்சப் பையில் இருந்து ஐநூறு நோட்டுக்கட்டாக எடுக்க, அதைப் பார்த்த உடையப்பனுக்குக் கண்ணெல்லாம் நிரம்பி வழிந்தது.

"என்ன சுப்பிரமணி... நான் நீ ஏதோ பேச்சுக்கு சொல்றேன்னு தான் நினைச்சேன். நெஜமாலுமே பணத்தோட வந்து நிக்கறியே."

"வாங்குன கடனை என்னிக்கு இருந்தாலும் திருப்பித்தானே தரணும்? நான் கொஞ்சம் வேகமா திருப்பறேன். அவ்வளவுதான் வித்யாசம்."

ரூபாய் நோட்டுக்கட்டை வரிசையாக கட்டுக்கட்டாக அடுக்கியபடியே பேசினான் சுப்பிரமணி.

அவ்வளவும் ஐநூறு ரூபாய் நோட்டுக் கட்டு...

இப்போது நோட்டுக் கட்டு என்றால்... அது ஐநூறு ரூபாய்தான். முன்பு நூறு ரூபாய் இருந்த இடத்திற்கு ஐநூறு ரூபாய் வந்துவிட்டது. ஐந்து மடங்குக்கு நாடு வளர்ந்து விட்டதா, இல்லை தேய்ந்து விட்டதா என்பது தான் புதிர்.

"சரி சுப்பிரமணி... நாளைக்கு வந்து உன் பத்திரத்தை வாங்கிட்டுப் போ..."

உடையப்பனின் பதில் சுப்பிரமணியை கொஞ்சம் தேங்க வைத்தது. தேங்கி நின்றபின் திரும்பவும் பணத்தை எடுத்து மஞ்சள் பையில் வைத்தான்.

"என்ன பணம் திரும்புது?"

"பொறவு... நாளைக்குதானே பத்திரம் தருவேன்றே. நாளைக்கு நானும் பணத்தைத் தந்துட்றேன்."

"அட... பைத்தியக்காரா... நான் பேங்க்குல வெச்சி ருக்கேன். பேங்க்குக்கு நாள் பணம் கட்டணும். கட்டுனா தான் பத்திரத்தை அவன் தருவான்."

"என் பத்திரத்தை வெச்சு நீ எப்படி பணம் வாங்குனே உடையப்பா?"

"தப்பு... நான் உன் பத்திரத்தை லாக்கப்பில் வெச்சி ருக்கேன். நான் பணம் கட்டணும்னு சொன்னது மாசத் தவணையை."

"நீ கூடவா கடன் வாங்கியிருக்கே...?"

"கடன் வாங்கணும். அப்பத்தான் இந்த வரித் தொல்லை இருக்காது. போகப் போக நீ தெரிஞ்சுக்குவே பார்..."

— உடையப்பன் இப்படியும் அப்படியுமாக ஏதேதோ பேசினான்.

"சரி இப்ப என்ன பண்ணணும்கறே?"

"வேணும்னா பணத்தோட என்கூட பேங்க்குக்கு வா. நீயே பணத்தைக் கட்டு... பத்திரத்தை எடுத்து தர்றேன்."

"இல்ல... உன்கூட வர்ற அளவுக்கு எனக்கு நேரம் காலமில்ல."



"அப்ப நம்பிக்கையா போ. நாம என்ன இன்னிக்கு நேத்தா பழகறோம்."

— உடையப்பன் போட்ட அந்த வார்த்தை சுப்பிரமணியை நன்றாகவே தணித்தது.

அரைமனதாகக் கிளம்பினான்.

வீட்டு வாசலைத் தாண்டும்போது, 'ஐயோ பாவம்' என்கிற மாதிரி பல்லி செருமியது.

உடையப்பன் முகத்தில் ஒரு திட்டமிட்ட சிரிப்பு.

பார்த்துக் கொண்டே பக்கத்து அறையில் இருந்து வந்தான் கொத்தாளம். இடுப்பில் லுங்கி நிற்க மறுத்திருந்தது. அதை சுருட்டி மடக்கியிருந்தான்.

"அண்ணே..."

"உம்."

"என்னண்ணே சுப்பிரமணியை அப்படி பாக்கறே?"

"பாவம்டா சுப்பிரமணி — அதான்!"

"என்னண்ணே சொல்றே...?"

"அதான் சொன்னேன்ல... பாவம் சுப்பிரமணின்னு!"

"ஏண்ணே அப்படிச் சொல்றே... ஊர்லயே அவன்தாண்ணே இன்னிக்கு காசுக்காரன்."

"அப்படி ஒரு கிணறும் தோட்டமும் இருந்தா நானும் தான் காசுக்காரன்."

"இருந்தாலும் உழைக்கணும்ல...?"

"நீ எதுக்குடா இருக்கே...?"

"என்னண்ணே சொல்றே... அவன் நிலத்துல நான் எப்படிண்ணே உழைக்க முடியும்?"

"அது இனி நம்ம நிலம்டா..."

"எப்படிண்ணே...? எனக்கு ஒண்ணும் புரியலை!"

"கொஞ்ச நேரத்துல ஊருக்கே புரியும் பார்!"

— புதிர் போட்டான் உடையப்பன்.

## 4

'மாடு கட்டி போரடிச்சு
மஞ்ச நெல்ல குவிச்சு வெச்சு
கூடி நின்னு குலவை போட்டு
காடு கரை வாழும் கூட்டம்
தேடி வரும் சாமி நான்; யாரும்
வாடிப்போக விட மாட்டேன்!'

— முனிப்பாட்டு.

**த**ன் பெண் கல்யாண விஷயமாகக் கிளம்பிக் கொண்டிருந்த முருகேசக் கவுண்டர் முன், மதர்ப்பாகக் கும்பிட்டபடி வந்து கொண்டிருந்தான் உடையப்பன்.

கவுண்டர் முகத்தில் ஆச்சரிய அதிர்ச்சி. ஏன் என்றால் இருவருக்குமான உறவு அப்படி...

"வணக்கம், கவுண்டரே..."

"வா உடையப்பா... எங்க இந்த பக்கம்?"

"ஒரு முக்கிய விஷயமாத்தான்."

"என்ன விஷயம்?"

"உக்காந்து பேசுவோமே..."

"சரி வா..." கவுண்டர் திண்ணை மேல் பாய் விரித்து திண்டு போட்டு அதில் ஒன்றின் பக்கம் அமர்ந்தார்.



"ஆத்தா அஞ்சலை... மோரு கொண்டா தாயி." — என்று தன் மகளுக்கு திண்ணையில் இருந்தபடியே வேண்டுகோள் விடுத்தார். உடையப்பனும் சாங்கோபாங்கமாக அமர்ந்தான்.

"சொல்லு உடையப்பா... என்ன விஷயம்?"

"என்னத்த சொல்ல... மனசு நொந்து போய் வந்துருக்கேன்."

"விஷயம் என்னன்னு சொல்லு...?"

"அதுக்கு முந்தி ஒரு கேள்வி..."

"கேளு."

"நம்ம 'முனீஸ்வரன் மஞ்சவேட்டி' உங்ககிட்டத்தானே இருக்கு?"

"இப்ப எதுக்கு அதப்பத்தின பேச்சு?"

"இல்ல கேக்கறேன்."

"அது சாமி சொத்து. பத்திரமா மரப்பெட்டில, வீட்டு பூஜை அறைல இருக்கு. அதுக்கென்ன இப்போ...?"

"அதுக்கு இப்ப வேலை வந்துடுச்சி."

"என்னய்யா சொல்றே?"

"நான் இப்ப 'வேட்டிப் பஞ்சாயத்து'க்குப் பிராது கொடுக்க வந்துருக்கேன்."

"என்னது...?" வாயைப் பிளந்து விட்டார் கவுண்டர்.

"என்ன கவுண்டரே... பிராதுன்ன உடனே வாயப் பொளந்துட்டீங்க."

"பொறவு... வேட்டிப் பஞ்சாயத்துன்னா என்ன லேசுப்பட்ட விஷயமா?"

"அது எனக்குத் தெரியாது. ஏன்னா என் காலத்துல தான் அதை எல்லாம் நான் பார்த்ததே இல்லையே..."

"நானும் பார்த்ததில்ல... நாப்பது நாப்பத்தஞ்சு வருஷமா அதுக்கு வேலை வரலை. அதை வெச்சு பிராது கொடுக்க ஒரு பயலுக்கும் துணிச்சல் இல்ல."

"இப்ப எனக்கு வந்துடிச்சுன்னு வெச்சுக்குங்களேன்."

"என்ன உடையப்பா... ஏதோ வேட்டைக்காரன் பேசற மாதிரி பேசற... சாமி விஷயமப்பா..."

"அதனால தானே சாமிகிட்டயே உதவி கேட்டு வந்துருக்கேன்."

"சரி இப்ப என்ன சிக்கல் உனக்கு?"

— கவுண்டர் கேட்க, அவர் மகள் அஞ்சலை மோர்ச் செம்புடன் வந்து நிற்க, உடையப்பன் அவளை ஒரு விழுங்குப் பார்வை பார்த்தான்.

"உடையப்பா..." — கவுண்டர் அதட்டி அவனைத் திருப்பினார்.

"ஆங்... என்ன...?" என்றபடியே திரும்பினான்.

"அஞ்சலைக்கு மாப்ள பாத்துட்டேன். அது விஷயமாத்தான் கிளம்பிக்கிட்டிருக்கேன். நீ வந்துட்டே. விஷயத்தைச் சொல்லு."

அவர் மறைமுகமாக எச்சரித்தார்.

"ஏன் கவுண்டரே... உள்ளூர்ல மாப்ளையே இல்லையா?"

அவனும் அந்த எச்சரிக்கையை மீறினான்.

"தயவு செய்து உன் சிக்கல் என்னன்னு சொல்றியா?"

"சொல்றேன்... என் பக்கத்து நிலத்துக்காரன் சுப்பிர மணிக்கு நான் ஒரு லட்ச ரூவா கடன் கொடுத்துருந்தேன்."



"இப்ப அதுக்கு என்ன?"

"அவன் பணத்தைத் தராம தந்துட்டேன்னு சொல்லி நிலப்பத்திரத்தைக் கேக்கறான்."

"அப்படியா... சுப்பிரமணியா?"

"சுப்பிரமணியேதான். அவன் என்ன பஞ்சபாண்டவ தர்மனா... இல்ல சத்யசந்தனா... என்னவோ அப்படி யான்னு வாய பொளக்கறீங்க?"

"நம்ப முடியலை உடையப்பா..."

"அது உங்க இஷ்டம். இப்ப நான் பிராது கொடுக்கறேன். மஞ்ச வேட்டிப் பஞ்சாயத்தைக் கூட்டுங்க. சாமித்துணி மேல நான் சத்தியம் செஞ்சு அவன் மேல குத்தம் சொல்லத் தயாராயிட்டேன்."

"உடையப்பா..."

"உடைக்கத்தான் போறேன். இந்த உடையப்பன் யாருங்கறத உடைச்சுக் காட்டத்தான் போறேன்."

"இல்லப்பா... நீ அவசரப்பட்றே... சாமி நெருப்புப்பா. நல்லா யோசிப்பா..."

"நானும் இல்லேங்கலியே... பணம் கொடுத்ததா சொல்ற அவனும் கொடுத்துட்டேன்னு சத்தியம் பண்ணட்டும். சத்தியம் பண்ணதுல இருந்து மூணு நாள் சாமிக்கணக்கு. அந்த மூணு நாள்ள தப்பு செய்தது யாரோ அவங்களுக்கு சாமி தண்டனை கொடுத்துடும்ல?"

"உடையப்பா..."

"என்ன கவுண்டரே... சாமி இல்லையா...? அது வராதா...? அதான் தயங்கறீங்களா?"

"அது இல்லப்பா. இது பேசுனா தீர்ந்துட்ற விஷயம். இதுக்கு எதுக்கு 'வேட்டிப் பஞ்சாயத்து'...?"

"என்ன கவுண்டரே! சாமி வேட்டி பின்ன எதுக்கு இருக்கு? அத வெச்சுகிட்டு ஊர்ப் பெரியவன் நான்னு நீங்க பீத்திக்கவா...?"

"உடையப்பா..."

"சுத்தாதீங்க கவுண்டரே. பஞ்சாயத்த கூட்டுங்க. இதுல இரண்டு விஷயம் தெளிவாயிரும். ஒண்ணு முனீஸ்வரன் வருவானா, மாட்டானாங்கறது... அடுத்து அப்படியே அவன் வந்தா அவன் யார் பக்கம்கறது...!"

— உடையப்பன் நறுக்கென்று பேசிவிட்டு எழுந்து விட்டான்.

மோர்ச் சொம்பு திண்ணை மேல் அப்படியே இருந்தது.

அவனுக்குத் தெரிந்த மரியாதை அப்படிப்பட்டது...

# 5

'மாடுகன்னு மஞ்சக்காணி
காடுகரை கட்டாந்தரை ஏதுமின்றி
ஓட்டுவீடு உடைஞ்ச பானை
கட்டுச்சோறு கடனுக்குக் காசுன்னு
விதிகெட்ட மனுசனுக்கும்
கதிமோட்சம் தருவேன் நான்!'

— முனிப்பாட்டு

**டொம்**... டொம்... டொம்...!

தெருவில் பஞ்சாயத்து முரசு சப்தம் போட்டது — மஞ்சளூர் வெகுநாட்களுக்கு... ஊஹூம்... பலப்பல வருடங்களுக்குப் பிறகு கேட்கிறது.



'இதனால மஞ்சளூர் சனங்க அம்புட்டு பேருக்கும் தெரிவிச்சிக்கறது என்னன்னா... வர்ற குருவாரம் வெசாளக்கிழம உச்சிப் போதுல நம்ம முனுசாமி பொட்டல்ல மஞ்சவேட்டி பஞ்சாயத்து கூடப் போகுது. தங்கப்பக் கவுண்டர் மகன் உடையப்பன் சுப்பிரமணி மேல கொடுத்த குத்தம் குறைய வேட்டிப் பஞ்சாயத்து விசாரிக்கும். அதுக்கு முந்தி பிரசிடென்ட்டய்யா வீட்டுல இருந்து வேட்டி இருக்கற சாமிப்பெட்டி ஊர்வலமா எடுத்து வரப்படும் ம்ம்ம்ம்...!'

— முரசுச் செய்தி மஞ்சளூரையே புரட்டிப் போட்டு விட்டது. வீட்டுக்கு வீடு — திண்ணைக்குத் திண்ணை வேட்டிப் பஞ்சாயத்து பற்றின பேச்சுதான்!

"என்னய்யா, இது அநியாயம்... சுப்பிரமணி எப்பேர்ப் பட்ட மனுஷன்! அவன் பேர்ல பிராதா?"

"இந்த உடையப்பன் கொஞ்சமும் சாமிய நம்பாதவன் ஆச்சே... இவன் எப்படி பிராது கொடுத்தான்?"

"என்ன எழவோ... ஊருக்குள்ள ஏதோ நடக்கப் போகுது. அதான், இப்படி வீணாப் போனவன்லாம் பிராது கொடுக்கறான்..."

"அது சரி... இரண்டு பேர்ல ஒருத்தன் நிச்சயம் தப்புப் பண்ணியிருக்கணும். அதைத் தட்டிக் கேட்க சாமி வருமா?"

"யாருக்குப்பா தெரியும்? அந்தக் காலத்துல சாமி குதிரைமீது ஏறி வந்ததா கேள்விப்பட்டிருக்கேன்."

"அப்ப இது சாமிக்கும் சோதனையான காலம் தான்னு சொல்லு..."

"அடப் போங்கய்யா... சாமி பேரைச் சொல்லி பெரிய வங்க பயமுறுத்தி வெச்சிருக்காங்க. சாமி நிசமா

இருக்குதுன்னா இத்தனை வருஷமா இந்த ஊர்ல தப்பே நடக்கலையா என்ன?"

"நீ என்ன சொல்றே..."

"சாமியாவது வர்றதாவது... அது வர்றதா இருந்தா எப்பவோ வந்துருக்கணும். முந்தியாச்சும் பரவால்ல. இல்லாதவன்தான் தப்பு பண்ணான். இப்ப பார். இருக்கப் பட்டவனே எல்லா தப்பும் பண்றான். உடையப்பனையே எடுத்துக்க! இவன் யோக்யத தெரியாதா? இவன்லாம் சாமி பஞ்சாயத்துகிட்ட வரலாமா? எவ்வளவு தைரியம் இருந்தா வருவான்...?"

— ஊருக்குள் டீக்கடை பெஞ்சுகளில், மரத்தடிகளில், கடைகண்ணிகளில் இப்படித்தான் பேச்சு. எல்லாமே சுப்பிரமணி காதுக்கும் போனது.

அவன் வீட்டில் அவனைச் சுற்றி ஒரு கூட்டம்.

"ஏ சுப்பிரமணி... இப்படி கூடவா இருப்பே. பணத்தைக் கொடுத்துட்டுப் பத்திரத்த வாங்காம வந்துட்டே. அவனைப்பார், பணத்தையும் வாங்கிகிட்டு உன்னையே குற்றவாளியாவும் ஆக்கிட்டான்."

"என்னய்யா பண்ணப் போறே... எந்த நம்பிக்கைல அவன் பிராது கொடுத்தான்னு தெரியலியே?"

"எல்லாம் சாமி எங்க வரப்போகுதுங்கற தைரியம் தான்."

"அப்ப சாமி வரும். அவனைத் தண்டிக்கும்னு நம்பறியா?"

"வரணும். அது வந்தா நல்லாதான் இருக்கும். ஆனா..."

"என்ன ஆனான்னு இழுக்கறே... அது எங்க வரப் போகுதுங்கறது தானே உன் சந்தேகமும்...?"



"ஆமாம்ப்பா..."

"இங்கதான் உடையப்பன் நிக்கறான். அவன் வரைல இந்தப் பஞ்சாயத்துல சுப்பிரமணி கூட அவனுக்கு விஷய மில்ல. சாமியெல்லாம் சும்மான்னு சொல்லி முருகேசக் கவுண்டர் மானத்தை வாங்கணும்கறது தான் அவன் எண்ணம்..."

சுப்பிரமணியைச் சுற்றி அவன் சகாக்கள் தங்களுக்குத் தோன்றியதை எல்லாம் பேசியபடி இருந்தனர்.

சுப்பிரமணி இறுக்கமாகவே இருந்தான். அவன் மனைவி காவேரிக்கு மனசு ஊதுலை போல கொதித்துக் கொண்டிருந்தது. 'உடையப்பன் ஏதோ திட்டம் போடு றான்' என்று சரியாக யூகித்து விட்டாள்.

"ஏங்க... இந்தப் பஞ்சாயத்துக்கு ஒத்துக்காதீங்க. நாம போலீஸ்ல புகார் கொடுப்போங்க..." என்றாள்.

சிரித்தான் சுப்பிரமணி.

"என்னங்க சிரிக்கிறீங்க?"

"சாமியையாவது கொஞ்சம் நம்பலாம். போலீசை எல்லாம் நம்ப முடியாது காவேரி. உடையப்பன் அவங் களுக்கே ஒரு விலை வெச்சுடுவான்..."

"என்னங்க அப்படி சொல்லிட்டீங்க. போலீஸ்ல அப்ப நல்லவங்களே இல்லீங்களா?"

"இருக்காங்க. ஆனா அவங்களால எதுவும் பண்ண முடியாது."

"அப்ப என்னதான் சொல்றீங்க...?"

"மடியில கனமில்ல... வழியில பயமுமில்ல... கொடுத்த பணத்துக்காக சத்தியம் செய்ய எதுக்கு அச்சப்படணும்?"

"அது சரிங்க. பொய் சத்தியம் செய்யப் போற அந்த உடையப்பனை சாமி வந்து தண்டிக்குமா?"

"அது எப்படி இப்ப தெரியும்? பொறுத்திருந்து பார்ப்போம்."

"சாமி வராட்டி...?"

"அப்ப நீ சொன்ன மாதிரி கோர்ட்டு போலீஸ்னு போவோம். இல்லாட்டி எண்ணதேச்சு தலைமுழுகு வோம்."

"ஐயோ நம்ம இடம் ஒரு தங்கம் விளையற பூமிங்க."

"அதனாலதான் எதிரி இப்படி எல்லாம் திட்டம் போட்றான்."

— சுப்பிரமணி தெளிவாகவே பேசினான். ஆனால், காவேரிக்கோ நெஞ்சம் நடுங்கியபடியே இருந்தது.

## 6

'துண்ணூறே பிரசாதம்
எலுமிச்சை என் வாசம்
அருவாளே ஆயுதம்
கரிச்சோறே என் விருந்து'

— முனிப்பாட்டு

கூறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தான் உடையப்பன். அடிக்கடி மீசையை நீவிவேறு விட்டுக் கொண்டான். அதைப் பார்க்க அவன் தம்பி கொத்தாளத் துக்கு என்னவோ போல இருந்தது.

"அண்ணே... என்னண்ணே இப்படி பண்ணிப் புட்டே?" — என்று முனகலுடன் ஆரம்பித்தான்.

"எப்படிடா?"

"வேட்டிப் பஞ்சாயத்து, அது... இதுன்னு..."



"என்னடா பண்ண.. பணமே கொடுக்காம ஒருத்தன் 'கொடுத்தேன்'னு சொன்னா எனக்கு வேற வழி..."

"அண்ணே..."

"என்னடா?"

"நான் உன் தம்பி... நீ பணத்தை வாங்கி வச்சத பார்த்தவன். என்கிட்ட எதுக்குண்ணே இந்தப் பேச்சு?"

"இனி எல்லார் கிட்டயும் இதுதான் என் பேச்சு."

"உன்ன புரிஞ்சுக்கவே முடியலியேண்ணே..."

"ஒருகல்லுல ஒருத்தன் ஒருமாங்காய கூட ஒழுங்கா அடிக்கமாட்டான். நான் ஒண்ணு இல்ல, இரண்டு இல்ல. மூணு மாங்கா அடிக்கப் போறேன். நீயும் பார்க்கப்போறே பார்..."

"எப்படிண்ணே?"

"பாருடா... பொறவு தெரியும்."

"அந்த மூணுமாங்கா எதுண்ணே, அதச் சொல்ல மாட்டியா?"

"சொல்றேன். முதல் மாங்கா சுப்பிரமணியோட வயலும் சோத்துக்கிணறும்..."

"சரிண்ணே — அடுத்தது?"

"அவன் திருப்பிக் கொடுத்த கடன் பணம்..."

"சரிண்ணே — மூணாவது?"

"இனி நான்தான் முனீஸ்வரன்!"

"அண்ணே." — விக்கிப்பு கொத்தாளத்திடம்.

"என்ன வாயப் பொளந்துட்டே. நான்தான் இனி முனீஸ்வரன். அந்த முருகேசக் கவுண்டன் கூட்டமே என் கால்ல விழுந்து எழுந்திரிக்கப் போகுது பார்..."

"எப்படிண்ணே... எப்படிண்ணே இதெல்லாம் நடக்கும்?"

"நடக்கும் பார்... பொறவு தெரியும் உன் அண்ணன் உடையப்பன் லேசுப்பட்ட ஆள் இல்ல. —அவன் ஒரு அஞ்சா நெஞ்சன்னு..."

"அது எனக்கு எப்பவோ தெரியும்ணே... ஆனா நீ எப்படி மூணு மாங்காய அடிக்கப் போறேன்னுதான் தெரியலை. முனீஸ்வரனை நினைச்சா எனக்கு ஈரக்குலையே நடுங்குது. நீ என்னடான்னா சாதாரணமா பேசறே..."

"போடா கோட்டிப் பயலே... நான்தான் சொன்னேன்ல... நான்தான்டா முனீஸ்வரன். நீ போகப்போக வேடிக்கைய பார்..."

— உடையப்பனின் தெனாவெட்டு கொத்தாளத்தையே உலுக்கி விட்டது. ஒரு சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டே கொல்லைப் பக்கம் போனான்.

பத்துப் பாத்திரம் கழுவிக் கொண்டிருந்தாள் செவ்வந்தி.

அவள் உட்கார்ந்து கழுவும் விதமும் அப்போது அவளது மார்பின் தளும்பலும் அவனைக் கிளறியது. உடனேயே கண்ணில் காமத்தைப் பூசிக் கொண்டான். அவளும் அவனைக் கவனித்தாள். விருட்டென்று எழுந்தாள். சேலைத் தலைப்பை எல்லாம் சரி செய்து கொண்டாள்.

"செவ்வந்தி..."

"எ... எஜமான்..."

"என்ன பண்ணிகிட்டிருக்கே...?"

"என்னங்க கேள்வி இது. பாத்தா தெரியலீங்களா?"



"அது தெரியுது செவ்வந்தி. எனக்குதான் மனசே சரியில்ல. என்ன செய்யறதுன்னே தெரியலை..."

"உங்களுக்குமா?"

"உங்களுக்குமான்னா... அண்ணிமா?"

"ஆமாங்க... என்ன எஜமான்... போய் இப்படி பண்ணிபிட்டார்."

"நீ எதைச் சொல்றே?"

"வேட்டிப் பஞ்சாயத்தை..."

"உனக்கும் தெரிஞ்சிடிச்சா...?"

"ஊருக்கே தெரியும். எனக்குதான் தெரியாதா?"

"ஹூம்... அதான் எனக்கும் இப்ப குடைச்சலா இருக்கு..."

"அதான் அந்த சுப்பிரமணி பணம் கொடுத்துடிச்சில்ல. பொறவு பெரியவர் ஏன் பிராது கொடுத்தார்..."

"சுப்பிரமணி பணம் கொடுத்துட்டானா...? என்ன புள்ள சொல்றே?"

"இல்ல... அன்னிக்கு அது பணத்தோட வந்தப்ப நான் பாத்தேன்.. அதான்..."

"வாயக் கழுவு. பணத்த கொண்டு வந்தான். ஆனா பத்திரம் பேங்குல இருக்குன்ன உடனே 'சரி நாளைக்கு வரேன்'னு சொல்லிட்டுப் போனது உனக்குத் தெரியாதா?"

"அப்ப பணந்தரிலியா?"

"தந்துருந்தா அண்ணன் ஏன் சாமிப் பஞ்சாயத்துக்குப் போகுது..."

"சுப்பிரமணி ரொம்ப நல்ல மனுஷனாச்சேய்யா..."

"வாஸ்தவம்தான். நானும் அப்படித்தான் நினைச்சேன். ஆனா அவன்போய் இப்படி பண்ணிட்டானே...?"

SRINIVASA POLYTECHNIC COLLEGE
LIBRARY
7.9.23
KANCHAMAVUR 602

"அத நெனச்சாதான் வருத்தமா இருக்கு எஜமான்!"

"இப்ப எனக்கு வருத்தம் அவன் பஞ்சாயத்துக்கு வரப்போறதுலகூட இல்ல— சத்தியம் பண்ணப் போறானே அத நினைச்சாதான்."

"ஆமாம் எஜமான். முனி பொல்லாதது. அதுகிட்ட ஒருத்தன் பொய் சத்தியம் பண்ணினா அவ்வளவுதான்."

"அட... போ... புள்ள... முனிகினின்னுகிட்டு... எந்தக் காலத்துல முனி வந்துருக்கு — இப்ப வர்றதுக்கு?"

"ஐயோடா, என்ன எஜமான் இப்படி பேசிட்டீங்க, நானே எத்தனை தடவை முனீஸ்வரன் அம்மாவாசை ராத்திரில குதிரை மேல போறத பாத்துருக்கேன் தெரியுமா?"

"எந்த சினிமாவுல..."

"ஐயோ நெஜத்துல..." — செவ்வந்தி சொன்னதற்குப் பதிலாய் ஒரு பரிகாசப் பார்வை பார்த்தான் கொத்தாளம்.

"என்னங்க... ஏன் அப்படி பாக்கறீங்க?"

"பாக்காம...? குதிரை மேல போறவன்லாம் முனி இல்ல புள்ள... அந்தக் காலத்துல கள்ளன் 'சேந்தன் கொழந்தை'ங்கறவனும், அவன் ஆளுங்களும் குதிரை மேலதான் வருவாங்களாம். இப்பவும் பக்கத்து ஊர் மாஜி ஜமீன்தார் மகன் குதிரைமேல அப்பப்ப வர்றான்..."

"நான் நிஜமாலுமே சாமியைச் சொன்னேன்... தெரியுமா?"

செவ்வந்தியின் கண்களில் பரிபூர்ணமான நம்பிக்கையைப் பார்த்த கொத்தாளத்துக்கு அதற்குமேல் அவளிடம் என்ன பேசுவது என்று தெரியவில்லை. கண்களில் ஒரு குட்டிச் சிரிப்பைக் காட்டியவன் அப்படியே காமத்தை வழியவிட்டான்.



அவளுக்கும் புரிந்துவிட்டது.

"எஜமான்... வேண்டாம் எஜமான். இது வீடு எஜமான்."

"அப்ப சோளக்காடுன்னாதான் சம்மதிப்பியா?"

"ஐயோ யாராச்சும் பாத்துடப் போறாங்க."

"பாக்காத மாதிரி பக்கத்துல பெட்ரூமுக்குள்ள போய் தாழ் போட்டுக்குவோம்" என்றவன் அவளை அப்படியே தொட்டுத் தூக்கினான். அவள் கால்களை உதறிப் பார்த்தாள். முடியவில்லை. சிறுத்தையிடம் அகப்பட்ட கோழி மாதிரி அப்படியே முடங்கிப் போனாள்.

இருட்ட ஆரம்பித்து விட்டது!

முருகேசக் கவுண்டர் வீட்டு வாசலில் கொம்பு ஊதும் சப்தம் கேட்டது. பஞ்சாயத்துத் தகவல் சொல்லியான தங்கவேல் என்பவன் மஞ்சள் கச்சம் உடுத்தி கழுத்தில் மாலையுடன் — ஈரம் துவட்டாத உடம்புடன் கவுண்டர் வீட்டு வாசலில் ஒரு பக்கமாக நின்று கொண்டிருந்தான். அவன்தான் முனீஸ்வரனின் மஞ்சள்வேட்டி உள்ள மரப்பெட்டியை சுமக்கப் போகிறவன்.

பஞ்சாயத்து முக்கியப் புள்ளிகள் முருகேசக் கவுண்டர் வீட்டு வாசலில் ஒவ்வொருவராக வந்து சேரத் தொடங்கியிருந்தனர்.

ஒருவர் முகத்தில்கூட சுரத்து இல்லை.

'எந்தத் தைரியத்தில் உடையப்பன் பஞ்சாயத்தைக் கூட்டிடச் சொன்னான்?' என்பது அவர்களுக்குள் நெளிந்து கொண்டே இருந்தது.

கொம்பு ஊதியைத் தொடர்ந்து, தப்பட்டை வாசிப்பவனும் வந்து விட்டான். அவன் காலில் சதங்கை வேறு...

தப்பட்டை வாசிப்போடு அவன் கால்களை ஆட்டி அசைத்த விதம் ஒரு தனி நாட்டியமாகவே இருந்தது.

கூட்டம் ஓரளவு திரளவும், கோயில் பூசாரி மாணிக்க வேலும் வந்து சேர்ந்தார். எல்லோரையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு உள்ளே போனவர், தங்கவேலுவையும் அழைத்துக் கொண்டுதான் போனார்.

உள்ளே ஹாலில் மரஊஞ்சலில் சிலைபோல அமர்ந்திருந்தார் முருகேசக்கவுண்டர். பூசாரி வரவும் நிமிர்ந்தார்.

"ஐயா... எல்லாரும் வந்துட்டாங்க. பொறப்புடலாங் களா?" என்று கேட்க, கவுண்டர் தலை ஆடி ஆமோதித்தது.

தொடர்ந்து எழுந்தவர் தன்வீட்டு பூஜை அறை நோக்கி நடந்தார். தங்கவேலு பின் தொடர்ந்தான்.

எல்லாவித சாமி படங்களும் மாட்டப்பட்டிருக்கும் சாமி அறைக்குள் விசாலமான ஒரு பரண்!

அதன்மேல் காய்ந்து போன மாலைச் சரங்களோடு அந்த மரப்பெட்டி. அதைப் பார்க்கவே முருகேசக் கவுண்டருக்கு பயமாகக் கூட இருந்தது. தங்கவேலு அதன் அருகே சென்று கை கூப்பி வணங்கி விட்டு பெட்டியை இழுத்து அப்படியே தலைமேல் வைத்துக் கொண்டான்.

"பார்த்து... பார்த்து..." என்று பதறினார் கவுண்டர்.

தங்கவேலு முதலில் தடுமாறினாலும் சுதாரித்துக் கொண்டே நடந்து வீட்டுக்கு வெளியே வந்தான். சூழ்ந்தி ருந்தவர்கள் பெட்டியோடு அவன் வருவதைப் பார்க்கவும் 'சரேல் சரேல்' என்று அங்கங்கே கீழே விழுந்தார்கள்.

கொம்பு ஊதியும், மூச்சை எல்லாம் திரட்டிப் பெரிதாக ஊதிட, தப்பட்டைக்காரன் ஆயாசமாக ஆடிட — அந்தப் பெட்டிப் பஞ்சாயத்துக்காக முனீஸ்வரன் பொட்டல் எனும் பஞ்சாயத்து கூடும் இடம் நோக்கி நடையிட ஆரம்பித்தது. வழியில் தெருவில் வசிக்கும் குடும்பப் பெண்கள் தங்கள் வீட்டு குடத்து நீரை எடுத்து வந்து தங்கவேலு காலில் விட்டு அவனைச் சுற்றி வந்தும் வணங்கினர்.



ஊர்வலம்போல அந்த மரப்பெட்டி போவதைப் பலர் வைத்த கண் வாங்காமல் பார்த்தனர்.

"எவ்வளவு தைரியம் இருந்தா வேட்டிப் பஞ்சா யத்தை கூட்டி இருப்பான் அந்த உடையப்பன்..." என்று முணுமுணுக்கவும் செய்தனர்.

பெட்டி நகர்ந்து போய்க்கொண்டே இருந்தது...!

# 7

'எனக்குன்னு மந்திரமில்ல
எனக்குன்னு யந்திரமுமில்ல
தனக்குன்னு ஒருத்தன்
தாள் பணிஞ்சிட்டா அதுதான்
என்கணக்குன்னு நினைப்பேன்!'

— முனிப்பாட்டு

முனியப்பன் பொட்டல்!

ஊரே திரண்டிருந்தது.

நடுவில் ஒரு பெரிய சிமெண்ட்டு மேடை... மேடை யில் நின்று பார்த்தால் முனீஸ்வரன் உருவம் எதிரில் தெரியும் விதமாக மேடை கட்டப்பட்டிருந்தது.

அந்த மேடை மேல்தான் மரப்பெட்டி வைக்கப் பட்டிருந்தது.

பெட்டிக்கு இடப்பக்கம் சுப்பிரமணியும் அவன் மனைவி காவேரியும் நின்று கொண்டிருந்தனர். வலப் பக்கமாய் உடையப்பன். உடையப்பனை ஒட்டிக்கொண்டு அவன் ஆசைத்தம்பி கொத்தாளம். இருவருக்கும் நடுவில் பெட்டியை ஒட்டி நின்று கொண்டிருந்தார் பூசாரி. கூட்டத்தில் லேசான சலசலப்பு. அதை அடக்குவதுபோல கையை உயர்த்தினார். எல்லோரும் அவரைப் பார்த்தனர்.

"எல்லாருக்கும் வணக்கம். நம்ம ஊர் காவல் தெய்வ மான அந்த முனீஸ்வரனைக் கும்புட்டுகிட்டு இந்தப் பஞ்சாயத்தைத் தொடங்கறேன். கிட்டத்தட்ட முப்பது, முப்பத்தைந்து வருஷம் கழிச்சு இந்த வேட்டிப் பஞ்சாயத்து கூடியிருக்குது. ஒரு விஷயத்துல ஒரு முடிவுக்கு வர முடியாட்டி நான் சாமிகிட்ட போய் வேட்டிப் பஞ்சாயத்த கூட்டுவோம். என்ன தீர்ப்பு சொல்றதுன்னு தெரியாட்டி யும் இப்படி பஞ்சாயத்த கூட்டுவோம். இதைக் கூட்றதுக்கு முந்தி ஆயிரம் தடவை யோசிப்போம். ஏன்னா சாமியைக் கூப்பிட்டு 'நீயே தீர்ப்பு சொல்லு'ன்னு சொல்றது பெருசு இல்ல. அது அதுக்குப் பிறகு தீர்ப்பு தர முன்வந்தா அந்தத் தீர்ப்பைத் தாங்கிக்கிற சக்தி நமக்கு இருக்காங்கறது ரொம்ப முக்கியம்."

— பூசாரி சொல்லிவிட்டு சுப்பிரமணி, உடையப்பன் என்று இருவரையும் பார்த்தார்.

"தெரிஞ்சுதான் பூசாரி நான் பிராது கொடுத்து ருக்கேன். இதோ நிக்கறானே இந்த சுப்பிரமணி... பணமே கொடுக்கல. ஆனா கொடுத்துட்டதா சொல்றான். எங்க கொடுத்துட்டேன்னு சொல்லி சத்தியம் பண்ணட்டும். அதையும் நான் பாக்கறேன்."

— உடையப்பன், சுப்பிரமணியைச் சீண்டுவது போலவே தன் பேச்சைத் தொடங்கினான். சுப்பிரமணி யிடமும் அது நன்றாகவே வேலை செய்தது.



"ஏய்... உடையப்பா... நாக்கை அடக்கிப் பேசு. வட்டி யும், முதலுமா காசை வாங்கிக்கிட்டு நீதான் நிலத்துப் பத்திரத்தைத் திருப்பித் தரலை. தப்பு பண்ணிட்டு வேட்டிப் பஞ்சாயத்தையும் கூட்டியிருக்கே. உனக்கு எவ்வளவு துணிச்சல்?"

"சும்மா நிறுத்துடா... உன் துணிச்சல்லாம் எனக்குக் கிடையாது. அதான் நல்லா விளைஞ்சு மான்யமாவே பல லட்சம் சம்பாதிச்சிருக்கியே... திருப்பிக் கொடுக்கறது உனக்கு என்ன வலிக்குது..."

"வேணாம்... நீ எப்படி பேசினாலும் பொய் உண்மையாயிடாது...!"

"அததான் நானும் சொல்றேன்..."

— இருவரிடமும் தீப்பொறி பறந்தது. பொறுக்க முடியாமல் முருகேசக் கவுண்டர் எழுந்து கைகூப்பி இருவரையும் அமைதிப்படுத்தினார்.

"ஐயாமாருங்களா... அமைதி! அமைதி! நீங்க மாறி மாறி அடிச்சுக்க பஞ்சாயத்த கூட்டல. உங்க பிரச்சனை யைத் தீர்க்கத்தான் இந்தப் பஞ்சாயத்து. எதுக்காகக் கூடியிருக்கமோ — அது விஷயமா என்ன செய்யணுமோ செய்துக்குங்க. அதுக்கு முந்தி ஒரு தடவைக்கு நூறு தடவை யோசிச்சிக்குங்க..."

— முருகேசக் கவுண்டரும் தன் பேச்சில் அவர்கள் இருவருக்கும் ஒரு 'பிரேக்' போட்டுப் பார்த்தார்.

"கவுண்டரே... பஞ்சாயத்துக்குப் பிராது கொடுத்த நான் சொல்றேன்... இவன் பணம் தரலை. எங்க சாமி வேட்டி...? அதுமேல கைய வெச்சு சத்தியம் பண்ணிச் சொல்றேன்."

— உடையப்பன் கன்றுக்குட்டி போல துள்ளிக் கொண்டு பெட்டி அருகே வந்தான். ஆனால் அந்த வேகம் சுப்பிரமணியிடம் இல்லை. அவனிடம் தயக்கம்.

இடையில் தங்கவேலு மெய்சிலிர்க்க சாமியைப் பார்த்துக் கும்பிட்டுவிட்டு மரப்பெட்டியைத் திறந்தான். உள்ளே ஒரு பட்டுத் துணிக்குள் மடித்து வைக்கப்பட்டிருந்தது சாமி வேட்டி. அதை பய பக்தியோடு கையில் எடுத்தான். அவன் கைகளில் நடுக்கம்.

பின் அதைப் பெட்டி மேலேயே வைத்தான்.

ஊரே வைத்த கண் வாங்காதபடி பார்த்தது.

பூசாரியும், முருகேசக் கவுண்டரும் கைகளைக் கூப்பிக் கண்களை மூடிக் கொண்டு விட்டனர். முருகேசக் கவுண்டருக்கு தன் தலைமுறையில் தன் தாத்தாவான கணேசக் கவுண்டர் மேல் அது பறந்து வந்து விழுந்த அந்தக் காட்சி தான் நினைவுக்கு வந்தது.

பூசாரியும் தன் தலைமுறையில் பொய் சொன்னதற்காக தன் தாத்தாவின் தலை இளநீர் போல சீவப்பட்டதை நினைத்துக் கொண்டார்.

உடையப்பன் அந்த மாதிரி பயமெல்லாம் எதுவுமே இல்லாமல் வேட்டியின் முன்னால் வந்தான். எல்லோரையும் ஒரு பார்வை பார்த்தான்.

"பிராது கொடுத்த நானே இப்ப முதல் சத்தியம் பண்ணிடுறேன். இதோ இங்க நிக்கற சுப்பிரமணி எனக்குத் தரவேண்டிய பணமான லட்சத்து எம்பதாயிரம் சில்லரையைத் தரலை. இது சத்தியம்!" என்றபடி மஞ்சள்வேட்டி மேல் தன் ஐந்து கைவிரல்களையும் பதித்து எடுத்தான்.

அடுத்து சுப்பிரமணி...

ஏனோ சுப்பிரமணிக்குக் கை நடுங்கியது.

சட்டென்று ஒரு புது முடிவுக்கு வந்தவன் —

"நான் அநாவசியமா சத்தியம் பண்ண விரும்பலை. சாமியைத் தொந்தரவு பண்ணவும் விரும்பலை. உடையப்பன் சொன்னது போலவே நான் பணம் கொடுக்க



லேன்னே இருந்துட்டுப் போகட்டும்... அவன் செய்த அதே தப்பை நான் பண்ண விரும்பலை." — என்றபடி பின்னுக்குச் செல்லத் தொடங்கினான். உடையப்பனுக்கே அவன் செய்கை ஆச்சரியமளித்தது. ஆவேசமாக சத்தியம் செய்வான் என்று பார்த்தால் ஒப்புக் கொள்வது போல அவன் நடந்து கொள்வது உடையப்பனைக் குழப்பி விட்டது. ஆனால் கொத்தாளம் விடவில்லை.

"அப்படி... வா... வழிக்கு. இதுக்கு தான் எங்கண்ணன் பஞ்சாயத்து கூட்னிச்சு. பொய் சத்தியம் பண்ண உனக்குத் தைரியம் இல்லேன்னு நல்லா தெரியும். எப்படியோ குற்றத்தை ஒத்துக்கிட்டா சரி..." என்றான்.

கொத்தாளத்தின் அந்தக் குதர்க்கம் சுப்பிரமணியைச் சுண்டி இழுத்தது.

"டேய் கொத்தாளம்... நீ வாய மூடு. நான் சாமி வேட்டிய தொட்றத—சாமிய தொட்ற மாதிரி நினைக்கிறவன். அதனாலதான் அப்படி சொன்னேன். இப்ப சொல்றேண்டா. நான் பணம் கொடுத்தது சத்தியம்."— என்று படு வேகமாக வந்து வேட்டி மேல் ஆவேசமாகத் தன் வலக் கையை வைத்து எடுத்தான்.

"எப்படியோ சத்தியம் பண்ணிட்டே... இனி எல்லாரும் போகலாம். எங்க விவகாரம் சாமி கைக்கு போயிடிச்சு. யார் தப்பு செய்திருந்தாலும் சரி... அது பார்த்துக்கும்..."

கொத்தாளமே சத்தியத்துக்கு இறுதி வடிவமும் கொடுத்து முடித்தான்.

முருகேசக் கவுண்டரும், பூசாரியும் கலங்கிய விழிகளுடன் அந்த முனீஸ்வரனைப் பார்த்தனர்.

என்ன நடக்குமோ என்கிற அச்சத்தில் அவர்களுக்குப் பேசவே வரவில்லை.

# 8

"முட்டமுழி எனக்கு...
கெட்டவன் தான் கணக்கு!
பட்டம் போல பறந்தே
பார்ப்பதும் என் வழக்கம்!"

— முனிப்பாட்டு

நள்ளிரவு!

மஞ்சளூரே உறங்கிவிட்ட வேளை...

இரவுக்கால அந்துப் பூச்சிகளும், சில்வண்டுகளும் மட்டும் 'இது எங்கள் நேரம்' என்பது போல கொட்ட மடித்துக் கொண்டிருந்தன. சுப்பிரமணி அவன் வீட்டுக் கொல்லையில் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்திருந்தான்.

தூக்கம் வரவில்லை.

முகத்தில் கசகசப்பு — மனத்தில் எரிச்சல்.

விவசாயத்தில் கிடைத்த வெற்றியை அனுபவிக்க முடியாதபடி அடுத்தடுத்து என்னவெல்லாமோ நடந்து விட்டதுபோல உணர்ந்தவன் அதை ஜீரணிக்க முடியாத படி தத்தளித்தான்.

அவன் மனைவி காவேரிக்கும் தூக்கம் வரவில்லை.

அவன் அருகே வந்து அமர்ந்தவள் இதமாகப் பேச ஆரம்பித்தாள்.

"ஏங்க... என்ன இன்னும் அதே நினைப்பா?"

"ஆமா... காவேரி... நம்ம சுத்தி ஏன் இப்படி எல்லாம் நடக்குது காவேரி...?"

"எல்லாம் தலை எழுத்துங்க... அவனை நம்பி பத்திரத்தை வாங்காம வந்தது உங்க தப்புங்க..."



"அதை விடு... அந்த உடையப்பனுக்கு எப்படி அவ்வளவு துணிச்சல் வந்தது? சாமி தட்டிக் கேட்க வராதுங்கறது அவன் நினைப்பா?"

"நடக்கறத எல்லாம் பார்த்தா அப்படித்தானேங்க நினைக்க வேண்டி இருக்கு...?"

"அப்ப உனக்கும் நம்பிக்கை இல்லையா?"

"எதை வெச்சு நம்ப? எனக்கென்னவோ அந்த உடையப்பன் ஏதோ திட்டம் போட்டுத்தான் உங்களை வேட்டிப் பஞ்சாயத்துக்கு இழுத்துருக்கான்..."

"என்ன புள்ள சொல்றே?"

"யோசிச்சுப் பாருங்க. சாதாரணமா பணத்தை இழந்தவன்தான் பஞ்சாயத்த கூட்டுவான். ஆனா இங்க பணத்தை வாங்குனவன் வாங்கிட்ட பின்னால அவனே போய் 'பணம் தரலை — தரச் சொல்லுங்க'ன்னு பஞ்சாயத்தைக் கூட்டியிருக்கான்."

"நான் நிலப்பத்திரத்தைக் கேக்கறத தடுக்கத்தான் இந்த ஏற்பாடு காவேரி."

"இல்லீங்க... இதையும் கடந்து பெருசா உள்ள ஏதோ இருக்கு..."

— காவேரி சந்தேகப்பட்டது சரிதான் என்பது போல அப்பொழுதே அங்கே அவர்கள் நடுவில் சுருட்டுப் புகையானது மிதந்து வர ஆரம்பித்தது.

சரியான சாராய வாடை வேறு.

இருவருமே அதிர்ந்தனர்.

"என்னங்க... சுருட்டு வாடை வருதுங்க."

"ஆமாம் காவேரி... இந்த நேரத்துல யார் சுருட்டு பிடிக்கறது?"

— சுப்பிரமணியும் சந்தேகத்துடன் எழுந்து கொண்டான். அடுத்து சதங்கை சப்தம். மெல்லிய சப்தமாக 'ஜல்ஜல்' என்று எதிரொலித்தது. திடீரென்று சுருட்டுபுகை ஒரு ஆவி உருவம்போல கண்ணுக்குத் தோன்றி காவேரியை அலறவே வைத்து விட்டது. சதங்கை சப்தமும் கூடுதலான பரிமாணத்தில் பலத்த அதிர்வோடு ஒலிக்கத் தொடங்கியது.

சுப்பிரமணி மிரண்டு போனான்.

காவேரிக்குக் கண்ணைக் கட்டிக் கொண்டு மயக்கம் வந்தது. பொத்தென்று கீழே விழுந்த அவளைக் குனிந்து தாங்கிப் பிடித்த போது திம்மென்று அவனருகே யாரோ குதித்ததுபோல இருந்தது.

நிமிர்ந்து பார்ப்பதற்குள் கழுத்தோரமாய் ஒரு அரிவாள் படுவேகமாக ஓடி மறைந்தது. தொடர்ந்து ஒரு ஓங்கலான அலறல் — கிட்டத்தட்ட மஞ்சளூரின் அத்தனை தெருக்களிலுமே எதிரொலித்தது.

விடிந்து விட்டது!

ஊர் முழுக்க சுப்பிரமணி சடலமாகக் கிடக்கும் அந்த தகவல்தான் காட்டுத்தீ போல பரவ ஆரம்பித்தது. அந்தச் செய்தி முருகேசக் கவுண்டரை ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. பல் விளக்க வேப்பங்குச்சியை ஒடித்தவர் அதை எறிந்துவிட்டு, காலுக்குச் செருப்பு கூட மாட்டிக் கொள்ளாமல் சுப்பிரமணி வீடு நோக்கித்தான் ஓடினார்.

பூசாரியும் அவருக்கு முன்பே அங்கு வந்து சேர்ந்திருந்தார்.

ஒரு மூலையாகப் பார்த்து கண்கள் வெறிக்க அமர்ந்திருந்தாள் சுப்பிரமணியின் மனைவி காவேரி. அவளிடம் பேச்சு மூச்சில்லை. கொல்லையில் கழுத்து அறுபட்ட நிலையில் கிடந்தது சுப்பிரமணியின் சடலம்.



ரத்தம் பெருகி ஓடி உறைந்து போயிருக்க, ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன.

அங்கங்கே தீவு தீவாக ஜனங்கள்!

ஒருவரிடமும் பேச்சு மூச்சில்லை. முருகேசக் கவுண்டரும் பேச்சு மூச்சற்றுத்தான் நின்றார். நெடுநேரம் சுப்பிரமணியின் உடம்பையே வெறித்துக் கொண்டிருந்தார். பூசாரிதான் அவரது பிரக்ஞையை கலைக்க முற்பட்டு முன் வந்தார்.

"ஐயா..." — பூசாரியிடம் நாக்கில் தழுதழுப்பு.

"......."

"பஞ்சாயத்துல எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். கேக்கல. பார்த்தீங்களா... கடைசில பயந்தது மாதிரியே நடந்திரிச்சி."

"இல்ல பூசாரி... இல்ல..."

"என்னய்யா சொல்றீங்க...?"

"இல்ல. சுப்பிரமணி ரொம்ப நல்லவன்."

"அது எனக்கும் தெரியும். ஆனா இப்படி நடந்துட்டதைப் பார்க்கும்போது..."

"இது... இது சாமி வேலைன்னா நினைக்கறே?"

'வேற என்னத்தங்க சொல்ல? ராத்திரி முனி நடமாட்டம் இருந்ததை ஊர்ல பார்த்துருக்காங்க."

"அப்படியா?"

"என்னங்க இப்படி கேட்டுட்டீங்க. கோயில்ல சாமி அரிவாள்ளயும் ரத்தம் காஞ்சும் காயாம இருக்குதுங்க..."

"அப்படியா?"

"எனக்கென்னவோ நடந்ததைப் பார்த்தா சுப்பிரமணி தான் ஒருவேளை தப்பு பண்ணிட்டானோன்னு..."

பூசாரி மென்று துப்பியபடி சொல்லி முடிப்பதற்குள் காவேரியிடம் ஒரு சிலிர்ப்பு.

"இல்ல... என் புருஷன் ஒரு தப்பும் பண்ணலை... அவர் நல்லவர்" — என்று கத்திக் கொண்டே எழுந்து ஓடி வந்தாள் காவேரி.

அவள் வந்த வேகம், அவள் கண்களில் தெரிந்த ஆவேசம் எல்லாமே பூசாரியை ஒரு உலுக்கு உலுக்கியது.

அதற்குள் அவளது உறவினர்கள் சிலர் வந்து அவளது தோளைத் தொட்டு தாங்கிப் பிடித்தனர்.

செய்தி கேட்டு கொத்தாளமும் அங்கு வந்திருந்தான்.

மடித்துக் கட்டிய வேட்டியை அவிழ்த்து நேர் செய்தபடியே சுப்பிரமணியைப் பார்த்தவன் முகத்தைக் கோணிக் கொண்டான். பூசாரியும் கவனித்தார். கோணிக்கொண்ட முகத்தோடு அங்கே நிற்க விரும்பாதவன் போல விலகத் தொடங்கினான்.

அதைப் பார்த்த பூசாரிக்கும், கவுண்டருக்கும் எரிச்சல்தான் ஏற்பட்டது.

"நில்லு கொத்தாளம்..." — என்றார் கவுண்டர்.

திரும்பிப் பார்க்காமல் அப்படியே நின்றான்.

"எங்க உங்கண்ணன்?"

— இந்தக் கேள்வி அவனைத் திருப்பியது. மீண்டும் வேட்டியை மடித்துக் கட்டியபடியே,

"என்ன பூசாரி... எங்கண்ணனை எதுக்குக் கேக்கறீங்க?"

"கேட்டதுக்குப் பதில் சொல் கொத்தாளம்..."



"அண்ணன் இப்ப ஆத்தூர்ல இருப்பார். நேத்து சாயந்தரமே நெஞ்சுவலின்னு டாக்டரைப் பார்க்கப் போனார். இப்ப ஆஸ்பத்திரியில தான் இருக்கார்..."

"நெசமாவா?"

"சந்தேகமா இருந்தா போய்ப் பாருங்க..."

"கொத்தாளம்..."

"போங்க பூசாரி... போய் அடுத்து ஆக வேண்டியத பாருங்க. எதுக்கும் போலீசுக்கு சொல்லிடுங்க. நாயெல்லாம் வரும். அது எங்க போகுது, யாரைப் பிடிக்குதுன்னு பார்ப்போம்..."

கொஞ்சமும் பதட்டமில்லாமல் அதே சமயம் அழுத்தமாகக் கூறினான்.

"டேய்... செய்யறதையும் செஞ்சிட்டு நல்லவன் மாதிரியா பேசறே..." காவேரி திடீரென்று உறவினர்களை உதிர்த்து விட்டுக் கொண்டு அவனை நோக்கிப் பாய்ந்து வந்தாள். வந்த வேகத்தில் சட்டையைப் பிடித்தாள்.

அவன் அவளை வருத்தத்தோடு வெறித்தான்.

"இப்ப உனக்குத் திருப்தியா... அநியாயமா சாமி பேரைச் சொல்லி என் வீட்டுக்காரரைக் கொன்னுட்டு நல்லவன் மாதிரி பேசறியா?" என்றபடியே அவன் சட்டையை நார் நாராகக் கிழிக்கத் தொடங்கினாள். யாருக்கும் அவளைத் தடுக்கவே தோன்றவில்லை.

கொத்தாளமும் அவளுக்கு ஈடு கொடுத்துக் கொண்டு மௌனமாகவே நின்றான். முருகேசக் கவுண்டர்தான் பார்க்கப் பொறுக்காமல் இடையில் புகுந்து பிரித்து விட்டார்.

"போம்மா... போ... போய் அடுத்து ஆக வேண்டியத கவனி..." என்றபடியே உறவினர்களைப் பார்த்தார். அதே வேளையில் தெருமுனையில் போலீஸ் ஜீப் தெரிந்தது.

எல்லோருடைய கவனமும் அந்தப் பக்கம் திரும்பியது.

மிதமான வேகத்தில் வந்த ஜீப் நிழல் உள்ள மரத்தடியாகப் பார்த்து தேங்கி நின்றது. உள்ளிருந்து திபுதிபுவென்று போலீஸ்காரர்கள் குதித்து இறங்கினர். சப்—இன்ஸ்பெக்டர் ஒருவர் சிவில் டிரெஸ்ஸில் இருந்தார். தான் அணிந்திருந்த டி—ஷர்ட்டை இழுத்து விட்டபடியே வந்தார். அவர் நெற்றி கொள்ளாத அளவுக்கு விபூதி.

அவரை முருகேசக் கவுண்டர் முன்சென்று நின்று வரவேற்றார்.

"ஐயா வாங்க..."

"நீங்க...?"

"நான்தான் ஊர்த்தலைவர். என் பேர் முருகேசனுங்க..."

"நீங்கதானா அது...?"

"ஆமாங்க..." — முருகேசக் கவுண்டர் ஆமோதிக்க, சப்—இன்ஸ்பெக்டரின் பார்வை சுப்பிரமணி சடலம் மேல் சென்றது. அதற்குள் சில போலீஸ்காரர்கள் அருகே சென்று பார்க்க வேண்டியதைப் பார்த்து முடித்து, ஒரு கோலால் சடலத்தைச் சுற்றி கோடு கிழிக்கத் தொடங்கியிருந்தனர்.

"என்ன பிரச்னை... காரணம் தெரியுமா?"

சப்—இன்ஸ்பெக்டர் தாடையைத் தடவியபடியே கேட்டது முருகேசக் கவுண்டரைக் கொஞ்சம் திணற விட்டது. தேங்கினார்.



"உங்களைத் தான் கேட்டேன்." என்று உசுப்பி விட்டார் சப்—இன்ஸ்பெக்டர்.

கொத்தாளமும் விலகாமல் நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

அவர் கேள்விக்கு அவன் பதில் சொல்ல முன் வந்தான்.

"சார் நான் சொல்றேன்... இது மனுஷன் செஞ்ச கொலை இல்ல. இது சாமி செஞ்ச வேட்டை. சாமி வேட்டி மேல சத்தியம் பண்ணுனான். அதான் சாமி போட்டுத் தள்ளிடிச்சு."

கொத்தாளத்தின் பதிலைக் கேட்டு சப்—இன்ஸ்பெக்டர் சிரிப்பார், இல்லை கோவிப்பார் என்றுதான் எல்லோரும் நினைத்தனர்.

ஆனால் அவர் "நினைச்சேன்..." என்று தலையை ஆட்டி ஒப்புக் கொண்டது கவுண்டரையே சீற வைத்தது.

"என்ன சார் சொல்றீங்க... உங்களுக்கு முந்தியே தெரியுமா?"

"நேரா தெரியாது... ஆனா ராத்திரி குதிரைமேல முனி போறத நான் பார்த்தேன். அப்ப யாரோ மனுஷன்னு நினைச்சுட்டேன். பிறகுதான் தெரிஞ்சிச்சு. ஊர்றவழியில கோயிலுக்கும் போய்ட்டுதான் வரேன். சாமி சிலை கைல இருக்கற அதே அரிவாளைத்தான் முனிசாமி கையில பார்த்தேன்."

"என்ன சார் சொல்றீங்க? இந்த ஊர்ல ஸ்டேஷனே இல்லையே. நீங்க எப்படி இங்க வந்து...?"

"எனக்கே தெரியலை... ராத்திரி மோட்டார் பைக் எடுத்துகிட்டு இந்தப் பக்கமா வந்தேன். அப்பத்தான் அந்தக் காட்சியைப் பார்த்தேன். இப்ப நினைச்சாலும் நெஞ்சு நடுங்குது..."

"சார்... நல்லா பார்த்திங்களா?"

"அட என்னய்யா நீ... நல்லா இரண்டு கண்ணாலயும் பார்த்தேங்கறேன்..."

"அது யாராவது மனுஷன்... சாமி வேஷத்துல..."

"எங்க போலீஸ் புத்திக்கு அது தெரியாதாக்கும்! குதிரை மேல போற மனுஷன் பின்னால நாய் ஒண்ணு அதே வேகத்துல போகுமா? அப்படி போற குதிரை உங்க ஊர் கோயிலுக்குள்ள நுழைஞ்சிச்சு. நான் பைக்கை நிறுத்திட்டுப் போய்ப் பார்த்தேன். உள்ள குதிரை இருக்கணுமே. நாலு பக்கமும் காம்பவுண்டு வால். வேற பக்கமும் போக வழியில்லையே..."

சப்—இன்ஸ்பெக்டர் பேசப்பேச, முருகேசக் கவுண்டர் திக்குமுக்காடிப் போனார்.

"அப்ப வந்தது சாமிதாங்கறது உங்க அபிப்ராயங்களா?"

"நான் சாமி நம்பிக்கையே இல்லாதவன்... நானே சொல்றேன்னா என்ன அர்த்தம்..."

—அதைக் கேட்ட கொத்தாளத்திடமும் புதுத் தெம்பு.

"சார்... இப்ப நீங்க சப்—இன்ஸ்பெக்டர் இல்ல. அந்த முனீஸ்வரன். உங்களுக்குக் கோடி புண்ணியம் சார். இந்த சுப்பிரமணி பொண்டாட்டி என் சட்டையை எப்படி கிழிச்சிருக்கான்னு பாருங்க. புருஷனை இழந்துட்ட துக்கத்துல இருக்கறவளாச்சேன்னு சும்மா விட்டு வெச்சிருக்கேன். இல்லாட்டி பிரிச்சு மேஞ்சிருப்பேன். இனியாச்சும் புருஷன் தப்பு செஞ்சதாலதான் இப்படி ஆச்சுன்னு இவளுக்குத் தெரியட்டும்."

— எல்லோருக்கும் கேட்கும்படி கத்திச் சொன்னான் கொத்தாளம். பூசாரியால்கூட அதற்கொரு பதிலைக் கூற முடியவில்லை.



கவுண்டரோ, 'ஒருவேளை சுப்பிரமணிதான் குற்றவாளியோ?' என்று தனக்குள் கேட்டுக் கொள்ள, அவன் மனைவி காவேரியும் தனக்குள் அப்படி கேட்டுக் கொண்டதுதான் ஆச்சரியம்.

அவளுக்கு சட்டென்று ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. முனிசாமி கோயிலில் மணி கட்டச்சொல்லி அவளது உறவினர் ஒருவர் ஐந்தாயிரம் ரூபாய் கொடுத்திருந்தார். அதை எடுத்து சுப்பிரமணி விவசாயத்துக்குச் செலவு செய்துவிட்டான். காவேரி கேட்டதற்கு 'எல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம்' என்று கூறிவிட்டான். அந்தத் தப்புக்குதான் சாமி இப்போது ஒரு வேளை வந்து தண்டித்து விட்டதோ என்று தனக்குள் கேட்டுக் கொண்டே அழுதாள்.

அவளைச் சுற்றி அடுத்த காரியங்கள் நடக்க ஆரம்பித்தன.

## 9

'வேலைப் போல கூர்மை — என் பார்வை
தேளைப் போல தப்புக்கு தருவேன் — ஒரு தீர்வை
சோலைப்பூ போல மனசிருந்தா
வாலாட்டி நாயா காவ இருப்பேன்!'

— முனிப்பாட்டு

சோர்வோடு நுழைந்த கொத்தாளத்திற்கே சப்—இன்ஸ்பெக்டர் சொன்னதெல்லாம் நம்ப முடியாத ஒன்றாகத் தான் இருந்தது. கையைப் பிசைந்து கொண்டே குறுக்கும் நெடுக்கும் நடந்தான். அண்ணன் உடையப்பனும் அவன் சொன்னதுபோல ஆத்தூர் ஆஸ்பத்திரியில்...

ஒருவேளை அண்ணன் இந்தக் கொலையைச் செய்யவில்லையோ...? நிஜமாலுமே முனிதான் வந்துவிட்டதோ?'

கொத்தாளத்துக்குக் குழப்பமாகவே இருந்தது.

சப்—இன்ஸ்பெக்டர் சொன்னதற்குச் சரியான பதிலை அண்ணனிடமே நேரில் விட்டுவிடுவதுதான் ஒரே வழி என்று தோன்றியது. முற்றத்தில் பாத்திரங்களை அள்ளிப்போட்டு கழுவிக் கொண்டிருந்தாள் செவ்வந்தி. அவளைப் பார்க்கவும், அவனிடம் எப்பொழுதும் போல ஒரு பரவசம்...

ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்து புகைவிட்ட படியே அவள் அருகே சென்று நின்றான். அவனை முந்திக் கொண்டு அவன்விட்ட புகை அவளைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

எழுந்து நின்றாள்.

கொஞ்சம் போல பயப்படவும் செய்தாள்.

"என்ன செவ்வந்தி... ஏன் ஒரு மாதிரி இருக்கே?"

"ஒண்ணுமில்ல எஜமான்... ஒண்ணுமில்ல..."

"இந்த 'ஒண்ணுமில்ல'ன்னாலே ஏகப்பட்டது இருக்கு துங்கறதுதான் இதுவரைக்கும் நான் தெரிஞ்சி வெச்சி கிட்டிருக்கிற உண்மை."

"அது வந்து..."

"என்ன... வந்து... போயி... சும்மா சொல்லு."

"பாவம்ங்க அந்த சுப்பிரமணி..."

"ஓ... நீ அவன் விஷயத்துக்கு வர்றியா?"

"ஆமாங்க... நான்கூட இந்த விவகாரத்துல உங்க அண்ணன் மேலதான் தப்பு இருக்கறதா நினைச்சேன். ஆனா இப்பதாங்க தெரியுது..."

"ஓ... போலீஸ் சப்—இன்ஸ்பெக்டர் சொன்னது உன் காதுவரை வந்துடுச்சா?"

அவளிடம் அழுத்தமான மௌனம்.



"உனக்கு ஒரு உண்மை தெரியுமா?"

"என்னங்க..."

"கிட்டத்தட்ட நானே உன்ன மாதிரிதான் நினைச்சேன். ஆனா இப்பதான் தெரியுது. சுப்பிரமணி அண்ணன்கிட்ட பணம் தரலைன்னு..."

"என்னவோங்க... நடக்கக்கூடாதது நடந்துடிச்சி. ஆமா இது உங்க அண்ணனுக்குத் தெரியுங்களா?"

"கிளம்பிகிட்டே இருக்கேன். அண்ணனைப் பார்த்து நடந்ததைச் சொல்லிட்டுதான் மறுவேலை..."

கொத்தாளம் அந்த நிலையிலும் அவளை ஒரு போதைப் பார்வை பார்த்தான். அவளுக்கும் புரிந்து விட்டது.

"எஜமான்..."

"என்ன புள்ள?"

"இது காத்தால நேரம். இப்ப போய்..."

"ஆசைக்கு காலையாவது, சாயந்தரமாவது புள்ள..."

— இறுதியில் அவன்தான் ஜெயித்தான்.

ஒரு அரை மணி நேரம் அவளிடம் சல்லாபித்து விட்டுத்தான் கிளம்பினான். போகும்போது அவளிடம் கொஞ்சம் கலக்கம்.

"என்ன புள்ள... ஏன் ஒரு மாதிரி பாக்கறே?"

"இப்படி அப்பப்ப திருட்டுத்தனம் பண்றதுக்கு என் கழுத்துல தாலிய கட்டிட்டா நான் எப்பவும் காலடிலயே கிடப்பேனே..."

"ஓ... அதுவா?"

"என்ன அதுவான்னு இழுக்கறீங்க?"

"நான் வந்து பேசறேன்..."

— பிடி கொடுக்காதபடி அவளுக்கொரு பதிலைக் கூறிவிட்டு கிளம்பக் காலெடுத்தவன் எதிரே உடையப்பனே உள் நுழைந்தபடி இருந்தான்.

அவனைப் பார்க்கவும் கொத்தாளத்திடம் சற்று திடுக்! செவ்வந்தியும் விதிர்விதிர்த்தாள்.

நெருங்கி வந்து செவ்வந்தியைப் பார்த்த பார்வையில் பூச்சி பறந்தது. அவளால் அங்கே தொடர்ந்து நிற்க முடியவில்லை. வேகமாக நழுவினாள். கொத்தாளத்திடமும் மெல்லிய நடுக்கம்.

"அண்ணே... என்னண்ணே இது திடுதிப்னு..."

"ஏன்... இந்த நேரத்துல என்ன எதிர்பார்க்கலையே?"

"அண்ணே..."

"நொண்ணே... நான் இல்லாதப்ப வீட்ல இப்படி ஒரு கூத்தா?"

"அது... அது... அது வந்துண்ணே..."

"ஏண்டா... கல்யாண ஆசை வந்துட்டா கட்டிவையின்னா கட்டி வெச்சிட்டுப் போறேன்... இது என்னடா வேலைக்காரிகிட்டல்லாம் கையை... நீட்டிகிட்டு..."

"அண்ணே... சும்மா தாண்ணே..."

"என்ன சும்மாதான். அவ தகுதி என்ன நம்ம தகுதி என்ன?"

"தெரியும்ணே... நீங்க நினைக்கற மாதிரி கட்டிக்கற எண்ணமெல்லாம் இல்லண்ணே... சும்மா..."

"உனக்கு இல்லாம இருக்கலாம்... அவளுக்கு இருக்கா...?"

"அவளை நான் சமாளிச்சிக்கறேண்ணே..."



"பார்த்து... பாலைக் குடிச்சோமா பானையை உடைச்சோமான்னு இருக்கணும். பொம்பள விஷயம்கறது சருகுல பிடிக்கற தீ மாதிரி. கவனமா இருக்கணும்."

"இருப்பேண்ணே... ஏண்ணே நீ ஆத்தூர் ஆஸ்பத்திரியில இருக்கேன்னுல்ல நினைச்சுகிட்டிருக்கேன்."

"அங்க இருந்துதான் வர்றேன்."

"விஷயம் தெரியுமாண்ணே..."

"ஏண்டா தெரியாம... அவன் பொணம் கிடக்கற இடத்துக்கே போய் அவன் உடம்பைப் பார்த்துட்டுதானே வர்றேன்..."

"அண்ணே... நான்கூட உன்மேல சந்தேகப்பட்டுட்டேண்ணே. நிஜமாலுமே முனி வந்துருக்குபோல..."

"அங்க தாண்டா எனக்கும் குழப்பம்..."

"என்னண்ணே குழப்பம்...?"

— கொத்தாளம் கேட்க இப்படியும் அப்படியும் பார்த்த உடையப்பன் கொத்தாளத்தின் காதுகளில் மட்டும் விழும்படியாக பேசினான்.

"சுப்பிரமணியை முனுசாமி வேஷத்துல போட்டுத் தள்ளுனது நான்தான். ஆனால், சப்—இன்ஸ்பெக்டரே நிஜமான முனியப்பன எங்க பார்த்தாரு, எப்படி பார்த்தாருன்னு தெரியல. ஒருவேளை என்னையைத்தான் அப்படி நினைச்சிட்டாரோ?"

உடையப்பனின் பதில் கொத்தாளத்தை அப்படியே நிலை குலைய வைத்துவிட்டது.

"அண்ணே...?"

"பதறாதே... சப்—இன்ஸ்பெக்டர் நூல்விட்டுப் பாக்கறாரா, இல்ல புரியாம பேசறாரான்னு தெரியணும்."

"அப்ப அந்த முனி நீதானா?"

"நானேதான்... இனியும் நான்தான் முனுசாமி. என் கால்ல அந்த முருகேசக் கவுண்டன் குடும்பத்தை எப்படியெல்லாம் விழ வைக்கறேன்னு போகப் போகப் பார்..."

"அது சரிண்ணே... ஒருவேளை நிஜமாலுமே சாமி..."

"அடப் போடா கிறுக்கா... அப்படி நிஜமான சாமி இருந்தா... அது வந்திருந்தா — நான் இப்ப இப்படி வந்துருப்பேனா...? கிறுக்குப் பயலே..."

உடையப்பன் ஒரு கேலிச் சிரிப்பு சிரித்துவிட்டு நகர்ந்தான்.

கொத்தாளம் முகத்தில் பிரமிப்பு மட்டும் விலகவே இல்லை!

## 10

'ஆடு கோழி பலி கொடுத்து
பாடுபட்டு படையல் போட்டு
கூடி ஜனம் பொங்க வைக்க
நாடி வந்து நிக்கும் நான்
கேடுன்னா விடமாட்டேன்!'

— முனிப்பாட்டு

சுப்பிரமணியைப் புதைத்துவிட்டு வந்துவிட்டார்கள். மிகவும் குறைவான உறவுக்காரர்கள் வந்திருந்தனர். சாமியால் கொல்லப்பட்டவன் என்று கருதியதால் துக்கம் கேட்கக் கூட பலருக்குத் துணிவில்லை. காவேரியும் நொறுங்கிப் போய் ஒரு மூலையில் உட்கார்ந்து விட்டாள். அவளுக்கு முனீஸ்வரனை நினைத்துப் பார்க்கவே கசந்தது. தன் கணவன் குற்றவாளியாகவே இருந்தாலும் அதற்கு இப்படி ஒரு தண்டனை மிக அதிகம் என்று கருதியவள்,



கொடுத்த பணத்தை 'இல்லை' என்று சொல்லிவிட்ட உடையப்பனுக்கு மட்டும் எதுவுமே ஆகாதது ஏன் என்கிற கேள்வியில் புதைந்தே போய்விட்டிருந்தாள்.

இழவுக்கு வந்திருந்த உறவுக்காரர்களும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பிப் போனபடியே இருந்தனர். அதில் ஒருவர் நாத்திகவாதி போலும்.

"சுப்பிரமணி தப்பு பண்ணிட்டான்ன உடனே ஓடி வந்த முனியப்பனுக்கு, இந்த ஊர்ல வேற யாரும் தப்பே பண்ணலைன்னு நினைப்பு போல... ஹூம். என்னவோ நடக்குது! துப்பு துலக்க வேண்டிய போலீசே சாமிக்கு ஜால்ரா போட்டா என்னத்த பண்றது—நல்ல சாமிப்பா..." — என்று முணுமுணுத்தார்.

உவ்வேவ்...!

செவ்வந்திதான் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தாள். அப்போதே அவளுக்குத் தெரிந்துவிட்டது. கொத்தாளத்தின் வாரிசு வயிற்றில் குடி புகுந்துவிட்டது என்று. எதற்கும் பரிசோதித்துத் தெரிந்து கொள்ள தோதாக டவுனுக்குப் புறப்படத் தயாரானாள்.

செவ்வந்திக்கு ஒரு தம்பி இருக்கிறான். சதா சைக்கிள் டயரை உருட்டிக் கொண்டு தெருவிலேயே கிடப்பான். அதீத கற்பனைகள் உடையவன். டிவியில் சினிமா பார்த்து பார்த்து வாயாலேயே சிச்சுவேஷன் மியூசிக் கொடுப்பான். டயரை உருட்டும்போது அவன் கார் டிரைவர்! முனீஸ்வரன் கோயிலில் உள்ள பொம்மைக் குதிரைகள் மேல் அமரும்போது அவன் ஒரு குதிரை வீரன்! மொத்தத்தில் சரியான விளையாட்டுப் பிள்ளை. தெருவில் கார் ஓட்டும் பாவனையில் டயர் உருட்டிக் கொண்டிருந்தவனை வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு டவுனுக்குக் கிளம்பினாள். முன்னதாக முனீஸ்வரனைப்

பார்த்து வேண்டிக் கொள்வது மனசுக்குத் தெம்பாக இருக்கும் என்று தோன்றியது.

அதேபோல முனீஸ்வரன் முன்னால் போய் நின்று கலக்கத்துடன் அண்ணாந்தாள். கோயிலில் சரியான கூட்டம். சப்—இன்ஸ்பெக்டர் பொங்கல் வைக்க வந்திருந்தார்.

"பூசாரிய்யா... இனிசாமி இப்படி எல்லாம் வேட்டைக்குக் கிளம்பிடக்கூடாது. அப்புறம் எங்க பொழப்புதான் டான்ஸ் ஆடும். சாமி அமைதியா இருந்து இந்த ஊரைக் காப்பாத்தணும். அதுதான் எனக்கு வேணும். அதுக்குதான் இந்தப் பொங்கல்" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

அப்படியே, நடந்த கொலை பற்றி மேலதிகாரிகளிடம் சொன்னதாகவும், அவர்களும் யாரும் புகார் கொடுக்காத நிலையில் சம்பிரதாயப்படி செய்ய வேண்டியதைச் செய்து அப்படியே ஊற்றி மூடி விடச் சொன்னதாகவும் எல்லாம் சொல்வது அவள் காதில் விழுந்தது.

கண்கலங்க சாமியைப் பார்த்தாள்.

"சாமி... தப்பு பண்ணிட்டேன். நீதான் துணை இருக்கணும்." என்று வேண்டிக் கொண்டு பூசாரியிடம் திருநீறு வாங்கி வயிற்றில் பூசிக் கொண்டாள். பிறகு தூர நின்று கொண்டிந்த மினி பஸ் நோக்கி நடந்தாள்.

அந்த சாமியும் முட்டை விழிகளுடன் பார்த்த படியேதான் இருந்தது!

அந்தப் பெண் டாக்டர் செய்ய வேண்டிய பரிசோதனையை எல்லாம் செய்துவிட்டு அவளை ஒருமாதிரி பார்த்து சிரித்தாள்.

பின் "நீ நினைச்சது சரி... கரு உண்டாயிருக்கு" என்றாள்.



கொஞ்சம் இடி இறங்கியது போலத்தான் இருந்தது. சுதாரித்துக் கொண்டு கிளம்பப் பார்த்தவளை "கலைக்கணும்னா சொல்லு கலைக்கிறேன். உன்னைப் பார்த்தா தப்பு பண்ணிட்ட மாதிரி தெரியுது. இனியாவது கவனமா இரு..." என்றாள்.

செவ்வந்தி அதற்கு ஒரு பதிலும் கூறவில்லை. மௌனமாக அங்கிருந்து கிளம்பினாள். அந்த டாக்டருக்கு அது லேசான அதிர்ச்சியைதான் அளித்தது.

தோட்டத்தில் இளநீர் வெட்டிக் குடித்துக் கொண்டிருந்தான் கொத்தாளம். ஒரு சிலை நடந்து வருவதுபோல உயிர்த்துடிப்பே இல்லாமல் வந்து கொண்டிருந்த செவ்வந்தியைப் பார்த்தவன் உதட்டு ஈரத்தை துடைத்துக் கொண்டான். அவளும் அவனைச் சமீபித்தாள்.

"எங்க புள்ள இந்தப் பக்கம்... இளநீர் சாப்பிட்றியா?"

"உங்களப் பாக்கத்தான் வந்தேன்..."

"தேடி வந்து பேசற அளவுக்கு என்னா விஷயம்...? நான்தான் வீட்டுக்கு வருவேன்ல...?"

"வீட்ல உங்க அண்ணன் இருக்கார். அங்க மனசு விட்டுப் பேச முடியாது. அதான்..."

— சொல்லும்போதே இமையோரம் கண்ணீர் புரள ஆரம்பித்தது.

"என்ன புள்ள... எதுக்கு அழுவுறே? யாராவது ஏதாவது சொன்னாங்களா?"

"ஆமாம்..."

"யாரு... எவன் என்னத்த சொன்னான்? சொல்லு. அவன் தலையை சீவிப்புடுறேன்."

"அப்படின்னா டவுனுக்குப் போய் டாக்டரம்மா தலையைத்தான் நீங்க சீவணும்."

"நீ புதிர் போடாம விஷயத்த சொல்லு..."

"உங்க வாரிசு இப்ப என் வயித்துல வளருதாம். டாக்டரம்மா சொன்னாங்க..."

அவள் சொன்ன மறுநொடி அவனுக்கு மின்சாரம் தாக்கின மாதிரி இருந்தது. கையிலிருந்த இளநீர் நழுவிக் கீழே விழுந்தது.

"என்ன புள்ள சொல்றே?" — என்று பீதறலான குரல் எடுத்தான்.

"வாரிசு வளருது; சீக்கிரமா தாலியைக் கட்டுங்கன்னு சொல்லத்தான் வந்துருக்கேன்..."

"தாலியா...?"

"பின்ன?"

"அட என்ன புள்ள நீ... தாலி வேலின்னுகிட்டு. ஏதோ ஆசைப்பட்டேன். உனக்கும் ஆம்பள சுகம் தேவைப் பட்டுச்சு. ஒருத்தருக்கொருத்தர் சுகத்தைக் கொடுத்து வாங்கிக்கிட்டோம். இதுக்காக நான் உன்னைக் கட்ட முடியுமா?"

அவன் பதில் அவள் கன்னத்தில் 'பளார்' என்று அறைந்தார்போல் இருந்தது. அப்படியே வெறித்தாள்.

"வேணும்னா சொல். கருவைக் கலைக்க் காசு தரேன். கூட உனக்கு எவ்வளவு வேணும்னு சொல்லு; தர்றேன். அதுக்காண்டி இதுதான் சாக்கு தாலிய கட்டுன்னா என்ன அர்த்தம்."

"எஜமான்..."

"கரெக்ட்... நான் உனக்கு எப்பவுமே எஜமானாத்தான் இருக்க விரும்பறேன்; புருஷனா இல்லை. நீயே சொல்லிட்டே."

"அப்ப என்னைக் கட்டிக்கிறேன்னு சொன்னது..."



"படுக்கைல ஆயிரம் சொல்வோம். அதை எல்லாமா கணக்குல எடுத்துக்குவே?"

"அப்ப உங்க பதில்...?"

"ஒரே பதில்தான். காதும் காதும் வெச்ச மாதிரி கருவைக் கலை. இல்லை... உன் கருவுக்கு நான் காரணம் இல்லைன்னு சொல்ல எனக்கு ரொம்ப நேரம் ஆகாது..."

"நான் முனிசாமிகிட்ட போய் நியாயம் கேட்பேன். வேட்டிப்பஞ்சாயத்தக் கூட்டுவேன். அப்ப...?"

"வேட்டி, துண்டு, பேண்ட், சட்டைன்னு எந்த பஞ்சாயத்து வேணா கூட்டு. ஏன்னா முனீஸ்வரன் — என் வரைல என் அண்ணன்."

"எஜமான்... இது அநியாயம்."

"இதுக்குமேலே பேசுனே... வார்த்தைங்க உனக்குதான் வேஸ்ட் ஆகும். நான் போய்கிட்டே இருப்பேன்."

— சொன்னதோடு இல்லாமல் கொத்தாளம் அங்கிருந்து விலகத் தொடங்கிவிட்டான். செவ்வந்தி அப்படியே சிலையாக நெடுநேரம் வரை நின்றுவிட்டாள்!

# 11

**'கோபுரமில்ல — கூரையுமில்ல**
**என் உருவமே கோபுரம்**
**ஏழையில்ல பணக்காரனில்ல**
**உண்மைதான் நிரந்தரம்!'**

**— முனிப்பாட்டு.**

டொம்... டொம்... டொம்...

மீண்டும் முரசு கொட்டும் சப்தம்.

மஞ்சளூரே ஆச்சரியமாகப் பார்த்தது.

"இதனால ஊர்க்காரவுகளுக்கு தெரிவிச்சிக்கிறது என்னன்னா திரும்பவும் ஒரு சாமிப் பஞ்சாயத்து. இன்னிக்கு ராத்திரி எட்டு மணிக்கு முனீஸ்வரன் பொட்டல்ல கூடுது. செவ்வந்திங்கற பொண்ணோட பிராதை ஏத்துகிட்டுப் பஞ்சாயத்தார் கூட்ற இந்தப் பஞ்சாயத்துக்கு ஊராரெல்லாம் திரண்டு வர வேண்டுமுங்கோ..." என்ற முரசுக்காரன் குரல் பலருடைய முகங்களில் பூச்சி பறக்கச் செய்தது.

"என்னடா இது அநியாயம்... சாமியோட இப்படி மோத ஆரம்பிச்சிட்டாங்களே..." என்று வாய்விட்டுப் பலர் முனகினர்.

பிராது கொடுத்திருந்த செவ்வந்தி முனீஸ்வரன் முன்னால் நின்று கொண்டிருந்தாள். அப்படி இப்படி அசையாமல் சாமியையே பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது அங்கே சுப்பிரமணியின் மனைவி காவேரியும் வந்து சேர்ந்ததுதான் ஆச்சரியம். அவளும் முறைத்தாள். பின் செவ்வந்தி பக்கம் திரும்பி சிரித்தாள்.

"ஏன் காவேரி சிரிக்கறே...?"

"நல்லா சிரிப்பேண்டி... இது ஒரு சாமின்னு இதை நம்பி பஞ்சாயத்து கூட்டியிருக்கியா நீ...?"

"எனக்கு நம்பிக்கை இருக்குது காவேரி..."

"நான் இப்ப சொல்றேன். இது சாமியே இல்ல. என் புருசனை வந்து கொலை செய்தது இது இல்ல."

"நீ உன் புருசன் போன கோபத்துல பேசறே... ஆனா ஊரே சாமிய பாத்துருக்கு..."

"எல்லாமே பொய். எங்க... அது இருந்தா இப்ப என் எதுக்க வரச் சொல்லு..."



"போதும் காவேரி... எனக்குத் தெரிஞ்ச ஒரே வழி இதுதான். வேற யார் இருக்கா?"

"ஏன் இல்லை... போலீசுக்குப் போ... உன் வாரிசை சோதிக்கச் சொல். இப்பல்லாம் மரபணு சோதனை, அது இதுன்னு எவ்வளவோ வந்துடுச்சு. அத நம்பு. நான்தான் ஏமாந்துட்டேன். நீயும் ஏமாந்துடாதே..."

— காவேரி கொந்தளித்தாள். அப்படியே முனீஸ்வரனையும் வெறிப்புடன் ஒரு பார்வை பார்த்துவிட்டு விறுவிறுவென்று நடந்தாள். பூசாரி மௌனமாக பார்த்துக் கொண்டே இருந்தார்.

அதுவரை சற்று தள்ளி விளையாடிக் கொண்டிருந்த செவ்வந்தியின் தம்பி, காவேரி பேசுவதை எல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தான். என்ன நினைத்தானோ தெரியாது. அங்கே கிடந்த கல் ஒன்றை எடுத்து முனீஸ்வரனை நோக்கி எறிந்தான். அது சரியாக அமர்ந்திருந்த நிலையில் முட்டிக்கால் மேல் பட்டு தெறித்தது.

"டேய் கிறுக்கா..." என்று செவ்வந்தி ஓடிவந்து அவனைத் தடுத்தாள். 'பளார் பளார்' என்று அறைந்தாள். பூசாரிக்கே என்னவோ போலாகிவிட்டது.

அப்படியே கல்லடிபட்ட முட்டிப் பகுதியைப் பார்த்தவருக்கு பகீர் என்றது. அடிபட்ட இடத்தில் இருந்து ரத்தம் பீறிட்டு வந்து கொண்டிருந்தது.

தூக்கிவாரிப் போட்டது.

"அம்மாடி... இங்க பார்..." என்று அருகே சென்றார். செவ்வந்தியும் ஓடினாள். முட்டியில் இருந்து நிஜமாகவே ரத்தம் கொட்டியது.

"பூசாரி..."

"அம்மாடி... இது அதிசயம். கல்லுல ரத்தம் வருதும்மா..."

"இல்ல பூசாரி... 'நான் கல்லு இல்ல'ன்னு சாமி சொல்லாம சொல்லுது..."

"சரியா சொன்னே. முனீஸ்வரா...!" என்று நெகிழ்ந்து போன பூசாரி சந்தனத்தை எடுத்து ரத்தம் வரும் இடத்தில் அப்பினார்.

ரத்தம் வருவதும் நின்றது.

அப்போது சாமி கழுத்தில் கிடந்த எலுமிச்சம்பழ மாலை அறுந்து எலுமிச்சம்பழங்கள் தனித்தனியே குதித்து ஓடத் தொடங்கின. அதில் ஒன்று கச்சிதமாக செவ்வந்தி மடியில் விழுந்ததுதான் ஆச்சரியம்.

செவ்வந்தி "சாமி... நீ பேசாம பேசறே. என் வரைல நல்லது நடந்தா சரி..." என்றாள். அதேநேரம் அவள் தம்பி பார்க்க—அந்த சாமி சன்னதியில் இருந்து ஒரு உருவம் புறப்படுவதுபோல் தோன்றியது. அதுவும் அவனைப் பார்த்து 'என் பின்னால் வா' என்று அழைத்ததுபோல உணர்ந்தவன், பேசாமல் அதன் பின்னாலேயே நடக்கத் தொடங்கினான்.

"இரு சாமி வரேன்... மெள்ள போ சாமி..." என்று அவன் பேசிக் கொண்டே போவதை போவோர் வருவோர் பார்த்தபோது அவன் தனக்குத் தானே பேசிக் கொள்கிற மாதிரிதான் இருந்தது.

உடையப்பன் வீடு!

அவன் வசிக்கும் தெருவில் அப்போதுதான் முரசுக்காரன் நுழைந்து செய்தி கூறியிருந்தான். அதைக் கேட்ட உடையப்பன் முகத்தில் ஒரே குமுறல். எதிரே மழையில் நனைந்த கோழிக்குஞ்சாய் கொத்தாளம்.

"பரதேசி... பரதேசி... அன்னிக்கே நான் என்ன சொன்னேன்...! பொம்பள விசயம்கறது சருகுல பத்தின தீ மாதிரின்னேன். கேட்டியா? இப்ப பார்.. நான் போட்ட பாணத்தை என்மேலேயே போடப் பாக்கறா ஒருத்தி..."



— உடையப்பன் ஆவேசத்தில் ஊதுலைக் காற்று போல சீறினான்.

"அண்ணே..."

"பேசாதே.. அறிவு கெட்டவனே... முன்ன வெட்டின அருவா ரத்தம் இன்னும் முழுசா காயில... அதுக்குள்ள அடுத்த பஞ்சாயத்து..."

"தெரியுதுண்ணே... தப்புதாண்ணே... எப்படியாவது நீ காப்பாத்துண்ணே... இன்னிக்குப் பஞ்சாயத்துல அவளும் சத்தியம் பண்ணட்டும். நானும் மறுத்து சத்தியம் பண்றேன். இன்னிக்கு ராத்திரியே அவளைப் போட்டுத் தள்ளிடுண்ணே.. ஏன்னா நிஜமாலுமே சாமி நடமாட்றதா ஊரே நம்பிக்கிட்டிருக்கு. இதுதான் சமயம்..."

"இந்தக் கணக்கெல்லாம் எனக்கும் தெரியும். இனியாவது கவனமா இரு... போ."

— உடையப்பன் இறுதியாக மன்னித்துவிட்ட பாவனையில் அவனை அனுப்ப, கச்சிதமாக வீட்டு வாசலில் செவ்வந்தியின் தம்பி வந்து நின்றிருந்தான்.

யாரையும் எதற்கும் லட்சியம் செய்யாமல் "நில்லு சாமி... நில்லு சாமி..." என்றபடியே உள்ளே நுழைந்தான்.

அவனைப் பார்த்த கொத்தாளத்துக்கு சுரீர் என்றது.

"டேய்... நீ எங்கடா இங்கே?"

"சும்மா இரு. சாமி வந்துருக்கு. சத்தம் போடாதே.."

"சாமியா... எங்கடா?"

"இங்கதான். இந்த ஊட்டுக்குள்ளதான் நுழைஞ்சிச்சு."

"லூசுப் பயலே. சாமி பூதம்னு பூச்சி காட்றியா... போடா வெளியில."

"நான் போயிடுவேன். ஆனா. சாமி உன்ன சும்மா விடாது பார்..."

"சரிதான் போடா... போடான்னா..."

— கொத்தாளம் கத்த—முறைத்துக் கொண்டே திரும்பித் திரும்பி பார்த்தபடி நடந்தான் அவன்.

"சாமி பூதம்னுகிட்டு உள்ள நுழைஞ்சு வேவு பார்க்க வந்தியாக்கும்? அதெல்லாம் வேற யார்கிட்டயாவது வெச்சுக்க..." — என்று அவனைத் துரத்திவிட்டு உள்ளே வந்த கொத்தாளம் எதிரில் ஊஞ்சலில் கம்பீரமாக திறந்த மார்புடன் ஆடியபடியே உடையப்பன். ஊஞ்சலிடம் கீச்சு வீச்சு கீச்சு வீச்சு என்கிற சப்தம்!

"அண்ணே..."

உடையப்பன் நிமிர்ந்துகூட பார்க்கவில்லை.

"என்னண்ணே... பேசாம உக்கார்ந்துட்டே..."

இதற்கும் பதிலில்லை.

"அந்தப் பொடிப் பையன் வேவு பார்க்க வந்தான். போடான்னு துரத்திவிட்டுட்டேண்ணே..."

"அப்படியா?" — உடையப்பன் கேட்ட விதமே அலாதியாக இருந்தது. குரலும் அவன் குரலாக இல்லை.

"அண்ணே, என்னண்ணே... ஏன் உன் குரல் இப்படி மாறிடிச்சு..."

"நான் உன் அண்ணன் இல்ல. அந்த முனீஸ்வரன்."

"அண்ணே... என்னண்ணே... ராத்திரி போடப்போற வேஷத்தை இப்பவே போட்டு நடிச்சுக் காட்றியா?"

"இது நடிப்பு இல்லடா நாயே. நீ அந்த செவ்வந்தி கழுத்துல தாலியக் கட்டி அவளைப் பொண்டாட்டியா ஏத்துக்கறே..."

"அண்ணே..."



"நான் இப்ப அண்ணன் இல்ல; சாமி..."

"வேண்டாண்ணே... என்கிட்டயே ஆக்ட் கொடுக்காதேண்ணே..."

"இது நடிப்பு இல்லடா. நான் சாமி. இப்பவே ஒரு மஞ்சத்தாலிக் கயிறோட நீ வர்றே..."

"அண்ணே..."

"சொல்றத செய்யறியா, இல்லை குரல்வளைய கடிக்கவா..." உடையப்பன் பாய்ந்து பிடிச்ச பிடியில் கொத்தாளத்தின் எலும்புகளெல்லாம் நொறுங்கிவிடும் போல இருந்தது.

"அண்ணே... அண்ணே... விட்றுண்ணே..."

"போடா... போய் தாலிய எடுத்துகிட்டு வா..."

"திடீர்னு கேட்டா நான் எங்கண்ணே போவேன்?"

"உங்கம்மா கட்டியிருந்த தாலி இருக்கும் பார். அதை எடுத்துகிட்டு வா..."

"அது... அது..."

"போ... ஆமா எங்க உங்கண்ணன் உடையப்பன்?"

"என்னண்ணே நீ. உன்னையே என்கிட்ட கேட்கறே..."

"அவன் எங்கடா... அவன் எதுக்க நீ தாலிய கட்றே..."

"அண்ணே..."

"இப்ப தாலியோட வர்றியா, இல்ல வெட்டட்டுமா?" — கேட்ட கையோடு ஒரு வீச்சு. அரிவாள் முனை அவன் முகத்தின் முன் மூக்கை உரசியபடி சென்றது. அதுவே அவன் சப்த நாடியும் நொறுங்கக் காரணமாகிவிட்டது.

கொத்தாளம் அதன்பின் நிற்கவில்லை. உள்ளே ஓடினான். சாமி அறையில் அவன் தாயின் படத்தில் சுமங்கலியாக போய் சேர்ந்திருந்த அவன் தாயின் தங்கச் சங்கிலி தொங்கியபடி இருந்தது. அதை எடுத்துக்கொண்டு வந்தான்.

நடு ஹாலில் நிமிர்ந்த நிலையில்—நெஞ்சு கொள்ளாத ஆவேசத்துடன் — கையில் அரிவாளுடன் உடையப்பன். அந்தத் தோற்றம் — அந்த ஆவேசம்... கொத்தாளத்துக்குப் புரிந்துவிட்டது.

ஊரில் சிலரும், சப்—இன்ஸ்பெக்டரும் பார்த்ததாக சொன்ன சாமி நிஜம்தான்.

கடைசியாக செவ்வந்தி தம்பி பார்க்க — அதுதான் நுழைந்துள்ளது. இப்போது அது உடையப்பனுக்குள்ளே புகுந்துவிட்டதாகத்தான் அவனால் அனுமானிக்க முடிந்தது.

“சாமி... நான் செவ்வந்தி கழுத்துல தாலிய கட்டிட்றேன். பஞ்சாயத்த கூட்டிப் பொய் சத்தியம்லாம் பண்ண மாட்டேன் சாமி... செவ்வந்தி இனி என் பொண்டாட்டி... செவ்வந்தி இனி என் பொண்டாட்டி... என்று படபடத்தான்.

“சொன்னா போதாது... இப்பவே புறப்படு...”—உடையப்பனின் கட்டளைக்கு ஏற்ப தாலியுடன் கொத்தாளம் புறப்பட உடையப்பன் அரிவாளுடன் அவனைப் பின் தொடர, வெளியே வந்து வீதியில் நடந்த அவர்கள் இருவரையும் தெருவே ஆச்சரியத்துடன் பார்த்தது.

திமுதிமு என்று நடை...

உடையப்பன் நடையில் புழுதி பறந்தது. மார்பிலும் அபரிமிதமான சந்தன வாசம். தெருவில் பலரும் அப்படியே அவர்களைப் பின் தொடர்ந்தனர்.

வழியில் முருகேச கவுண்டர் வீடு. வாசலில் தேங்கி நின்ற உடையப்பன் உள்பக்கம் பார்த்து “கவுண்டரே...” — என்று குரல் கொடுக்க அவரும் சேர்ந்து கொண்டார். ‘திம் திம் திம்’ என்று மஞ்சளூர் தெருவில் உடையப்பன் நடப்பது ஊருக்கே ஆச்சரியம்.



“செவ்வந்திய கெடுத்தது நான்தான். நான் அவ கழுத்துல தாலிய கட்டிட்றேன். நான் அவ கழுத்துல தாலிய கட்டிட்றேன்...” — என்று எல்லோர் காதிலும் விழும்படி கத்திக் கொண்டே நடந்தான் கொத்தாளம். அதேபோல செவ்வந்தி வீட்டு முன் போய் நிற்க, ஊரே சூழ்ந்து கொண்டது. அவளும் உள்ளிருந்து வெளியே வந்து பார்த்து விக்கித்துப் போனாள்.

“செவ்வந்தி...! என்னை மன்னிச்சுடு. நானே உன்னைக் கட்டிக்கிறேன்...” என்று அவள் முன் மென்று துப்பினான்.

“சொல்லாத. தாலிய கட்டு...” உடையப்பன் கத்தவும் நடுங்கியபடியே அவளருகே சென்று கழுத்தில் தாலியைக் கட்டினான்.

செவ்வந்தி கண்ணீர் மல்க கைகளைக் கூப்பினாள்.

“யோவ்... இங்க என்னய்யா நடக்குது? உடையப்பன் குரல் அவன் குரல் மாதிரியே தெரியலியே...” — என்று ஒருவர் சந்தேகப்பட “அதான் எனக்கும் தெரியில” என்று ஒருவர் ஆமோதிக்க... அடுத்த நொடி “எங்கே அந்த உடையப்பன்...?” — என்று உடையப்பனே கேட்டதுதான் ஆச்சரியம்.

எல்லாருமே ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள செவ்வந்தி தம்பி மட்டும் “சாமி... நான் காட்றேன்.” என்று உள்ளே ஓடினான்.

“காட்டு அவனை...

என் வேஷம் போட்டு சுப்பிரமணியக் கொன்ன அவனைக் கொன்னாதான் என் ஆவேசம் அடங்கும்.” — என்று சொல்லவும் கவுண்டர் ஏதோ உச்சி முடியைப் பிடித்து இழுத்தது போல நிமிர்ந்தார்.

“என் வேட்டிய வெச்சு விளையாடிட்ட அவனை சும்மாவிட மாட்டேன். சத்தியம்னா என்ன சக்கரப் பொங்கலா... விடமாட்டேன் அவனை...”—உடையப்பனே

உடையப்பனுக்காக பொறுமுவது ஊருக்கே புதியதாக இருந்தது.

"இங்க என்னதான் நடக்குது... இவனே இவனைத் தெரியாத மாதிரி பேசறானே..." என்றும் கலங்கி நிற்க, செவ்வந்தி தம்பி வீட்டுக்குள் இருந்து ஒரு கண்ணாடியை எடுத்து வந்திருந்தான். அதை உடையப்பன் முன் வந்து காட்டி "சாமி! இவன்தான் உடையப்பன்... விடாதே" என்றான்.

அவ்வளவுதான்... 'ஆ..' என்கிற ஒரு அலறலுடன்தன் கைவர்ளால் தன் கழுத்தை நோக்கியே ஒரு வீச்சு.

உடையப்பன் தலை ஒருபுறம், வீசப்பட்ட வாள் ஒருபுறம் பறந்து சென்று விழுந்தது. மொத்தக் கூட்டமும் வாய் பிளந்து நின்றது.

"சபாஷ் சாமி..." என்று தம்பி கை தட்டினான். ஆனால் யாரிடமும் பிரக்ஞையே இல்லை. அதன்பின் சிலர் "சாமி சரியான சமயத்தில் வந்து சரியான தண்டனை கொடுத்துவிட்டது" என்றனர். சிலரோ உடையப்பன் மனதுக்குள் பயந்துபோய் தன்னைத்தானே சாமியாக நினைத்துக் கொண்டுவிட்டான் என்றனர்.

'அதெல்லாம் இல்லை... சாமி இருந்து அதுதான் அவனுக்குள் புகுந்து எல்லாம் செய்தது. 'நானே வருவேன்' என்று அது வந்துவிட்டது' என்றனர் இன்னும் சிலர்.

'அப்படி உண்மையில் அது இருந்திருந்தால் அப்பாவி சுப்பிரமணியை உடையப்பன் கொல்ல வரும்போதே வந்து தடுத்திருக்குமே...?" என்று சிலர் எதிர்க் கேள்வி கேட்டனர். யாருக்கும் எந்தக் கேள்விக்கும் தெளிவான ஒரு பதில் கிடைக்கவில்லை.

ஆனால்மஞ்சளூர் வரையில் ஒரு சிறு தவறு செய்யக் கூட யாருக்கும் இனி துணிவு வராது.

அது மட்டும் நிச்சயம்!

# தங்கக்காடு

## 1

'கேளப்பா...
பூமிதனில் அவ்வளவும் சிவநவம்!
ஒன்றில் தொடங்கி எட்டில் ஒடுங்கி
நன்றில் நன்றாய்
அடுத்தே அடைவதே சிவ நவம்!
நவமும் சிவமும் ஒன்றென்றே
ஓதினேன் சீடனே –
ஒன்றியே கேட்பாய்...'

– சிவ சித்தன்

சென்னை விமான நிலையம்!

சிறகு முளைத்த இரும்புப் பறவையைப் போல் மிதந்தே வந்து தரையில் இறங்கி, சீற்றம் குறையாமல் ஓடிப் பிறகு மெல்ல வேகத்தை இழக்கத் தொடங்கி ஒரு வழியாகத் தேங்கி நின்றது அந்த விமானம்.

உள்ளிருந்து மிடுக்காகப் பல பேர் உதிர்ந்து வெளியே வந்தனர். அவர்களில் ரிஷபன் தனியே தெரிந்தான். சிவ நெறிச் செம்மல், ஆன்மீக மாமணி, ஆலயங்களின் காவலர் என்று நெல்லை பகுதியே கொண்டாடும் சிவஞானம் பிள்ளையின் ஒரே மகன்தான் ரிஷபன். நல்ல உயரம், அமெரிக்க ஊட்டம் என்று உச்சபட்ச சினிமா ஹீரோக்களே பொறாமைப்படும் தோற்றத்துடன் அவன் வருவதை வைத்த கண் வாங்காதபடி பார்த்துக் கொண்டிருந்தாள் ஸ்னேகா.

சுடிதார் துப்பட்டாவில் அவளும் சில ஹிந்தி நடி
களை ஞாபகமூட்டுவது போலத்தான் இருந்தாள்.

அவளே ஒரு மலர்க்கொத்து.

அவள் கையிலும் ஒரு மலர்க்கொத்து.

அவளுக்கு சில அடிகள் தள்ளி பலர் சந்தன மா மலர்க்கொத்து, பொன்னாடை என்று விதம்விதமா மரியாதைப் பொருட்களுடன் நின்றபடி இருந்த ரிஷபன் அவர்கள் அருகே வரவும், அவர்களும் தங் மரியாதையை அவனிடம் போட்டி போட்டுக் கொ காட்ட ஆரம்பித்தனர்.

கோட் சூட்டில் மிடுக்காய் இருந்த ரிஷப கோட்டைக் கழற்றித் தோளில் போட்டிருந்தான். உள் அமெரிக்காவின் பிரசித்தி பெற்ற ரெடிமேட் ஷர்ட்டா காலிபர் பிராண்ட் ஷர்ட். அதில் எப்பொழு லாவண்டர் வாசம் வந்தபடி இருக்கும். எத்தனை மு தோய்த்தாலும் போகாது.

ஸ்னேகாவை அந்த வாசம் கிறக்கியது. அவ தோளில் கிடந்த கோட்டைக் கேட்டு வாங்கிக் கொ அவனோடு தொடர்ந்தாள்.

ஒரு ஐந்து நிமிட காலத்தில் எல்லோருடை நலத்தையும் விசாரித்துக் கொண்டவன் ஏர்ப்போர்ட்டு வந்திருந்த அவனது சித்தப்பா அருணாசலத்திடம் வ "அப்பாக்கு இப்ப எப்படி இருக்கு?" என்று கேட் தவறவில்லை.

"அப்படியேதான் ரிஷபா இருக்கு." என்று அவ சோகமாய் முகத்தை வைத்துக் கொண்டு சொன்னா

அவன் எதைக் கேட்கிறான் என்பது ஸ்னேகாவுக் தெரிந்தது. ஆனால், அவளிடம் கேட்காததால் அவளா



அவன் கேள்விக்கான உண்மையான பதிலைக் கூற முடியவில்லை.

மௌனமாகவே இருந்தாள்.

அவனுக்கான கார் வெளியே டிரைவரோடு காத்தி ருந்தது. ஏ.சி. செட் ஆகவேண்டும் என்பதற்காக ஒருமணி நேரமாக அது இயக்கத்திலேயே இருந்தது. காரில் ஏறி அமர்ந்தவன், "ஸ்னேகா, கெட் இன்" என்று அவளையும் ஏற்றிக் கொண்டான். இதை அவள் கொஞ்சமும் எதிர் பார்க்கவில்லை.

"எக்ஸ்க்யூஸ்மி சார்." என்று பின்னால் திரும்பி சற்று தொலைவில் நின்றபடி இருந்த தான் ஏறி வந்திருந்த ஆபீஸ் காரைத் தன் பின்னால் தொடரச் சொல்லி சைகை காட்டிவிட்டு ரிஷபனின் காருக்குள் ஏறிக் கொண்டாள் ஸ்னேகா.

காரும் ரதம் போல் ஓட ஆரம்பித்தது.

"தேங்ஸ் ஸ்னேகா."

"எதுக்கு சார்?"

"ஏர்ப்போர்ட்டுக்கு வந்து என்னை ரிசீவ் பண்ணதுக்கு. ஆமா, எதுக்கு இத்தனை பேர்?"

"எல்லாருக்கும் உங்கள பார்க்கணும், விஷ் பண்ணணும்கற ஆசை."

"இதுக்காக திருநெல்வேலில இருந்து வரணுமா? அங்கேயே வீட்ல வந்து பார்க்கலாமே."

"சார்... இதெல்லாம் வழக்கமா நடக்கற விஷயங்கள். நம்ம பெரிய சார் எப்ப ஃபாரீன்ல இருந்து வந்தாலும் இப்படித்தான்... எல்லோரும் வந்துடுவாங்க."

"அப்பாவோட அப்ரோச்சே வேற ஸ்னேகா. நான் ரிஷபன். டைம் கான்செப்ட்ல ரொம்ப நம்பிக்கை உள்ள பர் நான். இதெல்லாம் வேஸ்ட் ஆஃப் டைம்."

"ஓ.கே. சார்... நான் இனி அவங்க இப்படி நடக்காம இருக்க முயற்சி எடுக்கறேன்."

"குட். கடைசியா அப்பா எப்ப ஃபேக்டரிக்கு வந்தார்?"

"அவர் வந்து கிட்டத்தட்ட அஞ்சாறு மாசம் ஆச்சு சார்."

"மை காட்... அப்ப இவ்வளவு நாளும் ஜி.எம். தான் பாத்துக்கிட்டாரா?"

"ஆமாம். உங்களுக்காக இங்க நாங்கல்லாம் கிட்டத்தட்ட நாலு மாசமா தவம் கிடக்கறோம்."

"ஐ.சீ." ரிஷபன் சிந்தனையோடு நெற்றியை தேய்த்துக் கொண்டான். எதுவும் பேசாதபடி வெளியே பார்த்தான். சூடான நூற்றி இரண்டு டிகிரி வெப்ப அளவிலான வைகாசி மாசத்து சென்னை வெய்யில் அவன் கண்ணைக் கரித்தது.

பளிச்சென்று ஒரு சுவர் இல்லை.

பரமசிவன், கலாபக் காதலன், சித்திரம் பேசுதடி, ஆதி என்று சினிமா பட சுவரொட்டிகளின் அத்து மீறிய ஆக்கிரமிப்புகள், போதாக் குறைக்கு ஐம்பது அறுபது மீட்டர் நீளத்திற்கெல்லாம் அரசியல் தலைவர்களின் பெயர்கள்!

"அப்படியே தான இருக்கு மெட்ராஸ்..." என்று முணுமுணுத்தான். அவள் அவனிடம் ஏதேதோ கேட்டான். ஆனால் அவன் அப்பா தொடர்பான ஒரு முக்கியமான கேள்வியை மட்டும் ஏனோ கேட்கவேயில்லை.

பர்சனல் என்று நினைத்து விட்டானோ என்னவோ! இருந்தாலும் அவளே அவனிடம் அந்தக் கேள்வி குறித்து ஆரம்பித்தாள்.



"சார்."

"யெஸ்."

"பர்சனலா ஒரு விஷயம்."

"அவசியம்னா தாராளமா சொல்லுங்க, ஸ்னேகா."

"இது நம்ம பெரிய சார் பத்தின விஷயம்."

"அப்பா பத்தியா... சரி சொல்லுங்க."

"அவரை நான் இரண்டு நாள் முன்னால சந்திச்சேன்."

"வாட்..?" ரிஷபன் அதிர்ச்சியைக் காட்டினான்.

"ஆமாம் சார்... அவரே என்னை சில ஃபைல்களோட வரச் சொல்லியிருந்தார்."

"நிஜமாவா... அவர் யாரையும் பார்க்கறது இல்லைன்னுல்ல சித்தப்பா சொன்னார்."

"அதுவும் உண்மைதான். கடந்த நாலு மாசத்துல அவர் பார்த்த ஒரு மூணாவது நபர் நான் மட்டும்தான்."

"சரி... விஷயத்துக்கு வாங்க."

"அவர் என்கிட்ட ஒரு போன் நம்பர் கொடுத்து குருராஜன்னு ஒருத்தரைக் கூட்டிக்கிட்டு வரச்சொன்னார்."

"அது யார் குருராஜன்?"

"அவர் ஒரு நாடி ஜோசியர். சில வருஷங்களுக்கு முந்தி நம்ம பெரிய சார் அவர்கிட்ட நாடி ஜோசியம் பார்த்தாராம்."

"சரி அதுக்கென்ன?"

"அந்த குருராஜனைத் தேடிப் போனப்போ அவர் அந்த அட்ரஸ்ல இல்ல. சிங்கப்பூர் டூர் போயிருக்கிறதா சொன்னாங்க."

"அதனால..."

"பெரிய சார் அவரைப் பார்க்கத் துடிக்கிறார். அவ இல்லாம அடுத்து நீ என்னைப் பார்க்க வர கூடாதுன்னும் சொல்லிட்டார்."

"எதனாலன்னு காரணம் தெரியுமா?"

"எனக்குத் தெரிஞ்ச வரை அந்த நாடி ஜோசிய சொன்ன மாதிரியே பெரிய சார் லைஃப்ல எல்ல விஷயமும் நடந்திருக்கு. குறிப்பா, அவருக்கு அறுபதாவ வயசுல லெப்ரசி வரும்னு அந்த நாடி ஜோசிய சொல்லியிருந்திருக்கார்னு கேள்விப்பட்டேன்."

ஸ்னேகாவின் பதில் ரிஷபனைக் கொஞ்சம் ஸ்தம்பி வைத்தது. சற்றுத் தடுமாறிவிட்டு, "டு யூ பிலீவ் தி நான்சென்ஸ்?" என்று எதிர் கேள்வி கேட்டான்.

"எக்ஸ்க்யூஸ்மீ சார்... ஒரு நான்சென்ஸ் எப்படி சா சென்சிபிளான ஒரு விஷயத்தை கன்பஃபர்ம்டா சொல் யிருக்க முடியும்?"

ஸ்னேகா கேட்டு முடித்தாள். கார் நேஷன சிந்தடிக்ஸ் என்னும் பெயர்ப் பலகையைக் கட அதற்குப் பின்னால் உள்ள கெஸ்ட் ஹவுஸ் ஒன்றி முன்னால் நின்றது!

மௌனமாக ஸ்னேகா சொன்னதை அ போட்டபடியே காரை விட்டு இறங்கி உள்ளே சென்றா எதிரில் அவனது குடும்ப டாக்டர் பத்ரி காத்து கொண்டிருந்தார்.

## 2

**'கேளப்பா...**
**நவமும் சிவமும் ஒன்றென்றேன்**
**எப்படி என்றே நீ கேட்பாய்**



**ஒன்பதின் பின்னே பத்தாகும்**
**பத்தில் பூஜ்யம் வித்தாகும்**
**பின்னோர் கூடலில் ஒன்றிரண்டு**
**ஏணிக்கண்ணியாய்**
**தொடர்ந்திடுமே!**
**ஆயினும் அவை எல்லாம் ஒன்பதில்**
**பெருக்கங்கள்**
**ஒன்பதே எண்களில் உன்னதமாம்!'**

**– சிவ சித்தன்**

டாக்டர் பத்ரிக்கு நல்ல க்ரே ஹேர். காதோரமாக நரைத்த கிருதா. சதுர ஸ்பெக்ஸ் கிளாஸ். டைரக்டர் பாலச்சந்தரை ஞாபகப்படுத்தும் தோற்றம்.

"யெஸ் டாக்டர்... எப்படி இருக்கீங்க?"

"ஃபைன் ரிஷா, ஹவ் ஈஸ் யுவர் ட்ரிப்?"

"நோ பிராப்ளம். உங்களை நான் இங்க இப்ப எதிர்பார்க்கவே இல்லை. திருநெல்வேலில இன்னிக்கு ஈவினிங் உங்களைப் பார்க்கறதா இருந்தேன்."

"அஃப் கோர்ஸ்... நான் ஒரு மெடிகல் கேம்ப் கண்டக்ட் பண்ண அந்தமான் போயிட்டிருக்கேன். வர பத்து நாள் ஆகலாம். அதான் உன்னை இங்கயே பார்த்துட முடிவு செய்தேன். ஜஸ்ட் இப்பதான் ஒரு பத்து நிமிஷம் ஆகுது நான் வந்து..."

"அப்ப நிச்சயம் முக்கியமான விஷயம் ஏதோ இருக்கு. ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ண முடியுமா? டிரெஸ் சேஞ்ச் பண்ணிட்டு வந்துடறேன்."

"வித் ப்ளெஷர் ரிஷா..."

டாக்டர் காத்திருக்கத் தொடங்கினார். ரிஷபனும் அவனுக்கான மாடரேட் அறை ஒன்றை நோக்கி

நடந்தான். வெள்ளை உடுப்பில் கெஸ்ட் ஹவுசின் ஊழியர்கள் அவன் முன்னால் எதிர்ப்பட்டு குட்மார்னிங் சொல்லி ஓரமாக ஒதுங்கி நின்றனர்.

அவனும் சொன்னது போலவே பத்தாவது நிமிடம் அறையை விட்டு வெளியே வந்தான். இந்தியரது தட்ப வெப்பத்துக்கே உரிய எட்டு முழ வேட்டி, கைத்தறி கதர்ச்சட்டை. ஓர் இளம் தேசிய தலைவர் போல ஒரு தோற்றம்.

டாக்டரே வியந்தார்.

“ரிஷா... இது என்ன... நம்ம பழைய டிரெஸ்ஸை நீ இன்னும் மறக்கலையா?”

“எப்படி சார் மறக்க முடியும்? நீங்க சொல்லுங்க... என்ன விஷயம்?”

“பெரியவர் பத்திதான்...”

“தெரியும் சொல்லுங்க... உங்க ட்ரீட்மெண்ட்ல எனக்கு நம்பிக்கை இருக்கு. இம்ப்ரூவ்மெணட் ஆகியிருக்கா?”

“சாரி ரிஷா, நான் ஜெனரல் பிசிசியன். அப்பாவை லெப்ரசி ஸ்பெஷலிஸ்ட்கிட்டதான் காட்டணும். அவர் கட்டாயமா டாக்டர்ஸ் கண்காணிப்புல இருந்தே தீரணும். ஆனா, அவர் அதுக்குச் சம்மதிக்க மாட்டேங்கறார். அதுமட்டுமில்ல... தன்னோட வியாதிக்கு மருந்து மாடர்ன் மெடிசன்ல இல்ல... சித்த வைத்தியத்துல தான் இருக்குன்னு சொல்றார்.”

“அதுக்கு உங்க பதில்?”

“அப்பாவோட லெப்ரசி முத்திடிச்சு. அவர் முகத்துல கூட இப்ப தேமல். அதனாலதான் அவர் யாரையும் பாக்கறதே இல்லை. நான் எவ்வளவு சொல்லியும் என்



கூட ட்ரீட்மெண்ட்க்கு வெளிய வர மாட்டேங்கறார். இன்ஃபாக்ட் அவரை நீ அமெரிக்கா கூட்டிக்கிட்டுப் போய் அங்க காட்றது நல்லது. ஆனா விசா வாங்கறது கஷ்டம். அவரைப் பார்க்கும்போதே அந்த வியாதியோட கொடூரம் தெரிஞ்சிடுது.”

“அப்ப உங்களுக்குச் சித்த வைத்தியத்துல நம்பிக்கை இல்லையா?”

“சாரி... அதெல்லாம் கப்சா... சித்தர்கள் இருந்த காலமெல்லாம் மலையேறியாச்சு. அப்புறம் அவங்க சுத்தி திரிஞ்ச காடுகள்... இப்ப எங்க இருக்கு?”

“சோ, உங்களுக்கு நம்பிக்கை இல்லை.”

“ஆமாம். அதை சொல்லத்தான் வந்தேன். இங்க அவர் தன்னை யாரும் பாக்கறதை விரும்பலை. தனக்குத் தொழுநோய்ங்கறது வெளியே தெரிஞ்சா தன்னோட டோட்டல் இமேஜும் போயிடும்னு பயப்படறார். அந்த எண்ணமே அவருக்கு ட்ரீட்மெண்ட் கொடுக்க முடியாம தடுக்குது. நீ வந்துட்டே... இனி நீ பார்த்துக்கோ...”

டாக்டர் பத்ரி அவ்வளவுதான் விஷயம் என்பது போல எழுந்து கொண்டார். ரிஷபனும் அவரை வாசல் வரை சென்று வழியனுப்பிவிட்டு வந்தான்.

மீண்டும் எதிரில் ஸ்னேகா!

அவள் கையில் செல்போன்.

“யெஸ் ஸ்னேகா.”

“சார், லைன்ல பெரிய சார்.”

“கொடு.” கேட்டு வாங்கி உற்சாகமாக தன் தந்தைக்கு ஹலோ சொல்லிப் பேச்சைத் தொடங்கினான்.

“ரிஷா வந்துட்டியா?”

"வந்துட்டேன்... நெல்லைக்கு வந்துகிட்டே இருக்கேன். இப்பதான் தூத்துக்குடி வரை டெய்லி ஃப்ளைட் இருக்குதாமே... மதியமே வந்துடுவேன்னு நினைக்கறேன்."

"சீக்கிரமா வா... ஆமா என் பி.ஏ. ஸ்னேகா அங்க இருக்காதானே?"

"என் எதிர்லயே இருக்காங்க..."

"கொஞ்சம் அவகிட்ட கொடு."

"ஷ்யூர் டாட்..." ரிஷபன் செல்போனை ஸ்னேகா விடம் நீட்டினான்.

"அப்பா பேசணுமாம்."

அவளும் பேசினாள்.

"சொல்லுங்க சார்."

"என்ன ஆச்சு அந்த நாடி ஜோசியன் விஷயம்?"

"சார் அவர் சிங்கப்பூர் போயிருக்கார்,"

"சிங்கப்பூர் அட்ரஸைக் கண்டுபிடிச்சுப் போன் பண்ண வேண்டியதுதானே?"

"ஐ வில் ட்ரை சார்."

"நான் அவனோட உடனே பேசணும். ப்ளீஸ்."

"ஷ்யூர் சார்... அவரை எப்படியாவது கண்டுபிடிக் கிறேன். நீங்க தைரியமா இருங்க சார்."

ஸ்னேகா செல்லை கட் செய்தாள். ரிஷபன் கூர்மையாகப் பார்த்தபடி இருந்தான்.

"என்ன ஸ்னேகா... நாடி ஜோசியத்துலயே குறியா இருக்காரா அப்பா?"

"ஆமாம் சார்... அவர் சொன்னபடியே எல்லாம் நடந்துடிச்சாம். இப்பகூட இந்த லெப்ரசிய குணப்படுத்த



முடியுமாம். அதுக்கு சில பரிகாரங்கள் இருக்காம். தெரிஞ்சுக்கத்தான் சார் அந்த நாடி ஜோசியனைத் தேடறாரு."

"பரிகாரமா... அப்படின்னா?"

"என்ன சார் பரிகாரம்னா என்னன்னு தெரியாதா?"

"தெரியும். ஆனா பரிகாரம் எப்படி லெப்ரசி கிருமி களைக் கொல்லும்? அது எப்படி அழுக ஆரம்பிச்சிட்ட உடம்போட செல்களை தடுத்து நிறுத்தும்? எனக்கு தெரியலியே."

"எனக்கும் தெரியல... ஆனா பெரிய சார் ரொம்பவே நம்பறார்."

ஸ்னேகா ரிஷபனிடம் சிவஞானம்பிள்ளையின் நம்பிக்கையை அழுத்தமாகச் சொன்னதோடு, அந்த நாடி ஜோசியனான குருராஜனைப் பற்றியும் ஒரு நெருப்பை அவனுக்குள் மூட்டிவிட்டாள். அதுவும் நன்றாகவே பற்றிக் கொண்டது. அதன்பின் வேகமாக உடை மாற்றிக் கொண்டவன் தனக்காகக் காத்திருக்கும் டாக்டர் பத்ரியைச் சந்திக்க வந்தான். அவர் கிளம்பிப் போய்விட்டி ருந்தார். ஸ்னேகாவும் கூடவே வந்து அவன் முகம் போகும் போக்கைப் பார்த்தாள்.

"சார்."

"யெஸ்."

"டாக்டர் போயிட்டார்."

"ஆமாம்... இருந்தா சில விஷயங்களக் கேக்கலாம்னு தான் நான் நினைச்சேன்."

"உங்களுக்கு முந்தியே நான் அவர்கிட்ட நிறைய கேள்விகள் கேட்டுட்டேன் சார்."

"எந்த மாதிரி?"

"நானும் சரி, நீங்களும் சரி இந்தக் காலம்... ஐ மீன் ஹைடெக் யுகத்துப் பிரதிநிதிகள் நாம்... என் கேள்வியும் ஹைடெக் பாதிப்புகளோட தான் இருந்தது."

"எப்படி?"

"பொதுவா ஒரு மனுஷனுக்கு வர்ற வியாதிகளுக்குக் கிருமிதான் காரணம்."

"அதுதானே நிஜம்."

"ஆனா அந்த நாடி ஜோசியர் நம்ம சார்கிட்ட நீங்களும், உங்க முன்னோர்களும் செஞ்ச பாவம் காரணம்னு சொன்னார்."

"ஐ.சி..."

"நான் ஒண்ணும் சளைக்கல... பாவம்தான் காரணம்னா பதிலுக்கு எவ்வளவோ புண்ணியமும் செய்திருக்கோம். அது காம்பன்சேட் ஆகாதான்னு கேட்டேன்."

"கேள்வியே தப்பு ஸ்னேகா... இந்தப் பழமைவாதிகள், பர்ட்டிகுலரா ஜோசியர்கள் பாவம் புண்ணியம்னு தான் எப்பவும் பேசறாங்க... அவங்களுக்கு வேற பேச்சு பேசவே தெரிய மாட்டேங்குது."

"ஆனா நம்ம பெரிய சார்... ஐ மீன் எம்.டி. அந்த நாடி ஜோசியர் சொன்னதை அப்படியே ஒத்துக்கிட்டார்னு தான் கேள்விப்பட்டேன்."

"ஓ.கே... இதுக்குமேலே எதுவும் பேசவேண்டாம், எல்லாத்தையும் நான் அப்பாகிட்டயே பேசிக்கறேன்."

ரிஷபன் சட்டென்று ஒரு முற்றுப்புள்ளி வைத்தான். அவளுக்கேகூட அது சற்று அதிர்ச்சியாக இருந்தது.



# 3

'கேளப்பா...
ஒன்பதை சிவமென்றேன்
அதனையே உத்தமமென்றேன்
நன்கதை நீ விளங்கிடவே
ஒன்பதைக் கூட்டியும் கழித்துமே
வந்திடும் விடைதனைப் பார்
கூடினாலும் கழிந்தாலும்
அந்த விடைக்குள்
ஒன்பதே ஒளிந்திருக்கும்!'

– சிவ சித்தன்

அழகிய அந்த பங்களா முகப்பைக் கார் தொடவுமே, டிரைவர் சப்தமெழுப்பி விட்டான். அந்தக் கார் ஹாரன் சப்தம் முதலாளி வருகிறார் என்பதற்கான கட்டியம். பங்களாவுக்குள் அப்படியும், இப்படியுமாக யாராவது இருந்து கொண்டிருந்தாலும் கார் ஹாரன் சப்தம் அவர்களை உஷார்ப் படுத்திவிடும்.

அன்று ரிஷபன் வரும்போதும் அப்படித்தான் ஆயிற்று. எல்லோரும் அங்கங்கே விரைப்புக்கு மாறினார்கள். ரிஷபன் வயதில் சிறியவனானாலும் பழுத்த அனுபவசாலி போல மிக வேகமானவன். நடந்து வரும் விதம், தலையைக் கோதிக் கொண்டு பிறரைப் பார்வையால் ஊடுருவும் தினுசு எல்லாவற்றிலுமே இளமை கொடி கட்டிப் பறக்கும். சரியான கோபக்காரனும்கூட. குறிப்பாக எங்கேயாவது குப்பை கண்ணில்பட்டால், அப்படி ஒரு கோபம் வரும்.

தோட்டத்துச் செடிகளுக்குச் சரியாகத் தண்ணீர் விடாமல் அவை வாடிக் கிடந்தாலும் அதைப் பார்க்கக்

கோபம் வரும். எனவே, அவன் வருகிறான் என்றாலே மொத்தப் பங்களாவே தலைகீழாக மாறிவிடும்.

திரும்பிய பக்கமெல்லாம் நாக்கால் நக்கியதுபோல அப்படி ஒரு சுத்தம். பார்த்துக்கொண்டே காரைவிட்டு இறங்கினான். கால்களுக்கு ஷூவிற்குப் பதிலாக கான்வாஸ் அணிந்திருந்தான். அது அவன் கம்பீர நடையாய் வரும் சப்தத்தை இல்லை என்றாக்கிவிட்டது. கூடவே தொடர்ந்தாள் ஸ்னேகா!

அவனை வரவேற்கச் சென்றபோது சுடிதார் அணிந்திருந்தவள் இப்பொழுது புடவைக்கு மாறியிருந்தாள். மிக மெல்லிய மைசூர்சில்க் புடவை உடம்போடு ஒட்டிக் கொண்டு ஸ்னேகாவின் அழகிய உடல் வாகை அப்பட்டமாகக் காட்டிக் கொடுத்தது. நல்ல ரசனை உள்ளவர்கள் நின்று ரசித்துவிட்டுத்தான் போவார்கள்.

ரிஷபனுக்கும் அவ்வப்போது அவள் தோற்றம் சலனம் மூட்டியது. இருந்தும்தான் ஓர் இளைஞன் மட்டுமல்லன்; ஒரு பொறுப்புள்ள தொழிலதிபர் என்று தனக்குள் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொண்டே நடந்தான்.

அவனது அப்பாவும் தொழிலதிபருமான சிவஞானம் பிள்ளை மூன்றாவது மாடியில் அவரது அறையில் இருந்தார். வீட்டுக்குள் அவரது அறைக்குச் செல்ல லிஃப்ட் அமைக்கப்பட்டிருந்தது. அதற்குள் நுழைந்த ரிஷபன் பார்வையாலேயே ஸ்னேகாவைத் தவிர்த்தான்.

அவளும் லிஃப்ட்டுக்கு வெளியிலேயே நின்று கொண்டாள்.

அவன் உள்ளுக்குள் அடங்கிட, லிஃப்ட் மேலேற ஆரம்பித்தது.

மூன்றாவது தளத்தில் நிற்கவும் கதவு தானாக திறந்து கொள்ள அதனுள் இருந்து வெளியேறினான். அங்கே



இருந்தே ஒருவித மருந்து வாசனையை அவனால் உணர முடிந்தது. அநியாயத்துக்கு மூக்கை நிரடியது. தரையெல்லாம் டெட்டால் வாசனை. எதிரில் ஒரு மேட்ரன் நர்ஸ்.

அவனைப் பார்க்கவும் யாரோ என்று முகம் சுணங்கினாள். அவளைத் தாண்டிச் செல்லப் பார்த்த அவனைத் தடுத்தவளாய், "யார் நீங்க?" என்று கேட்டாள்.

"ரிஷபன்.. ரிஷா.." என்று தனது முழுப்பெயர் மற்றும் அழைக்கப்படும் பெயர் இரண்டையும் கூறினான்.

"ஓ.., ஜே.எம்.டியா., வாங்க வாங்க... உங்களுக்காகத் தான் அப்பா காத்துக்கிட்டிருக்கார்...

அவள் அவனோடு திரும்பப் பார்த்தாள்.

"ஒன் மினிட்."

"யெஸ்."

"நீங்க."

"நான் அமலோற்பவமேரி. உங்கப்பாவை, சாரி... எம்.டி. சாரைப் பார்த்துக்கற நர்ஸ்."

"அப்பா இந்த ரூமைவிட்டு வெளியே போறதே இல்லையா?"

"இல்லை... போகவும் முடியாது. வந்து பாருங்க... உங்களுக்கே தெரியும்."

அவள் வார்னீஷ் வாசனை கமழும் அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைய அவளை ரிஷபனும் பின் தொடர்ந்தான்.

மார்பிள் தரையில் கூட டெட்டால் வாசனை.

ஜில்லென்று பதினெட்டு டிகிரி செல்ஷியஸில் ஏ.சி. குளிர். தேக்கு மரக் கட்டிலில் ஒரு வலைக் கூண்டுக்குள் சிவஞானம்பிள்ளை படுத்திருந்தார்.

அமலோற்பவமேரி அவரருகே சென்று வலைத் துணியை விலக்கி, "சார்...!" என்றாள். குசுகுசுவென்று ஏதோ சொன்னாள். அடுத்த நொடியே, "ரிஷா வந்துட் டியா?" என்கிற குரலுடன் எழுந்து அமர்ந்தார் சிவ ஞானம்பிள்ளை. வலைக்குள் இருந்த அவர் முகம் தெளிவாகத் தெரியவில்லை. ரிஷபன் வலையை வேகமாக விலக்கிக் கொண்டு, "அப்பா..." என்று முன்னால் சென்றவன், போன வேகத்தில் பின்னுக்கு வந்தான். அவன் முகத்தில் அதிர்ச்சி வரிகள்!

"ரிஷா..."

"அப்பா..."

"என்னப்பா... அப்பா முகத்தைப் பார்க்க முடிய வில்லையா?"

"என்னப்பா இது கொடுமை. உங்களுக்கா இப்படி?"

"உங்களுக்கான்னா... நான் என்ன தர்மப்பிரபுவா... நானும் மனுஷன்தானே?"

"இல்லப்பா... இது ஆனாலும் கொடுமை."

"கொடுமைதான். இப்படி எல்லாம் கொடுமையான வியாதிகள் மட்டும் பூமியில இல்லேன்னா அது அதை விடக் கொடுமையான மனிதர்களை உருவாக்கிடும்பா."

"என்னப்பா நீங்க... என்னென்னவோ சொல்றீங்க? நாம யாருக்கு என்ன கெடுதல்ப்பா செய்தோம்."

"வேண்டாம்... அந்தப் பேச்சு மட்டும் பேசாதே. ஒண்ணு மட்டும் சொல்றேன். இந்த உலகத்துல தப்பு செய்யாம கடவுளாலகூட இருக்க முடியாது. இதை மட்டும் மறந்துடாத..."

"அப்ப இப்படி ஒரு வியாதி வர நீங்க தப்பு செய்திருக்கறதா சொல்றீங்களா?"



"ரிஷா... எதுக்கு வீண் பேச்சு. நீ தயவு செய்து நாடி ஜோசியர் குருராஜனைப் போய்ப் பார். அவர் உனக்காகக் காத்துக்கிட்டிருக்கார்."

"நான் எதுக்குப்பா அவரைப் பார்க்கணும்?"

"அவரைப்பார்... நாடியில எனக்கு நோய் வரும்னும் இருக்கு. அது குணமாகி நான் பழையபடி ஆகிடு வேன்னும் இருக்குப்பா."

"சரிப்பா... இன்னிக்கு விஞ்ஞானம் எவ்வளவோ முன்னேறிடிச்சு. மருந்து சாப்பிட்டா குணமாகும்கறது தெரிஞ்ச விஷயம்தானே?"

"நீ புரியாம பேசறே... பெருவியாதியைக் கட்டுப் படுத்தத்தான் மருந்து வந்துருக்கு. பரிபூரணமா குணப் படுத்த இல்லைப்பா..."

"நீங்க என்னப்பா சொல்றீங்க?"

"ரிஷா... ஒரே மாசத்துல நான் இந்த நோயோட உச்சத்துக்கே போயிட்டேன். என்னை இந்திரன் சந்திரன்னு புகழ்ந்தவன்லாம் நான் கையெழுத்துப் போட்ட ஆபீஸ் ஃபைலைத் தொடக்கூட பயந்ததைப் பார்த்தேன். டாக்டர் களும் வந்து பார்த்தாங்க. அவங்க சொல்றாங்க— இந்த வியாதி என் உடம்புல ரொம்ப நாளா இருந்திருக்காம். நான் கவனிக்காம விட்டுட்டேனாம்."

"அப்பா... இப்ப இந்தப் பேச்செல்லாம் எதுக்குப்பா... உங்களுக்கு இங்க பிடிக்கலைன்னா என்கூட யு.எஸ். வந்திடுங்க. அங்க உங்க உடம்பைத் தலைகீழா மாத்திடு வாங்க."

"இல்லைப்பா... நீ முதல்ல நான் சொன்ன நாடி ஜோசியரைப் பார். அவர் உனக்கு மத்த விஷயங்களைச் சொல்வார்."

"அப்பா எனக்கு இந்த நாடி, ஜோசியம் இதுல எல்லாம் நம்பிக்கை இல்லைன்னு உங்களுக்குத் தெரியுமா, தெரியாதா?"

"ரிஷா... எனக்கு உன் நம்பிக்கை இப்ப முக்கியமில்ல. நான் சொல்றதை நீ கேட்கணும். அதுதான் முக்கியம். தயவு செய்து அவரைப் போய்ப் பாரேன்."

கிட்டத்தட்ட சிவஞானம்பிள்ளை கெஞ்சினார். சட்டென்று அங்கிருந்து விலகத் தொடங்கியவன் வேகமாக நடந்தபடியே, "அவரைப் பார்த்துட்டு வந்து உங்க கூட பேசறேன்" என்றான்.

பாண தீர்த்தமாய் விழும் தென் பொதிகை மலை அருவித் தண்ணீர், அணை கட்டி தேக்கப்பட்டு பின் திறந்துவிடப்படும்போது அதுவே வாய்க்கால் நீராக அம்பா சமுத்திரத்துக்குள் புகும்போது ஊரே பச்சைக் காடாகி விடுகிறது.

வாய்க்காலை ஒட்டி இருபுறமும் தளதளவென்று வயல்கள். அதில் ஊட்டமாக கதிர் பிடித்த நெல்மணிகள்.

ரிஷபனின் கார் அம்பாசமுத்திரப் பச்சையழகை ரசித்தபடியே வாய்க்கால் ஓரமாக உள்ள நாடி ஜோசியர் குருராஜன் வீட்டு முன்னால் நின்றது. முகப்பில் ஒரு சிறிய பெயர்ப் பலகை. அதில் பெயிண்ட் எழுத்துக்கள். பலகைக்கு அப்பால் சிமெண்ட் திண்ணை. திண்ணை மேல் நாடி பார்க்க வந்த பலர் காத்திருந்தனர். ரிஷபன் காரைவிட்டு இறங்கவும், அவனை ஏற இறங்கப் பார்த்தனர்.

ரிஷபனுடன் ஸ்னேகாவும் சேர்ந்தே இறங்கினாள்.

அவளுக்குள் ஒரு சன்னமான நூலிழை போன்ற பிரமிப்பு. சென்னையில் இப்படி எல்லாம் பசுமையையோ, திபுதிபுவென்று ஓடிவரும் வாய்க்கால் தண்ணீரையோ கற்பனை செய்து பார்க்க முடியாது. அப்புறம் இப்படி திண்ணை வைத்த காற்றோட்டமான வீடுகள்.



ரிஷபன் அவளைக் கலைத்தான்.

"ஸ்னேக்... கூட்டமா இருக்கே..." என்றான். அதற்குள் நாடி ஜோதிடரே வெளியே வந்து ரிஷபனைப் பார்த்து விட்டார்.

"வணக்கம் தம்பி... வாங்க வாங்க..." என்று வரவேற்றார். கூடவே ஸ்னேகா இருந்ததால் அவன் யார் என்று பார்த்த நொடி, அவரால் தெரிந்து கொண்டு வர முடிந்தது.

அவனும் உள்ளே நுழைந்தான்.

ஓட்டு வீடு... பல இடங்களில் குனிய வேண்டி வந்தது.

உள்ளே வழவழப்பான சிமெண்ட் தரைப்பரப்பில் நல்ல ஜிலுஜிலுப்பு.

"வாங்க உக்காருங்க..." ஜோதிடர் ஒரு வயர் நாற்காலியைக் காட்டினார். அதில் சில இடங்களில் வயர் அறுந்திருந்தது. தயங்கியபடியே அமர்ந்தான். எதிரில் அவரும் ஒரு மரநாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தார்.

நெற்றி நிறைய சந்தன குங்கும விபூதி. கழுத்திலும் ஏராளமான ருத்ராட்சம் மற்றும் ஸ்படிகமாலை. ஒரு நாடி ஜோதிடர் என்றால் இப்படி பக்திப்பூர்வமாகத்தான் இருக்க வேண்டும் என்கிற மாதிரி...

ஸ்னேகா ஒரு டயரியை மார்புமேல் படிய வைத்துப் பிடித்தபடியே ரிஷபனை ஒட்டி நின்று கொண்டாள்.

"அப்புறம் தம்பி... என்ன சாப்பிடறீங்க?" ஜோதிடரிடம் உபசரிப்பு ஆரம்பமாயிற்று.

"நான் சாப்பிட வரலை. உங்களை அப்பா பார்க்கச் சொல்லியிருந்தார். அதான் வந்துருக்கேன்."

"ரொம்ப சந்தோஷம்... பாவம் அப்பா. அந்தக் கடவுள் ஏன்தான் அவரை இப்படி சோதிக்கிறானோ?"

"கடவுளுக்கு வேற வேலையே இல்லையா என்ன, நீங்க விஷயத்துக்கு வாங்க ஜோதிடரே..."

ரிஷபனின் ஆரம்பமே அவன் எப்படிப்பட்டவன் என்பதை நாடி ஜோதிடருக்குக் காட்டிவிட்டது. அவனைச் சற்று ஏற இறங்கப் பார்த்தார்.

"டயமாச்சு... அப்பா உங்களை எதுக்குப் பார்க்கச் சொன்னார்? அந்த விஷயத்துக்கு வாங்க..."

"வர்றேன் தம்பி... ஆமா இந்தப் பொண்ணு யார்... உங்க வருங்கால மனைவிங்களா?"

அந்தக் கேள்வி அவன் பொட்டைத் தைத்தது. பதறிப் போய் ஸ்னேகாவைப் பார்த்தான். அவளிடமும் தர்ம சங்கடம்.

"இவங்க என் பர்சனல் செகரட்ரி. கூட ஒரு பொண்ணு இருந்தா அவளைப் பொண்டாட்டின்னு சொல்லிடறதா?" கோபமாகத் திருப்பிக் கேட்டான்.

"இல்ல தம்பி... இந்தப் பொண்ணு கழுத்துல ஒரு மச்சம் இருக்குது. அதேபோல காதும் விரிஞ்ச மடல் காது. இப்படி ஒரு லட்சணமுள்ள பொண்ணுதான் உங்க மனைவியா வரப்போறவன்னு உங்களுக்கான ஏட்டுல இருந்திச்சா, அதான் அதை வெச்சு கேட்டேன்..." என்ற ஜோதிடரை, ஓர் இன்ப அதிர்வுடன் பதிலுக்குப் பார்த்தான் ரிஷபன்.

"என்ன பாக்கறீங்க... நான் சொல்லல தம்பி. முனிவருங்க எழுதி வெச்சிருந்த ஏடு சொன்னதை தான் நான் சொன்னேன்."



அந்த பதில் ஸ்னேகாவையே கொஞ்சம் பதைக்க வைத்துவிட்டது. சற்று வெளிறிப் போனாள்.

"இருங்க வந்துடறேன்." என்று அங்கிருந்து விலகிய ஜோதிடரைத் தொடர்ந்து ரிஷபன் ஸ்னேகாவை ஒரு பார்வை பார்த்தான். அவள் முகத்தில் ஒருவித வெட்கம்.

செவ்வானம் போல காது மடல்வரை பரவிவிட்ட ஒரு சிவப்பு. அவனுக்கும் அவளின் அந்த வெட்கத் தோற்றம் வெகுவான ஒரு கவர்ச்சியாகத்தான் இருந்தது. இருந்தாலும் அடக்கிக் கொண்டு திரும்பினான்.

ஜோதிடரும் கையில் ஒரு ஏட்டுக்கட்டுடன் அவன் முன் வந்து அமர்ந்தார்.

"தம்பி... இது உங்க குடும்பத்தை அப்படியே புட்டுப் புட்டு வைக்கற ஏடு. இதுல உங்க குடும்பத்துக்கான பன்னிரெண்டு காண்டமும் இருக்கு. இதைக் கண்டு பிடிக்க படாதபாடு பட்டேன். சாதாரணமா எங்கிட்ட வர்றவங்களுக்குப் பொதுக் காண்டம் கிடைக்கறதே பெரும்பாடா இருக்கும். ஆனா எல்லா காண்டத் தோடயும் ஒரு கட்டு கிடைக்குதுன்னா அதுக்குப் பின்னால ஒரு அழுத்தமான காரணம் இருக்குது."

அவர் பலமான பீடிகை போட்டபடி, கட்டைப் பிரிக்க ஆரம்பித்தார். அழுக்கான புரிக்கயிறு கொண்டு சுற்றிச் சுற்றி கட்டப்பட்டிருந்தது. அதை விடுவிக்கவே நெடுநேரம் ஆயிற்று. அதையே பார்த்தபடி இருந்தான் ரிஷபன். மொத்தக் கட்டையும் அவிழ்த்து முடித்தவர் முதல் ஏட்டை எடுத்துப் பார்த்தபடியே, "தம்பி நான் படிக்கறதை நல்லா கேட்டுக்குங்க... இது உங்களுக்கான ஏடு..." என்று ஆரம்பிக்கப் போனார்.

சட்டென்று கையை உயர்த்தி அவர் முயற்சிக்கு ஒரு தடையை விதித்த ரிஷபன், அவரை சற்று பெரு மூச்சுடன் பார்த்தான்.

"ஏன் தம்பி வேண்டாம்கறீங்க?"

"நான் இப்ப உங்ககிட்ட ஜோசியம் பார்க்க வரலை; எனக்கு இதுல நம்பிக்கையும் இல்லை."

"அது எனக்குத் தெரியும் தம்பி. உங்களுக்கு நம்பிக்கை வரதுக்காகத்தான் இந்த ஏடைப் படிக்கவே ஆரம்பிச்சேன்."

"இதைப் படிச்சா எப்படி எனக்கு நம்பிக்கை வரும்?"

"அது எனக்குத் தெரியாது... இன்னிக்குத் தேதிக்கு நீங்க என்னைப் பார்க்க வருவீங்க. அப்படி வரும்போது நான் இதைப் படிக்கணும்னும் இதுலயே இருக்கே."

"என்னது... நான் இன்னிக்கு இப்ப உங்களைப் பார்க்க வருவேன்கற விஷயம் இதுல இருக்கா."

"ஆமா... அதுமட்டுமில்ல... உங்க அடி மனசுல என்ன இருக்குது? நீங்க என்னைப் பார்க்க வீட்டை விட்டுக் கிளம்பும்போது என்ன நடந்ததுன்னு கூட இதுல இருக்கு."

"அப்படியா... அது எப்படி சாத்தியம்?"

"சாத்தியப்படுத்தறதுதானே ஏடு..."

"ஒண்டர்... சரி படிங்க பாக்கறேன்."

"கேளுங்க... படிக்கறேன்...

'கேளப்பா...

மேதினியில் உறுபசியில் விளிம்பியலே

போதணைய மாலையிலே

கேட்டை சார் மினின் தோற்றம்

தோற்றமதில் வந்துதித்த பாலன் ராசியதில்

இரண்டதனின் பேரைக் கொண்டான்...'

அதாவது இந்த உலகத்தில் ஐப்பசி மாசம் விளிம்பி வருஷத்துல ஒருமாலை நேரம் கேட்டை நட்சத்திரம் சஞ்சரிக்கும் போது பிறந்த உங்க பேர் ராசியில்



இரண்டாவது ராசியான ரிஷபத்தோட பேருங்கறார் முனிவர்."

ஜோதிடர் பாடிய பாட்டும் அதற்கான விளக்கமுமே ரிஷபனின் பொட்டில் அறைந்தது.

"இரண்டதன் பேர் கொண்ட உகந்த நல்பாலன் திரண்ட பெருஞ்செல்வத்தின் நேர்கொண்ட சீலன். அதாவது இரண்டாவது ராசியோட பேர் கொண்ட நீங்க திரண்ட சொத்துக்கும் ஒரே வாரிசுங்கறார்.

'சிவனும் நாளதில் விய வருடம் இருபான் நான்

காலனாம் எமனுடைய வாகன நிறத்தே

மேலணி அணிந்தே ஜோதிடர் மேவிடும் நேரமதும்

சீரிய சூரிய ஓரையின் மையத்திலாம்...'

அதாவது வியவருடம் இருபத்திநாலாம் தேதி இன்னிக்கு காலனாகிய எம வாகனமான எருமை நிறமான கறுப்பு நிறத்தில் உடை அணிஞ்சுகிட்டு ஜோதிடர் என்னை வந்து பார்த்துப் பேசும்போது சீரிய ஹோரை யோட நடு நேரமாகும். அதாவது காலைல எட்டரை மணின்னு சொல்றார் முனிவர்... நீங்களும் இப்ப கறுப்பு நிற உடைலதான் இருக்கீங்க..."

ஜோதிடர் சற்று இடைவெளிவிடவும், தனது ஆடையை ஒரு பார்வை பார்த்துக் கொண்ட ரிஷபன் கறுப்பு நிற பேண்ட்டைப் பார்த்துக் கொஞ்சம் அதிரவும் செய்தான். ஜோதிடர் பாடலைப் படிக்க மீண்டும் தயாராகவும் அதிர்ந்து போய்த் தடுத்தவன் அந்த ஏட்டைப் பிடுங்கிப் பார்த்தான். எறும்புகள் ஊர்வது போல எழுத்துக்கள்... சில வார்த்தைகள் தெரிந்து சில வார்த்தைகள் தெரியவில்லை. ஆனாலும் தெரிந்த வார்த்தைகள் அவர் படித்தவைதான்.

"என்னங்க... நான் ஏடு பார்த்துதான் படிக்கறேனா இல்ல சும்மா அடிச்சு விட்றேனான்னு சந்தேகமா இருக்கா."

"ஆமாம்... எப்படி இப்படி எல்லாம் ஒருத்தரால முன்கூட்டியே எழுத முடியும்... என்னால நம்ப முடியல.."

"இப்படி வியப்புல போட்டுப் புதைக்கறதுதானே நாடிஜோசியம்."

"அது எப்படி நான் இன்னிக்குக் கறுப்பு உடை உடுத்துவேன்கறது கூட முனிவருக்கு முந்தியே தெரியும்."

"அவங்க முக்காலமும் உணர்ந்தவங்க... அவ்வளவு தான் எனக்குத் தெரியும். தொடர்ந்து படிக்கறேன், கேளுங்க."

"இல்ல... வேண்டாம். நான் இப்ப உங்கள நம்பறேன். என்னை நம்ப வைக்க நீங்க நேரத்தைச் செலவழிக்காம விஷயத்துக்கு வாங்க... அப்பா உங்கள எதுக்குப் பார்க்கச் சொன்னார்?"

"அவருக்கு எதனால பெருநோய் வந்திருக்குன்னு முதல்ல தெரிஞ்சுக்குங்க."

"எதனால?"

"அவருடைய முன்னோர்கள்ள ஒருத்தர் அதாவது உங்க தாத்தாவுக்கு அப்பா உங்களுக்கு கொள்ளுத்தாத்தா வானவர் ஒரு சிவன் கோயில்ல திருடிட்டார். அதாவது சிவலிங்கத்தையே திருடி வித்துட்டார். அந்தப் பாவம்தான் இப்ப பெருவியாதியா வந்து விடிஞ்சிருக்கு..."

"என்ன சொல்றீங்க... என் கொள்ளுத் தாத்தா தப்புக்கு என் அப்பா எப்படி பொறுப்பாவார்?"

"என்ன செய்யறது அவரோட வாழ்நாள்ல அவர் ஜாதகப்படி அவர் அந்தப் பாவத்துக்குத் தண்டனை அனுபவிக்க விதி இல்லை."



"அப்ப இல்லன்னா அடுத்த ஜென்மத்துலயோ, இல்ல அவர் இறந்த பிறகு நரகம் போயோ அந்தப் பாவத்துக்குத் தண்டனை அனுபவிக்கறது தானே சரி."

"தம்பி... ஒரு விஷயம் நல்லா தெரிஞ்சுக்கங்க... மாதா பிதா பாவம் மக்களைச் சேரும்கறது நம்ம மதத்துக் கொள்கை. உங்கப்பா வேற உங்க கொள்ளுத்தாத்தா வேற கிடையாது. ஒரு மனுஷன் தன் வாழ்நாள்ல நல்லது கெட்டது இரண்டையும்தான் கலந்து செய்யறான். நல்ல தெல்லாம் தான் ஊனமில்லாம பெரிய இடத்துல நல்ல விதமா பிறக்கக் காரணம். அதுக்குள்ள நாம அனுபவிக் கிற வியாதி வெக்கையெல்லாம் பாவம் தர்ற பரிசுங்க."

"அதனால..."

"உங்கப்பாவோட பூர்வ ஜென்மம் எதுன்னு பார்த்தா உங்க கொள்ளுத் தாத்தாவோட ஜென்மத்தோட ஒத்துப் போகுது. இந்த ஜென்மம் அவர் எடுத்துருக்கறதே அந்தத் திருட்டுக்குத் தண்டனையை அனுபவிக்கத் தான்..."

"அவர் திருடன்னா, கோடீஸ்வரனா பெரும்புகழோட அவர் இதுநாள்வரை இருக்கக் காரணம்?"

"அதுக்கும் அவரோட நல்ல காரியங்கள்தான் காரணம். அடுத்து ஒரு பரதேசியோ, பிச்சைக்காரனோ பெருவியாதியில் கஷ்டப்படும்போது அது பெருசா தெரியாது. ஆனா, ஒரு பெரிய பணக்காரன் கஷ்டப்படும் போது அது பலரால பார்க்கப்படும். எவ்வளவு காசு பணம் இருந்து என்ன புண்ணியம், இப்படி ஒரு வியாதி வந்துருச்சேன்னு அப்பதானே ஊர் பேசும்."

"அப்ப பணக்காரனாக்கறதே வருத்தத்தை உருவாக்கத் தானா?"

"நிச்சயமா... வாழ்க்கைல பல கணக்குகள் வினோத மானவை. கூட்டிக் கழிச்சுப் பார்க்கும்போதுதானே எல்லாமே தெரிய வருது."

"நீங்க சொல்றதை எல்லாம் எப்படி எடுத்துக் கறதுன்னே தெரியல."

"தெரிஞ்சுட்டாதான் குழப்பமில்லாம தெளிவா ஒரு வழில போயிடலாமே."

"அப்ப இப்படி குழம்பறது கூட ஒரு பாவமா?"

"ஆமாம்... குழம்பறது, தவிக்கறது, நம்பாம பேசறது, ஒத்துக்க மறுக்கறது, எல்லாம் பொய்னு சொல்லி ஒதுக் கறதுன்னு எல்லாமேகூட பாவத்தோட சேர்ந்ததுதான்... ஏன்னா உண்மை துல்லியமா விளங்கிட்டா அடுத்து செய்த தப்புக்கும், பாவத்துக்கும் பரிகாரம் என்ன பண்ணலாம்னு தான் பார்ப்போம்."

"அப்ப அப்பா வியாதி குணமாகப் பரிகாரம் இருக்கா..."

"இருக்கறதாலதானே ஜோதிடத்துல நம்பிக்கை இல்லாத நிலையிலும் என்னைப் பார்க்க வந்திருக்கீங்க."

"அது என்ன பரிகாரம்- அப்பாகூட தனக்கு குணமாக வாய்ப்பு இருக்கறதா சொன்னார்."

"உண்மைதான்... உங்கப்பாவுக்கு மருந்து சித்த வைத்தியத்துலதான் இருக்கு. சித்த வைத்தியம்கறது மூலிகை வைத்தியமாகும். மூலிகைகள் காட்டுக்குள்ள இருக்கு. அதுலயும் பொதிகை மலைக் காட்டுக்குள்ளதான் அந்த மூலிகை இருக்கறதா உங்கப்பாவுக்கான ஏட்டுல குறிப்பு வந்திருக்கு."

"அப்ப அந்த மூலிகையைப் போய் நான் எடுத்துக் கிட்டு வந்துட்டுப் போறேன்."

"அவசரப்படறீங்களே... அந்த மூலிகை அவ்வளவு சுலபத்துல உங்களுக்குக் கிடைச்சுடாது. அது கிடைக்க நீங்க ஒரு சத்ய பிரமாணம் செய்யணும்."



"சத்ய பிரமாணமா... என்னன்னு...?

"நான் சொல்லிடுவேன்... ஆனா நீங்க நம்பி அந்தச் சத்தியத்தைச் செய்வீங்களா?"

"எல்லாமே நடக்கும்போது உங்களுக்கு ஏன் என் மேல இந்த சந்தேகம்?"

"அதுக்கும் காரணம் இருக்கு... நாளைல இருந்து ஒரு மண்டல காலம் உங்க வாழ்க்கை தலைகீழா மாறப் போகுது. மிகமிக கடுமையான சோதனைகளை நீங்க சந்திக்கப் போறீங்க..."

"இது என்ன புதுசா?"

"புதுசு இல்லை. எல்லாம் ஏற்கெனவே உள்ளதுதான்."

"சரி. நான் சோதனைகளைச் சந்திக்கறதுக்கும் சத்தியப் பிரமாணத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"அது எனக்குத் தெரியாது... ஒண்ணு மட்டும் தெரியும். உங்க வாழ்க்கை தலைகீழா மாறப்போகுதுங் கறதுதான்."

"ஏன் இப்படி இரண்டும் கெட்டானாவே பேசறீங்க. முதல்ல அது என்ன சத்திய பிரமாணம், அதச் சொல் லுங்க."

"சொல்லிடறேன். நீங்களும் சரி, உங்கப்பாவும் சரி. துளிகூட தங்கத்துமேல ஆசை வைக்கக்கூடாது. உங்க கைலயோ, கழுத்துலயோ இல்ல உங்க வீட்லயோ எங்கயும் குந்துமணி தங்கம் உங்ககிட்ட இருக்கக்கூடாது. தங்கத்தை இனி கையால கூடத் தொட மாட்டேன்னு நீங்க சத்தியம் செய்யணும்."

ஜோதிடர் சொல்லி நிறுத்த ரிஷபன் அவரை ஒரு ஆச்சரியப் பார்வை பார்த்தான்.

"என்ன தம்பி?"

"இல்ல... தங்கத்தை நாங்க ஐ மீன் நான் தொடாம போறதால யாருக்கு என்ன லாபம்? அதை நினைச்சேன்..."

"இந்தக் கேள்விக்குப் பதில் உங்களுக்கு நாளைல இருந்து நாற்பத்தெட்டு நாள்ள தெரிய வரலாம். யார் கண்டது."

"சரி... நான் சம்மதிக்கறேன். எந்தக் காலத்துலயும் நான் தங்கத்து மேல ஆசை வெச்சதில்ல. தங்கம் ஒரு உலகின் பொதுப்பணம். அதனால அப்பா கோல்ட் பிஸ்கட் வாங்கி வெச்சிருக்கலாம். இப்ப என்ன கெட்டுப் போச்சு. அதை வித்துட்டு பணமாக்கிட்டா போச்சு."

"பொறுங்க தம்பி... இன்னொரு முக்கிய விஷயம்"

"என்ன ?"

"உங்ககிட்ட இருக்கற தங்கத்தைப்போல பத்து மடங்கு தங்கம் வாங்கி மேலமடை சொர்ணலிங்க நாதர் கோயில் கோபுரத்துக்குத் தங்கக் கவசம் செய்து போடணும்."

"வாட் !"

"ஆமாம். லிங்கத் திருட்டுக்குச் சரியான பரிகாரம் இதுதான். நான் சொல்லலை. உங்கப்பாவுக்கான பரிகார காண்டத்துல இப்படி தான் சொல்லப்பட்டிருக்கு..."

"இது... இது ஆனாலும் டூ மச்... முதல்ல திருடினதே எங்களுக்குத் தெரியாது... சரி, ஏடு சொல்லுதுன்னு நம்பறோம். அதுக்குப் பரிகாரமா சாமிக்குத் தங்கக் கோபுரம்கறது ரொம்பவே டூ மச்..."

"சரி தம்பி... சொல்ல வேண்டியத சொல்லிட்டேன். நீங்க ஒரு நல்ல முடிவை எடுங்க... எடுத்துட்டு அப்புறமா வந்து என்னைப் பாருங்க."

"நான் எதுக்கு உங்களைப் பார்க்கணும்?"



"பொதிகை மலைக்காட்டுக்குப் போய் மூலிகை கொண்டு வர வேண்டாமா?"

"அதுக்கு நீங்க எதுக்கு... இப்பவே ஒரு சித்த வைத்தியரைக் கூட்டிகிட்டு, அந்தக் காடு எங்க இருக்குன்னு கேட்டு நானே போயிட்டு வந்துடறேன்."

"மலைக்காட்டுக்கு யார் வேணா போகலாம், வரலாம். மூலிகை வசப்படணும்னா அதுக்குச் சித்தர்கள் கருணை முக்கியம்."

"அது சரி.. உங்க தயவு எதுக்கு, அதைச் சொல்லுங்க."

"பரிகாரம் பண்ணி முடிச்சாதான் உங்களுக்கு நான் ஔஷத காண்டம் படிக்க முடியும். அதுக்கு முந்தி அதை நான் எடுக்கவோ, படிக்கவோ கூடாது. அந்த ஔஷத காண்டத்துலதான் மூலிகை எங்க இருக்கு, அது எப்படி கிடைக்கும்னு விபரம் இருக்கு..."

"இது என்ன புதுவித பிளாக்மெயிலாட்டம் தெரியுதே..."

"தம்பி.. ஒண்ணும் அவசரம் இல்லை. போய் நல்லா ஆழமா யோசியுங்க. நிதானமா ஒரு முடிவுக்கு வாங்க. அவ்வளவு ஏன், நான் சொன்ன அவ்வளவு விஷயத்தையும் கூட நீங்க தூக்கித் தூரப்போட்டுட்டு உங்கப்பாவைக் கூட்டிகிட்டு அமெரிக்காவுக்குக்கூட போங்க. யார் இப்ப வேண்டாம்னா.."

"ஒரு பக்கம் நாடி ஜோசியம் அது இதுன்னு சொல்ற நீங்களா இன்னொரு பக்கம் இதை நம்பாதேன்னும் சொல்றீங்க."

"நான் நம்பாதேன்னு எங்க சொன்னேன். தூக்கித் தூரப்போட்டுட்டு, முடிஞ்சா அமெரிக்கா போய் வைத்தியம் பாருங்கன்னு தானே சொன்னேன்?"

"முடிஞ்சா வா...?"

"ஆமா... எதுவும் முடியணுமே."

"அப்ப முடியாதுங்கறது உங்க பதிலா."

"அது எனக்குத் தெரியாது..."

ஜோதிடர் ஒரு சிறு புன்னகையுடன் சொன்ன விதமும் சரி, பார்த்த பார்வையும் சரி ஒரு தினுசாகத்தான் இருந்தது.

அதில் சரியான குறும்பு வேறு..

ஸ்னேகாவுக்கு அவர்கள் இருவர் இடையே நடந்த வாக்குவாதமும் அவள் இதுவரை கேட்டிராத ஒன்றாகவே இருந்தது. ரிஷபன் என்ன முடிவு செய்யப் போகிறான் என்று பார்த்தாள்.

அவனும் வாயைத் திறந்தான்.

"முதல்ல உங்கள நம்பினா என்னன்னு நினைச்சேன். ஆனா எப்ப நீங்க மனித சக்தியை குறிப்பா, எங்களோட சக்தியை சாதாரணமா நினைச்சு பேசிட்டீங்களோ அப்ப நான் விடறதா இல்லை. இப்ப சொல்றேன், கேட்டுக்குங்க. எங்கப்பாவை நான் அமெரிக்கா கூட்டிகிட்டுப் போறேன். எவ்வளவு செலவானாலும் சரி. குணப்படுத்திக் காட்றேன். பிறகு உங்களை வந்து பாக்கறேன்." என்று தொடை தட்டாத குறையாக சவால் விட்டான்.

"ஒண்ணு மட்டும் நிச்சயம். நாளைல இருந்து ஒரு மண்டல காலம் உங்க வாழ்க்கை தலைகீழா மாறப் போகுது. அப்ப நீங்க தங்கத்தைத் தொடாம இருந்துட்டாலே போதும். பரிகாரத்துல பாதிய செய்துட்ட மாதிரி தான்."

"போதும்.. என் வாழ்க்கை எப்படி மாறுதுன்னுதான் நான் பார்க்கறேன்."



ரிஷபன் பேசியது போதும் என்கிற மாதிரி வேகமாகக் கிளம்பினான். அரை மனதாக ஒரு கசகசப் போடு ஸ்னேகாவும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

அவனது கார் விலகவும் அந்த ஜோதிடர் அவனுக்கான ஏட்டின் கடைசி வரியைப் பார்த்தார்.

'மைந்தனும் மதியாமல் சினமேற்கொண்டு விலகியே செல்வானே!' என்றிருந்தது.

அதைப் படித்தவர் அதை எழுதிய முனிவராம் அகத்தியரை எண்ணியபடியே சிலிர்ப்போடு கைகளைக் கூப்பினார். கண்களிரண்டும் கலங்கிவிட்டிருந்தன!

அப்படியே ஏட்டுக்கட்டைக் கட்டித் திரும்ப உள்ளே வைத்துவிட்டு திரும்பி வந்தபோது அவருக்காக ஸ்னேகா காத்துக் கொண்டிருந்தது தான் ஆச்சரியம்!

## 4

'கேளப்பா...
கூட்டியும் கழித்தும் வகுத்தும்
பெருக்கியும்
நவத்தை நோக்கிட மாறாதது
என்றே அறிந்தாய்!
நவமே சிவம் என்பதால்
சிவத்தோடு கூடுவார்
சிவமாய் ஆகியே சீலம்
பெறுவார்...
கூடாதார் கதியினை இனியுரைப்பேன்...

– சிவ சித்தன்

ஜோதிடர் ஸ்னேகாவை வியப்புடன் பார்த்தார்.

"நீ இன்னும் போகலையாம்மா..." என்றும் கேட்டார். அவள் மறுப்புடன் தலையசைத்தாள். அப்படியே "உங்க கூட கொஞ்சம் பேசணும். உள்ளே போகலாமா?" என்று கேட்டாள். அவரும் ஆமோதித்தார். உள்ளே...

"சொல்லும்மா... என்ன விஷயம்?"

"நீங்க எங்க ஜேஎம்டி — அதாவது சின்ன முதலாளி கிட்ட பேசிக்கிட்டிருந்ததை எல்லாம் கேட்டேன். நான் அவர்கிட்ட வேலை பார்க்கற ஒரு உதவியாளர். ஆனா என்னையே அவர் கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்கு ஒரு குறிப்பை நீங்க சொன்னீங்க."

"நான் சொல்லலைம்மா... அதை எழுதின அகத்தியர் சொன்னதும்மா அது..."

"அது எப்படிங்க... அது எப்படி எப்பவோ வாழ்ந்த அகத்தியர் எங்களைப் பத்தி எல்லாம் இப்படி எழுதி வெச்சிருக்க முடியும்?"

"இது இங்க வர்ற எல்லாரும் கேக்கற ஒரு சாதாரண கேள்விம்மா. இதுக்கு நான் பதில் சொல்லிச் சொல்லி அலுத்தே போயிட்டேன்."

"எனக்காக ஒரு தடவை சொல்லக்கூடாதா?"

"அம்மாடி... மனுஷப் பிறப்புங்கறது நூத்துக்கு தொண்ணூறு பேருக்கு ஒரு தொடர்கதை. அதாவது எதுக்காக மனுஷர்களா பிறந்தோம்கறதையே நாம நமக்குள்ள கேட்டுக்கறதில்லை. பிறந்துட்டோம். அதனால ஆசாபாசங்களோட வாழ்வோம்கறதுதான் நம்ப நிலை. ஆனா உண்மையில மனுஷனா பிறக்கறதோட அர்த்தம் என்னன்னா பிறவிகள்ள அரிய பிறவியான மனுஷப்



பிறப்பெடுத்துட்டோம். இனி திரும்பப் பிறக்கக்கூடாது... இந்த உலகத்து ஆசாபாசங்கள்ள வந்து சிக்கிக்கக் கூடாதுன்னு முடிவு எடுக்கறதுக்காகத்தான் மனிதப் பிறப்பையே எடுக்கறோம்."

"நான் ஒண்ணு கேட்டா நீங்க ஒண்ணு சொல்றீங்களே."

"மேலோட்டமா பார்த்தா அப்படித்தான் தெரியும். ஆனா நான் சொன்னதுலதான் உனக்கான பதில் இருக்கு. எப்படின்னு சொல்றேன் கேட்டுக்கோ. மனிதப் பிறப்புங்கறது ஆசாபாசங்களால ஆனதுன்னு சொன்னேன் இல்லையா... இதைக் கொஞ்சம் மாத்தி வாழ்க்கை ஒரு விளையாட்டுன்னும் சொல்லலாம். இந்த விளையாட்டுல வெற்றி பெற்று விளையாட்டை விட்டே விலகிடணும். ஆனா வாழ்க்கைல மீண்டும் மீண்டும் விளையாடிகிட்டே இருக்கறதே நமக்கு வழக்கமா போச்சு."

"ஐயா எனக்குப் பொறுமை போயிடும்.. நான் உங்க கிட்ட வாழ்க்கைன்னா என்னன்னா கேட்டேன். என்னைப்பற்றியும், என்னோட முதலாளி பற்றியும் ஒரு ஏட்டுல அகத்தியர் ஏன் எழுதி வைக்கணும்? அவருக்கு எங்க வாழ்க்கை பற்றி என்ன தெரியும்?"

"நீ என்னம்மா ரொம்ப அலுத்துக்கறியே... சரி உனக்காக நான் சுருக்கமா சொல்லிடறேன். இந்த உலகத்துல யாரா இருந்தாலும் சரி... அது புழு பூச்சியா இருந்தாலும் சரி, பில்கேட்ஸ், பின்லேடனா இருந்தாலும் சரி... அவங்க அவ்வளவு பேருமே பஞ்சபூதங்களால ஆனவங்கதான். அதாவது ஒரு மரநாற்காலி மரத்தால ஆனது. ஒரு கார் இரும்பால ஆனது. ஒரு வீடு கல் மண்ணால ஆனதுன்னு சொல்ற மாதிரி... ஒரு மனிதன் நீர், நிலம், நெருப்பு, ஆகாயம், காத்துங்கற அஞ்சும் சேர்ந்து

உருவானவன். இந்த அஞ்சும் ஒண்ணா கலந்து கிடக்கிற ஒரு தொகுப்புக்குப் பேர் தான் நாம வாழற உலகம். இந்த உலகத்தை இந்த உலகத்தில் வாழற உயிரினங்களான நம்பளை எல்லாம் கிரகங்கள்தான் வழிநடத்துது.

எப்படி ஒரு டிரைவர் செலுத்தற திசைல காரானது போவுதோ அப்படி கிரகங்கள் செலுத்தற திசைல போறது தான் நம்ப வாழ்க்கை. அதாவது அஞ்சு பூதத்தால ஆன நம்மை எல்லாம் ஒன்பது கிரகங்கள் தான் வழி நடத்துது.

அஞ்சு பூதங்களோட அளவுலதான் நம்ம உயரம், நிறம், உருவம் தீர்மானமாகுது. ஒன்பது கிரகங்களோட பொறுப்புலதான் வாழ்க்கை தீர்மானமாகுது. இந்த ஒன்பது கிரகத்துலயும் எது எது எப்ப எப்ப நம்மை வழி நடத்தணும்னு ஒரு கணக்கு இருக்கு.

பள்ளிக்கூடத்துல பலவித பாடங்கள் நமக்குச் சொல்லித் தந்தாலும் முதல் வகுப்புல ஆங்கிலம், அடுத்ததுல தமிழ், அதற்கடுத்ததுல விஞ்ஞானம்னு ஒரு முறையை வெச்சுக்கிட்டிருக்கிற மாதிரி ஒருத்தர் பிறக்கற நேரத்துக்கு ஏற்ப அவரோட நட்சத்திர நாயகன் யார், கிரகாதிபதியார் னுல்லாம் முடிவு செய்யலாம். இது ஒரு கணக்கு. இந்தக் கணக்குல அகத்தியர் ஒரு மேதை. அதன்படி குறிப்பிட்ட நாள் குறிப்பிட்ட நேரத்துல பிறந்த ஒரு உயிரோட பயணம் எப்படி இருக்கும்னு அவர் ஒரு கணக்கு போட்டு அதை எழுத ஆரம்பிச்சார். அந்த உயிரை உதாரணமாக, ஒரு கந்தசாமி இல்லை ராமசாமின்னு வை. அந்த ராமசாமிக்குக் குழந்தைங்க பொறந்து, அவங்களுக்குக் குழந்தைங்க பொறந்து, அப்படி பொறந்த குழந்தைகளுக்கு, அப்படி பொறந்த குழந்தைகளுக்கு குழந்தை பொறந்துன்னு ஒரு சிறு விதை மரமாகி பல கிளை விடற மாதிரி அந்த மனிதர் வம்சாவளியில் யார் யாரெல்லாம் பிறப்பாங்க, அவங்க வாழ்க்கை எப்படி இருக்கும்னுல்லாம் அவர் எழுதினதுதான் நாடிகள்.



அப்படி வந்த நாடில ஒண்ணுதான் உங்க முதலாளி சிவஞானம்பிள்ளையோடதும், அவரது மகனான உங்க சின்ன முதலாளி ரிஷபனோடதும்..."

நாடி ஜோதிடர் சொல்லி முடிக்க ஸ்னேகா முகத்தில் பலத்த வியப்பு.

"அவர் எதுக்கு இப்படி வேண்டாத வேலை பார்க்கணும்?"

"இது வேண்டாத வேலைன்னு உனக்கு யார் சொன்னது, விஞ்ஞானிகள் எவ்வளவோ விஷயங்களக் கண்டுபிடிக்கறாங்க. அவங்க தங்களுக்காகவா அதைக் கண்டுபிடிச்சாங்க. காலத்துக்கும் மனித சமுதாயத்துக்கும் அதெல்லாம் பயன்படும்னுதானே?

அகத்தியரும் அப்படித்தான்... அவருக்குக் கணக்கு போடத் தெரியும். போட்டுப் பார்த்தார். அவர் போட்ட கணக்குல வந்த விடைகள்தான் உங்க பெரிய முதலாளி, சின்ன முதலாளி எல்லாம்..."

"அப்ப நீங்க அவருக்கு சொன்னது கொஞ்சமும் மாறாதா?"

"மீண்டும் மீண்டும் என்னையே சொல்றியே... அகத்தியர் சொன்னதுன்னு சொல். அகத்தியர் சொன்ன எதுவும் மாறாது. மாறவே மாறாது."

"அப்படின்னா..."

"உம் கேள்... அப்படின்னா நான் இங்க சொன்னபடி தானா எல்லாம் நடக்கும்னு கேள். தப்பே இல்ல."

"ஆமாம்."

"இப்பவும் சொல்றேன். எப்பவும் சொல்வேன். உன் சின்ன முதலாளி வாழ்க்கை நாளைல இருந்து தலைகீழா மாறப்போகுது. தங்கத்தை உயிர் உள்ளவரை தொடமாட்

டோம்னு சத்தியம் செய்யணும். அடுத்து தங்கத்தால சொர்ணலிங்கநாதர் கோயில் கோபுரத்தை உருவாக்கணும். இந்தப் பரிகாரத்தை அவர் செய்தா உன் பெரிய முதலாளிக்கு மூலிகை மருந்து கிடைச்சு அவர் குணமாவார்.. இல்ல.."

"இல்லன்னா ஆகாதுன்னு சொல்லப்போறீங்க. நான் ஒண்ணு கேக்கறேன். நல்லது, கெட்டதோ இப்படித்தான் இருக்கணும்னு கிரகங்கள் முடிவு செய்துட்டா அதை மாற்ற முடியாது, இல்லையா?"

"நிச்சயமா?"

"அப்ப அவர் இப்படித்தான் இருப்பார். இப்படித் தான் நடந்துக்குவார்னும் உங்களுக்கு முன்பே தெரிஞ்சி ருக்கணுமே..."

ஸ்னேகாவின் கேள்விக்குப் பதில் கூறாமல் சிரித்தார்.

"இந்தச் சிரிப்புக்கு என்ன அர்த்தம்?"

"நீ ரொம்ப அவசரப்படறே... நடக்கப் போறத வேடிக்கை பாரும்மா... அது போதும்..."

அவர் சொன்ன பதிலுக்குள் ஒரு அமானுஷ்ய மர்மம்!

# 5

'கேளப்பா...
சிவமே மங்களம்
மங்களமே சிவன்
ஈசமங்களனிவன்
நேசம் பெறும் வழி
பூசனைகள் மாத்திரமன்று...
புனிதச்சேவையும்



வாசி நலம் தரும்...
ஒன்றது அதில் வில்வம் காப்பதாம்!'

– சிவ சித்தன்

மறுநாள்!

அன்றைய அவனது ஒர்க் ஷெட்யூலைச் கையில் பிடித்தபடி நின்று கொண்டிருந்தாள் ஸ்னேகா!

தலையை அழகாய்ப் பின்னி ரிப்பன் கட்டி முடிந்தி ருந்தாள். வலக் காதோரமாய் ஒரு பட்டு ரோஜா வேறு.

ரிஸ்ட் வாட்ச்சைக் கட்டியபடியே வந்த ரிஷபன் ஒரு வினாடி அவளைப் பார்த்து சற்று கிறங்கித்தான் போனான். மெல்ல சுதாரித்தவன் ஒரு சின்ன சிரிப்பு சிரித்தான்.

"யு லுக் ஸோ நைஸ்..." என்றான்.

"தேங்க்யூ சார்... இன்னிக்கு உங்க புரொக்ராம் என்னன்னு சொல்லிடட்டுமா சார்..." டைரியைப் பிரித்த படியே அவனைப் பார்த்தாள்.

"வேண்டாம் ஸ்னேகா... இது ரொம்ப யூஷுவல். அப்பாவைப் பார்த்தியா அவர் எதாவது கேட்டாரா?"

"பார்த்தேன் சார்... ஆனா என்கிட்ட எதுவும் கேட்கல.."

"ஐசீ.. வெயிட் பண்ணு... நான் நேத்து நாடி ஜோசி யரைப் பார்த்த விஷயத்தைச் சொல்லிட்டு வந்துடறேன்" என்று லிஃப்ட் நோக்கி நடந்தான். அதன் குளிர் அறைக்குள் அடைந்து மேலேறினான்.

எதிர்ப்பட்ட அமலோற்பவமேரியை பார்த்தும் பாராமல் அவர் அருகே போய் அமர்ந்தான்.

அவரோ அவன் அமர்ந்ததைப் பார்த்துக் கூசிப்போய் கொஞ்சம்போல பயந்தார்.

"அப்பா.. நான் அந்த நாடி ஜோசியரைப் பார்த்தேன். பேசினேன். எனக்கென்னவோ அவர் சொன்ன மாதிரியெல்லாம் நடக்கும்னு தோணலை. சுருக்கமா சொல்லப் போனா என் மனசுக்குத் திருப்தியான ஒரு பதிலை அவர் சொல்லலை. பொதுவாவே இந்த ஜோசியக்காரங்க கொஞ்சம் நம்பற மாதிரி அப்புறம் நம்ப முடியாத மாதிரிதான் ஏதேதோ சொல்வாங்க. இவரும் அதுக்கு விதி விலக்கில்லை.

தங்கத்தை நம்ப பரம்பரையே வெறுக்கணும்னு அவர் சொல்றத எதை வெச்சு ஏத்துக்கறதுன்னு தெரியல.

அதேபோல நம் பரம்பரைல உங்க தாத்தா, அதாவது என் கொள்ளுத்தாத்தா செய்த தப்புதான் உங்களுக்கு இப்படி வியாதியா வந்துருக்குங்கற அவரோட அளப்பெல்லாம் கோட்டயத்துல இடி இடிச்சு கோடம்பாக்கத்துல மழை பெய்யற கதையாதான் இருக்கு. என்னால ஏத்துக்க முடியாது. அமெரிக்காவுல இருக்கற நான் எதையும் ஏன் எதுக்கு எப்படின்னு கேட்டே வளரத்தான் விரும்பறேன். அப்படிக் கேட்கற கேள்விகளுக்கு ஒரு தெளிவான பதில் கிடைச்சாதான் நான் அதன்படி நடப்பேன். இல்லேன்னா என்வரைல் புத்திதான் எல்லாம்..."

ரிஷபனின் பேச்சு சிவஞானம்பிள்ளையை ஒரு பெருமூச்சு விடச்செய்தது.

"அப்பா, டோன்ட் ஒர்ரி.. நான் உங்களை அமெரிக்கா கூட்டிக்கிட்டுப் போறேன். அங்க நம்ம எம்.ஜி.ஆருக்கு ட்ரீட்மென்ட் கொடுத்த புரூக்ளின் ஆஸ்பிட்டல்லயே உங்களை அட்மிட் பண்றேன். நீங்க கவலைப்படாம இருங்க. நான் இப்ப கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன்." என்று எழுந்து கொண்டான். அவர் ஏதோ சொல்ல வந்தார். ஆனால், வாயைத் திறப்பதற்குள் அந்த அறையை விட்டு வெளியேறிவிட்டான்.



திரும்பவும் லிஃப்டில் அடங்கி கீழே வந்தான். எதிரில் ஸ்னேகா!

"ஸ்னேகா... அப்பாவோட நான் ஸ்டேட்ஸ் போக எல்லா ஏற்பாடுகளையும் செய்யுங்க. புரூக்ளின்ல அப்பாவை அட்மிட் பண்ண அங்க அப்பாய்ன்ட்மென்ட் ஃபிக்ஸ் பண்ணுங்க. அவரோட கேஸ் ஃபைல இங்க கேட்டு வாங்கி இம்மிடியட்டா புரூக்ளின் ஹாஸ்பிட்டலுக்கு ஃபாக்ஸ் பண்ணிடுங்க. வித் இன் எ வீக் நான் அப்பாவோட ஸ்டேட்ஸ் கிளம்பணும். ஏர் டிக்கெட் பொசிஷனை செக் பண்ணி கன்ஃபர்ம் பண்ணிடுங்க" என்று மளமளவென்று ஒரு யந்திரம் போல் சொல்லி முடித்தான். ஸ்னேகா அவனைப் பதிலுக்குச் சற்று மிரட்சியோடு பார்த்தாள்.

"என்ன ஸ்னேகா.. ஏன் இப்படி பார்க்கறே?

"இல்ல சார்... நீங்க ரொம்ப ஃபாஸ்ட்டா எதையும் டிசைட் பண்றீங்க. அதான்."

"அஃப்கோர்ஸ்.. நான் இப்ப எடுத்துருக்கிற ஸ்டெப் சரிதானே?"

அவள் அதற்குப் பதில் கூற முடியாமல் ஒரு மாதிரி பார்த்தாள்.

"ஸே.. யெஸ் ஆர் நோ... ஆங்... நேத்தி என்னை அனுப்பிட்டு அந்த ஜோசியரைப் பார்த்தியே என்ன சொன்னார்.."

"....................."

"ஸ்னேக்.."

"சார்."

"உன்னைத்தான்.. நான் கேட்டது காதுல விழுந்ததா?"

"ஆங்... வாட் சார்?"

"அந்த ஜோசியர் உன்கிட்ட என்ன சொன்னார்? நீ அவர்கிட்ட என்ன சொன்ன?"

"அது வந்து.."

"என்ன, பரிகாரம் பண்ணாதான் உருப்படுவேன்னு சொன்னாரா?"

"கிட்டத்தட்ட அப்படித்தான்."

"அதையும் பார்ப்போம்... தெரிஞ்ச தப்புக்குதான் பரிகாரம். என் கொள்ளுத்தாத்தா என்ன செய்தார்னே தெரியாத நிலைல அவர் தப்புக்கு இப்ப பரிகாரம்னா.. அதுவும் சிவன் கோயில் கோபுரத்தைத் தங்கத்துல செய்து கொடுக்கறது. ஆனாலும் டூ மச் இல்ல..."

"அது.. அது.."

"என்ன அது.. நீ படிச்சவதானே? ஏன் மென்னு முழுங்கறே.. நான் தெரியாமத்தான் கேக்கறேன். கோபுரத்துக்கு எதுக்கு தங்கம். வேஸ்ட் இல்ல! இதுக்கு ஒரு நூறு ஏழைப் பெண்களுக்கு தாலி செய்து கொடுக்கச் சொல்லி இருக்கலாம். நான் கன்சிடர் பண்ணி இருப்பேன்."

ரிஷபனிடம் ஒரு தீவிரம் தெரிந்தது. அவளுக்குள் அவன் கருத்தை மறுதலித்துப் பேச முடியவில்லை. அதேசமயம் அதை ஏற்றுக் கொள்ளவும் தயக்கமாக இருந்து ஏதோ ஒன்று தடுத்தது.

அவனையே மலங்க மலங்கப் பார்த்தாள்.

"ஓ.கே.. இது பத்தி இனிமே பேசறது வேஸ்ட். என்னோட அடுத்த புரோக்ராம் என்ன?"

அவளும் டைரியைப் பிரித்துப் பார்த்தாள்.

"சார் இன்னிக்கு நம்ம ஆபீஸ் எக்ஸிக்யூடிவ்வோட காலைல பதினோரு மணிக்கு மீட்டிங்... மதியம் ஒரு



மணிக்கு யூனியன் மெம்பர்ஸ்களோட... அதுக்குப் பிறகு மூணு மணிக்கு பிசினஸ் பிளான் மீட்டிங். ஈவினிங் இம்பார்ட்டண்ட் ஃபைல்ஸ் உங்களுக்காக வெயிட்டிங். நம்ம பெரிய சார் நீங்க வந்து பார்த்து முடிவு எடுப்பீங்கன்னு அதுல குறிப்பு எழுதச் சொல்லிட்டார்."

ஸ்னேகா சொல்லிக் கொண்டே போனாள்.

"ஸ்னேகா.. இன்னிக்கு இந்த மீட்டிங்ஸ் அவ்வளவும் ரொம்ப முக்கியமா?"

"ஆமாம் சார்.. ஆடிட்டிங் பேப்பர்ஸ்ல உங்க சைன் முக்கியம். அப்பதான் ஃபைல் பண்ண முடியும்"

"ஓ... ஏண்டா இண்டியா வந்தோம்னு இருக்கு. எனக்கு ஒரு அண்ணனோ, இல்லை தம்பியோ இருந்திருந்தா எவ்வளவு நல்லா இருக்கும்?"

அவளும் அவன் கேள்வியை ரசித்தாள். அதன்பின் அவளது குறிப்புகளின்படி ரிஷபன் ஓட ஆரம்பித்தான். ஸ்னேகாவும் கூடவே ஓடினாள். மனதுக்குள் நாடி ஜோதிடர் சொன்னபடி இன்று முதல் நாற்பத்தைந்து நாட்களுக்கு வாழ்க்கையே தலைகீழா மாறப்போகிறது என்கிற அந்தப் பயமும் அவளுக்குள் சேர்ந்தே ஓடியபடி இருந்தது.

ஒரு வழியாக இரவு எட்டு மணிக்கு எல்லா ஃபைல்களையும் பார்த்து முடித்து அப்பாடா என்று நிமிர்ந்தான். சோம்பல் முறித்தான். பின் தன் பிரீஃப்கேஸை திறந்து அதிலிருந்து வோட்கா பாட்டில் ஒன்றை வெளியே எடுத்து மளமளவென்று குடித்தான். அவளுக்கு அது சற்று அதிர்ச்சியாக இருந்தது.

"சார் நீங்க குடிப்பீங்களா?" காற்றுக் குரலில் மெல்லிசாகக் கேட்டாள்.

"இது வோட்கா. ரஷ்யாவுல இது ரொம்ப ஃபேமஸ். இதைக் குடிச்சா கொஞ்சம் ஃப்ரெஷ்ஷா ஃபீல் பண்ணலாம். ஆல்கஹால் அளவு இதுல ரொம்ப குறைவு. வாயும் நாத்தமடிக்காது. இன்ஃபாக்ட் நீயும் காலைல இருந்து என் கூடவே இருக்கே. உனக்கும் டயர்டா இருக்கும். கொஞ்சம் குடியேன்.." என்று நீட்டினான்.

"நோ சார்... நோ.. நோ.." அவள் பதறினாள்.

"ஏய்... இது ஒண்ணும் தப்பு இல்லை."

"சாரி சார்... வேண்டாம். தயவு செய்து நீங்களும் இந்த சனியனை எல்லாம் குடிக்காதீங்க." என்றாள் சற்று எரிச்சலாக... அவன் உடனேயே பார்வையைச் சுருக்கிக் கொண்டு அவளை ஒரு தினுசாகப் பார்த்தான். அவளுக்கு தான் அவசரப்பட்டு விட்ட மாதிரி தோன்றியது.

"சாரி சார்... ஏதோ என் மனசுல பட்டதைச் சொன்னேன்" என்று மீண்டும் காற்றுக் குரலெடுத்தாள்.

"இட்ஸ் ஓ.கே.. நீ கிளம்பு. வீட்டுக்குப் போகணும்ல?"

அவன் சீட்டை விட்டு எழுந்திருந்தான். அவளும் தனது ஹேண்ட் பேக் மற்றும் லஞ்ச் பேக்கைத் தேடி எடுத்து வந்தாள். அவன் எதிரில் புறப்படத் தயாராகி விட்ட தோரணையைக் காட்டினாள்.

"உன் வீடு எங்க இருக்கு ஸ்னேக்?"

"பேட்டைல சார்..."

"ஐ.சி.. இப்ப எப்படி போவே?"

"ஆட்டோ பிடிச்சுப் போயிடுவேன் சார்."

"வேண்டாம். இந்த நேரத்துல நீ ஆட்டோவுல போறது எனக்கு சரியாப் படலை. நானே உன்னை உன் வீட்ல கொண்டு போய் விடறேன். அதான் சரி!"



"இல்ல சார்... உங்களுக்கு எதுக்கு சார் சிரமம்.."

"இதுல ஒரு சிரமமும் இல்லை. எனக்கும் கொஞ்சம் வெளிய வந்த மாதிரி இருக்கும்" என்று அவள் பதிலைப் பொருட்படுத்தாமல் ரிஷபன் முன்னால் நடந்தான். அவளும் அவனைப் பின் தொடர்ந்தாள். வெளியே அவன் வந்தால் பயன்படுத்தப்படும் படகு கார் ஒன்று ஏ.சி. குளிருடன் காத்திருந்தது. அதில் ஏறிக் கொண்டான். அவளும் முன்புறம் ஏறிக்கொண்டாள். கார் ஒரு குலுக்க லுடன் புறப்பட்டது.

"அமெரிக்காவுல லெஃப்ட் சைட்ல டிரைவிங் சீட். இங்க ரைட் சைட்ல... அங்க ஓட்டிட்டு இங்க ஓட்ட என்னவோ போல இருக்கு.." என்றபடியே காரை செலுத்தினான்.

"இந்த ரோடுங்கல்லாம் என்னிக்கு அமெரிக்க ரோடு மாதிரி மாறுமோ தெரியல" என்றும் முனங்கிக் கொண்டான்.

அவள் அவன் பேசுவதைக் கேட்டபடி மௌனமாக அமர்ந்திருந்தாள். தன்னை வீட்டில் விடுவதற்காக அவனே வருவது அவள் வரையில் ஒரு அசாத்திய நிகழ்வு... தன்னிச்சையாக அறிவுபூர்வமாக மட்டுமே அவன் ஒவ் வொரு விஷயத்தையும் பார்ப்பது அவளுக்கு வியப்பைக் கூட்டிக் கொண்டிருந்தது. ஒருவேளை எண்ணிப் பார்க்க இயலாத அளவு காசு பணம் இருந்துவிட்டால் எல்லா தெம்பும் தானாக வந்து விடுமோ என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள். பகலில் அவள் சூடிக் கொண்டி ருந்த அந்த ரோஜா உதிராமல் அப்படியே அவள் கூந்தலில் இருந்தது. அவன் அதையும் கவனித்தான்.

"ரோஜா வாடவே இல்லை.. நீயும் வாடாம அப்படியே இருக்கே..." என்றான். அந்த வார்த்தைகளைக்

கடந்து அவன் ஏதோ சொல்ல வந்து வேண்டாம் என்பது போல அடக்கிக் கொண்டான். அவளும் கவனித்தாள். கார் சீரான வேகத்தில் திருநெல்வேலியின் டவுன் பகுதிக்குள் போய்க் கொண்டே இருந்தது. அவள் வீட்டு வாசல் முன் அவளது வழிகாட்டலில் தேங்கி நின்றது. அவளும் காரை விட்டு இறங்கினாள்.

"ரொம்ப நன்றி சார்..." என்றாள்.

"இட்ஸ் ஓ.கே.." அவன் பதிலோடு கியர் மாற்றப் போனான்.

"சார் உள்ற வந்து ஒரு காப்பி சாப்ட்டு போங்க சார்" என்றாள்.

"அது இன்னொரு நாள்.." என்றவன் சட்டென ஞாபகம் வந்தவன் போல, "ஸ்னேகா... அந்த புரூக்ளின் ஹாஸ்பிடல் அப்பாய்ன்ட்மென்ட்டுக்கு ஏற்பாடு செய்துட்டதானே?" என்றான்.

"எவ்வரிதிங் ரெடி சார்... ஃப்ளைட் டிக்கெட்டுக்குச் சொல்லிட்டேன். மெடிக்கல் ரிப்போர்ட்டையும் மதியம் ஃபாக்ஸ் பண்ணிட்டேன்" என்ற ஸ்னேகா அந்த நாடிஜோதிடர் சொன்னதை நினைத்துக் கொண்டாள்.

'இன்றிலிருந்து வாழ்க்கையில் பெரிய மாற்றம் என்று அவர் சொன்னபடி எதுவும் நடக்கவில்லை. ஒருவேளை எல்லாமே ரிஷபன் நினைக்கிற மாதிரிதானோ?' என்று அவள் எண்ணும்போதே அவனது கார் கிளம்பிவிட்டது. வீட்டு வாசலில் நின்றபடியே தெரு முக்கில் கார் மறையும் அந்த நொடி அவள் எதிரே ஒரு வாலிபன்!

அவன் தோற்றமே வித்தியாசமாக பெண் பிள்ளை போல போனிடைல் ஹேர் ஸ்டைலில் இருந்தான். ஜீன்ஸ் பேண்ட்டும் டீ ஷர்ட்டும் அணிந்திருந்தான். உள்ளே நுழைந்தவள் முன், "ஹலோ மேடம்.." என்றான். அவளும்



அவனை ஆச்சரியமுடன் 'யார் நீங்கள்?' என்கிற மாதிரி பார்த்தாள். அப்பொழுதுதான் அந்தப் பார்க்கக்கூடாத காட்சியையும் பார்த்தாள். அவளது தாயும், தந்தையும் துப்பாக்கி முனையில் அமர்ந்து கொண்டிருக்க, அவளது வீட்டுக்குள் மேலும் இரண்டு வாலிபர்கள்!

"நீங்க..?"

"பதட்டப்படாதே... நாங்க யார் என்ன பண்ணப் போறோம்கறதெல்லாம் உனக்குப் போகப்போகத் தெரியும். சாயந்திரத்துல இருந்து உனக்காகக் காத்துக்கிட்டிருக்கோம்" என்ற அந்த போனிடைல் வாலிபன் சாதாரணமாக நடந்து சென்று அவள் வீட்டு வாசல் கதவைச் சாத்தித் தாழிட்டான். பின் திரும்பி வந்தான். அவன் முகத்தில் ஒரு குரூரமான சிரிப்பு.

"அப்பா.. அம்மா.. என்னம்மா இதெல்லாம்?"

"அட என்னம்மா நீ... எங்ககிட்டயும் எதையும் சொல்ல மாட்டேங்கறாங்க. நீயே கேளும்மா."

"என்னங்க இதெல்லாம்... யார் நீங்க? உங்களுக்கு என்ன வேணும்?"

"இப்போதைக்கு நாங்க சொல்றதை நீ கேட்டு நடந்தா அதுவே போதும். எடக்கு மடக்கா எதாவது செய்ய நினைச்சா இங்க இவங்க இரண்டு பேர் உயிரும் அந்த நிமிஷமே போயிடும். இதை ஒண்ணும் சாதாரண மிரட்டலா நினைச்சிடாதே. கொஞ்சம் அப்படி அந்த டி.வி.யை பார்."

அந்த போனிடைல் அவளுக்கே அவள் வீட்டு டி.வி.யைக் காட்டினான். அதில் புதிதாக டி.வி.டி. பிளேயர் இணைப்பும் அவள் பார்த்த நொடி ரிமோட் ஒன்றின் உதவியால் ஒரு காட்சியும் ஓட ஆரம்பித்தது.

அதில் அவள் பார்க்க, ஓர் இளைஞன்!

ஒரு தூணில் கட்டிப் போடப்பட்டிருக்கிறான்.

கேமரா அந்த இளைஞனின் முகத்துக்கருகே செல்கிறது. அப்போதுதான் தெரிகிறது. அந்த இளைஞன் திருநெல்வேலியின் பிரபலத் தொழிலதிபர் ஒருவரின் மகன். பலமுறை சிவஞானம்பிள்ளையைப் பார்க்க ஆபீஸ் வந்திருக்கிறான். அப்போதெல்லாம் அவனை ஸ்னேகாவும் பார்த்திருக்கிறாள்.

அவன் பேர்கூட ஆங் விஜயசங்கர்!

பின் ஒரு சமயம் அவன் கொலை செய்யப்பட்டு இறந்துவிட்டதைப் பத்திரிகை பார்த்து தெரிந்து கொண்டிருந்தாள். ஆனால் உண்மையில் அவன் நெற்றிப்பொட்டில் போனிடைல் இளைஞனின் துப்பாக்கிதான் அழுத்திக் கொண்டிருந்தது. அவன் கண்களிலும் ஒருவித மரண பீதி.

"வேண்டாம்.. வேண்டாம்.." அவன் பரிதவிக்கிறான். கை எடுத்து கும்பிடுகிறான்; தத்தளிக்கிறான். ஆனால் போனிடைல் அவனை லட்சியம் செய்யாமல் துப்பாக்கியின் ட்ரிக்கரை அழுத்தி தோட்டா அவனது நெற்றிப் பொட்டை துளைத்துக் கொண்டு செல்ல அவனும் சுருண்டு விழ..

ஸ்னேகா அந்த காட்சியைப் பார்த்து அப்படியே வாய் பிளந்தாள். ஸ்தம்பிப்புடன் அகன்ற விழித்திரையுடன் தன் எதிரிலேயே நிற்கும் அவனைப் பார்த்தாள்.

அவன் முகத்தில் குரூர சிரிப்பு ஆரம்பமானது.

உதட்டில் வார்த்தைகள்.

"மிஸ் ஸ்னேகா.. நாங்க கறுப்புப் பணத்தை மூட்டை மூட்டையா வெச்சிருக்கிற உன்னோட எம்.டி. மாதிரி



ஆட்களுக்கெல்லாம் எதிரான இளைஞர்கள். உடனே என்னைக் கம்யூனிஸ்ட்டுன்னோ, நக்ஸலைட்டுன்னே முடிவு செய்துடாதே. நாங்க அவங்களவிட ஒருபடி மேல..

இந்த நிமிஷம் உன்னோட ஜே.எம்.டி. மிஸ்டர் ரிஷபனை எங்க ஆட்கள் கிட்நாப் பண்ணி இருப்பாங்க. அவரை நாங்க உயிரோட விடணும்னா அஞ்சு கோடி ரூபா எங்களுக்கு வேணும். உங்க எம்.டி.யும் சமீபகாலமா வெளியவே வரதில்லைன்னு கேள்விப்பட்டோம். பாவம் அவர். அவருக்குத் தொழுநோய்னும் கேள்விப்பட்டோம். இதுதான் எங்களுக்கு ரைட்டைம். ஏன்னா அவர் இப்ப தன்னையே இழந்துட்டவர். அவர் எப்படி தன் ஒரே பையனையும் இழக்க சம்மதிப்பார்?"

போனிடைல் கொஞ்சம் இடைவெளிவிட்டு விட்டு ஒரு பான்பராக்கை உதிர்த்து வாயில் போட்டு அடக்கினான். ஸ்னேகா திறந்த இமைகளை அப்படி இப்படி அசைக்கவில்லை. அவன் மீண்டும் தொடர்ந்தான்.

"உங்க எம்.டி. வரைல அஞ்சு கோடிங்கறது ஜஸ்ட் லைக் தட். ஒரு மூணுமாச வருமானம். ஆனா எங்களுக்கோ அது பெரிய ஊக்கத்தொகை. எங்க இயக்கத்துல மட்டும் இந்த நிமிஷம் நூத்தி நாற்பத்தி ஏழு பேர் இருக்காங்க. அவங்களுக்கெல்லாம் மாசாமாசம் சம்பளம் தரணும். அப்புறம் இயக்கத்தை வலுப்படுத்த ஆயுதம் வாங்கறது அது இதுன்னு நிறைய செலவுங்க.. ஆகையால எந்த முணுமுணுப்பும் இல்லாம தொகை எங்க கைக்கு வரணும்.

பணம் ஒழுங்கா வந்தா உன் ஜே.எம்.டி. ரிஷபனும் திரும்பி உயிரோட வருவார். தப்பா போலீசுக்குத் தகவல் தந்தா இதோ இப்ப பார்த்தியே இந்த இளம் பணக்காரன் கதிதான் ஏற்படும்."

போனிடைல் பான்பராக் வாடையுடன் சொல்லி முடித்தான். ஸ்னேகாவின் அம்மாவும், அப்பாவும் அவனை வெறித்துக் கொண்டேயிருந்தனர்.

"ஏம்ப்பா... அந்தப் பணக்காரர்கிட்ட பணம் பிடுங்க எங்களை ஏம்ப்பா கஷ்டப்படுத்தறே... என் பொண்ணுக்கும் இதுக்கும் என்னப்பா சம்பந்தம்?" என்று திக்கித் திணறி கேட்டுவிட்டாள் ஸ்னேகாவின் அம்மா.

போனிடைல் பான்பராக்கை மென்றபடியே அவள் அருகே சென்றான். மீண்டும் ஒரு பான்பராக் பொட்டலத்தை எடுத்தவன், அப்படியே பல்லால் கிழித்து வாயில் கொட்டிக் கொண்டான். பிறகு ஒரு மாதிரி எச்சில் நொதிக்க வாயை வைத்துக் கொண்டவன், "உம் பொண்ணுதான் அவ முதலாளிகிட்ட இருந்து பணத்தை வாங்கிட்டு வந்து கொடுக்கப்போறவ. ஏன்னா அவ முதலாளி நடமாடற நிலைலதான் இல்லையே. அடுத்து.. இவளாலதான் நாங்க எப்படிங்கறத எடுத்துச் சொல்ல முடியும். இதோ இந்த சி.டி.யை கூட எடுத்துக்கிட்டுப் போய் அந்தப் பெரிய மனுஷனுக்குப் போட்டுக் காட்டட்டும். அப்படியே யாருக்கும் தெரியாம காதும் காதும் வெச்ச மாதிரி காரியத்தை முடிக்க உன் பொண்ணு மாதிரி நபர்களால தான் முடியும். இப்ப புரிஞ்சிச்சா?"

அவன் கேட்க, அந்த நொடியில் அவன் செல் போனில் சிணுங்கல். காதில் இடம் கொடுத்தவன் முகம் மலர்ந்தான்.

"பிரதாப்.. ரிஷபனை மடக்கிட்டோம்! அவன் கார்ல அவனையே டிரைவ் பண்ண வெச்சு இப்ப நம்ம தங்கக் காட்டுக்கு அவனைக் கூட்டிக்கிட்டுப் போயிகிட்டு இருக்கோம். நீ அந்தக் குட்டியை அமுக்கிட்டியா?"

"அமுக்கிட்டியாவா... அவ இப்ப என் எதிர்லதான் இருக்கா."



"என்ன.. சி.டி. பார்த்துட்டு வாயைப் பொளந்துட்டாளா?"

"பின்ன... அந்த ரிஷபனை காரை ஓரம் காட்டி நிறுத்தச் சொல்லிட்டு கொஞ்சம் பேசச் சொல்."

"இதோ இப்பவே.." மறுமுனையில் இருப்பவன், "காரை நிறுத்து.." என்று சொல்வதும் அதைத் தொடர்ந்து கார் நிற்கும் சப்தமும் கேட்டது.

"இந்தா பேசு.. அந்த சைட்ல உன் பி.ஏ. ஸ்னேகா இருக்கா. அவ குடும்பமே இப்ப எங்க கைல. ஆகையால அவளுக்கு நாங்க சொல்றத கேட்டாக வேண்டிய கட்டாயம்.. நீயும் நாங்க கேட்ட அஞ்சு கோடி பத்தி உன் வாயாலயே சொல்லிடு" என்று சொன்னபடியே ரிஷபனிடம் செல்போனைத் தருவதை லவுட் வாய்சில் இந்த பக்கத்தில் இருக்கும் போனிடைல்காரன் ஸ்னேகா கேட்கும்படி பட்டனைத் தட்டிவிட்டிருந்தான். அதுவும் துல்லியமாக அவள் காதில் கேட்டது. தொடர்ந்து ரிஷபனின் குரல்.

"ஸ்னேக்.."

"சார்ர்ர்.."

"என்னக் கிட்நாப் பண்ணிட்டாங்க. உன்னை ட்ராப் பண்ணிட்டுத் திரும்பிகிட்டிருந்தேன். லிஃப்ட் கேட்டு நாலுபேர் நடுரோட்ல நின்னு தடுத்தாங்க. வேற வழியில்லாம காரை நிறுத்தினேன். அடுத்த நிமிஷம் கார்ல தாவி ஏறிட்டாங்க. இப்ப அஞ்சு கோடி கொடுத்தா விடுவோம்கறாங்க.."

"ஆமாம் சார்.. இங்க என் அப்பா, அம்மாகூட அவங்க கைதி. நீங்க தயவு செய்து எதிர்த்து எதுவும் செய்திடாதீங்க சார். நான் நம்ம பெரிய சார் கிட்ட

பேசி எப்படியாவது அஞ்சுகோடியோட வந்து உங்களை மீட்கறேன்.."

"பைத்தியக்காரி... அப்படி எல்லாம் எதுவும் செய்துடாதே. இவங்க என்ன செய்யறாங்கன்னு நானும் பாக்கறேன்."

"ஐயோ சார். உங்களைப் போலதான் பேசினார் உதயசங்கர்ங்கற ஜே.எம்.டி. இப்ப அவர் உயிரோட இல்லை.

அவரைக் கொல்ற காட்சியை இப்பதான் சி.டி.ல பார்த்தேன். தயவு செய்து நீங்க அவசரப்பட்டுப் பேசிடாதீங்க. பணம் போனா போயிட்டுப் போகுது.. நீங்க நல்லபடி வந்தா அதுவே போதும் சார்.."

"நோ ஸ்னேகா.. இதெல்லாம் பயங்கர கேடுகெட்டதனம். இதை என்கரேஜ் பண்ணவே..." அதற்குமேல் ரிஷபன் குரல் கேட்கவில்லை. பதிலுக்கு அவன் கன்னத்தில் மாறி மாறி அறை விழும் சப்தம் கேட்டது.

ஸ்னேகா அப்படியே கன்னத்தில் கைகளைப் பதித்துக் கொண்டு, குளிரில் நடுங்கிடும் பறவை போல பிரதாப் என்கிற போனிடைல்காரனைப் பார்த்தாள்.

அவன் துப்பாக்கி முனையை தன் மூக்குத் துவாரத்தில் அழுத்தி வைத்துக்கொண்டு பழித்துக் காட்டுவதைப் போல அவளைப் பார்த்தபடி இருந்தான். அவளுக்குள் ஜோதிடர் சொன்னபடியே நடக்க ஆரம்பித்துவிட்டது என்கிற ஆச்சரிய அதிர்வும் உருவாகி இருந்தது!

# 6

'கேளப்பா...
வில்வம் நடுவது பெரும்
பேறாகும்... அதனில்
தொழுவப் பசுவைப் பேணுவது
நறுங்கூறாகும்
வழுவும் சிவனடித்
தொண்டருக்குணவிடல்
அழியாச் செல்வத்தை
அள்ளித்தந்திடும்!'

**– சிவ சித்தன்**



ரிஷபனின் கார் அந்த மலையடிவாரத்தில் தேங்கி நின்றது. அது நிறுத்தப்பட்ட இடத்திற்குப் பக்கத்தில் ஒரு பெரிய புளியமரம்! அந்த புளியமரத்தை முழுவதுமாகப் பார்க்கக்கூட ரிஷபனுக்கு அவர்கள் அனுமதி தரவில்லை. மளுக்கென்று அவன் கண்களைக் கறுப்புத்துணியால் கட்டி மூடினார்கள். அப்படியே கையிரண்டையும் பின்னால் வளைத்து இறுக்கிக் கட்டினார்கள்.

"உம் நட..." என்றனர். ரிஷபனும் வேறு வழியின்றி நடக்க ஆரம்பித்தான். அவனைச் சுற்றி திபுதிபுவென்று நான்கு பேர். அதில் ஒருவன் செல்போனில் யாருக்கோ தகவல் கொடுத்துக் கொண்டிருந்தான்.

"நாங்க இப்ப தங்கக்காட்டுக்கு வந்துட்டோம். உள்ள நுழைஞ்சிக்கிட்டிருக்கோம். எப்படியும் நாளைக்கு காலைல வட்டப்பாறைக்குப் போய்ச் சேர்ந்துடுவோம். நடுவுல டவர் இல்லாததால செல் ஒர்க் பண்ணாது. வட்டப் பாறை போன உடனே நான் கூப்பிடறேன்."

அவன் பேசி முடித்து செல்லை மார்பு பாக்கெட்டில் போட்டான்.

அவன் பேசியதில் இருந்து ஒரு காட்டுப்பக்கம் வந்து விட்டதை ரிஷபனால் அனுமானிக்க முடிந்தது. எதனால் அந்தக் காட்டைத் தங்கக்காடு என்கிறார்கள் என்பதுதான் தெரியவில்லை.

மௌனமாக நடந்தபடி இருந்தான். காலுக்கு ஷூ அணிந்திருந்தான். அதையும் மீறி கரடுமுரடான மலைப் பாதையில் அவன் நடப்பதை அவனால் உணர முடிந்தது. சில செடிகளின் கிளைகள் முட்டியில் உரசுவதைச் கூச்சத் தால் அறிந்து கொண்டான். பல இடங்களில் காலடியில் பாறைத்திண்டுகள் தட்டுப்படவும் அவற்றில் தடுக்கி விழும் ஒரு அபாயமும் அவ்வப்போது ஏற்பட்டது.

"எதுக்கு இப்படி கண்ண கட்டிக் கூட்டிக்கிட்டுப் போறீங்க? அவிழ்த்து விடுங்க. கொஞ்சம் தடுக்கி விழா மலாவது நடந்து வர்றேன்.." என்று பேசிப் பார்த்தான். ஆனால் அவர்கள் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. கண் கட்டை அவிழ்த்து விட்டுக் கொள்ள வழியும் இல்லாதபடி கை கட்டப்பட்டிருந்தது.

"ஆமா.. இப்படியே எவ்வளவு தூரம் நடக்கணும்?"

"சுமார் ஒரு பதினைஞ்சு மைல்.."

"பதினைஞ்சு மைலா.."

"ஆமாம்.. தங்கக்காட்டோட நடுப்பகுதிக்குப் போக பதினைஞ்சு மைல் நடக்கணும். பேசாம நட.."

"அவ்வளவு தூரம் என்னால நடக்க முடியாது."

"நடந்தாகணும். முடியாதுன்னா கால்லயே சுடுவோம். நீ ஒண்ணும் இப்ப சொகுசான முதலாளி இல்ல.. எங்களோட பிணைக்கைதி."

"இப்படி எல்லாம் செய்ய உங்களுக்கு வெட்கமா இல்லை?"

"சொற்ப கூலி கொடுத்து கோடிக்கணக்குல லாபம் சம்பாதிக்க உனக்கு வெட்கமாயில்லை."

"தொழில்ங்கறதே லாபம் சம்பாதிக்கத்தான்.. அப்பதான் எல்லாரும் நல்லா இருக்க முடியும்."



"எங்க எல்லாரும் நல்லா இருக்காங்க... உங்ககிட்ட வேலை பாக்கற எவ்வளவு பேர் லட்சக்கணக்குல கடன் காரங்களா இருக்காங்க தெரியுமா?"

"அவங்க ஊதாரித்தனமா செலவழிச்சு பொறுப்பில் லாம வாழ்ந்தா அதுக்கு நாங்க எப்படி பொறுப்பாக முடியும்?"

"இதோ பார் இதுக்கு மேல நீ ஒரு வார்த்தை பேசக் கூடாது. மீறிப் பேசினா உன் வாயைத் தெச்சிடுவோம்."

"மிரட்டாதீங்க.. இதுக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன்."

அவன் அப்படிச் சொல்லும்போதே அவன் பின் தோள் மேல் திம்மென்று ஒரு குத்து விழுந்தது. அப்படி விழுந்த வேகத்தில் தடுமாறி கீழே விழுந்தவன் தலைகீழே உள்ள ஒரு பாறை மேல் மோதியதில் நச்சென்று ஒரு சிதைவு. தலைப்பாகத்தில் சிவப்பாக சதைப்பகுதி நைந்து போய் ஒரு ஊறுகாய்த்துண்டு ஒன்று ஒட்டிக் கொண்டது போலத் தெரிந்தது. ஒருவன் அவனை அப்படியே எழுப்பி நிறுத்தினான். அதற்குள் ரத்தம் பெருகி வழிந்து மூக்கு, உதடு, தாடை, கழுத்து என்று பாம்புக் கணக்காய் ஓடியது.

"டேய்.. டேய்.. பேசினா பேசிட்டுப் போறான். அடிக்காதீங்கடா.. காயத்துக்குப் கட்டுப் போட கைல ஃபர்ஸ்ட் எய்ட் பாக்சும் இல்லை.." என்று ஒருவன் பேசுவது ரிஷபனுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது.

"இவ்வளவுக்குப் பிறகும் சினிமா ஹீரோ மாதிரி வீரவசனம் பேசினா எப்படி? இவன மாதிரி ஆள நாலு தட்டு தட்டினா தான் வழிக்கு வருவான். இல்லாட்டி எதையாவது பேசிக்கிட்டே வருவான்."

"அது சரி.. தப்பித் தவறி மண்டை உடைஞ்சு உசுர் போச்சுன்னா இவ்வளவு தூரம் நாம கஷ்டப்பட்டதும்

வீணாயிடும். இவன் மதிப்பு இப்ப அஞ்சு கோடி.. தெரிஞ்சுக்குங்க."

அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டே ரிஷபன் நெற்றியில் ஒரு கர்ச்சீப்பால் கட்டுப்போட்டனர். அப்படியும் ரத்தம் பெருகிக் கொண்டுதான் இருந்தது.

"என்னடா இது... ரத்தம் நிக்கலையே" என்று வருந்தியபோது அவர்கள் எதிரில் ஒரு மலைச்சாதி பளியன் தோளில் ஒரு மலை ஆட்டுடன் வந்து கொண்டிருந்தான். அது ஒரு கேளை ஆடு. அதை அடிவாரத்திற்கு அருகில் உள்ள கிராமத்திற்குச் சென்று விற்றால் பணம் கிடைக்கும். அதற்கு அரிசி, பருப்பு வாங்கிக்கொண்டு திரும்பவும் மலை ஏறுவது அவன் வழக்கம். அவனைப் பார்க்கவும் அவர்களில் ஒருவன், "டேய் இங்க வாடா.." என்று அழைத்து ஆட்டை அப்படியே கீழே விடச் சொன்னான்.

"சாமி.. கஷ்டப்பட்டுப் பதுங்கி இருந்து பிடிச்சதுங்க."

"எல்லாம் தெரியும். ஆட்டை விட்டுட்டு, தா.. இந்தத் தலைல அடிபட்டு ரத்தம் வருது பார்.. இவனை அப்படியே கழுத்து மேல உட்கார வெச்சுத் தூக்கிட்டு வா. இருநூறு ரூவா தரேன்."

"இருநூறு ரூவாயா சாமி.. நிஜமாவா?"

"இந்தா இப்பவே பிடி.. வேகமா தூக்கிட்டு நட பார்ப்போம். விடியறதுக்குள்ள வட்டப்பாறைக்குப் போயிடணும்."

"நான் ஒரே ஓட்டமா ஓடிடுவேனுங்க. நீங்கதான் நடந்து வர சிரமப்படணும்.." என்ற அந்த பளியன் சரேலென்று ரிஷபனின் இரு கால்களுக்குள் தலையை விட்டு கழுத்தைத் தூக்கினான். ரிஷபனுக்கோ அந்த அனுபவம் புதிது. "ஏய்.. ஏய்.." தடுமாறி இருவரும் ஒன்று சேர்ந்து பொத்தென்று கீழே விழுந்தனர். விழுந்த



வேகத்தில் ரிஷபனின் தலையில் அடிபட்டதில் அவனுக்கு மயக்கமே வந்துவிட்டது. "போச்சுடா.. தூக்கச் சொன்னா கீழபோட்டு ஆள மயக்கமடையவே வெச்சுட்டியேடா. என்ன ஆளுடா நீ" என்று அவர்கள் கைகளைப் பிசைந்து கொள்ள அந்தக் காட்சிகளை வெகுதூரத்தில் உள்ள ஒரு மரக்கிளையில் இலை தழைகளுக்கு நடுவில் அமர்ந்த நிலையில் ஒரு தாடியும் மீசையுமான மனிதர் பார்த்துக் கொண்டே இருந்ததுதான் ஆச்சரியம்!

# 7

**'கேளப்பா...**
**மங்களச் சிவனின் மலரடி சேர்ந்திட**
**திங்களின் ஒளிபோல வழியினைக்**
**காட்டுவேன்**
**தங்கத்தில் மலர் செய்து தாள்**
**தொழுவார்க்கு**
**அங்கத்தில் உள்ள கறை**
**அகன்றிடுமாமே..'**

**– சிவ சித்தன்**

சிவஞானம் பிள்ளை இருக்கும் அறை முன் முகத்தில் துளிகூட சுரத்தே இல்லாமல் நின்று கொண்டிருந்தாள் ஸ்னேகா. அமலோற்பவமேரி அவளை ஒரு மாதிரி பார்த்துக் கொண்டே வந்து நின்றாள்.

"மேடம் எம்.டி.யைப் பார்க்கணும்."

"அவர் யாரையும் உள்ள விடக்கூடாதுன்னு சொல்லியிருக்காரேம்மா."

"இல்ல மேடம். ரொம்ப முக்கியமான விஷயம். நான் எம்.டியைப் பார்த்தே தீரணும்."

"இரு, கேட்டுச் சொல்றேன்." அமலோற்பவமேரி திரும்பி உள்ளே சென்றுவிட்டு திரும்பவும் வந்தாள். வந்தவள், "சாரிம்மா.. என்னன்னு என்னையே கேட்கச் சொல்லிட்டார்" என்றாள்.

"இல்ல மேடம்.. நான் எம்.டி.கிட்டதான் பேசணும். ரொம்ப பர்சனல். ரொம்ப அவசரம்."

"அப்ப ஜேஎம்.டி.. கிட்ட சொல்லும்மா. அவர் வந்து பேசட்டும்."

"விஷயமே ஜே.எம்.டி. பத்திதான்."

"வாட்..?"

"நகருங்க.. இனி எனக்கு பொறுமை இல்ல. நான் நேர்ல எம்.டி.கிட்ட எல்லாத்தையும் சொல்லிக்கிறேன்."

ஸ்னேகா அமலோற்பவமேரியைத் தள்ளிவிட்டபடி உள்ளே சென்றாள். அவள் கைகளில் அந்த சி.டி.. அமலோற்பவமேரி அவளைப் பின் தொடர்ந்தாள். அதைத் தடுக்கும் விதமாக எம்.டி.யின் அறைக்கதவைப் பளாரென்று தாளிட்டவள், சப்தம் கேட்டுத் திரும்பிய எம்.டி.யை நேருக்கு நேர் பார்த்தாள்.

"யாரது?"

"நான்தான் சார் ஸ்னேகா."

"ஸ்னேகா.. என்ன இது சப்தம்? எனிதிங் ராங்?"

"அஃப்கோர்ஸ்.. இப்ப எல்லாமே ராங்காப் போயிடிச்சு சார்."

"என்னம்மா சொல்றே.. எங்க ரிஷபன்?"

"சார்... அந்த நாடி ஜோதிடர் சொன்னபடி எல்லாம் நடக்க ஆரம்பிச்சிடிச்சு சார். நம்ப சின்னவர் அதை நம்பத் தயாரா இல்லை. ஆனா இப்ப அவர் என்ன சொன்னாரோ அதுதான் நடந்துகிட்டிருக்கு."



"புரியற மாதிரி சொல்.. எனிதிங் சீரியஸ்?"

"இட் ஈஸ் வெரி சீரியஸ். நான் சில விஷயங்களைச் சொல்றதுக்கு முந்தி ப்ளீஸ் சார்.. நீங்க கொஞ்சம் இந்த சி.டி.யைப் பார்த்திடுங்க."

"சி.டி.யா.. என்னம்மா.. இதுல என்ன இருக்கு?"

"ப்ளீஸ் சார்.. இதைப் பார்த்தாதான் உங்களுக்குப் பிரச்சினையோட ஆழம் தெரியவரும்."

ஸ்னேகா பேச்சோடு பேச்சாக அந்த அறையில் உள்ள டி.வி.யை நெருங்கி அதில் இயக்கத்தை உருவாக்கத் தொடங்கினாள்.

டி.வி.யும் மின்சார உயிர் பெற்று ஓட ஆரம்பித்தது. ஐந்து நிமிடம் வரை பிரதாப் என்கிற அந்தக் கொடூரமானவன் இளம் தொழிலதிபரான விஜயசங்கர் என்பவனைச் சுட்டுக் கொல்வது வரை ஓடியது. சிவ ஞானம் பிள்ளைக்கு விஜயசங்கரை நன்றாகத் தெரியும். அப்படியே விக்கித்துப் போய் வாய் பிளந்து விட்டார்.

"சார்.. இந்த விஜயசங்கரை உங்களுக்கு நல்லாத் தெரியும். இவர் சாவு ஒரு கொலையா தற்கொலையாங்கற ஒரு குழப்பம் இருந்தது. ஆனா இப்ப உங்களுக்கு க்ளியராகி இருக்கும் கொலைதான்னு.."

"ஆமாம்.. இதை எதுக்கு இப்ப எனக்குப் போட்டுக் காட்டறே ஸ்னேகா?"

"ஐ அம் வெரிசாரி சார்.. நான் போட்டுக்காட்டலை. உங்களுக்குப் போட்டுக் காட்டும்படி உத்தரவு."

"உத்தரவா.. என்னம்மா பேசறே நீ.."

"சார்.. இந்த விஜயசங்கர் இடத்துலதான் இப்ப நம்ம சின்னவர் சிக்கியிருக்கார். அவரைச் சுட்டுக் கொலை செய்தவங்க பிளாக் மெயில் பண்ற ஏதோ ஒரு இயக்கத்

ஜைச் சேர்ந்தவங்க. அவங்களுக்கு இருபத்திநாலு மணி நேரத்துல நாம அஞ்சு கோடி கொடுக்கணும். இல்லேன்னா நம்ம சின்னவர் உயிரும் இதே மாதிரி போயிடும்."

ஸ்னேகா திக்கித்திணறி சொல்லி முடித்துவிட்டாள். ஆனால் சிவஞானம் பிள்ளையிடம்தான் துளிகூட சுரத்தே இல்லை. மளுக்கென்று கண்களில் கண்ணீர் திரண்டு வர அப்படியே படுக்கையில் ஒரு பக்கமாக சரிந்தார்.

"சார்.. இந்த விஷயத்துல போலீஸ் அது இதுன்னு போனா பிரச்சினைதான் சார் ஜாஸ்தியாகும். தயவு செய்து அந்த மாதிரி முயற்சி எதுவும் செய்யாம, பணத்தைக் கொடுத்து சாரை மீட்கப் பார்ப்போம், சார்."

"......................"

"நீங்க சொல்ற சம்மதத்துலதான் என் அப்பா அம்மா உயிரே இருக்கு சார்."

"வாட்."

"ஆமாம் சார்.. அவங்கள்ள சிலர் என் வீட்ல இப்ப என் அப்பா அம்மாவைப் பிணைக் கைதியா பிடிச்சு கட்டி வெச்சுருக்காங்க.. நான் உங்களுக்கும் அவங்களுக்கும் நடுவுல ஒரு நல்ல மீடியேட்டரா நடந்துக்கலேன்னா என் அப்பா அம்மா உயிரும் போயிடும் சார்."

"மை காட்.. வயசான காலத்துல எனக்கு ஏன் இப்படி ஒரு சோதனை.. இதுக்கா நான் ரிஷபனை யு.எஸ்.ல இருந்து வரச்சொன்னேன். ஓ!"

சிவஞானம்பிள்ளை படுத்தபடியே குமுறினார்.

"சார்.. இப்ப அழறதால ஒரு பிரயோஜனமும் இல்ல. ரொம்ப வேகமாகவும், விவேகமாகவும் நடந்துக்க வேண்டிய நேரம் சார் இது."



"ஐ நோ.. ஐ நோ.. ஆனா அட் எ ஸ்ட்ரெச் அஞ்சு கோடிக்கு எங்கம்மா போக..?"

"நான் அக்கவுண்ட்ஸ் மேனேஜர்கிட்ட பேசட்டுமா?"

"இம்மீடியட்டா லைன் போட்டுக் கொடு.."

ஸ்னேகா அவருக்கு அருகில் இருந்த தொலைபேசியை வேகமாக நெருங்கி எண்களைச் சுழற்றத் தொடங்கினாள்.

அறையின் சாத்தப்பட்ட கதவுக்குப் பின்னாலோ அமலோற்பவமேரி கதவில் காதைப் பதிய வைத்து அவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் கண்களில் அதன் எதிரொலி!

விடிந்துவிட்டது!

ரிஷபனின் முகத்தின்மேல் சுள்ளென்று சூரியனின் கதிர்கள்! சூடு தாளாமல் கண்களைக் கசக்கிக் கொண்டு கண் திறந்து பார்த்தவனுக்கு எங்கே இருக்கிறோம் என்றே தெரியவில்லை. நெற்றிப் பாகத்தில் லேசான வலி, தொட்டுப் பார்க்க சூனைந்தான். தலையில் அடிபட்ட இடத்தில் கட்டு போர்டப்பட்டிருந்தது. ஒருவித மூலிகை வாசனை மூக்கை நிரடியது.

அப்படியே எழுந்து அமர்ந்தான்.

அவனது கால் அருகில் ஒரு சிறு பாறைமேல் குத்துக்காலிட்டு அமர்ந்திருந்தான் — முதல் நாள் இரவில் அவனை சுமந்து வந்திருந்த மலைப்பளியன்.

முதல் பார்வை அவன்மேலதான்... அடுத்தடுத்து பார்வையைச் சுழலவிடவும், சுற்றிலும் மலைக் கரடுகளும் அடர்வான மரங்களும் இருக்க அதன்மேல் எல்லாம் துப்பாக்கியுடன் சிலர் அமர்ந்திருந்தனர்.

சலசலவென்று நீரோடை ஒன்று ஓடும் சப்தமும் காதில் விழ பார்வையை விரட்டினான். ஒரு இடத்தில் மலைநீர் திபுதிபுவென்று புரண்டு ஓடிக் கொண்டிருந்தது. அதற்கு வெகுஅருகில் கெட்டில் ஒன்றைக் கட்டித் தொங்க விட்ட நிலையில் கீழே தீமூட்டி டீ தயாரித்தபடி இருந்தனர். அவன் எழுந்துவிட்டதைப் பார்த்து ஒருவன் நெருங்கி வந்தான். ரிஷபனின் நெற்றியைத்தான் முதலில் பார்த்தான்.

"ஏய், அதுக்குள்ள ஆறிடிச்சுப்பா.. சும்மா சொல்லக் கூடாதுப்பா இந்தத் தங்கக்காட்டு சாமியார்கள்." என்றான் அப்படியே.. ரிஷபனும் திரும்ப தொட்டுப் பார்த்தான். பெரிதாக வலி இல்லை. அவர்கள் சொன்னது சரிதான்.

"ஏய் பணக்காரா.. நீ டெய்லி காலைல என்ன சாப்பிடுவே. டீயா, காபியா?" ஒருவன் கேட்டான்.

ரிஷபன் பதிலுக்கு முறைத்தான்.

"முறைக்காதே.. எங்க வரைல நீ அஞ்சு கோடி ரூபாய். பணம் கைக்கு வரும்போது உன்னை நல்லவிதமா ஒப்படைக்கணும் நாங்க. நீ எங்க மேலே இருக்கற கோபத் துல சாப்பிடாம இருந்து உடம்பைக் கெடுத்துக்காதே.." என்றபடியே ஒருவன் பிளாக் டீயை ஒரு தகரக்குவளை யில் வைத்து எடுத்து வந்தான். அதைப் பார்க்கவே ரிஷபனுக்குக் குமட்டிக் கொண்டு வந்தது.

ஆனால் எதிர்ப்புகாட்டி அவர்களிடம் கோபத்தை உருவாக்குவதில் அர்த்தம் இல்லை என்று அழுத்தமாய்ப் புரிந்திருந்ததால், "எனக்கு எதுவும் வேண்டாம்" என்றான்.

"நெஜமா?"

"நெஜமாதான்."

"ஏய்.. இவன் விஷயமா போன அந்தப் பொண்ணு கிட்ட இருந்து ஏதாவது தகவல் உண்டா?"



"வேலை நடந்துகிட்டே இருக்கு.. குட்டி ரொம்ப உஷார் பேர்வழி. காதும் காதும் வெச்ச மாதிரி அஞ்சு கோடியைப் புரட்டற வேலையைப் பார்க்கத் தொடங் கிட்டா. ஆனா ஒரே சமயத்துல அவ்வளவு பணத்தை எப்படி பேங்க்குல எடுத்து பெட்டில வெச்சுக் கொண்டு வரதுன்னுதான் தெரியல. யாருக்கும் தெரியாம அவ்வளவு பணத்தைக் கொண்டு வர்றது கஷ்டம்னு சொல்லி போன் பண்ணினா..

நானும் பணமா வேண்டாம். தங்கம் வைர நகையா கூட கொண்டு வான்னு சொல்லியிருக்கேன். ஏ பணக்காரா..

உங்கப்பன் கஜானாவுல எவ்வளவு கிலோ தங்கம் இருக்கும்?"

பேச்சோடு பேச்சாக ரிஷபனுக்குக் கேள்வியைத் திருப்பினான்.

ரிஷபன் தொடர்ந்து வெறித்தான்.

"முறைக்காதே.. அவ்வளவும் உங்க தொழிற்சாலைல எங்களைப் போல உழைப்பாளிகள் உழைச்ச உழைப்பு."

"என்ன பெரிய உழைப்பு.. அதுக்குதான் சம்பளம்னு ஒண்ணு தந்துடறோம்ல.."

"பொல்லாத சம்பளம்.. வயித்துக்கும், வாயுக்குமே போதாத சம்பளம்."

"அது சரி.. போதாமதான் ஆயிரக்கணக்குல வேலை பாக்கறாங்களா.. ஆயிரக்கணக்கான பேர் வேலை கேட்டு அப்ளிகேஷன் போடறாங்களா?"

"மக்கள் மடையர்களா இருக்கறவரை இப்படித்தான் நடக்கும். உன்னை மாதிரி ஆட்கள் சொகுசா அமெரிக்கா வுலயும், ஆஸ்திரேலியாவுலயும் படிப்பீங்க. அங்க படிச்

சிட்டு வந்து இங்க இன்னும் எப்படி எல்லாம் சுரண்டிக் கொழுக்கலாம்னும் பார்ப்பீங்க."

அந்தக் காலை வேளையில் அங்கே ஒரு வாக்குவாதம் வலுக்கும்போது 'பூம்.. பூம்..' என்று ஒருவன் கொம்பு ஊதும் சப்தம்.

"டேய்.. நம்ம ஹெட் வந்துட்டார் போல. கொம்பூதி ஊதறான் பார்."

"ஆமாமா.. சரி சரி எல்லாரும் அவங்கவங்க இடத்துக்குப் போங்க."

சொல்லி முடிக்கும் முன் ஒரு பெரிய பாறைமேல் ஒரு உருவம் நிமிர்ந்து நின்றது தெரிந்தது. தலையில் தொப்பி, கையில் துப்பாக்கி, உடம்பில் போலீஸ்காரன் போல காக்கி பேண்ட்டும், சட்டையும்..

எல்லோருடைய பார்வைகளும் அந்த மனிதனை நோக்கித்தான் திரும்பின. அந்த மனிதனைத்தான் அவர் கள் தலைவன் என்று கூறியிருக்க வேண்டும். அதுதான் உண்மை என்கிற மாதிரி எல்லோரும் சல்யூட் வேறு அடித்தனர்.

ரிஷபன் மௌனமாகக் கவனித்தான்.

அந்த மனிதனும் அங்கிருந்தபடியே கையை உயர்த்தி டாடா காட்டுவதுபோல ஆட்டினார். பின் அங்கிருந்து அவர்களை நோக்கி கீழ் இறங்கிவர ஆரம்பித்தான். அருகே வந்துவிட்ட அவரை "வாங்க சீஃப்" என்று ஒருவன் முன் சென்று ஒரு ராணுவத் தளபதியை வரவேற்கிற மாதிரி சல்யூட் அடித்து வரவேற்றான்.

"என்ன வேணு.. எந்த பிரச்சினையும் இல்லையே."

"அதெல்லாம் ஒண்ணும் இல்ல சீஃப்."

"குட்.. இது யார், புது வரவா?"



"நம்ம டார்க்கெட்ல இருக்கற நபர்தான். தொழிலதிபர் சிவஞானம்பிள்ளையோட ஒரே மகன் ரிஷபன்."

"ஓ.. அந்த அமெரிக்கா வாலாவா.. என்ன மேன் இங்க உனக்கு ரொம்ப பயமா இருக்கா?"

சீஃபின் கேள்வி அப்படியே அவன் பக்கமும் திரும்பியது. ரிஷபன் மௌனமாக

"நிச்சயம் பயமாத்தான் எங்களுக்கும் நல்லது.. அ னுக்கு எவ்வளவு போட்டிருந்தது?"

"அஞ்சு கோடி சீ

"வந்துடுமா?"

"வந்துகிட்டே இருக்கு.. கஷ்டம் னாங்க. தங்கம், வைரமாகூட தரலாம்னு சொல்லிட் டோம்."

SRINIVASA POLYTECHNIC COLLEGE LIBRARY 7.9.23 KALAMAVUR-622 502

"தங்கம்ன உடனே தான் ஞாபகத்துக்கு வருது. இந்தா.. இந்த சூட்கேஸ் பூரா தங்கம்தான். மருதுகிட்ட கொடுத்துடு.."

"மருதுகிட்ட ஏற்கனவே இரண்டு சூட்கேஸ் இருக்கு. இடமில்ல சீஃப்.."

"அப்ப கடம்பை, வாகைன்னு ஏதாவது ஒண்ணைப் பாருங்க. வெளியே யார்கைலயும் மட்டும் இருக்கக் கூடாது."

அவர்கள் பேசிக் கொண்டது புரியவில்லை. ஆனால் அவை மரங்களின் பெயர்கள் என்பது மட்டும் ரிஷபனுக் குப் புரிந்தது. அந்த சூட்கேசுடன் ஒருவன் அங்கிருந்து கிளம்பிப் போனான்.

அந்த சீஃபும் ரிஷபனைப் பார்த்து ஒரு அரைச்சிரிப்பு சிரித்தபடியே அங்கிருந்து நகர்ந்தான். அதன்பின் மீண்டும் அவன் அருகே அந்த பளியன்.

மலைப்பாறைகள் மேல் துப்பாக்கியுடன் அந்தக் கூட்டத்தின் ஆட்கள். ரிஷபனுக்குள் ஒரே குழப்பம், ஐந்து கோடி பணமோ, தங்கமோ எப்படி வரப்போகிறது, யார் கொண்டு வரப்போகிறார்கள் என்ற கேள்வி ஒரு பக்கம். இங்கிருந்து தப்பி ஓட வேறு ஏதாவது வழி இருக்கிறதா என்கிற பார்வை இன்னொரு பக்கம். நடுவில் பனியன் கற்கள் இரண்டை உரசி தீயை உருவாக்குவதில் மும்முரமாக இருந்தான். காய்ந்த புற்களைப் பிடுங்கி சிறுசிறு கட்டாகக் கட்டியிருந்தான். அவனுக்கு வெகு அருகில் பாறைகள் இடையில் சலசலவென்று ஓடை நீர்போல ஒரு நீரோட்டம். அதில் மீன்களும் துள்ளித் துள்ளி விழுந்து கொண்டிருந்தன.

ஒரு கட்டத்தில் புல்கட்டில் தீப்பிடித்துக் கொண்டது. மளமளவென்று எரிய ஆரம்பித்தது. ஒரு பக்கம் தீ எரிய, மறுபக்கம் எகிறிக் குதித்த மீன் ஒன்றை ஒரே தாவில் அவன் பிடித்ததுதான் ஆச்சரியம். ஒரு சாண் நீளமிருந்தது அந்த மீன். அதை அருகில் கிடந்த ஒரு குச்சி முனையில் குத்தி அப்படியே தீயில் வாட்டத் தொடங்கினான். பின்னர் அதை ஒரு கிழங்கைக் கடித்துச் சாப்பிடுவது போல கடித்துச் சாப்பிடவும் செய்தான். ரிஷபனின் வாயில் எச்சில் ஊறியது. அவனும் பார்த்தான்!

"என்ன, மீனு வேணுமா?"

"....................."

"பாவம் நீ... இப்படியா வந்து மாட்டுவே.."

"....................."

"உன்ன மாதிரிதான் எத்தனை பேர்.. கோடி கோடியா இங்க வருது. ஆனா எனக்கு மட்டும் நூறு, இருநூறுதான் தர்றாங்க. பேசறதுதான் பெரிய பேச்சு. ஆனா கொடுமையானவங்க இவங்க.."



அவன் மீனைத் தின்றபடியே பேசிய வார்த்தைகள் ரிஷபனை அவனை நோக்கி ஆழமாகத் திருப்பின.

"ஒரு தடவை உன்ன மாதிரி ஒருத்தன் தப்பிச்சு ஓடப் பார்த்தான். ரொம்ப தூரம் ஓடவும் செய்துட்டான். இந்தக் காட்டுல போலீஸ் இருக்குது. அவங்க எதிர்ல வந்தாங்க. அவங்ககிட்ட போய் நடந்ததை எல்லாம் சொல்லித் தன்னைக் காப்பாத்த சொன்னான். அவங்களும் ஜீப்ல ஏத்திகிட்டு கிளம்பினாங்க. கடைசில இந்த கூட்டத்து ஆளுங்ககிட்டயே கொண்டு வந்து விட்டுட்டாங்க..

அப்பதான் தெரியும். மலைப்போலீஸ்கூட இந்த கூட்டத்துக்கிட்ட காசு வாங்கிகிட்டு கண்டுக்காம இருக்கறவங்கன்னு.."

அவன் சொல்லச் சொல்ல ரிஷபனுக்கு நெஞ்சுக்குள் ஒரு திருகல். பேச்சோடு பேச்சாக அவன் இன்னொரு மீனைப் பிடித்தான். ஆனா சுடுவதற்குதான் புல் கட்டு இல்லை. தீர்ந்து விட்டிருந்தது. அந்த மீனை திரும்ப ஓடும் தண்ணீரில் விட்டவன்.

"பணம் வந்த உடனே உன்னை விட்ருவாங்கன்னு மட்டும் நினைக்காதே.. இங்க வந்தவங்க உசுரோட திரும்பிப் போனதே இல்லை. இந்த இடத்துக்கு ஒருத்தன் வரதும் ரொம்ப கஷ்டம்.

என்னைக்கூட எடுபிடியா ஒரு ஆள் வேணும் கறதுக்காகத்தான் வெச்சிருக்காங்க. என்னை மாதிரி புதுசா இன்னொரு எடுபிடி கிடைச்சா என்னைக்கூட கொன்னுடுவாங்க."

அவன் காய்ந்த புற்களை மீண்டும் ஒன்று சேர்த்துக் கட்டியபடியே பேசிக் கொண்டு போனான்.

"வாரம் ஒரு பணக்காரன் இவங்ககிட்ட மாட்றாங்க. கோடி கோடியா வருது. அவ்வளவையும் தங்கமா,

வைரமா மாத்தி இந்தக் காட்டுல உள்ள மரங்கள்ளதான் போட்டு வெச்சிருக்காங்க. எந்த மரத்துல எவ்வளவு கிலோ தங்கம் இருக்குன்னு எனக்கும் தெரியும். ஒரு தடவை ஒரு பெட்டி மரப்பொந்து அடியில் போய் மாட்டிக்கிச்சு. பொந்து பூரா ஒரே கரையான் வேற. என்னைத் தலைகீழா கயித்தைக் கட்டி உள்ளவிட்டாங்க. காது மூக்குல எல்லாம் கரையான் போய் நான் செத்துப் பொழைச்சேன்."

அவன் சொல்லிக் கொண்டே பேசுவதில் புதுப்புது செய்திகள்.

"மாசம் ஒரு தடவை புலிப்பாறை பக்கம் வடக்க இருந்து சில ஆளுங்க வருவாங்க. அப்ப மரத்துல இருக்கற பணம் தங்கம் எல்லாம் அவங்க கைக்குப் போயிடும். ஒரு பெரிய மூட்டையா கட்டி என் தலைலதான் வைப்பாங்க. பாறை பாறையா அதைத் தூக்கிட்டு ஏத்தறதுக்குள்ள உசுரே போயிடும்."

அவன் அடுத்தடுத்து சொல்லிக்கொண்டே போனது ரிஷபனைத் திகைப்பின் உச்சிக்குக் கொண்டு போய் விட்டிருந்தது.

ஒரு கடத்தல் கூட்டம் ஒன்று நக்சலைட்டுகள் போல வேஷம் போட்டு பெரிய பெரிய கடத்தலைச் செய்வது அவனுக்குள் அப்பட்டமாகப் புரிந்து போயிற்று.

"இத்தனைக்கும் இது சாமிங்க திரியற காடு.. இங்கயே இவங்க இப்படி அக்கிரமம் பண்ணாக்கா, மத்த இடத்துல எப்படி எல்லாம் செய்வாங்கன்னு யோசிச்சுப் பாருங்க.."

அந்தப் பளியன் கேட்டுவிட்டு ஓடிக் கொண்டிருக்கும் நீரைக் கைகளில் மொண்டு மொண்டு குடிக்கத் தொடங்கினான்.

அதுவரை அவன் பேசுவதையே கேட்டபடி இருந்த ரிஷபனிடம் இப்போது ஒரு கேள்வி.



"ஏய்.. இது சாமிங்க திரியற காடுன்னு சொன்னியே.. அப்படின்னா..?"

"அட என்னா நீ? இதுகூட தெரியாதா உனக்கு? இந்த மலைல நிறைய சாமியாருங்க திரியறாங்க. உடம்பெல்லாம் பாம்பு நெளிய ஒரு நாள் ஒரு சாமியார் அருவிக்கரைல குளிச்சதை நானே பாத்துருக்கேன். அப்புறம்தான் தெரிஞ்சிச்சு — அவர்தான் பாம்பாட்டி சித்தர்னு.."

"பாம்பாட்டி சித்தரா?"

"ஆமாம்.. அப்படிதான் இன்னொரு சாமி சொன்னாரு.."

"அவங்கள்ளாம் இந்தக் காட்டுல எங்க இருக்காங்க.."

"யாருக்குத் தெரியும். அவங்க தண்ணிக்குள் கூட கூடுகட்டி அதுலகூட இருக்க முடிஞ்சவங்களாமே.."

"இந்தக் கூட்டத்துல யாரும் அவங்கள பார்த்ததில்லையா?"

"அதுவும் தெரியாது? ஆனா ஒண்ணு மட்டும் தெரியும். அவங்க திரியற காடுங்கறத இவங்க தங்களுக்குச் சாதகமா பயன்படுத்திக்கிறாங்க. ஏன்னா இந்தக் காட்டுப் பக்கமா ஒரு புழு பூச்சியைகூட யாரும் வேட்டையாட வரமாட்டாங்க. மிருகங்களும் இங்க யாரையும் அடிச்சுத் திங்காது. அதை இந்தத் திருட்டுக் கூட்டம் நல்லா பயன்படுத்திக்குது.."

பளியன் சுற்றிச்சுற்றிப் பார்த்தபடியேதான் பேசினான். அவன் பேசுவதைப் பாறை உச்சியில் துப்பாக்கியும், கையுமாக இருந்த ஒருவன் பார்த்துவிட்டான்.

"டேய்.. அங்க அவன்கூட என்னடா பேச்சு?" என்று எல்லோருக்கும் கேட்கும்படி கத்தினான். அது மலைப் பாறை எங்கும் எதிரொலித்தது. அந்த எதிரொலி

அடங்கும்போது அங்கிருந்து நழுவிப் போயிருந்த சீஃப் என்பவனும் இன்னும் சிலரும் திரும்ப வந்திருந்தனர்.

சீஃப் அருவியில் குளிப்பதற்குத் தோதாக உடை மாற்றியிருந்தான். கையில் ஒரு டிஜிடல் கேமரா.. அவனை முதன் முதலாகப் பார்த்தபோது இருந்த தோற்றத்திற்கும், இதற்கும் ஏகப்பட்ட வித்தியாசம். அவன் வரவும், பளியன் எழுந்து பணிவாக நின்று கொண்டான். அவனும் அவனருகில்தான் முதலில் வந்தான். அவனைப் பார்த்து ஒரு சிரிப்பு. பளியனை அது என்னவோ செய்தது. பளியன், அந்த கூட்டத்தவர்கள் கொடுத்திருந்த ஒரு பழைய சட்டையைத்தான் அணிந்திருந்தான். அந்தச் சட்டையின் காலரில் ஒரு இரும்புப் பட்டன். உண்மையில் அது பட்டனில்லை. அது ஒரு மினி டிஜிடல் மைக்!

வெடுக்கென்று அதை புடுங்கிய சீஃப் அதை ரிஷபனிடம் காண்பித்தான்.

"திஸ் ஈஸ் டிஜிடல் மைக் மிஸ்டர் ரிஷபன்," என்றான். ரிஷபனுக்கு அடுத்த வினாடியே அவன் பேசியது எல்லாம் அவர்களுக்கும் கேட்டிருக்கும் என்பது புரிந்து விட்டது.

"எங்களப்பத்தி இப்ப எல்லாம் தெரிஞ்சிருக்கும். நாங்க யாரும் இனி எதுவும் சொல்ல வேண்டியதில்லை. அதேசமயம் இவனுக்குப் பதிலா இனி எங்க எடுபிடி நீதான். நாங்க சொல்ற வேலையை எல்லாம் செய்யணும். சொகுசா அமெரிக்காவுல இருந்த உனக்கு இன்னியில இருந்து கஷ்டகாலம் ஆரம்பம். இனி இவன் எங்களுக்கு வேண்டாம்; இந்தப் பூமிக்கும் வேண்டாம். நீ ஓடிப் போடா.."

சீஃப் பளியனைப் பார்த்து ஓடச் சொன்னான். ஆனால் பளியன் ஓட மறுத்தான்.

"போடான்னா.."



"இல்ல.. என்னை ஓட விட்டு முதுகு பின்னால சுட்ருவீங்க.."

"ஓ.. உனக்கு அவ்வளவு தூரம் தெரிஞ்சிருக்கா.."

"ஐயா.. உங்கள கெஞ்சிக் கேட்டுக்கறேன். என்னை எதுவும் செய்துடாதீங்க. நான் உங்கள பத்தி யார் கிட்டயும் எதுவும் சொல்லமாட்டேன்."

"இதை நாங்க நம்பவா?"

"ஐயா.. நம்புங்கய்யா.. இல்லாட்டி... இல்லாட்டி.."

"இல்லாட்டி?"

"இல்லாட்டி என் நாக்கையே அறுத்துடுங்கய்யா.. ஆனா என்னைக் கொன்னுடாதீங்க.."

"நாக்கு இல்லாம எப்படிடா சாப்புடுவே.. அப்புறம் தானாவே செத்துப் போயிடுவே. அதுக்கு இப்பவே செத்துடு." சொன்ன மறுநொடி சீஃபின் பாக்கெட் துப்பாக்கி படுவேகமாக வெளிப்பட்டு சீறியது. பளியனின் நடு நெற்றியில் ரத்தப்பொட்டு!

ரிஷபனுக்கு மயக்கமே வந்துவிட்டது.

# 8

'கேளப்பா..
பூமிதனில் வினை தீர்க்கும்
வழிகளிலே மேலான வழியொன்று
விருட்சத்தைக் கண்டறிந்து விதை
போட்டு வளர்ப்பதாகும்
செம்மரம் உன் பொய்யுரை
பாபம் தீர்த்தே
செவ்வாயின் வீரியத்தை உன்

கணக்கில் சேமிக்கும்
மாவும் ஆவும் மங்கலம் தந்தே சந்ததி காக்கும்!'

— சிவ சித்தன்

**அ**க்கவுண்ட்ஸ் மேனேஜரும் ஸ்னேகாவும் பேங்க் மேனேஜரிடம் பேசிக் கொண்டிருந்தனர். அவர் அவர்களிடம் ஏராளமான டாக்குமெட்களில் கையெழுத்து வாங்கிக் கொண்டிருந்தார்.

அப்படியே "ஓவர் டிராஃப்டா உங்களுக்கு நான் இப்ப நீங்க கேட்ட அஞ்சு கோடிய சேங்ஷன் பண்றேன். இந்த பேங்க்கோட பேலன்ஸ் அமௌண்ட் இரண்டு கோடி சில்லரைதான். மீதி மூனு கோடி ஹெட் ஆபீஸ்ல இருந்து வரணும். செக்யூரிட்டி வேன்லதான் கொண்டு வரவேண்டி இருக்கும்.

அதுக்கு எப்படியும் இன்னும் நாலஞ்சு மணி நேரம் ஆகலாம். ஆமா எதுக்கு இவ்வளவு அவசரம்? இவ்வளவு பெரிய தொகை கேஷா கொடுத்து அப்படி என்ன வாங்கப் போறீங்க?" என்றவரை ஸ்னேகா மிரள மிரளப் பார்த்தாள்.

"சார்.. ப்ளீஸ் இது வேற விஷயம். எங்க எம்டியோட பர்சனல் மேட்டர் இது. இதுக்கு மேல நீங்க வேற எதுவும் கேட்க வேண்டாம்" என்றவள் எழுந்து தனியே வெளியே சென்று செல்ஃபோனில் தன் வீட்டில் உள்ள தடியன்களுடன் தொடர்பு கொண்டாள்.

"ஹலோ.. நான் சின்சியரா ட்ரை பண்ணாலும் அஞ்சு கோடிங்கறதால கேஷ் தர பேங்க்குலயே அவ்வளவு ஃபண்ட் இல்ல. ஏன் எதுக்குன்னு எவ்வளவு கேள்வி கேக்கறாங்க தெரியுமா?"



"உன்னை யார் பேங்க்குல எடுக்கச் சொன்னது? உங்க எம்.டி. பிளாக் மணியா அவன் பங்களாவுக்குள்ளேயே பதுக்கி வெச்சிருப்பான். அதை எடுத்துக் கொடு."

"அப்படி எல்லாம் அவர்கிட்ட இல்ல.. அவர் அஞ்சு இல்ல பத்துகோடி கூட எடுத்துக்கோ. எங்க சின்னவர் உயிரோட திரும்பி வந்தா போதும்னு சொல்றாரு.."

"இந்த டயலாக் எல்லாம் எங்களுக்கு ரொம்பப் பழசு கண்ணு. முடிவா நீ என்ன சொல்றே?"

"எனக்கு இன்னும் ஒருநாள் கூட டயம் வேணும்."

"எதுக்கு.. உன் சின்னவரை நாங்க அடைச்சு வெச்சிருக்கற மலைக்காட்டுக்குப் போலீஸ் போய்ச்சேர அவ்வளவு டயம் வேண்டியிருக்குமா?"

"முட்டாள்தனமா பேசாதீங்க.. என் தாய், தகப்பன் உங்க பிடில இருக்கும்போது நான் போலீசுக்குப் போவேனா... இது என்ன பேச்சு?"

"கோவிச்சுக்கறியே.. ஒரு பதினைஞ்சு நிமிஷம் கழிச்சு பேசு. நாங்க எங்க சீஃப் கிட்ட கேட்டுட்டுச் சொல்றோம்."

ஸ்னேகா செல்ஃபோனை முடக்கினாள். திரும்பி வந்தாள். மேனேஜர் அவளை ஒருமாதிரி பார்த்தார்.

"என்னம்மா.."

"கேஷ் வர ஒருநாள் ஆகும்னு எம்.டி.கிட்ட சொன்னேன். அவர் ஒரு பதினைஞ்சு நிமிஷம் கழிச்சு பதில் சொல்றேன்னு சொன்னார்."

"இந்தப் பணத்தை அப்படியே நீங்க யாருக்கோ கொடுக்கப் போறீங்க.. ஆம் ஐ கரெக்ட்?"

"அது... அது.."

"அந்த சம்பந்தப்பட்ட நபர் செக்கை விரும்பலை. சுருக்கமா சொல்லப்போனா இது ஒரு இல்லீகல்

ட்ரான்சாக்ஷன். ஆனா இங்க உங்க அக்கவுண்ட்ல டெபிட் ஆகியிருக்கும். ஆடிட்டர் கேட்டா என்னன்னு பதில் சொல்வீங்க.."

"சார் அதெல்லாம் எங்க கவலை.. உங்களுக்கெதுக்கு சார் இந்தக் கவலை.. நீங்க வேகமா பணத்தைக் கொடுங்க. ஐ மீன் யாருக்கும் எதுவும் தெரிய வேண்டாம்னு எங்க எம்.டி. உங்ககிட்ட பர்சனலா சொல்லச் சொன்னார்."

"டோண்ட் ஓர்ரி.. நீங்க இந்த பேங்க்கோட ரொம்ப ரொம்ப வேல்யபுள் கஸ்டமர். உங்க எம்.டி.க்கும் நான் ரொம்ப கடமைப்பட்டவன்."

"அப்ப சரி சார்.. நான் ஈவினிங் வரேன்."

ஸ்னேகா மேனேஜருடன் கிளம்பினாள். வெளியே கார் காத்திருந்தது. காரை ஒட்டியே ஒருவன் அவளை நோட்டமிட்டபடி.

அவளும் அவனைப் பார்த்துக் கொண்டே காரில் ஏறினாள். காருக்குள்..

"ஸ்னேகா.. இத்தனை வருஷத்துல இப்படி கேஷ் எடுத்ததே இல்ல. சேலரி டே அன்னிக்குக்கூட இவ்வளவு அமௌண்ட் எப்பவும் எடுத்தது கிடையாது."

"தெரியும் சார்.. ஆனா இப்ப நெருக்கடியான நிலை. என்ன பண்ணச் சொல்றீங்க?"

"அப்படி என்னம்மா நெருக்கடி. என்கிட்ட சொல்லக்கூடாதா?"

"சாரி சார்.. எம்.டி. யாருக்கும் எதுவும் தெரியக் கூடாதுன்னு சொல்லியிருக்கார்" என்றவள் பொங்கி வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டாள். சட்டென்று மனதுக்குள் ஒரு எண்ணம்.

அந்த நாடி ஜோதிடர் குருராஜன் முகம் ஒரு வினாடி அவளுக்குள் நிழலாடியது. அவரிடம் சென்றால் அடுத்த கட்டம் பற்றி ஏதாவது தெரிய வருமோ?



கேள்வி எழும்பிய மறுகணம் டிரைவரிடம் காரை நிறுத்தச் சொன்னாள். தன் பக்கத்தில் அமர்ந்திருந்த மேனேஜரைப் பார்த்தவள், "சார் தயவு செய்து தப்பா நினைக்காம இங்கயே இறங்கறீங்களா.. எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு," என்றாள்.

மேனேஜர் முகத்தில் அதிர்ச்சியும், ஆச்சரியமும் ஒன்றோடொன்று பிணைந்து கொள்ள அரைமனதாகக் காரை விட்டு இறங்கினார்.

காரும் ஜோதிடர் குருராஜன் வீடு நோக்கி சீற ஆரம்பித்தது.

ஸ்னேகா வந்து நிற்கும் தோரணையிலேயே நாடி ஜோதிடருக்கு எல்லாம் விளங்கிவிட்டது.

"என்னம்மா.. உன் சின்ன முதலாளிக்குச் சிக்கல் வந்துடிச்சாக்கும். அப்புறம் என்னாகும்னு தெரிஞ்சிக்க நீ என்கிட்ட வந்துட்டியாக்கும்..?"

"ஆமாங்கய்யா.. அவரை இப்ப ஒரு கூட்டம் கடத்திகிட்டுப் போயிட்டாங்க. பணம் கொடுத்தா விட்ருவோம்னு சொல்றாங்க. இது விஷயமா வெளிய யாருக்கு தெரிஞ்சாலும் அங்க அவர் உயிர் போயிடும். அதுதான் இப்ப அவரோட நிலை."

"ஒண்ணும் ஆகாதும்மா.. ஒண்ணும் ஆகாது. நாடிப் படி உங்க சின்ன முதலாளி இப்ப ஒரு காட்டுக்குள்ள இருக்காரு.."

"யெஸ்.. யெஸ்.. அந்தக் கூட்டத்து ஆளுங்க பேசும் போது சொன்னாங்க. ஆமா அது எந்த மலைக்காடு அவர் நல்லபடி வந்துடுவார்தானே. அவருக்கு எதுவும் ஆயிடாதே.."

"ஒண்ணு மட்டும் சொல்விக்கிறேம்மா. நடக்கறதெல்லாம் நல்லதுக்குன்னு நினை. உன் சின்ன முதலாளி காட்டுல இப்ப பரிட்சை எழுதிகிட்டிருக்கார்.

அதுல அவர் பாஸாவாரா இல்ல ஃபெயிலாவாராங் கறது ஏடு பார்த்தா தெரிஞ்சிடும். ஆனா நான் பார்க்காமலே சொல்றேன். ஏதாவது ஒரு பாழடைஞ்ச சிவாலயத்துக்குப் போய் அங்க உள்ள லிங்கத்துக்கு நல்லா குளிரக்குளிர அபிஷேகம் செய்துட்டு நெய் விளக்குப் போடு. அந்த வெளிச்சத்துல தான் உங்க சின்னவர் வழியக் கண்டுபிடிச்சுத் திரும்பி வருவார்."

"நிச்சயமா செய்யறேன். இப்பவே கூட செய்யறேன். ஆனா அவர் உயிருக்கு எதுவும் ஆயிடாதே.."

"நிச்சயமா ஆகாது. நீ போய் வேகமா சிவலிங்கத்துக்கு நெய் விளக்கு போடு. போ.."

நாடி ஜோதிடர் தூண்டிவிட அவளும் வேகமாகத் திரும்ப ஆரம்பித்தாள். அந்த நாடிஜோதிடர் வீட்டுக்கு நேர் எதிரே பிளாட்பாரத்தில் இரண்டு பேர் ஸ்னேகாவை வெறித்தபடி...

அவள் அகலவும், அவர்கள் இருவரும் அந்த நாடி ஜோதிடர் முன்னால் சென்று நின்றனர்.

"நீங்க.."

"கொஞ்சம் முந்தி உங்ககிட்ட வந்து பேசிட்டு போனிச்சே ஒரு பொண்ணு.. அந்தப் பொண்ணைச் சேர்ந்தவங்க நாங்க.."

அவர்கள் இருவரும் அவ்வளவுதான் சொன்னார்கள். நாடி ஜோதிடர் முகத்தில் ஒரு மெல்லிய சிரிப்பு. பக்கத்துச் சுவரில் கெடிகாரத்தில் மணியையும் ஒரு பார்வை பார்த்தவர் அவர்கள் இருவரிடமும் "கிளம்பலாமா?" என்றுதான் கேட்டார்.

அவர்களே அந்தப் பதிலால் ஆடிப்போய்விட்டனர்.

"நாங்க எதுக்கு வந்திருக்கோம்னு உங்களுக்குத் தெரியுமா?"



"ஒரு நாடி ஜோசியர்கிட்ட ஒருத்தர் எதுக்கு வருவாரு- ஜோசியம் பார்க்கத்தான்.."

"அப்ப எங்களுக்கு ஜோசியம் பார்க்காம கிளம்பு வோமான்னா என்ன அர்த்தம்?"

"ஊருக்கே நான் ஜோசியம் சொல்றவன். காலத்தைக் கணிக்கறதும் அளக்கறதும் தான் எங்க வேலை. எனக்கு எப்ப என்ன நடக்கும்னு தெரியாதா?"

"அப்புடின்னா?"

"நீங்க தொழிலதிபர் சிவஞானம்பிள்ளையைக் கடத்தி யிருக்கற கூட்டத்தைச் சேர்ந்தவங்க.. என்னைப் பார்க்க வந்த பொண்ணைத் தொடர்ந்து வந்தீங்க.. அவ என்னைப் பார்த்துட்டு போகவும் அவ என்கிட்ட என்ன பேசினான்னு கேக்கறதுதான் உங்க நோக்கம். நானோ ஒருத்தருக்கு சொன்ன ஜோதிட பலன்களை இன்னொருத் தருக்கு சொல்றவன் இல்லை. நீங்களோ சொல்லாட்டா என்னை விடப் போவதில்லை. என்னைக் கடத்திட்டு போய் உங்க தலைவர் முன்னால நிறுத்தப் பார்ப்பீங்க.. என் ஜாதகத்துலயும் நான் இப்ப கஷ்டப்பட்டாகணும்னு விதி. அதோ.. மணியப்பாருங்க.. மூணு மணி நாப்பது நிமிஷமாகுது. மூணு நாப்பத்தி ஒண்ணுல இருந்து என் வரைல சனியோட பார்வை ஆரம்பம். என் ஜாதகத்துல இப்ப குருவும் நீச்சம். போதாக்குறைக்கு சனியை செவ்வாய் வேற பாக்கறார். சனி செவ்வாய் இரண்டும் பகைக் கிரகங்கள். இரண்டும் நேருக்கு நேர் பார்க்கும்போதுதான் பூகம்பம், எரிமலை வெடிக்கறது. கார்கில் மாதிரி யுத்தங் கள்ளாம் வரும். ஒரு நாட்டுக்கே இவங்க பார்வையால இவ்வளவு பிரச்சினைன்னா தனி மனிதனுக்கு எவ்வளவோ நடந்தாகணுமே..?"

அவர் சொன்னதைக் கேட்டு அந்த இரண்டு பேரும் கூட மிரண்டு விட்டனர். இப்படி ஒரு கணக்கை எல்லாம் அவர்கள் கேள்விப்பட்டதுகூட இல்லை. அவரிடம் என்ன

பேசுவது என்று தெரியாமல் தேங்கி நின்றனர். ஒருவன் சற்று சுதாரித்து செல்ஃபோனை எடுத்து யாரிடமோ பேசினான்.

"சார்.. நாங்க இப்ப ஒரு நாடி ஜோதிடர் வீட்ல இருக்கோம். இந்த ஜோதிடர் நாம கடத்தின ரிஷபனுக்கும், சிவஞானம்பிள்ளைக்கும் நாடி பார்த்திருக்கார்னு தெரியுது. அதுல அவரை நாம கடத்துவோம்னுல்லாம் வந்திருக்கு. அதே மாதிரி நடக்கவும் அந்தப் பொண்ணு ஸ்னேகா இந்த நாடி ஜோசியர்கிட்ட மேற்கொண்டு என்ன செய்யறதுன்னு கேட்க வந்துருக்கா.. நாங்களும் ஃபாலோ பண்ணினோம். இப்ப அந்த ஜோதிடர் என்னடான்னா என்னையும் நீங்க கடத்தப்போறீங்க.. எனக்கும் இப்ப நேரம் சரியில்லைன்னு அவராவே முன் வர்றார்.."

அவன் பேசி முடித்தான். மறுமுனையில் யாரிடம் இருந்து என்ன மாதிரி பதில் வந்ததோ தெரியாது. அந்த ஜோதிடரை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

அப்படியே, "நீங்க மட்டும் உயிர் பிழைச்சா உங்ககிட்டே என்க்கும் நாடி ஜோசியம் பார்ப்பேன்" என்றான்.

## 9

'கேளப்பா...
அற்றது பற்றெனில்
உற்றது வீடாகும்; மண்ணில்
பற்றதை அற்றிட நற்றவமே
வழியாகும்
நற்றதும் நன்றெனில் கல்வி நலம்
மெருகேற்றும்
மெருகதன் உச்சமே ஞானம்!'

— சிவ சித்தன்



நெல்லையில் இருந்து அம்பாசமுத்திரம் செல்லும் சாலையோரமாக இருந்தது அந்தப் பழைய சிவாலயம். உள்ளே ஒற்றை விளக்கொளியில் ஒரு சாண் உயரத்திற்கு சிவலிங்கம். அதன்மேல்கூட ஒரு காய்ந்த அரளிப் பூமாலை! சன்னதிக்கு முன்னால் குருக்கள் அமர்ந்து கொண்டு மெல்லிய குரலில் ருத்ரம் சொல்லிக் கொண்டிருந்தார்.

புழுதி பறக்க ஆலயம் முன் வந்து நின்ற காரை நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தார். காரில் இருந்து ஸ்னேகா இறங்கிக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் தான் சோபையில்லை. ஆனால் நடையில் நல்ல வேகம். கையில் ஒரு வயர் கூடை அதனுள் பசு நெய்யுடன் வந்து கொண்டிருந்தாள்.

அவளைப் பார்த்தவர் எழுந்து நின்றார்.

கோயிலில் ஈ, காக்கை இல்லை. அவரும் ஒடிந்து விழுந்துவிடும் ஒரு உடம்பாகத்தான் இருந்தார். கோயிலுக்குள் பூசின மாதிரி இருள். நல்ல பார்வை தீட்சண்யம் இருந்தால்தான் நடக்க முடியும். ஒரே ஒரு ட்யூப் லைட்! அதுவும் எரியவில்லை. ஸ்னேகா வரவும், "வாங்கோ.." என்றபடி உள்ளே நடந்தார். நடந்தபடியே "பார்த்து வாங்கோ. தரையெல்லாம் ஒரே மேடுபள்ளமா இருக்கும். அந்தக் காலத்துக் கோயில்.." என்று அவர் பேசியதில் நிறையவே மனவருத்தம். ஸ்னேகா அவரையே தொடர்ந்து நடந்து சன்னதி முன் நின்றாள்.

"என்னது அது?"

"நெய்.. சாமிக்கு விளக்கு போட.."

"கொடுங்கோ.. எரியற விளக்குல சேர்த்துடறேன். ஆமா நீங்க என்ன திருநெல்வேலியா?"

"ஆமாம்.."

"நெல்லையப்பர் கோயில்லாம் டவுன்ல இருக்கும் போது இவ்வளவு தூரம் இந்த சாமியை சேவிக்க வந்துருக்கியேம்மா.. ஆச்சரியமா இருக்கு. யாராவது ஜோசியர் இப்படி பாழடைஞ்ச சிவன் கோயிலா பார்த்துப் போய் நெய் விளக்கு போடுங்கன்னு சொன்னாங்களா?"

குருக்கள் படுகச்சிதமாகக் கேட்டார். ஸ்னேகா அவருக்குப் பதில்கூற தடுமாறியதிலேயே அவருக்கு அவள் நினைப்பது விளங்கி விட்டது.

"இந்த ஸ்வாமியை மனுஷங்க மறந்துட்டாங்க.. பரவால்ல சில ஜோதிடர்களாவது ஞாபகம் வெச்சிருக்காங்களே.."

அலுத்துக் கொண்டே நெய்யை விளக்கில் விட்டார். தீபச்சுடரில் ஒரு தனித்தெம்பு. மளுக்கென்று சன்னதி முழுக்கவும் ஒரு பிரகாசம் பரவியது. தொடர்ந்து கற்பூர ஆரத்தி காட்டி முடித்தார். ஸ்னேகா மெய்மறந்து வணங்கி நின்றாள். ஒருபுறம் தாய், தந்தையர், மறுபுறம் ரிஷபன். நடுவில் பிளாக் மெயில் கும்பல் என்கிற அவளது நிலை அவளை அப்படியே உருக வைத்து விட்டது.

மெல்ல கண்களைத் திறந்தாள்.

எதிரில் குருக்கள்.. விபூதியை நீட்டியபடி இருந்தார். வாங்கிப் பூசிக் கொண்டாள்.

"உன் நம்பிக்கை வீண் போகாது.. இவர் சக்தி வாய்ந்த சுவாமிம்மா.." என்றார் குருக்கள்.

ஏனோ ஸ்னேகாவுக்கு அந்த நிலையிலும் சிரிப்பு வந்துவிட்டது.

"என்னம்மா சிரிக்கறே.."

"சிரிக்காம என்ன பண்றது.. நீங்களே சொல்றீங்க. இங்க யாரும் வரதே இல்லை மறந்துட்டாங்கன்னு.. கோயிலும் பாழடஞ்சு போய் இருண்டு கிடக்கு.. ஒரு



பக்கம் வருத்தப்பட்டுக்கற நீங்களே சக்தி வாய்ந்த சுவாமின்னும் சொல்றது வேடிக்கையா இருக்கு.. வேடிக்கைன்னா சிரிப்பு வரத்தானே செய்யும்?"

"அப்ப கோயிலை வெச்சு இதோட பிரகாசத்தை வெச்சுதான் சாமிக்குச் சக்திங்கறது உன் கருத்தா.."

"பின்ன.. தன் கோயிலைப் பலமா வெச்சுக்காத ஒரு சாமியை எதை வெச்சு நம்பறது?

"நம்பாத சாமியையா அப்ப சேவிக்க வந்துருக்கே"

"வந்த பிறகுதானே கோயிலோட லட்சணம் தெரியுது."

"அப்ப இனி வரமாட்டியா?"

"அது தெரியாது. இப்ப என் பிரார்த்தனை வேற. நான் இப்ப பெரிய ஒரு சிக்கல்ல இருக்கேன். அது தீரணும். அப்படியே இந்த கோயிலும் பெரிய அளவுல நல்லபடி மாறணும்னுதான் நான் சாமிகிட்ட பிரார்த்தனை செய்துகிட்டேன்."

"அப்ப உனக்கு நல்லபடியா எல்லாம் நடந்துட்டா நீ இவருக்குச் சக்தி இருக்கறத நம்புவியா?"

"ஆமாம்.. அதுதானே மனுஷ இயல்பு.."

அவளது பதிலுக்கு அவர் இந்த முறை சிரித்தார்.

"என்ன.. இப்ப உங்க ரவுண்டா?"

"இல்லம்மா.. மனுஷ இயல்புன்னு சொல்லி உண்மையை சொன்ன பார்.. அத நினைச்சு சிரிச்சேன்.."

"அதுல சிரிக்க என்ன இருக்கு.."

"நிறைய இருக்கும்மா.. இந்த விஷயத்துல உண்மையை ஒத்துக்கற நீ மறைஞ்சிருக்கற உண்மைகள பார்க்க முடியாதவளா இருக்கியே அதை நினைச்சேன்."

"மறைஞ்சுருக்கற உண்மைகள்னு நீங்க எதை சாமி சொல்றீங்க.."

"பாழடைஞ்ச கோயில்லயும் ஒரு சக்தி மறைஞ்சிருக்கு.. இது தெரியலியே உனக்கு.."

"சக்தி இருக்கற இடமா இப்படி இருக்கு?"

"அம்மாடி.. சக்திங்கறது கட்டடத்துல இல்ல.. கட்டடம், கோபுரம், அதோட விஸ்தாரம் எல்லாம் நிறைய ஜனங்க.. நிறைய பணத்தைக் கொடுத்து தங்களோட சௌகர்யத்துக்காக பண்ணி வெச்சிருக்கறது. ஒரு விதத்துல அதெல்லாம் ஆசையோட அடையாளம்னும் சொல்லலாம். அப்படிப்பட்ட ஆசைல ஒண்ணும் தப்பு கிடையாது. ஆனா கோயில் பெரிசாவும் அழகாவும் இருக்கறதுக்கும் ஸ்வாமியோட சக்திக்கும் சம்பந்தமில்லை. ஸ்வாமியோட சக்திங்கறது நாம மனசுக்குள்ள பண்ற பிரார்த்தனைல இருக்கு. இந்த உண்மை தெரிஞ்சவா கூட்டமா கூட்ற கோயிலுக்குப் போறத விட இப்படி அமைதியா இருக்கற கோயிலுக்கு தான் வருவா. இன்னும் கூட ஒண்ணு சொல்வேன். இப்படி ஒரு கோயிலுக்கு வர நல்ல விதி இருக்கணும். உனக்கு இருக்கு.. அதான் வந்துருக்கே.."

"நல்ல விதியா.. எனக்கா?"

"அதுல என்ன சந்தேகம்?"

"சாமி.. நான் இப்ப இருக்கற மாதிரி ஒரு நிலைல யாருமே இருக்கமாட்டாங்க. என்னால வாய்விட்டு அழக் கூட முடியலை. இப்ப நான் இங்க உங்ககிட்ட பேசிகிட்டிருக்கேன். ஆனா வெளிய இரண்டு பேர் என்னை நோட்டம் போட்டுகிட்டு இருக்காங்க. தெரியுமா?"

"அப்படி என்னம்மா உனக்குச் சிக்கல்?"

"அதைச் சொல்ல தைரியமும் இல்லை; நேரமும் இல்லை சாமி. ஒரு ஜோசியர் சொன்னபடி எல்லாம் நடந்துகிட்டிருக்கறதால அவரை நம்பி இங்க வந்துருக்கேன். அவ்வளவுதான்!"



"சரிம்மா.. எதுவா இருந்தாலும் சரிம்மா... உன் நெய் விளக்கு உனக்கு வழி காட்டும்.."

"அல்ப நெய் விளக்குக்கா அவ்வளவு சக்தி?"

"அல்ப நெய் விளக்கா.. வாயைக் கழுவு! நெய்ங்கறது ஞானம் மாதிரி.. பசுவோட உடம்புல உருவாகற பால் அதோட சக்தியால உருவாகற ஒரு திரவம் உலகத்துலயே ரத்தமும் பாலும்தான் ஜீவ திரவங்கள். ரத்தம் மறைஞ்சு ஓடுவது... பால் தெரிஞ்சு பெருகுவது.. பாலுக்குள்ள ஒளிஞ்சிருக்கிற ஒரு வஸ்துதான் நெய். நெய்க்குள்ள அக்னி இருக்கு.. நெய் தீபம் கரியைக் கக்காது. அதன் சுடர் பல ஜீவ வாயுக்களை உருவாக்கும். அந்த வாயுவை சுவாசிக்கும்போது உள்ள ஓடற ரத்தத்துல சில மாற்றம் நிகழ்ந்து அது மூளைவரை பரவி எண்ணத்துலயும் நிறையவே மாற்றங்கள் ஏற்படுது. இது ஒருபுறம்னா பாலைத் தரைல கொட்டி வீணாக்காம அதை நெய்யா மாற்றி அதையும் நெருப்பா மாற்றி வாயுவா மாற்றுவதுங்கறது வானத்தைச் சுத்தப்படுத்தற ஒரு சங்கதி.

மூணாவதா நான் சொல்லப்போறதுதான் முக்கியம். நெய்னு ஒண்ணு வேணும்னா பசுன்னு ஒண்ணு வேணும். பசுவை எவன் ஒருவன் போஷிக்கிறானோ அவன் எல்லா தேவர்களையும் தினமும் போஷிக்கிறான்னு அர்த்தம். எல்லா தேவர்களையும் தினமும் போஷிக்கற ஒருத்தன் தீபம் ஏற்றி அதுவும் தெய்வத்தோட சன்னதில தீபம் ஏற்றி நாலு பேர் ஸ்வாமியைக் கண் குளிர பார்க்க வழி பண்ணிக் கொடுக்கறான். இதெல்லாம் எவ்வளவு பெரிய புண்ணியம்?"

குருக்கள் நெய் தீபத்தின் பின்னால் இருக்கும் நுட்பங்களை அடுக்க ஆரம்பித்துவிட்டார். ஸ்னேகாவிற்கும் நிறைய கேட்க ஆவலாகத்தான் இருந்தது. ஆனால், அவளது செல்ஃபோன் அவளைக் கலைத்தது.

"ஹலோ.."

"என்ன ஹலோ.. பணத்தைக் கொண்டு வராம நாடி ஜோசியரைப் பார்க்கறே.. இப்ப சிவன் கோயிலுக்கு வேற போயிருக்கியாம். என்ன சங்கதி?"

"அது.. அது.. நல்லவிதமா எல்லாம் நடந்து முடியணும்னுதான்.."

"பணத்தைக் கொண்டு வா.. எல்லாம் தானா முடியும்."

"அதுக்குதான் ஒரு நாள் போதாது. கூட டயம் வேணும்னு சொன்னேனே.."

"சரி.. உனக்கு மிகச்சரியா இருபத்திநாலு மணி நேரம் தர்றோம். அதுக்குமேலே ஒரு நிமிஷம்கூட தரமாட்டோம். பணம் வரலைன்னா உன் சின்ன முதலாளி மட்டுமில்ல, உன்னோட அப்பா, அம்மான்னு யாரும் இருக்க மாட்டாங்க.. ஞாபகம் இருக்கட்டும்.."

செய்தி முடிந்துபோனது. தன் கைவசம் உள்ள செல்ஃபோனை ஒரு வெறிப்பு வெறித்தாள் ஸ்னேகா.

விஞ்ஞானம் உதவி செய்வதாக நினைத்துக் கொண்டு ஒரு பெரிய உபத்ரவத்தை இந்தச் சமுதாயத்துக்கு அளித்து விட்டதாகத்தான் கருதினாள்.

கோயிலுக்கு வந்தால் குழப்பம் தீரும் என்றால் அது இருபத்திநாலு மணி நேர அவகாசத்தைத்தான் தந்திருக்கிறது. ஆனால் அதற்குள் ஐந்து கோடியை வாங்கிக் கொண்டு போய் அந்த எதிரிகளிடம் கொடுத்து ரிஷபனை மீட்டுக் கொண்டு வருவது சாத்தியம்தானா என்கிற ஒரு சந்தேகப் பயமும் அவளை அந்த நொடி ஆட்கொண்டது. அந்த பயம், விலகாமலே காரில் ஏறினாள். காரும் கிளம்பியது. கிளம்பும் முன் அந்த பாழடைந்த சிவாலயத்தை மீண்டும் ஒரு பார்வை.. கண்களில் மெல்லிய கண்ணீரின் சேர்க்கை!



# 10

'கேளப்பா..
உனக்கான இன்பமும்
உனக்கான துன்பமும்
பிறராலே வருவதில்லை.
கணக்கான வாழ்நாளில்
மனக்கோணல் அதனாலே
வினைச்சேர்க்கை
தவறாமல் விதிப்பாட்டாய்
உருவாகும்
விதியதும் இறைவனின்
திருக்கர எழுத்தல்ல, உன்
மதியினால் நீ செய்த செயல்களே..'

– சிவ சித்தன்.

ரிஷபனின் பளிச்சென்ற அமெரிக்க பேண்ட் ஷர்ட்டைக் கழற்றி எறிந்துவிட்டு அவனை ஒரு லுங்கி சட்டைக்கு மாற்றியிருந்தார்கள். போய்த் தொலைகிறது என்று செருப்பு மட்டும் போட்டுக் கொள்ள சொல்லி யிருந்தனர். லுங்கியைக் கட்டிக் கொண்டு அந்தக் காட்டுக் குள் நடப்பது அவன் வரையில் மிக சிரமமாக இருந்தது.

"என்னை எங்க கூட்டிக்கிட்டுப் போறீங்க?" என்கிற அவன் கேள்விக்குப் பதிலே சொல்லவில்லை. எதிரில் நாடி ஜோதிடர் வருவதைப் பார்க்கவும்தான் புரிந்தது. கொஞ்சம் திடுக்கிடவும் செய்தான். நாடி ஜோதிடர் குரு ராஜன் அவன் அளவு மனதில் உடைந்து போயிருக்க வில்லை. ஒரு அழையாத சிரிப்பு அவர் முகத்தில் தொற்றிக் கொண்டிருந்தது. அவனைப் பார்த்தவர் கண்ணாலேயே அவனிடம் பேசினார்.

"ஐயா நீங்களா.. நீங்க எப்படி?" என்று ஆரம்பித்த ரிஷபன் முன், உள்ளங்கையில் பான்பராக்கைக் கசக்கிய படியே சீஃப் வந்து நின்றான்.

"உனக்கு ஜோசியம் சொல்லியிருந்தானாமே இந்த ஆள்.. நீ கூட அதை நம்பலையாம். ஆனா இவன் சொன்ன மாதிரிதான் நடந்துருக்கு. இப்ப நீ நம்பறியா?" என்று கேட்டான். ரிஷபன் முகத்தில் மறுதலிக்க முடியாத மௌனம்.

"சில நேரத்துல லைஃப்ல சில விஷயங்கள் இந்த மாதிரியெல்லாம் நடந்துடறதுண்டுதான். எங்களுக்கு இந்த ஜாதகம் ஜோசியத்துல எல்லாம் நம்பிக்கை இல்லை. ஆனா நாங்க நாடியை நம்பறோம். ஏன் தெரியுமா?"

அவன் கேள்விக்குப் பான்பராக்கை வாயில் போட்டு உட்பக்கமாக ஒரு ஓரமாக ஒதுக்கிக் கொண்டான். சுரீர் என்று இருந்தது. அப்படியே ரிஷபனை உற்றுப் பார்த்தவன், "நாடிங்கறது இதோ இந்த ஜோசியக்காரன் தானா கணக்கு போட்டு சொல்ற ஒரு விஷயம் இல்லை. அது சித்தர் சாமிங்க எழுதினது. சித்தர் சாமிங்க பெரிய கில்லாடிங்க. அவங்க தண்ணி மேல நடப்பாங்க; காத்துல மிதப்பாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன். முதல்ல அதை எல்லாம் நம்பாத நான் இந்தக் காட்டுல வந்து ஒளியவும், அதை நம்பினேன். ஏன்னா அந்த மாதிரி பல சித்தர் சாமிங்க என் கண் எதிர்க்க நடந்துகிட்டதை நான் பார்த்தேன். என்னால அவங்கள பார்க்கத்தான் முடிஞ்சிச்சு. அவங்கள பிடிச்சு வெச்சு கேள்வி கேட்க முடியல.. நாங்க அரசாங்கத்தோட கண்ணுலயே விரலை விட்டு ஆட்றவங்க. ஆனா இந்தக் காட்டுல சித்தர் சாமிங்க எங்க கண்ணுல விரலை விட்டு ஆட்றாங்க.. அப்படிப்பட்டவங்க எழுதினதுல உண்மை இருக்கும்கறது தான் என்னோட அபிப்ராயம்.



அதனாலதான் இந்த ஜோசியனைத் தூக்கிட்டு வரச் சொன்னோம். இப்ப இந்த ஆள் உனக்கு என்ன சொன்னான், அதுல எங்களப் பத்தி என்னவெல்லாம் சொல்லப் பட்டிருக்குங்கறது எனக்குத் தெரிஞ்சாகணும். "ஐயா ஜோசிய சிகாமணி.. அதையெல்லாம் சொல்றியா நீ.."

சீஃப் ஒரு பாறைமேல் வசதியாக உட்கார்ந்து கொண்டு கையை கட்டிக் கொண்டான். ரிஷபனுக்குள் அவன் செயல் நெருப்பாகத் தகித்தது.

"உனக்குத் தேவை பணம். அது எப்படியாவது வந்து சேரும். அதை வாங்கிகிட்டு என்னை விட்ற வழியைப் பார். அதைவிட்டு ஜோசியம் பார்க்கற வேலையை எல்லாம் விட்டுடு. நீ செய்யறது கூடத்தலும், பித்தலாட்டமும். உனக்கெல்லாம் ஜோசியம் ஒரு கேடா.." என்று சீறினான். அடுத்த நொடி கன்னத்தில் காது செவிடாகும் அளவுக்கு ஒரு அறை. முதுகிலும் ஒரு குத்து.

ரிஷபன் அப்படியே சுருண்டு விட்டான்.

நாடி ஜோதிடர் குருராஜனை அந்தக் காட்சி சற்று உலுக்கி விட்டது.

"ஐயா... அவரை விட்ருங்க! பாவம் அவர்.. பொறந்ததுல இருந்தே தங்கத் தட்டுல சாப்ட்டு பட்டு மெத்தைல தூங்கின சீமான் அவர். அவரை இங்க ஒரு எடுபிடி மாதிரி ஆக்கி வெச்சிருக்கீங்க. தயவு செய்து விட்ருங்க.." என்று உரக்கவே கத்தினார்.

"கத்தாதய்யா.. நான் கேட்ட கேள்விக்குப் பதிலைச் சொல். இவனுக்கு வந்த ஏட்டுல எங்களப்பத்தி இருந்துச்சா.."

"அப்படி எல்லாம் எதுவும் இல்லீங்க.. ஒரு மண்டல காலம் இவர் கஷ்டப்படுவார்னுதாங்க இருந்துச்சு."

"அப்புறம்?"

"இவர் தலைகீழா மாறிடுவாருங்க. இப்ப இவர் பெரிய அளவுல கடவுள் நம்பிக்கையோ, ஜோதிடத்துல நம்பிக்கையோ இல்லாதவர்.. ஆனா இவருக்கு இந்தத் தங்கக்காட்டு அனுபவம் இவரைப் புடம் போடுங்க.."

"நீ என்ன சொல்றே.. இவன் உயிரோடு இருக்கப் போறான்னா சொல்றே?"

"அதுல என்னங்க சந்தேகம்? இவருக்கு இந்த ஜென்மத்துல எண்பத்தி நாலு வயசுங்க. அப்பதான் இவர் மூச்சுக் கணக்கு ஒரு முடிவுக்கு வருது."

"இதை நீயா சொல்றியா.. அந்த ஏட்டுல இருந்ததா?"

"நானா எதையும் சொல்றதில்ல.. ஏட்டுல இருந்ததை தான் சொல்றேன்."

"எங்க அந்த ஏடு?"

'என் வீட்டுல இருக்கு.. எனக்கு நீங்க ஏடுபத்தியெல்லாம் கேப்பீங்கன்னு தெரியாதுங்க.."

"இவனுக்கு ஜோசியம் சொன்னியே.. நீ இப்ப எங்க கிட்ட மாட்டிகிட்டிருக்கியே.. இப்படி நீ மாட்டுவேன்னு உனக்குத் தெரியுமா?"

"ஆஹா.. உங்க ஆட்களையே கேளுங்க. அவங்க என் எதிர்ல வந்து நிற்கவும் புறப்படலாமான்னு நானா தான் முன் வந்தேன். முரண்டெல்லாம் பிடிக்கல.."

"அப்படியா?" சீஃப் கேள்வியோடு குருராஜனை அழைத்து வந்தவர்களைப் பார்த்தான். அவர்கள் முகங்களில் ஆமோதிப்பு.

"அப்ப உன் நாடிப்படி இந்தப் பயலுக்கு எண்பது வயசுக்கு மேல.. ஆனா உன் ஆயுள் எவ்வளவு?"



"எனக்கும் இன்னும் நிறைய காலம் இருக்குங்க. ஆனா இங்க நிச்சயமா எனக்கும் சரி, இவருக்கும் சரி சாவு கிடையாதுங்க.."

"அப்படின்னா நீயும் சரி உன் ஜோசியமும் சரி பொய்யுன்னுதான் அர்த்தம்."

"அதெல்லாம் கொஞ்சம்கூட பொய்யாகாதுங்க. ஏன்னா முதல்லயே நீங்க சொன்ன மாதிரி ஜோசியத்தை நான் சொல்லலை.. அவங்க எழுதி வச்சதை நான் படிச்சேன்."

தூர நின்று கொண்டிருந்த ஒருவன் ஆவேசமாகக் கத்தினான்.

"அப்ப உன் கண் எதிர்க்க இவன் உயிர் போறத நீ இன்னிக்கு பார்ப்பே. எங்க கூட்டத்துல இவனைக் கொஞ்ச நாள் எடுபிடியா வெச்சுக்கலாம்னுதான் நினைச்சோம். ஆனா நீ இப்படி சொல்லவும் இவனை விடப்போற தில்லை" என்றபடியே ஒருவன் படுவேகமாக முன்னால் வந்தான். அவனை அந்த சீஃப் பார்வையாலேயே தடுத்தான்.

"சீஃப் என்னைத் தடுக்காதீங்க.. இந்த ஜோசியம், சித்தர் எழுத்து, நாடி அது இதெல்லாம் சுத்த கப்ஸா.. இந்தக் காட்டுல நானும் சில சாமியார்கள பார்த்திருக்கேன். அவ்வளவு ஏன்.. இவன் தலைல பட்ட அடியைக்கூட ஒரு சாமியார்தான் மூலிகைப் பத்துப் போட்டுக் குணமாக்கினார். அவங்களுக்கு இந்த மாதிரி மருந்து சமாச்சாரம் தான் தெரியும். ஒரு சாமியார்கூட சரியான ஆம்பளை இல்லை. அவங்களுக்கு நீங்க சொல்ற மாதிரி எல்லா சக்தியும் இருந்தா இந்த காட்டுல நம்மை எல்லாம்விட்டு வெச்சிருப்பாங்களா? நம்ம கண்ணுல படறதகூட தவிர்க்கற அவங்களைப் போய்... இந்த ஆள்தான் பெருசா பேசறான்னா நீங்களும் நம்பறீங்களே.."

அவன் கொந்தளித்தான். ரிஷபன் வரையில் விஷயம் எங்கெங்கோ திசைமாறி செல்வது போலத்தான் தோன்றிற்று. அந்தக் கேள்விகளில் அர்த்தம் இருப்பதாகவும் கருதினான்.

"பிரதாப்.. நீ புரியாம பேசறே? உனக்கு என் அனுபவம் கிடையாது. சித்தர்கள் நம்மைப் பார்த்து பயப்படலை; விலகிப் போறாங்க. அவங்க வரைல நம்ம கடத்தல் எல்லாம் ஆசைல நாம செய்யற செயல்கள். அவ்வளவு தான்.."

"சரியா சொன்னீங்க.. வினை விதைச்சவன் வினை அறுப்பான்கறதுதான் அவங்க சித்தாந்தம். உங்கவினைகளே உங்களை ஒருவழி பண்ணிடும். அவங்க எதுக்கு?" ஜோதிடர் குருராஜன் இதுதான் சமயம் என்று தான் சொல்ல நினைத்ததைச் சொல்லிவிட்டார்.

அந்த பதில் சீஃப் முகத்தில் ஏராளமான சலனத்தை உருவாக்கிவிட்டது. எப்பொழுதும் சலனம் என்பது தன்னுடன் மௌனத்தையும் அழைத்து வரும். மௌனம் வந்தாலே அடுத்து என்ன செய்வது என்கிற சிந்தனையும் வந்துவிடும்.

சீஃப் சிந்திக்க ஆரம்பித்துவிட்டான்.

சீஃபின் அந்த மௌனமும் சிந்தனையும் அவன் பிரதாப் என்று அழைத்தவனைக் கிண்டிக் கிழங்கெடுத்தன.

"சீஃப்.. நீங்க ஒரு இயக்கத் தலைவர் மாதிரி யோசியுங்க. சராசரி மனுஷங்க மாதிரி யோசிக்காதீங்க. இதோ.. இவன் வீட்ல இருந்து வரவேண்டிய அஞ்சு கோடியும் வந்துடிச்சின்னா நாம அதை வாங்கிக்கிட்டுப் போய்க்கிட்டே இருக்கணும். இவங்க எதிர்க்க நாம டிஸ்கஸ் பண்றதே தப்பு. டேய் இவங்க இரண்டு பேரையும் முதல்ல இழுத்துக்கிட்டுப் போங்கடா.." என்ற உரக்கக்



கத்தினான் அந்தப் பிரதாப். அவன் கட்டளைக்கும் அந்தக் கூட்டத்தில் மதிப்பு இருக்கத்தான் செய்தது. அவர்கள் இருவரையும் இரண்டு பேர் முன் வந்து துப்பாக்கி முனையில் இழுத்துச் சென்றனர். ஜோதிடர் அவர்களோடு சேர்ந்து நடக்கும்போது ஒரு இடத்தில் கால் தடுக்கி அப்படியே புரண்டு விழுந்தார்.

விழுந்த வேகத்தில் அவர் வேட்டியின் இடுப்பு மடிப்பில் இருந்து ஒரு ஏட்டுக் கட்டு தனியே போய் விழுந்தது. அதைச் சீஃப் பார்த்துவிடவும் கை சைகை காட்டி ஜோதிடரைத் திரும்ப அழைத்து வரச்சொன்னான். அந்த ஏட்டுக் கட்டும் சீஃப் கைக்கு வந்து சேர்ந்தது.

"இது என்ன?"

"ஔசித ஏடு."

"அப்படின்னா?"

"எந்த வியாதிக்கு எந்த மருந்துன்னு சொல்ற ஏடுங்க இது.."

"அப்ப இதுல வியாதிகளுக்கு மருந்து இருக்கா?"

"தப்பு. எந்த வியாதிக்கு எந்த மூலிகையைச் சாப்பிடணும்னு குறிப்புதான் இருக்கு."

"சபாஷ்.. இதை எதுக்கு ஒளிச்சு வெச்சிருந்தே?"

"இடுப்புலதான் எப்பவும் வைப்பேன். அதை ஒளிச்சு வெச்சதா நீங்க நினைச்சா நான் ஒண்ணும் பண்றதுகில்லை."

"சரி.. இதை ஏன் இங்க வரும்போது கொண்டு வந்தே?"

"காரணம் இருக்கு.. இந்தத் தங்கக்காடு ஒரு மூலிகை வனம். இவ்வளவு தூரம் வரப்போற நாம இந்த ஏட்டுல

உள்ளபடி மூலிகைகள் கிடைச்சா பறிச்சு எடுத்துக்கிட்டுப் போவோம்னு நினைச்சேன்."

"இங்க வந்த யாரும் உயிரோட திரும்பினதில்லை. எந்தத் தைரியத்துல நீ இதை எடுத்துக்கிட்டு வந்தே?"

பிரதாப் முந்திரிக்கொட்டை போல சொன்ன பதில் ரிஷபனை வெளிற வைத்துவிட்டது.

"அப்ப பணம் வந்துட்டா விட்றுவோம்னு சொல்லதெல்லாம் புளுகா?" என்று ரிஷபன் எச்சில் விழுங்கினான்.

சீஃப் பிரதாப்பின் அவசரத்தைக் கண்டிக்கிற மாதிரி முறைத்தான்.

"முட்டாள்.. ஒரு பதிலைச் சொல்லப்போய் உண்மையைப் போட்டு உடைச்சிட்டே பார். இடியட்!" என்று கையைப் பிசைந்து கொண்டான்.

"சீஃப் இவங்களுக்கும் எல்லாம் தெரியும்.. சாகப் போறவங்க காதுல எது விழுந்தா என்ன.. விழலேன்னா தான் என்ன?"

"நீ கொஞ்ச நேரம் சும்மா இரு பிரதாப். ஏய் ஜோசியா.. இந்த ஏட்டுக்கட்டுல அப்படி என்னவெல்லாம் மூலிகைகள் பற்றி குறிப்பு இருக்கு.."

"உங்களுக்கு எதுக்குங்க இதெல்லாம்.. இதோ இவரோட அப்பா தொழுநோய்ல அவஸ்தைப் பட்டுக் கிட்டு இருக்கார். அவரைக் குணப்படுத்த தேவை ஒரு மூலிகை. அதுக்குப் பேர் சஞ்சீவினி.. எப்பேர்ப்பட்ட வியாதியையும் அது குணப்படுத்திடும். அதைச் சாப்பிட்ட ஒருத்தர் கிட்டத்தட்ட ஒரு லட்சம் தடுப்பூசியைப் போட்டு கிட்ட மாதிரி.. அவரை எந்த வியாதியும் அணுகாது.. அந்த சஞ்சீவினியை முடிஞ்சா பறிச்சு எடுத்துக்கிட்டுப் போவோம்னுதான் இதை கையோட கொண்டு வந்தேன்."



"நீ என்ன சித்தனா.. உனக்கு எப்படி மூலிகை எல்லாம் அடையாளம் தெரியும்?"

"இந்த ஏட்டுல உள்ள பாட்டுல அதோட அடையாளங்கள் சொல்லப்பட்டிருக்கே.."

"எங்க அந்தப் பாட்டைப் படி பார்ப்போம்."

"கேட்டு என்ன பண்ணப்போறீங்க.. இதை தினசரி நாடி படிக்கிறவனே புரிஞ்சுக்கறது கஷ்டம்."

"ஏய் இப்ப படிக்கப் போறியா.. இல்லையா?"

சீஃப் முதல் தடவையாக முரட்டுத்தனமான குரலுக்கு மாறினான். ஜோதிடரும் கட்டின் நூல் முடிச்சை அவிழ்க்கத் தொடங்கினார். ரிஷபனுக்கு எரிச்சலாக வந்தது.

அவன் நின்றிருந்த இடத்திற்கு அருகில் யானைத் தலை போல ஒரு பாறை. அதன் அருகே சென்று அப்படியே சாய்ந்து நின்று கொண்டான். ஜோதிடர் பாட்டைப் படிக்கத் தொடங்கியிருந்தார்.

**"கேளப்பா...**
**சிவசித்தன் உரைப்பதிந்த உண்மை**
**நவசித்தர் இமயத்திலே நிஷ்டை கொண்டபோது**
**தவசித்தன் போகன் வந்தே அறிந்ததிந்த உண்மை**
**அவன் சித்தன் என்றதனால் அவனியில்**
**எமன் எதிர்த்து வந்திடினும் அச்சமில்லை**
**மயன் வடித்த சிலைபோல மாறாது**
**எழில் பிடித்தே வாழ்ந்திடவும்**
**ஏழில் அரவம் இருந்தாலும், சூழும்**
**பாழில் ஆலகாலமே கிடந்தாலும்**
**வாழும் நாளில் வலிதாய் வாழ**

வானவர் தேவர் போல தினமாய்த் திகழ
கானகம் தன்னில் உள்ளது ஒரு மூலிகைக் கனி
அதன் பெயரே சஞ்சீவினி..
அஞ்சனை மைந்தன் அரும்கரம் பெயர்த்திட்ட
ஆகாயத்தில் அவனோடு
பறந்திட்ட சிகரத்தின் செல்வம் அது.
சிகரத்தில் இருந்தே உதிர்ந்ததால்
பொதியைத் தங்க வனத்தில் இன்றது பொது.
பொதுவாய் போனதும் பொய்கை ஓரத்தில்
ஓரவாய் இதழ்போல் ஒதுங்கியே கிடக்குமே..
மெதுவாய்ச் சென்றதை மிருதுவாய்த் தொட்டிட
கரத்தினை வளைக்குமே.. அரவம் போல்
கரத்தினை வளைக்குமே..'

ஜோதிடர் நிதானமாய் நிறுத்தி நிறுத்தித்தான் படித்தார். அதன்படி நவசித்தர்கள் எனப்படும் ஒன்பது சித்தர்கள் இமயத்தில் யோக நிஷ்டையில் இருந்தபோது அங்கே சென்ற போகர் இந்த சஞ்சீவினி பற்றி அறிந்து வந்தார். இந்த சஞ்சீவினி பற்றி அறிந்தவர்கள் எமனைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை... வானுலகத்துத் தேவர்கள் போல என்றும் இளமையுடன் வாழலாம்.

அவர்களது ஜாதகக் கட்டத்தில் ஏழாம் இடமான களத்திர ஸ்தானத்தில் பாம்புக் கிரகமான ராகு இருப்பது இல்லறத்திற்கு எதிரானது.. கணவன், மனைவி இருவரில் ஒருவரே வாழ முடியும்.. இதுபோல வேறு எதிரான விஷயங்கள் எவ்வளவு இருந்தாலும் ஆலகால விஷமே சாப்பிட நேரிட்டாலும் சஞ்சீவினி காப்பாற்றும்.

இது அனுமன் சஞ்சீவி மலையைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு பறந்து சென்றபோது அதில் ஒன்று பொதிகை மலைமேல் உள்ள தங்கக்காட்டில் விழுந்தது.



தங்கக்காடு இன்று அனைவருக்கும் பொதுவான ஒரு காடாகும். அந்தக் காட்டில் பொய்கை எனப்படும் நீர்நிலை ஓரத்தில் மனிதர்களின் குவிந்த இதழ்களைப் போன்ற வடிவத்தில் அதன் இலைகள் இருக்க பரவிக் கிடக்கும். அதைச் சப்தமில்லாமல் தொடும்போது நமது கையை ஒரு கொம்புபோல கருதி அப்படியே வளைத்துப் பிடிக்கும் என்பது அதன் பொருள்.

அலுப்பிலும் சலிப்பிலும் இருந்த ரிஷபன்கூட அதைக்கேட்டு ஆழமாக ஒரு கவனத்திற்கு உள்ளானான்.

சீஃப் பாடலுக்குப் பொருள் தெரிந்த நொடி பிரதாப் என்கிறவனைத்தான் பார்த்தான்.

"சீஃப்."

"இந்தக் காட்டுக்குள்ள எங்கெல்லாம் பொய்கை இருக்குன்னு உனக்குத் தெரியும்தானே?"

"பொய்கைன்னா?"

"தாமரையும், அல்லியும் வளர்ந்து கிடக்கற சின்னச் சின்ன குட்டைங்க."

"இப்ப என்ன சீஃப் அங்கெல்லாம் போய் இந்த சஞ்சீவினி இருக்கான்னு பார்க்கணுமா?"

"ஆமாம்.. சாமியாருங்க எழுதினது பொய்யா இருக்க வாய்ப்பே இல்லை."

"சரி இருக்குன்னே வெச்சுக்குவோம். அதை வெச்சு என்ன பண்ண?"

"முட்டாளே.. வியாதி வெக்கை இல்லாம எப்பவும் இப்பயிருக்கற மாதிரியே வாழற பாக்யம்கறது சும்மாவா?"

"நீங்க அப்படி வர்றீங்களா?"

"இந்த நொடி நீ அதை தேடிக் கிளம்பியிருக்கணும். இப்படி என்கிட்ட பேசிக்கிட்டு நிக்கறதே தப்பு."

"ஒரு வேளை கிடைக்கலன்னா.."

"அது எப்படி கிடைக்காம போகும். இந்த ஜோசியனையும் கூட்டிகிட்டு போ."

"சீஃப்"

"இதோ பார்.. நம்மகிட்ட இருக்கற தங்கம், வைரம் கோடிகளை விட இதுதான்டா உண்மைல பெரிசு. இந்தக் காட்டுல இப்படி ஒரு விஷயம் இருக்கறது தெரியாம நாம பிளாக்மெயில் பண்ணிக்கிட்டு இருந்துருக்கோம் பார்."

"அப்ப இனி சஞ்சீவினியைத் தேடறதும் அதை சப்ளை பண்றதும்தான் நம்ம வேலையா?"

"முதல்ல அதை நாம சாப்பிட்டு டெஸ்ட் பண்ணி பார்ப்போம். பிறகு ஒரு முடிவுக்கு வருவோம்.. கிளம்புங்க.."

சீஃப் குரலில் ஒரு தனி உற்சாகம். ஜோதிடர் அந்த ஏட்டை திரும்பக் கட்டத் தொடங்கி இருந்தார்.

"ஜோதிடரே. இந்த பாட்டு, இதுல உள்ள சஞ்சீவினி இதெல்லாம் உண்மையா இருந்தா, உங்களுக்கு மட்டும் விடுதலை. சும்மா இல்லை. எங்ககிட்ட இருக்கற தங்கத்துலயும் உங்களுக்குப் பங்கு உண்டு. அதேசமயம் நீங்க யாருக்கும் நாடி பார்க்க வேண்டாம். எங்க இயக்கத்துல ஒருத்தரா, குறிப்பா ஒரு தலைவரைப் போல நீங்க இருக்கலாம். என்ன சொல்றீங்க?"

சீஃப் ஏதோ ஜோதிடரை உலகுக்கே ராஜாவாக்குகிறேன் என்கிற மாதிரி சொன்னது ஜோதிடரைச் சிரிக்கத்தான் வைத்தது.

"என்ன சிரிப்பு?"

"இன்னும் கல்யாணம் ஆகலை. அதுக்குள்ற பொறக்கப் போற குழந்தைக்கு பேர் வைக்கற மாதிரி இருக்கு உங்க பேச்சு. முதல்ல சஞ்சீவினி கிடைக்கட்டும்" என்றார்.



"கிடைக்கட்டும் இல்ல.. கிடைச்சாகணும். போங்க எங்காளுங்களோட.. உம்.."

சீஃப் படு அதட்டலாக குரல் கொடுக்க, ஜோதிடரும் அந்த பிரதாப் என்கிறவனோடு பொய்கைகளைத் தேடிப் புறப்பட்டார்.

புறப்படும் முன் ரிஷபனை நோக்கி ஒரு பார்வை.

பாவம் ரிஷபன்!

அவரை மரண பீதியுடன்தான் பார்த்தான்.

## 11

'கேளப்பா...
செயலெல்லாம் வினைதான்;
ஆயினும்
வினைகளெல்லாம்
தொடர்வதில்லை.
அறியாமல் செய்தது அடாத
கொலை ஆயினும்
அதை மண்ணில்
தீர்த்தத்தால் கரைக்கலாம்
அறிந்து செய்தது சிரமுர்கின்ற
ஈர்க் கொலை ஆயினும்
எத்தாலும் கரைக்கலாகாது.
செய்த வண்ணம் தொடர்ந்து வருமே
சீடா நீ செய்யும் வினை அவ்வளவும்...'

— சிவ சித்தன்

ஓங்கி உயர்ந்த மலை! மலை முழுக்க வாட்டசாட்டமான மரக்கூட்டம். பொதிகை மலைத் தொடர்ச்சியில் ஒரு துண்டுப் பகுதியாக விளங்கிய அந்த மலைப்பகுதியின் அடிவாரத்தில் ஒரு செம்மண் சாலை!

அதன்மேல் ஒரு போலீஸ் ஜீப் ஊர்ந்து கொண்டிருந்தது.

ஜீப்பில் டெலஸ்கோப்பும் கையுமாக இன்ஸ்பெக்டர் ருத்ரா. அருகில் டிரைவிங் சீட்டில் அவரது சகா சப்—இன்ஸ்பெக்டர் ராஜேந்தர்.

ஜீப்பின் பின்புறத்தில் மருண்ட விழிகளுடன் உட்கார்ந்திருந்தாள் ஸ்னேகா. அவளுக்கு எதிரில் அவளது வீட்டில் ஸ்னேகாவின் அப்பா அம்மாவை மிரட்டிக் கொண்டிருந்த அந்த இரண்டுபேர்.

இருவர் கைகளிலும் விலங்கு. காலோடு சேர்த்துக் கட்டப்பட்ட ஒரு இரும்புச் சங்கிலி வேறு. அவர்கள் பார்வை ஸ்னேகாவைத் துளைத்துக் கொண்டிருந்தது. அவளே எதிர்பார்த்திராத ஒரு திருப்பம் அந்தப் பயணம்.

தொழிலதிபர் சிவஞானம் பிள்ளையிடம் ஸ்னேகா இந்த கடத்தல் பற்றி பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டு விட்ட நர்ஸ் அமலோற்பவமேரி ஓசைப்படாமல் விஷயத்தைப் போலீசுக்குக் கொண்டு போய்விட போலீசும் தூர இருந்தபடியே சிவஞானம்பிள்ளையையும், ஸ்னேகாவையும் பாதித்துவிடாதபடி கவனிக்க ஆரம்பித்திருந்தது.

ஒரு கட்டத்தில் எலெக்ட்ரிககல் மீட்டர் ரீடிங் எடுப்பவர்கள் போல வீட்டுக்குள் நுழைந்த இன்ஸ்பெக்டர் ருத்ராவும், சப்—இன்ஸ்பெக்டர் ராஜேந்திரனும் அவர்கள் இருவர் எதிரிலும் சகஜமாய் நடமாடுவது போல பாவனை செய்து பிளாக் மெயிலர்கள் இருவரையும் ஒரே அமுக்கு அமுக்கிவிட்டனர்.

அப்படியே வெளியே நோட்டம் போடும் நபர்களையும் அவர்கள் கொடுத்த தகவலில் போலீஸ் வந்து வளைத்துவிட்டது. அவர்கள் பயன்படுத்திய செல் ஃபோனையும் பிடுங்கிவிட்டதால் அவர்கள் அவ்வளவு பேரும் பல் பிடுங்கப்பட்டது போல ஆகிவிட்டனர்.



ஸ்னேகா மட்டும் மிக பயந்தாள்.

இது காட்டில் உள்ள ரிஷபனை நிச்சயம் பாதிக்கும் என்றாள். ஆனால் இன்ஸ்பெக்டர் ருத்ரா அதையும் அந்தத் தடியர்களைக் கொண்டே சமாளித்துவிட்டார். கைது செய்த நபர்களைத் துப்பாக்கி முனையில் பேச வைத்து பிளாக் மெயில் நிகழ்ச்சி சரியான திசையில் போய்க் கொண்டு இருப்பதாக நம்ப வைத்துவிட்டார்.

அதன் அடுத்த கட்டம்தான் தங்கக்காடு பயணம்.

அந்தக் கை விலங்குத் தடியர்களே வழி காட்ட வேண்டிய கட்டாயம்.

இருந்தாலும் ஸ்னேகாவுக்குத் திக்திக்கென்றுதான் இருந்தது. ஐந்துகோடி ரூபாய் பணம் ஒரு சூட்கேசில் தயாராக இருக்கிறது.

ஸ்னேகா ஒரு குறிப்பிட்ட இடத்தில் இறங்கிக் கொண்டு பணத்துடன் முன்னே செல்ல வேண்டும்.

ருத்ராவும், ராஜேந்திரனும் அவளைச் சாமர்த்தியமாகப் பின் தொடர்வதில் தான் ஒட்டு மொத்த வெற்றியும் உள்ளது.

ஆனால் அது அவ்வளவு சுலபமில்லை என்கிற மாதிரி அந்தத் தடியர்கள் இருவரும் ஜீப்பில் அமர்ந்திருந்தனர்.

"டேய் சரியான பாதையைக் காட்டுங்க. தப்பா எங்கயாவது கூட்டிக்கிட்டுப் போய் உங்கக் கூட்டத்துல சிக்க வைக்கலாம்னு மட்டும் கனவு காணாதீங்க. உங்க உடம்புல பெல்ட் பாம் கட்டியிருக்கேன். ரிமோட் என் கைல.." என்று அவர்கள் எதிரில் ரிமோட்டையும் தூக்கி காட்டியிருந்தும் அவர்களிடம் ஒரு தனி தைரியம்.

ருத்ராவும் அதைக் கவனித்தார்.

"என்னங்கடா.. அலட்சியமா உக்காந்துகிட்டு இருக்கீங்க. உங்க கூட்டம் மொத்தமும் கொஞ்ச நேரத்துல மாட்டிக்கப் போறாங்க. ஆனா அப்படி எல்லாம் நடக்காதுங்கற மாதிரி இருக்குதே உங்க பார்வை..." என்ற ருத்ராவின் கேள்விக்கு அவர்கள் இருவரும் எந்தப் பதிலையும் கூறவில்லை.

நடுநடுவே ருத்ரா டவர் கிடைக்கும் இடங்களில் தனது டீம் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துக் கொண்டே வந்தார். அவர்கள் ஒரு ஹெலிபேடில் நான்கு ஹெலிகாப்டர்களுடன் அதிரடிப்படை ஒன்றுடன் தயாராக இருந்தனர்.

விசேஷ அனுமதியின் பேரில் வரவழைக்கப்பட்டிருந்த அந்த ராணுவ ஹெலிகாப்டர்கள் ருத்ராவிடம் இருந்து சிக்னல் கிடைத்த நொடி வானில் எகிறிவிடும். அதன்பின் தங்கக்காட்டின் மேல் பறந்து அதிரடிப் படைவீரர்களை கீழே இறக்கி விட வேண்டியதுதான் பாக்கி.

தேவை எனில் அங்கிருந்தபடியே சுடவும் தயார். இவை எல்லாம் ருத்ராவின் ஒற்றை உத்தரவில்தான் இருக்கிறது.

ஜீப் மண் பாதையில் ஒரு குறிப்பிட்ட தூரம் போய் நின்றுவிட்டது. அதற்கு மேல் உள்ள பாதையில் ஜீப்பால் செல்ல முடியாது.

அவ்வளவு கரடுமுரடு!

ருத்ரா கீழே இறங்கினார். அவர்களையும் இறக்கினார். அவர்களில் ஒருவன் அசால்ட்டாக மேல் பாக்கெட்டில் இருந்து மூக்குப்பொடி டப்பாவைத் திறந்து அப்படியே மூக்குத்துவாரத்தின் அருகே வைத்த ஒரு உறிஞ்சு உறிஞ்சி உடம்பையும் சிலிர்ப்பிக் கொண்டான்.

ஏதோ பிக்னிக் வந்தவன்போல ஒரு உணர்வு அவனிடம்.



"சார்.. இந்தப் பயலுக ஆனாலும் அசாத்திய தைரியத்தோட இருக்காங்க. நாம ரொம்பக் கவனமா இருக்கணும்" என்றார் ராஜேந்தர். சற்று ஒதுங்கிச் சென்று அவர்கள் இருவரையும் பார்த்தபடியே அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

"ஐ நோ ராஜேந்தர். இந்தக்காடு இவங்க நடமாடின இடம். மரத்துக்கு மரம் ஆட்கள் உட்கார்ந்துகிட்டு வேவு பார்த்துகிட்டு இருக்கலாம். நாம ஜீப்போட அடிவாரத்துல நுழையும்போதே தகவல் போயிருக்கும். அதேசமயம் அவங்க ஆட்கள் இரண்டு பேர் உயிர் நம்ம கைலங்கறதும் தெரிஞ்சிருக்கும்.

ஆகையால நமக்கு எந்த ஆபத்தும் வராது. பணத்தோட வரோம்னு வேற தகவல் கொடுத்துட்டதால பெட்டி கை மாறுகிறவரை நிச்சயமா பிரச்சினை வராது. நாம யூகிக்க முடியாதபடி எதாவது நடந்தாதான் உண்டு."

ருத்ரா பேச்சோடு பேச்சாக தன் விழிகளை நாலாபுறமும் சுழற்றினார்.

"சார்.. ஜோதிடரையும் கடத்தியிருக்காங்க. அவரோ தன் வீட்ல தான் கடத்தப்பட்டா திரும்பி வர மாட்டேன்னு சொல்லியிருக்கார். அப்படியே இனி தனக்குப் பதிலா தன் மூத்த மகன் நாடி பாக்கற தொழிலைச் செய்யணும்னும் எழுதி வெச்சிருக்கார். அப்படின்னா ஒரு நாடி ஜோதிடர்ங்கற முறைல தன் முடிவை அவர் முன்பே தெரிஞ்சுகிட்டிருக்கார்னுல்ல அர்த்தமாகுது."

"நிச்சயமா.. துணிச்சலா இந்தக் கடத்தல்ல அவர் நடந்துகிட்டிருக்கார். சாதாரணமா அவங்ககூட போயிருக்கார். ரொம்பப் பக்குவப்பட்டவங்கதான் அவரை மாதிரி நடந்துக்க முடியும்.

சராசரி ஒரு மனுஷனா அவர் இருந்திருந்தா அவர் எப்பவோ போலீஸ்கிட்ட வந்திருப்பார். இல்லை, விஷயம் தெரிஞ்ச நிமிஷம் தலைமறைவாகியிருப்பார்."

"அவரோட தைரியம் எனக்கு ரொம்ப ஆச்சரியத்த தருது சார். அடுத்து அவர் சொன்ன ஜோதிடப்படிதான் மிஸ்டர் ரிஷபன் விஷயத்துல எல்லாமே நடந்துகிட்டும் வருது, கவனிச்சீங்களா?"

"இதைப் பத்தி நாம பேசறதவிட அந்தப் பொண்ணு என்ன சொல்லுதுன்னு கேட்போம்.."

ருத்ரா ஜீப்பில் அமர்ந்திருந்த ஸ்னேகாவை நெருங்கினார்.

"மேடம்."

"சார்.."

"உங்களுக்கு ஒண்ணும் பயமா இல்லையே.."

"நீங்க.. நீங்ககூட இருக்கும்போது என்ன சார் பயம்?"

"ஜோதிடர்கிட்ட உங்களுக்கு நல்ல பழக்கமா?"

"ஏன் சார்?"

"இல்ல.. அவரை எதுக்குக் கடத்தியிருக்காங்கன்னு தெரியணும்."

"அவர் சொன்ன நாடிதான் காரணம். எங்க ஜே.எம்.டி.க்கு ஒரு மண்டல காலம் ரொம்பக் கஷ்டம்னு வந்தது. அதுல அவர் வாழ்க்கையே திரும்பும்னு இருந்தது. அதுக்குப் பிறகுதான் அவங்க எங்க ஜே.எம்.டி.யைக் கடத்தினாங்க. அதன்பிறகு நான் ஜோதிடரைப் போய்ப் பார்த்து அடுத்து என்ன நடக்கும்னு கேக்கப் போனேன், அப்ப என்னை ஃபாலோ பண்ணிகிட்டு வந்தவங்க ஜோதிடரை மோப்பம் பிடிச்சுட்டாங்க.



ஐ திங்க்.. கடத்தல் கோஷ்டி பத்தி நாடில எதாவது தகவல் இருந்து, அவங்க மாட்டிகிட்டா என்ன பண்றதுங் கற பயத்துல ஒரு முன் எச்சரிக்கையா ஜோதிடரைக் கடத்தியிருக்கலாம்."

"ஓ.. விஷயம் இப்படி போகுதா.. நாடில கடத்தல் கோஷ்டி பத்தி எல்லாம் கூடவா தகவல் இருக்க முடியும்?"

"என்ன சார் அப்படி சொல்லிட்டீங்க. மூணு தலை முறை தாத்தா பாட்டி பேர், அப்பா அம்மா பேரெல்லாம் சரியா வரும்போது இது இருக்க முடியாதா?"

"பெரிய ஒண்டரா இருக்கே.. அப்ப ஜோதிடர் வீட்ல இருக்கற நாடி ஜோதிட ஏட்டுல இந்த விவரங்கள்ளாம் இருக்கா?"

"நிச்சயமா இருக்கணும்கறதுதான் என் கணிப்பு. ஆனா எங்க ஜே.எம்.டி. அதை நம்பலை. அதனால நாடி ஜோதிடரும் தான் சொல்ல வந்ததை முழுசா சொல்லலை."

"ஐ.சீ.."

ருத்ரா கேள்வியோடு ராஜேந்திரன் பக்கம் திரும்பினார்.

நெற்றியில் சிந்தனை வரிகள்.

கண்களில் அதன் ஆழம்.

"என்ன சார் யோசனை?"

"இந்தப் பொண்ணுகிட்ட நாம சிட்டியிலேயே விலாவரியா பேசியிருக்கணும்; விட்டுட்டோம். இப்பவும் கெட்டுப் போயிடல. ஜோதிடர் பையன் நம்பர் இருக்குல்ல.."

"இருக்கு சார்."

"இங்க டவர் ஓர்க் பண்ணுதா பாருங்க."

"இங்க ஓர்க் பண்ணாது.. இந்தக் காட்டுல எங்கயும் டவர் கிடைக்காது.. ஒரு மூணு இடத்துல தான் அது கிடைக்கும். அது எங்களுக்கு மட்டும்தான் தெரியும்."

கை விலங்குப் பார்ட்டியில் ஒருவன் ருத்ரா, ராஜேந்திரனிடம் பேசியதைத் துல்லியமாகக் கேட்டவன் போல பதில் சொன்னான்.

ருத்ரா ஒரு வினாடி ஆவேசமாகி அவனை வெறித்தார்.

பிறகு தன்னைத்தானே தணித்துக் கொண்டார்.

அதற்கும் பிறகு மெல்லிய குரலில், "ரிமோட் பட்டனை இப்பவே கூட அமுத்திட்டா என்னன்னு யோசிக்கிறேன்" என்றார்.

அது அவர்களைச் சற்று மிரட்டியது. முகத்திலும் பயத்தின் பரவல் தெரிய வந்தது.

"சார்.."

ஸ்னேகா அழைத்தாள். ருத்ராவும் திரும்பினார்.

"எங்க ஜே.எம்.டி. ரொம்ப நல்லவர் சார். இந்தக் காட்டுல தான் எங்க எம்.டி.யோட தொழுநோய்க்கான மூலிகை மருந்தும் இருக்குன்னு ஏட்டுல வந்தது. ஐ திங்க் இப்ப எங்க ஜே.எம்.டி. மனசு மாறி இருக்கலாம். ஒண்ணு மட்டும் நிச்சயம். அவர் உயிருக்கு ஆபத்து வர வாய்ப்பில்லை. நாற்பத்தி எட்டு நாட்கள் அவர் கஷ்டப்படணும்னு மட்டும்தான் இருக்கு. ஆகையால நம்ம முயற்சில விபரீதமா எதுவும் நடக்காதுன்னு நான் நம்பறேன்" என்றாள்.

"மேடம்.. இந்தக் காட்டுக்குள்ள நுழையறதவிட கஷ்டம் வெளிய வர்றது. எங்க ஆட்கள் எவ்வளவோ



பேர் மிருகங்களுக்குப் பலியாகியிருக்காங்க. புதை குழிகளும் இருக்கு. நாற்பத்தி எட்டு நாள் இல்ல. நாற்பத்தி எட்டு வருஷமானாலும் எங்க தயவு இல்லாம உங்களால இந்தக் காட்டுக்குள்ள நுழையவோ, திரும்பவோ முடியாது."

இந்தப் பதிலும் அந்த விலங்குகளிடமிருந்துதான்.

மீண்டும் முறைத்தார் ருத்ரா. அப்படியே ஐந்து கோடிகள் கொண்ட பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டார். வலக் கை புஜத்துக்கு மேல் கும்மென்று நரம்பு புடைத்துக் கொண்டது. பெட்டி அவ்வளவு பாரம்!

காக்கி நிற கேப் தலையில் கிரீடம் போல அமர்ந்து கொள்ள இடுப்பின் இரு பக்கமும் இரண்டு துப்பாக்கிகள். மார்புக்குள் மறைவாக உள்ள பாக்கெட்டில் ஒன்று.

கால் ஷூவின் கணுக்கால் பின்புறத்தில் வீசி எறிய தோதாக இரண்டு பேனா கத்திகள். சாக்ஸின் உள் பக்கத்திலும் சில கத்திகள்.

கிட்டத்தட்ட ராஜேந்திரனிடமும் • இதே போன்ற ஆயுதங்கள்.

"நடங்கடா முன்னால.." என்று அவர்களை மண் பாதையில் தள்ளி விட்டனர்.

அவர்களும் உடம்போடு ஒட்டிக்கொண்டு சங்கிலி சப்தமிடக் கெந்திக் கெந்தி நடந்தனர்.

"டவர் ஓர்க் பண்ற இடம் வந்த உடனே சொல். உன் சீஃப்கிட்ட நாங்க வர்ற தகவலைச் சொல்லணும்."

அவர்கள் காதில் வாங்கியும் வாங்காமல் நடந்தனர்.

ருத்ராவின் திட்டப்படி தங்கக்காட்டின் வட்டப் பாறைக்கு முன்னால் ருத்ராவும், ராஜேந்திரனும் நின்று விடுவார்கள். ஸ்னேகா பெட்டியுடன் முன் செல்வாள். அப்போது அவர்கள் ரிஷபனை விடுவிக்க வேண்டும்.

ருத்ராவின் ஆட்களும் கூடவே செல்வார்கள். நாணய மாக சொன்னபடி நடந்துவிட்டால் பிரச்னை இல்லை. இல்லாவிட்டால் மனித வெடிகுண்டுகளான விலங்கு மனிதர்கள் முதலில் சிதறிப் போவார்கள். அடுத்த நொடியே அதிரடிப்படைக்குத் தகவல் போகும். ஹெலிகாப்டர்கள் சுற்றி வளைத்துவிடும்.

எப்பொழுதும் இந்த மாதிரி கணக்குகள் எல்லாம் மனதளவில் போடப்படுவதற்கு சரி.. பிளாக்மெயில் செய்பவர்கள் விஷயத்தில் எதிர்பாராத சம்பவங்களுக்குத் தான் வாய்ப்பு அதிகம்.

ருத்ராவுக்கும் அதெல்லாம் தெரிந்துதான் இருந்தது.

எதிர்பாராதபடி அந்தத் தங்கக்காட்டில் என்ன தான் நடந்துவிடும் என்கிற ஒரு த்ரில்லும் அவர் நெஞ்சுக் கூட்டில் வழிந்து கொண்டிருந்தது.

முன்னால் அந்த விலங்கு மனிதர்கள்.

திடீரென்று அவர்களிடம் ஒரு தேக்கம். முகத்திலும் ஒரு அசாதாரண மாற்றம்.

"என்னய்யா?"

அவர்கள் ஒரு புதரைச் சுட்டிக்காட்டினார்கள். அதனுள் இருந்து இருகால்கள் மட்டும் வெளியே தெரிந்தன.

"யார்... உங்க கண்காணிங்களா?"

"ஆமாம் சார்.. சின்ன சப்தம் கேட்டாலும் எழுந்துடு வாங்க. ஆனா படுத்தே கிடக்கறான் இங்க.."

"போ.. போய் எழுப்பு.."

ருத்ரா உஷாராக அவர்களையே அனுப்பினார். அவர்களும் புதர் அருகே சென்று காலை உதைத்து, "டேய்.. எழுந்திரிடா.." என்றனர்.



ஆனால் எந்த எதிர் விளைவும் இல்லை. மெல்ல புதரை விலக்கிப் பார்த்தவர்களுக்கு பகீர் என்றது!

உள்ளே, வாயில் நுரை துப்பிய நிலையில் கிடந்தான். வெறித்த கண்கள். இவை இரண்டுமே அவன் உயிருடன் இல்லை என்று கூறிவிட்டது.

அவன் இடுப்பில் வாக்கி டாக்கி போன்ற ஒன்று பேட்டரி தீரும் நிலையில் ஆன் செய்த கண்டிஷனில் மெல்லிய சப்தத்துடன்...

"சார்.. இவன் உயிரோட இல்லை.." என்றபடி பின்னுக்கு வந்த அவர்களைத் தள்ளிவிட்டபடி முன்னால் சென்றார் ருத்ரா.

வெறித்த பிணம் வரவேற்றது.

கொரகொர சப்தமிடும் வாக்கி டாக்கியை எடுத்துக் காதில் வைத்தார்.. வெறும் இரைச்சல் சப்தம் மட்டும் கேட்டது.

கை விலங்கு மனிதர்கள் இருவரும் வெளிறிவிட்டி ருந்தனர்!

## 12

'கேளப்பா...
தாயைத் தவிக்கவிடுதலும்,
தந்தைக்குக் கொள்ளி
மறுத்தலும்
தமக்கையை வஞ்சித்தலும்
தாரத்தைத் துரோகித்தலும்
தன் மக்கள் பட்டினி கிடக்க
தன்னலம் கொண்டாடலும்
என்னாளும் தீவினையாய்

ஏழ்பிறப்பும் தொற்றிவரும்
உடம்பின் சுகத்துக்காய்
உறவுகளை உறுத்தியவர்க்கு
உடம்பே பாரமாகும்
உள் அழுகும் பெருநோயால்...'

— சிவ சித்தன்

ரிஷபனும் ஜோதிடரும் அந்தக் காட்டிற்குள் வேக வேகமாக ஓடிக் கொண்டிருந்தனர். ஜோதிடர் வாயில் நுரை தள்ளிவிட்டிருந்தது. அவர் தேங்கி தேங்கி நின்று பெருமூச்சு விட்டபடியே ஓட முடியாமல்தான் ஓடினார். ஒரு கட்டத்தில் அப்படியே நின்றவர் ஒரு மரத்தடியில் மரத்தண்டின் மேல் சாய்ந்தார்.

"ஜோதிடரே.. கொஞ்சம் கஷ்டப்பட்டு நடங்க. அவங்க அளவு நீங்க அந்த விஷச்சாப்பாட்டை சாப்பிடலை. நீங்க உயிர் பிழைக்க நிறையவே வாய்ப்பு இருக்கு.." என்று ரிஷபன் சொன்னதை அவர் காதிலேயே வாங்கவில்லை.

செருகிவிட்ட கண்களுடன் அவனைத்தன் முகத்துக்கு அருகே அழைத்தார். அவனும் குனிந்து அவரை வெறித்தான்.

"தம்பி.. எனக்கு முடிவு நெருங்கிடிச்சு. என் ஏட்டைப் பார்த்து எப்பவோ தெரிஞ்சுகிட்டவன் நான். நமக்குப் போட்ட நேரத்துக்கு மேல ஒரு நிமிஷம்கூட உயிர் வாழ யாராலயும் முடியாது. தெரிஞ்சுதான் அவங்க கடத்தும் போதுகூட வந்தேன். எனக்கு ஒரு ஆசை. அதுக்காகத்தான் சாவைக்கூட பெருசா நினைக்காம வந்தேன்.. சாகறதுக் குள்ள நான் சித்த தரிசனம் செய்வேன்னு இருக்கு.

அதனாலதான் சஞ்சீவினின்னு சொல்லிகிட்டு ஏதோ ஒரு விஷத்தழையை எடுத்துகிட்டு வந்து எல்லோரும் சாப்பிடட்டும்னு சமைச்ச அந்தக் கூட்டத்துல உள்ளவங்க எனக்கு மட்டும் ஒரே ஒரு கைப்பிடி கொடுத்தாங்க. அள்ளி அள்ளிச் சாப்பிட்டு அவங்க கையாலேயே அவங் களுக்கு ஒரு முடிவைத் தேடிக்கிட்டாங்க.



அந்த ஒரு கைப்பிடிதான் இன்னமும் என் உயிரைப் பிடிச்சு வெச்சிருக்கு. என் கணக்குப்படி இன்னம் பதினைஞ்சு நிமிஷ நேரம்தான்நான் உயிரோட இருப்பேன். அதுக்குள்ற இங்க இருக்கற வட்டப்பாறைக்கு என்னைக் கூட்டிகிட்டுப் போங்க. அது சித்தர்களைத் தரிசனம் செய்யறதுக்குன்னே உள்ள இடம். வட்டப்பாறை மேலே நின்னு மனமுருகிச் சித்தர்களை அழைச்சா கட்டாயம் அவங்களும் வருவாங்க. அவங்கள பாத்து அப்படியே அவங்க காலடியிலேயே உயிரை விட்டுடறேன்.

போதும் இந்த மனிதப்பிறப்பு.

சுத்திலும் ஒரே பேராசை பிடிச்ச மனுஷக்கூட்டம். எவ்வளவு பட்டாலும் புத்தி வராத கூட்டம்— இந்த மனுஷக்கூட்டம். இதனாலதான் பிறவாத வரம் வேண்டும்னு காரைக்காலம்மையார் கேட்டாங்க. பாவி என்னை மறுபடியும் பிறக்க வைக்காதேன்னு பட்டினத் தாரும் பாடினார்.

விஷத்தால் மரணம்கறது என் கர்மா.

அதேசமயம் சுத்தமான நாடி ஜோசியனா சித்தர்கள் நாடிகளைப் படிச்சு வாழ்ந்துருக்கேன். எனக்குச் சித்தத் தரிசனம் நிச்சயம். என்னை எப்படியாவது அதோ அங்க தெரியற வட்டப்பாறைக்குக் கூட்டிக்கிட்டுப் போங்க என்றார் ஜோதிடர். ரிஷபனும் அவரைத் தோளில் தூக்கிக்கொண்டு ஓடினான்.

ஓடும்போதே, "அது எப்படி சாமி உங்களுக்குக்கூட சஞ்சீவினிக்கும், விஷச் செடிக்கும் வித்தியாசம் தெரியாம போச்சு" என்று கேட்டான்.

"சஞ்சீவினியை யார்ப்பா பார்த்திருக்காங்க? பாட்டுல உள்ளபடி இருந்தது. அவங்களுக்கோ அவசரம். அவங்க பேராசை அவங்க தலைல அப்படி ஏமாறணும், கூட்டமா சாகணும்னு எழுதியிருக்கே. அதை யாரால மாத்த முடியும்?"

அவர் பதில் சொல்லச் சொல்ல வட்டப்பாறையும் கண்ணில் முழுமையாகத் தெரிந்தது. வட்டமாய் செதுக்கியது போல பாறை. நடுவில் ஒரு சிறு பலகை போல ஒரு வடிவமைப்பு. ரிஷபன் ஜோதிடரைக் கீழே இறக்கி விட்டான். பெருமூச்சுடன் ஊர்ந்து அந்த கைக்கல் மேலே சென்றவர் அதன் மேல் தடுமாறியபடியே பல நின்று கிழக்கு பார்த்துக் கைகளைக் கூப்பினார். அப்படியே கண்கள் செருக, "ஓம் அகஸ்தீஸ்வராய நம:... ஓம் அகஸ்தீஸ்வராய நம:..." என்று பதினோரு முறை கூறி முடித்தார். அவர் சொன்னபடியே அவரது ஆத்மார்த்த நம்பிக்கை வீண்போகாதபடி குட்டையாக மூன்றடி உயரத்தில் இடுப்பில் ஒரு காவித்துண்டும் கையில் ஒரு கமண்டலமுமாக எதிரில் ஒரு சித்தர். ஜோதிடர் அவரைப் பார்த்து கண்கலங்கியபடியே மண்டியிட்டார்.

"சாமி ஈ... ஈ.." என்று அவர் உதடு.. விஷத்தழையின் நுரை அப்படியே பக்கவாட்டில் வழிந்தது. சித்தரிடமோ எந்தச் சலனமும் இல்லை. கைகளை உயர்த்தி ஆசிர்வதித்தவர், ரிஷபன் பக்கம் திரும்பக்கூட இல்லை. ரிஷபனுக்குள் அவர் அதுவரை எங்கிருந்தார், கச்சிதமாக அப்போது எப்படி வந்தார் என்றெல்லாம் கேள்விகள். அவன் கேள்விக்குள் மூழ்கியபோது ஜோதிடர் உடல் பொத்தென்று வட்டப்பாறையில் சரிந்து விழுந்தது. ரிஷபன் அவரை நெருங்கித் தொட்டுத் தூக்கிப் பார்த்தான். உடம்பில் உயிர் இல்லை. எதிரில் அந்தச் சித்தரும் இல்லை.

மௌனமாக அந்த வனப்பிராந்தியத்தில் அந்த நொடி அவனுக்குள் ஒரு சிலிர்ப்பு; மெல்ல நிமிர்ந்தான்.



சில்லென்ற காற்று.. அவன் தலைமுடிகளைக் கோதிவிட்டபடி.. அங்கங்கே சில பட்சிகள் போடும் சத்தம். மற்றபடி நிசப்தம்.

கீழே கால்மாட்டில் கிடந்த ஜோசியரின் சடலம் அவன் வரையில் ஒரு நெகிழ்த்தும் காட்சியாகியது. ஆரம்பம் முதலே அவர் சொன்னதெல்லாம் அவனுக்குள் ஓடத் தொடங்கியது.

எல்லாமே ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு அதன்படியே நடப்பதுதான் வாழ்க்கை என்கிற ஓர் எண்ணம். அந்த நொடி அவனுக்குள் அழுத்தமாகவே அர்த்தமாகியது.

விதியிலிருந்து விலகி ஓட ஒருவராலும் முடியாது என்பதற்கு சான்றுபோல அந்தக் கடத்தல் கூட்டம். தனக்குத்தானே முடிவைத் தேடிக் கொண்டதை எண்ணிப் பார்த்தான்.

என்றும் இளமையோடும், நோயே இல்லாமலும் இருக்கப் போவதாக நினைத்துக்கொண்டு உயிரைவிட்டவர்கள் எல்லாம் வரிசையாக அவன் கண் முன்னே ஊர்வலமாகப் போனார்கள். அந்த நொடியில் சற்றுமுன் கண்ணில் பட்ட சித்தரின் தரிசனம் அவனைத் தூண்டிவிட்டது. ஜோதிடர் உடலை வட்டப்பாறையில் இருந்து கீழே இறக்கிக் கிடத்தியவன் அதன் கல் பலகை மேல் ஜோதிடர் போலவே ஏறி நின்றான். அவரைப்போலவே 'ஓம் அகஸ்தீஸ்வராய நம...' என்று நெஞ்சு நெகிழ பிரார்த்தனை செய்தான். பதினோரு முறை கூறியவன் பன்னிரெண்டாவது முறைக்குச் செல்லும் முன்பே எதிரில் தரிசனமானார் அந்தச் சித்தப்புருஷர். அவரைப் பார்த்தவனுக்கு அடுத்து என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவரையே மலங்க மலங்கப் பார்த்தான். அவரும் ஒரு சிறு புன்னகையுடன் அவனையே பார்த்துக்

கொண்டிருந்தார். பின்னர் மெல்ல அருகில் வந்தார். ரிஷபனும் வட்டப் பாறையை விட்டு இறங்கினான். அவர் அருகில் சென்று கைகளைக் கூப்பினான்.

"கேளப்பா. உனக்குள் நிறையவே கேள்விகள். ஒவ்வொன்றாகக் கேள்.." என்றார் அவரும்.

"சாமி.."

"உம். கேள்.."

"என்னைச் சுத்தி நம்ப முடியாதபடி எவ்வளவோ விஷயம் நடந்துடிச்சு. நான் நினைச்ச மாதிரியோ, கணிச்ச மாதிரியோ ஒரு விஷயம்கூட நடக்கலை."

"வெள்ளத்தில் மிதந்தபடி செல்லும் துரும்புகளுக்குத் தனியாக அதை எதிர்க்கும் சக்தி கிடையாதப்பா.."

"இல்ல சாமி.. இப்படி தத்துவமா சொன்னா எனக்குப் புரியாது. எனக்குப் புரியற மாதிரி சொல்லுங்க.."

"சரி கேள்.."

"இந்தக் கடத்தல் கூட்டம் இந்தக் காட்டுலதானே இருந்தாங்க இவ்வளவு நாளும்.."

"அதனால்.."

"இவங்களை எல்லாம் ஏன் இவ்வளவு நாளா நீங்க எதுவும் செய்யலை."

"நான் யார் அவங்களுக்கு எந்த ஒன்றையும் செய்ய.."

"என்ன சாமி இது.. அவங்க பண்ண அட்டகாசத்தை எப்படி வேடிக்கை பார்த்தீங்க?"

"வேடிக்கை பார்க்க நான் என்ன சிறு குழந்தையா?"

"ஐயோ.. அவங்களுக்கு நல்லது சொல்லி உங்க சக்தியால திருத்தியிருக்கலாமே.."



"அவர்கள் ஒருவேளை திருந்தியிருந்தால் இன்று நீ இங்கே வந்திருக்க முடியுமா.. என்னைப் பார்த்து இப்படி பேசிக் கொண்டிருப்பாயா?"

"இது என்ன சாமி பதில்.. நான் இப்படி உங்களைப் பார்க்கத்தானா அவங்க அப்படி இருந்தாங்க?"

"ஏன் இருக்கக்கூடாது?"

"நான் உங்கள பார்க்கறது அவ்வளவு பெரிய விஷயமா?"

"இல்லையா பின்னே.. தங்கத்தின் மேல் உள்ள பற்றைத் துறக்கச் சொன்ன உனக்குதானே தங்கக்காட்டில் உள்ள தங்கக்கட்டிகள் பற்றி எல்லாம் தெரியும்?"

"சாமி.. அது அரசாங்கத்துக்குச் சேர வேண்டியது."

"நானும் மறுக்கவில்லையே.. பற்றைக் கைவிடச் சொன்ன உன் முன்னால இப்போது மூட்டை மூட்டையாகத் தங்கம். நீயே கூட எடுத்துக் கொள்ளலாம். கேட்பார் கிடையாது. இந்தத் தங்கக்காடே இப்போது உன் சொந்தம்.."

"நான் இதை எல்லாம் எங்க சாமி எதிர்பார்த்தேன். என்கிட்டதான் ஏற்கெனவே நிறைய செல்வம் இருக்கே?"

"அதோடு இதையும் சேர்த்துக் கொள்.. அதனால் என்ன.. எப்பொழுதும் செல்வத்தோடுதானே செல்வம் சேரும்.."

"சாமி.. நான் இப்ப தங்கம் பத்தி சிந்திக்க விரும்பலை. என் கேள்வி வேற.."

"என்னவென்று கேள்.."

"என் அப்பாவுக்குத் தொழுநோய் வந்தது.. உடம்புன்னு இருந்தா வியாதி வரும். சரி வந்திடுச்சு.

அதுக்குப் பரிகாரமா நான் தங்கக்கோபுரம் கட்டிக் கொடுத்தா அவருக்கு மருந்து கிடைக்கும்னு நாடில வந்தது. நான் தங்கத்து மேல பற்றை விடணும்னு ஜோதிடர் சொன்னார். இதெல்லாம் எதனால?"

"எல்லாமே ஒரு கணக்குதான் அப்பனே.. இது ஒருவிதப் பண்டமாற்று. பணம் இல்லாத மனிதன் அரிசிக்குப் பருப்பையோ, இல்லை தன் வசம் உள்ள ஒன்றையோதானே மாற்றாகத் தரமுடியும்."

"பண்டமாற்றுன்னா.. என் அப்பாவோட தொழு நோய்க்குத் தங்கம் எப்படி மாற்றாகும்.."

"தங்கம் நவகிரகங்களில் குருவின் அம்சமப்பா.. தங்கம் சேரச்சேர ஒருவரிடம் கவர்ச்சியும் அதிகமாகும். அதாவது அவருக்கான பெயர் விளங்கும். தங்கம் மாசற்றது. நித்ய ஒளியுள்ளது. அதனால்தான் நல்ல மனதுடையவர்களைத் தங்கமான மனசு உடையவர் என்கிறோம். அப்படிப்பட்ட தங்கத்தையே பேராசையால் திருடுவது, தன் வயப்படுத்துவது போன்ற சுயநலமான செயல்வினைகள்தான் மாசில்லாத ஒன்றை வைத்தே மாசுள்ள மனிதனாக ஆக்குவது.

தங்கத்தை மட்டும் திருடக்கூடாது.

மதித்து விலை கொடுத்து வாங்கினால் தான் அது ஒட்டும். உன் முன்னோர்கள் அப்படிச் செய்யத் தவறினர். கோயில் தங்கத்தையே திருடி தங்களுடையதாக்கிக் கொண்டனர். அதுதான் வினையாகத் திரும்பி, உன் தந்தை உடம்பில் தொழுநோயாகப் பரவியது. ஒளிவிட வேண்டிய உடம்பு அழுக, அதுவே காரணம்.

மீண்டும் அது ஒளிவிட தங்கம் எனக்கு இனி பெரிதில்லை என்று உங்கள் பரம்பரையில் நீ ஒருவன் நினைத்தால் கூடப் போதும்.. பெரிதில்லை என்று நினைப்பது மட்டுமல்ல, அதை ஊருக்குப் பொதுவாக்கும்



ஒரு வழிதான் கோயில் கோபுரத்தையே தங்கமாக்குவது.. இதனால் கோயிலில் வாழும் இறைவனுக்கு ஏதுமில்லை. அதன் ஒளி எல்லோர் பார்வையிலும் பட்டுக் கண்களில் நிரம்பி வழியும் போது உங்கள் கர்மக்கணக்கு சீராகும். எனவேதான் என்னைப் போன்ற ஒரு குறுமுனி, அப்படி ஒரு பரிகாரத்தை எழுதி வைத்தான்."

"சாமி.. நீங்க எழுதி வைக்கக் காரணம்?"

"உன் ஆத்மா முந்தைய ஜென்மத்தில் எனக்குச் செய்த பணிவிடை.. அப்போது நான் கால காலத்துக்கும் உன்னை என் ஆசிகள் வழி நடத்தும் என்று கூறியிருந்தேன். இந்த ஜென்மத்தில் என் ஆசியின் ஒரு அம்சம் தான் அந்த ஏடு."

"ஓ.. இப்படி ஒவ்வொண்ணுக்கும் பின்னால ஒரு காரணம் இருக்கா.."

"காரணமில்லாம ஒரு காரியமுமில்லையப்பா.."

"அப்ப ஒருத்தன் தப்பு செய்யவும் காரணமிருக்கா.."

"நிச்சயமாக."

"யாரும் தப்பு செய்யாம, யாரும் எதையும் சந்தேகப் படாம, நம்பமுடியலைங்கற வார்த்தையைச் சொல்லாம, எல்லாரும் இப்படி நல்லது கெட்டதை விளங்கிகிட்டு வாழ்ந்தா எப்படி இருக்கும்?"

"அப்படித்தான் யுகம் தொடங்கியது. பிறகு மாயை உள் நுழைந்தது., பின் எல்லாம் மாறத் தொடங்கியது. மாயையோடு போரிட்டு வெல்லத்தான் பிறப்பு.."

"மாயையை ஜெயிக்க என்ன வழி?"

"என்னைப்போல சித்தனாகலாம். இல்லாவிட்டால் தர்மப்படி வாழ்வதில் உறுதியாக இருக்கலாம்."

"அது போதுமா?"

"இப்போதைக்கு உனக்கு இந்த விளக்கம் போது என்று கருதுகிறேன்."

"சாமி.. நான் தங்கக் கோபுரம் மட்டுமல்ல.. என்கிட்ட இருக்கற தங்கத்தையும் ஊருக்கே பொதுவாக்கிடறேன் இது உங்க மேல சத்தியம். இந்தக் காட்டுல இருக்கிற தங்கத்தையும் சேர்த்துதான் சொல்றேன். எங்கப்பாவுக்கு குணமாக ஏதோ மூலிகை இருக்குன்னு சொன்னார் ஜோதிடர்."

பதிலுக்கு அகஸ்தீஸ்வர சித்தரும் சிரித்தபடியே சற்றுத் தொலைவில் இருந்த ஒரு ஈரக்கசிவுள்ள பாறை அருகே சென்று கைகளைத் தட்டினார்.

பாறை இடுக்கில் இருந்து ஒரு கொடி வெளிப்பட தொடங்கியது. அதன் இலைகள் தங்கம் போல ஜொலித்தன.

அதில் ஒரு இலையைக் கிள்ளியவர் ரிஷபனிடம் தந்து, "இது போதும் உன் அப்பா குணமாக.. ஒரே மண்டலம்தான்.. உடம்புக்குள் எல்லா திசுக்களுக்கும் புத்துயிர் வந்துவிடும்" என்றார்.

ரிஷபன் அந்த இலையைப் பார்த்துப் பரவசப்பட்டு விட்டு நிமிர்ந்தான். எதிரில் அவர் இல்லை. அதேசமயம் இன்ஸ்பெக்டர் ருத்ராவும், ஸ்னேகாவும், சப்-இன்ஸ்பெக்டர் ராஜேந்திரனுடன் நடந்து வருவது அவன் கண்களில் பட்டது!

அந்தக் கண்களில் இப்போது கலக்கம்.

கையில் உள்ள தங்கம் போன்ற இலையை தன் கலங்கிய கண்களில் ஒற்றிக் கொண்டு அவர்களை வரவேற்கத் தயாரானான்.